மாதம் இருமுறை டிசம்பர் 01, 2025 - 48 பக்கங்கள் இலவச சஞ்சிகை

# கதிர் ஒளி

கனடா - இந்தியா - இலங்கை வெளியீடு

647-473-9698 கனடாவின் நம்பர் 1 தமிழ் இதழ்! 437-833-4304

விலை / Price $ 1/-



Editor in Chief: RAJAPANDIAN PAULRAJ

Editor: HUDSON PAULRAJ
Vol: 14 • Issue: 399
ePaper: www.kathirolimedia.ca

Kathir Oli Media Inc., 35 Shoreham drive, Unit. 723 North York, Ontario. M3N1S5 Canada TP: 437-833-4304 | kathirolinews@gmail.com www.kathirolimedia.ca

# காற்று மாசினால் குழந்தைகள் மூச்சுத் திணறுகின்றனர்.. ஏன் பொறுப்பில்லாமல் இருக்கிறீர்கள்? – ராகுல்

டெல்லியின் காற்றின் தரம் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. காற்று மாசு குறித்து டெல்லி அரசின் பாரா முகம் குறித்து ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் அவ்வப்போது போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே தீபாவளி அன்று பசுமை பட்டாசுகள் வெடிக்க அனுமதிக்குமாறு டெல்லி பாஜக அரசு வழக்கு தொடர்ந்து சாதகமாக தீர்ப்பு பெற்றது. எனவே பல வருடம் கழித்து இந்த ஆண்டு தீபாவளிக்கு டெல்லியில் பசுமை பட்டாசுகள் வெடிக்கப்பட்டன.

இந்த நடவடிக்கையை ஆர்வலர்கள் விமர்சித்தனர். தீபாவளிக்கு பின் டெல்லியின் காற்றின் தரம் தொடர்ந்து மோசமடைந்து வருகிறது. இதற்கிடையே டெல்லியில் செயற்கை மழை பெய்ய செய்ய ரூ.3.12 கோடி மதிப்பீட்டில் டெல்லி ஐஐடி மேற்கொண்ட சோதனை தோல்வி அடைந்தது.

கடந்த சில வாரங்களாகவும்,



இன்றும் டெல்லி காற்றின் தரம் AQI 400 ஐ தாண்டி 'மிகவும் மோசம்' என்ற வகையை அடைந்துள்ளது.

இந்நிலையில் மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி டெல்லி காற்று மாசினால் ஏற்பட்டுள்ள சுகாதார அவசரநிலை குறித்து மத்திய அரசின் குறிப்பாக பிரதமர் மோடியின் பாராமுகம் குறித்து விமர்சித்துள்ளார்.

டெல்லியில், தாய்மார்கள் சிலருடன்தனது வீட்டில்ராகுல்காந்தி காற்று மாசு குறித்து கலந்துரையாடி அதன் வீடியோவை தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில், நான் சந்திக்கும் ஒவ்வொரு தாய்மாரும் என்னிடம் ஒரு விஷயத்தை தான் கூறுகிறார்கள். அவர்களின் குழந்தை மாசுபட்ட காற்றை சுவாசித்து வளர்வது குறித்து அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் அவர்கள் பயத்துடனும், கோபத்துடன், ஏதும் செய்ய முடியாத நிலையிலும் இருக்கிறார்கள்.

மோடி அவர்களே, 'இந்தியாவின் குழந்தைகள் நமது கண் முன்னே மூச்சுத்திணறி கொண்டுள்ளனர். நீங்கள் எப்படி அமைதியாக இருக்கிறீர்கள். இந்த பிரச்சனையில் உங்கள் அரசு எந்த அவசரமும் கட்டமால், எந்த திட்டமும் இல்லாமல், எந்த பொறுப்பும் இல்லாமல் எப்படி இருக்க முடிகிறது' என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

மேலும், காற்று மாசு விவகாரம் குறித்த பாராளுமன்றத்தில் உடனடியாக விவாதம் செய்யப்பட வேண்டும். இதை சுகாதார அவசர நிலையை கருதி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நமது குழந்தைகளுக்கு தூய்மையான காற்றை சுவாசிக்க உரிமை இருக்கிறது, எனவே இந்த விஷயத்தில் இனியும் எந்த சாக்கு போக்குகளும், திசை திருப்புதலும் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தி உள்ளார்.

வரும் வாரத்திலும் டெல்லியின் காற்றின் தரம் மிகவும் மோசம் என்ற நிலையிலேயே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் அதிகரிக்கும் நீர்மட்டம்: அதிக வெள்ளப் பெருக்கு நிலையை சந்திக்கும் கொழும்பு



களனி கங்கையின் நீர்மட்டம் சில இடங்களில் மெதுவாக அதிகரித்து வருவதாக, நீர்ப்பாசன, நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

இந்த நீர்மட்டம் அதிகபட்சமாக ஆறு முதல் பன்னிரண்டு அங்குலம் வரை மட்டுமே அதிகரிக்கும் என்றும் கூறியுள்ளார்.

ஹன்வெல்ல பகுதியில் உள்ள களனி ஆற்றின் நீர்மட்டம் இன்று (30) காலை அதிகபட்சத்தை எட்டிய நிலையில், தற்போது படிப்படியாகக் குறைந்து வருகின்றது.

நீர்மட்டம் குறைந்திருந்தாலும், தொட்டலக, சேதுவத்தை, கொஹிலவத்த மற்றும் வத்தளை பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது,

மேலும் அதிகரித்தால், அதிக பட்சம் 6 முதல் 12 அங்குலத்தை தாண்டாது என்றும் ஏ. குணசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலைமை இன்னும் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் நீடிக்கலாம். குறைவதற்கான வாய்ப்பும் உள்ளது. மாலம்பே, கோட்டை போன்ற இடங்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

பியகம, தொம்பே, களனி ஆகிய தாழ்வான பகுதிகளில் நீர்மட்டம் மேலும் உயரலாம். இது குறித்து மிகவும் கவனமாக இருங்கள்.

சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகளை நம்ப வேண்டாம் என்றும், பொறுப்புள்ள ஊடக நிறுவனங்களால் வெளியிடப்படும் செய்திகளை மட்டுமே நம்பிச் செயற்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும், ஒவ்வொருவரும் தன்னையும், தமது வீட்டைச் சூழவுள்ள சூழலையும் குறித்து எப்போதும் விழிப்புடன் இருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.




உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!






## உலக செய்திகள்

# இங்கிலாந்தில் உயர்கல்வி படித்து வந்த இந்திய இளைஞரை கத்தியால் குத்திக் கொலை செய்த கும்பல்

இங்கிலாந்தில் உயர்கல்வி பயின்று வந்த அரியானவை சேர்ந்த இளைஞர் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்.

அரியானவை சேர்ந்த விஜய் குமார் ஷியோரன் (30) மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தில் பணிபுரிந்த நிலையில் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு இந்த ஆண்டு தொடக்கத்தில் உயர்கல்விக்காக இங்கிலாந்து சென்றார்.



இந்த சூழலில், இந்த மாதம் 25 ஆம் தேதி வொர்ஸ்டரில் அடையாளம் தெரியாத நபர்களால் விஜய் கத்தியால் தாக்கப்பட்டார். விஜய் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பெற்று வந்த நிலையில் விஜய் உயிரிழந்தார்.

விஜய்யின் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல் அளித்த இங்கிலாந்து காவல்துறையினர், சந்தேகத்தின் பேரில் 5 பேரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

விஜய்யின் உடலை விரைவில் இந்தியாவிற்கு கொண்டு வர உதவுமாறு குடும்ப உறுப்பினர்கள் வெளியுறவு அமைச்சகத்திடமும், அரியானா முதல்வர் நயாப் சிங் சைனியிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வெனிசுலாவில் எந்த விமானமும் பறக்கக் கூடாது - அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை

அமெரிக்காவுக்கும், வெனிசுலாவுக்கும் இடையே நீண்ட காலமாக பகை இருந்து வருகிறது. அமெரிக்காவில் போதைப்பொருள் அதிகளவுபுழங்குவதற்கு வெனிசுலாதான் காரணம் என்று டிரம்ப் குற்றச்சாட்டி வரும் நிலையில், கரீபியன் கடற்பகுதியில் போர்க்கப்பல்கள், போர் விமானங்களை அமெரிக்கா குவித்து வருகிறது.



இந்த நிலையில் ராணுவ நடவடிக்கைகள் காரணமாக வெனிசுலா வான்வெளியில் பறக்கும் போது எச்சரிக்கையாக இருக்குமாறு அமெரிக்க பெடரல் விமான நிர்வாகம் தெரிவித்தது. இதனால் உலக அளவில் பெரும்பாலான விமான நிறுவனங்கள் வெனிசுலாவுக்கான விமானங்களை ரத்து செய்துள்ளன.

ஸ்பெயின், போர்ச்சுகல், சிலி, கொலம்பியா, பிரேசில், டிரினிடாட் டொபாகோ ஆகிய நாடுகளை சேர்ந்த சில விமான நிறுவனங்கள் வெனிசுலாவுக்கான விமான சேவைகளை ரத்து செய்தன.

இந்நிலையில், வெனிசுலாவின் வான்வெளி மூடப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், வான்வெளி மற்றும் அதை சுற்றியுள்ள வான்வெளி மூடப்படுகிறது. இதனை அனைத்து விமான நிறுவனங்கள், விமானிகள், போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் கடத்தல்காரர்கள் கவனத்தில் கொள்ளவும்' என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டிரம்பின் இந்த மிரட்டலுக்கு கண்டனம் தெரிவித்த வெனிசுலா, இது ஒரு 'காலனித்துவ அச்சுறுத்தல்' என்று தெரிவித்துள்ளது.

# சர்வதேச கடல்சார் அமைப்புக்கு இந்தியா மீண்டும் தேர்வு

சர்வதேச கடல்சார் அமைப்பு (ஐ.எம்.ஓ) கடல்சார் தொழிலை ஒழுங்குபடுத்தும் முன்னணி அதிகார அமைப்பாகும். இது உலகளாவிய கடல்சார் வர்த்தகம், போக்குவரத்து மற்றும் அனைத்து கடல்சார் நடவடிக்கைகளையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.



இந்நிலையில், சர்வதேச கடல்சார் அமைப்பின் நிர்வாகக் கூட்டம் லண்டனில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது சர்வதேச கடல்சார் அமைப்பின் (ஐ.எம்.ஓ) கவுன்சிலுக்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மொத்தமுள்ள 169 வாக்குகளில் 154 வாக்குகள் இந்தியாவுக்கு ஆதரவாகக் கிடைத்தது.

இதுகுறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகளாவிய கடல்சார் களத்தில் தொடர்ந்து சேவை செய்வதற்காக, இந்தியாவிற்கான சர்வதேச கடல்சார் அமைப்பில் சர்வதேச சமூகத்தின் பெரிய அளவிலான ஆதரவை இந்தியா பெற்றுள்ளது என தெரிவித்தது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு- 4 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் ஸ்டாக்டனில் உள்ள விருந்து மண்டபத்தில் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

அப்போது அங்கு துப்பாக்கி சூடு நடந்தது. இதனால் விருந்தில் பங்கேற்றவர்கள் அதிர்ச்சி அடைந்து தலைதெறிக்க ஓடினர்.

இந்த துப்பாக்கி சூட்டில் 4 பேர் பலியானார்கள். 10 பேர் காயம் அடைந்தனர். சம்பவ இடத்துக்கு போலீசார் விரைந்து வந்து காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



துப்பாக்கி சூடு நடத்தியவர் யார்? என்ன காரணம்? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

www.kathiroli-media.ca




# இந்திய செய்திகள்

## வேறு சாதி என்பதால் காதலனை கொன்ற தந்தை.. சடலத்துடன் திருமணம் செய்த காதலி

மகாராஷ்டிராவில் ஆணவக் கொலை செய்யப்பட்ட காதலனின் சடலத்துடன் காதலி திருமணம் செய்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மகாராஷ்டிராவின் நானந்த் பகுதியை சேர்ந்த 20 வயது சக்ஷம் டேட் மற்றும் அன்சல் கடந்த 3 வருடங்களாக காதலித்து வந்தனர்.

இருவரும் வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதால், அன்சலின் குடும்பத்தினர் இவர்களது காதலை கடுமையாக எதிர்த்தனர்.

எதிர்ப்பை மீறி சக்ஷமைத் திருமணம் செய்துகொள்ள அன்சல் முடிவெடுத்ததை அறிந்த அவரது தந்தையும் சகோதரர்களும், வியாழக்கிழமையன்று சக்ஷமைக் கடுமையாகத் தாக்கி, துப்பாக்கியால் தலையில் சுட்டு, பின்னர் கல்லால் தலையை நசுக்கிக் கொடூரமாகக் கொலை செய்தனர்.



சக்ஷமின் இறுதிச் சடங்குகள் நடந்துகொண்டிருந்தபோது, அன்சல் அவர் வீட்டிற்குச் சென்றார்.

அவர் சக்ஷமின் உடலுக்கு மஞ்சள் பூசி, தன் நெற்றியில் குங்குமம் இட்டுக் கொண்டு இறந்த காதலனை திருமணம் செய்து கொண்டார்.

அப்போது, சக்ஷமின் மரணத்திலும் எங்கள் காதல் வென்றது; என் தந்தையும் சகோதரர்களும் தோற்றனர் என்று கூறிய அன்சல், அவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும் சக்ஷமின் வீட்டிலேயே மருமகளாகத் தன் வாழ்நாள் முழுவதும் வாழப்போவதாகவும் அவர் சபதம் எடுத்துள்ளார்.

கொலை வழக்கில் அன்சல் உடைய தந்தை, சகோதரர்கள் உள்ளிட்ட 6 குற்றவாளிகளை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

## விஷத்தை சுவாசிக்கும் மக்கள்?.. டெல்லி 'காற்று மாசு'க்கு முக்கிய காரணம் என்ன? - ஆய்வு முடிவுகள் கூறுவது இதுதான்

நாட்டின் தலைநகரமான டெல்லி உலகின் மிகவும் காற்று மாசு கொண்ட நகரங்களின் பட்டியலில் முன்னிலையில் இருந்து வருகிறது. குறிப்பாக ஆண்டின் கடைசி மாதங்களில் குளிர்காலத்தில் டெல்லியின் காற்று மாசு மிகவும் மோசமடைகிறது. இதனால் சுவாசப் பிரச்சனைகள் உள்ளிட்ட மோசமான உடல்நலப் பிரச்சனைகளை டெல்லி மக்கள் எதிர்கொள்கின்றனர். குறிப்பாக டெல்லியில் உள்ள குழந்தைகளுக்கு காற்று விஷமாக மாறும் நிலையை எட்டும் தருவாயில் உள்ளது.

2025 காற்று தர வாழ்க்கை குறியீட்டு (AQLI) அறிக்கையின்படி, டெல்லி மக்கள் தங்கள் ஆயுட்காலத்தில் 8.2 ஆண்டுகளை இழந்துள்ளனர். மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தரவுகளின்படி கடந்த அக்டோபர் 1-ஆம் தேதி 130 ஆக இருந்த டெல்லியின் காற்றின் தரம் நவம்பர் 11-ஆம் தேதிக்குள் 428 என்ற அபாயகரமான நிலையை எட்டியது.

இன்றும் டெல்லியின் பல பகுதிகளில் காற்றின் தரக் குறியீடு 400க்கும் அதிகம் என்ற மோசமான நிலையிலேயே உள்ளது. அடுத்த வாரத்திலும் இந்த நிலையே நீடிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் மாதத்தில் டெல்லியை சுற்றியுள்ள பஞ்சாப், அரியானா, உத்தரப் பிரதேச விவசாயிகள் பயிர்கழிவுகளை எரிப்பதில் இருந்து வரும் புகையே டெல்லி காற்று மாசுக்கு முக்கிய காரணமாக பொதுவான கருத்து நிலவுகிறது. ஆனால் சமீபத்திய ஆய்வுகள் இதை நிராகரிக்கிறது. அதாவது டெல்லி காற்று மாசுக்கு விவசாய கழிவுகள் எரிக்கப்படுவதும் ஒரு காரணமே தவிர அதுவே முக்கிய காரணம் கிடையாது.

மத்திய புவி அறிவியல் துறை வெளியிட்டிருக்கும் முடிவுகளின்படி, அக்டோபர் மாதத்தில் பயிர்க் கழிவுகளுக்கு தீ வைப்பதால் டெல்லிக்கு பெரிய பாதிப்பு ஏற்படவில்லை. அக்டோபரில் பயிர்க் கழிவு தீ வைப்பால் டெல்லி காற்றுக்கு 2.62 சதவீத பாதிப்பு மட்டுமே ஏற்பட்டது. அந்த சமயம் டெல்லி காற்று தரக் குறியீடு 250 என்ற அளவிலேயே இருந்தது. இந்த நவம்பர் 12 டெல்லி காற்று தரக் குறியீடு 418 என்ற 'மிகவும் அபாய' நிலையை எட்டிய நிலையில் இதில் பயிர்க் கழிவுகள் எரிப்பின் பங்கு 22.47 சதவீதம் மட்டுமே ஆகும்.

நவம்பர் 3 ஆம் வாரத்தில் பயிர்க் கழிவுகள் எரிப்பது குறைந்த



போதும் டெல்லி காற்று மாசு குறையவில்லை. நவம்பர் 18 முதல் 20 வரை டெல்லி காற்று மாசில் பயிர்க் கழிவுகள் எரிப்பதன் பங்கு 5.4 சதவீதம் முதல் 2.8 சதவீதம் வரை குறைந்தபோதிலும் டெல்லி காற்று தரக் குறியீடு 325-க்கு மேலேயே நீடித்தது. இதிலிருந்து தெரிவது என்னவென்றால், பயிர்க் கழிவுகளை எரிப்பது டெல்லி காற்று மாசுக்கு ஒரு காரணிதான் என்றபோதிலும் முக்கிய காரணம் அல்ல என மத்திய புவி அறிவியல் துறை தரவுகள் தெரிவிக்கின்றன.

மாறாக டெல்லிக்கு காற்று மாசுக்கு காரணமாக மத்திய புவி அறிவியல் துறை குறிப்பிடும் தரவுகளில், டெல்லி காற்று மாசுக்கு சுற்றுப்புற நகரங்களாக கவுதம் புத்தா நகர், குர்கான், கர்னால், மீரட் உள்ளிட்ட டெல்லியைச் சுற்றியுள்ள நகரங்களின்பங்களிப்பு 29.5 சதவீதம் ஆகும். டெல்லி போக்குவரத்தில் வாகனங்களிலிருந்து வெளியாகும் புகை, காற்று மாசுக்கு 19.7 சதவீதம் பங்களிக்கிறது. காற்று மாசுக்கு குடியிருப்புகளின் பங்களிப்பு 4.8 சதவீதம் ஆகவும், புறத் தொழிற்சாலைகளின் பங்களிப்பு 3.7 சதவீதம் ஆகவும், மற்றும் கட்டுமானப் தூசு 2.9 சதவீதம் ஆகவும் உள்ளன.

மாறாக அதிர்ச்சியூட்டும் வகையில் டெல்லி காற்று மாசுக்கு, காரணமே அறியப்படாத, அடையாளம் காணப்படாத காரணிகளின் பங்களிப்பு 34.8 சதவீதம் உள்ளது. இந்த மூலங்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்தாவிட்டால், மாசைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். ஆனால் அவை என்னவென்றே தெரியாமல் கட்டுப்படுத்துவது என்பது சாத்தியமற்றது என மத்திய புவி அறிவியல் துறை தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதன்மூலம் டெல்லி காற்று மாசுக்கு பல காரணிகள் கூட்டுப் பங்களிப்பை செய்கின்றன. மேலும் டெல்லியின் புவியியலும் காற்று மாசு அதிகளவில் காணப்பட முக்கிய காரணமாகவும்.

டெல்லிக்கு வடக்கில் இமயமலையும், தென்மேற்கில் ஆரவல்லி மலைத் தொடரும் அரணாக அமைந்துள்ளன. இதனால் குளிர்காலத்தில் தூய காற்று நுழைவதை இந்த இரு அரண்கள் தடுக்கிறது. எனவே டெல்லியில் மாசுபாடு காற்றில் தேக்க நிலையை அடைந்து வெளியேற முடியாத சூழல் ஏற்பட்டு தரம் குறைவதாகவும் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். தூய காற்றை சுவாசிப்பது மக்களின் உரிமையாகும்.



# இந்தியாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம்; கனடா வெளியுறவு அமைச்சர்

## கனடிய செய்திகள்

இந்தியா-கனடா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்தார்.

தென்னாப்பிரிக்காவில் அண்மையில் நடைபெற்ற ஜி20 கூட்டமைப்பின் உச்சி மாநாட்டின்போது பிரதமர் நரேந்திர மோடி, கனடா பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது இந்தியாவுக்கு வருமாறு கார்னிக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். இதை ஏற்றுக்கொண்ட கார்னி அடுத்த ஆண்டு இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளத்



திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டு பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

அதன் தொடர்ச்சியாக கனடாவுடன் மீண்டும் தடையற்ற வர்த்தக ஒப்பந்த (எஃப்டிஏ) பேச்சுவார்த்தையை இந்தியா தொடங்கவுள்ளதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் திங்கள்கிழமை தெரிவித்தார்.

இதையடுத்து, அமெரிக்க வரி விதிப்பு, இந்தியாவுடனான வர்த்தக கொள்கை குறித்து ஊடகத்துக்கு அனிதா ஆனந்த் தொலைபேசி வாயிலாக அளித்த பேட்டியில், 'அமெரிக்க வரி விதிப்பு மற்றும் இந்தியாவுடனான வர்த்தக உறவு என அனைத்திலும் புதிய வெளியுறவுக் கொள்கையை பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான அரசு பின்பற்றுகிறது. உலக நாடுகள் மிகவும் பாதுகாப்பான வர்த்தக கொள்கைகளை வகுத்துள்ளன.

இந்தச் சூழலில் வர்த்தக நாடாக சிறப்பான செயல்பாட்டை கனடா வெளிப்படுத்துவது அவசியம். குறிப்பாக, இந்தியாவுடன் மீண்டும் வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வது குறித்து பேச்சு வார்த்தை தொடங்கப்படும்.

இதை விரைவாக இறுதிசெய்ய இருநாட்டுத் தலைவர்களும் ஆர்வமாக உள்ளனர். அதேசமயம் சீனாவுடன் நல்லுறவைத் தொடரவே கனடா விரும்புகிறது' என்றார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!




# கனடாவில் 30000 டொலர் பெறுமதியான சன்கிளாஸ் களவாடிய பெண்கள்




கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் 30000 டொலர் பெறுமதியான டிசைனர் சன் கிளாஸ்கள் திருடிய பெண் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஒன்டாரியாவின் பிகரிங் நகரின் ஒரு மாலில் இருந்து 30,000டொலர் மதிப்புள்ள டிசைனர் சன் கிளாஸ்கள் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில், டொரண்டோவைச் சேர்ந்த ஒரு பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பிகரிங் சிட்டி சென்டர் மாலில் உள்ள லென்ஸ் கிராப்ட்ஸ் விற்பனையகத்திற்கு மூன்று பெண்கள் நுழைந்து, 60-க்கும் மேற்பட்ட விலையுயர்ந்த டிசைனர் கண்ணாடிகளை கொள்ளையிட்டுள்ளனர்.

காவல்துறையினர் பின்னர் மூன்று சந்தேகநபர்களில் இருவரை அடையாளம் கண்டுள்ளனர்.

அதன்படி, அக்டோபர் 26 அன்று டொரண்டோவில் டுன்டாஸ் மேற்கு வீதி மற்றும் ஸ்கார்லெட் வீதி பகுதியிலுள்ள ஒரு வீட்டில் சோதனை நடத்தப்பட்டு, 25,000 டொலருக்கும் மேற்பட்ட திருடப்பட்ட பொருட்கள் மீட்கப் பட்டன.

இந்த சம்பவத்துடன் தொடர்பு டைய குற்றச்சாட்டில் 33 வயதான கரோலின் வெனிசா வோல்கர் என்பரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஏனைய சந்தேக நபர்கள் தாங்க ளாகவே சரணடைய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**KATHIROLI ADVERTISMENT RATES**

**இந்திய வர்த்தகர்கள் விளம்பரக் கட்டணங்கள்**

Per Edition

**முழுப் பக்கம்:** Rs. 25,000 (INR)

**அரைப் பக்கம்:** Rs. 15,000 (INR)

**கால் பக்கம்:** Rs. 10,000 (INR)

**பேனர்:** Rs. 5,000 (INR)

**அன்பு கதிர் ஒளி வாசகர்களே உங்கள் அனைவருக்கும் மீண்டும் வாழ்த்துக்களை கூறிக் கொண்டு இந்த இதழை உங்களுக்கு சமர்ப்பணம் செய்கிறேன் இதை வாசித்து பயன் அடையுங்கள் உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கும்படி தூண்டுங்கள்.**

# கனடாவில் தீ விபத்தால் பல இந்தியர்கள் பலி; நிறைமாத கர்ப்பிணிக்கு நேர்ந்த துயரம்

கனடா நாட்டில் உள்ள பிராம்டன் நகரின் மேக் லாக்லின் சாலை மற்றும் ரீமெம்பரன்ஸ் சாலை சந்திக்கும் பகுதியில் உள்ள வீட்டில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டது.

இதில் கீழ்தளத்தில் இருந்தவர்கள் காயமின்றி உயிர் தப்பினர். மேல் தளத்தில் வசித்தவர்களில் 4 பேர் தீயில் சிக்கி உடல் கருகினர்.

கர்ப்பிணியான ஆரஷ்வீர் கவுர் என்ற பெண் உயிர் பிழைக்க ஜன்னலில் இருந்து கீழே குதித்துள் ளார். இதில் அவர் படுகாயமடைந்த நிலையில் உயிர் தப்பினார்.

எனினும் கருவில் இருந்த குழந்தை இறந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். தீயில்



கருகியவர்கள் அனைவரும் பஞ்சாப் மாநிலம் லூதியானா மாவட்டத்தை சேர்ந்தவர்கள்.

தீ விபத்தில் காயமடைந்த ஒரு சிறுவன் உட்பட 4 பேர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். அதில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.


# Kathir Oli Tamil News Paper

**Editor in chief :Dr. Paulraj Rajapandian, DD**

**Editor : Mr. Hudson Paulraj, MCs**

**Published by: Kathir Oli Media Incorporate**

**Publish Office: Kathir Oli Media Incorporate**

**#723- 35 Shoreham drive, North York, Ontario. M3N1S5 Canada.**

**Published Media: Online paper: www.kathirolimedia.ca**

**Printing Press: Sun Rise Printers, Toronto, Ontario. Canada.**

**Our Contact info: Canada office. 647-473-9698, 437-833-4304 (Editor), kathirolinews@gmail.com, www.kathirolimedia.ca, India office. +91-984-050-0001, kathirolimedia@gmail.com**


**All rights reserved to "Kathir Oli Media Incorporate" Canada, and the Associate editor's office in Chennai, India for adding and deleting the articles. The writers are only response for their own writings.**

**Confidentiality Notice from the Kathir Oli Media Incorporate, Canada.**

# சீரற்ற வானிலை! மக்கள் வங்கியின் நடமாடும் ஏடிஎம் வாகனம்

நாட்டை பாதித்த சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வசதிக்காக, மக்கள் வங்கியின் நடமாடும் ஏடிஎம் வாகனம் பயணிக்க முடிவு செய்துள்ளது.




இதற்கமைய, இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்கு வாகனம் பயணித்துள்ளது.

குருவிட்ட - பிற்பகல் 2.00 மணி, கந்தங்கொடை - பிற்பகல் 2.45 மணி, ஹிக்கஷேன - பிற்பகல் 3.15 மணி, குருவிட்ட எரத்ன - பிற்பகல் 4.00 மணியளவிலும் பயணித்துள்ளது.

# லிட்ரோ நிறுவனத்தின் விசேட அறிவிப்பு

சந்தையில் தற்போது போதுமான எரிவாயு இருப்பு இருப்பதாகவும், நிரப்பும் செயல்முறை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

போக்குவரத்து சிரமங்கள் இல்லாத பகுதிகளில் எரிவாயு விநியோகம் வழக்கம் போல் இருப்பதாகவும் அந்நிறுவனம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

எரிவாயு விநியோகம் வழங்க ஏற்பாடு

சாலை சிரமங்கள் உள்ள பகுதிகள் சீர் செய்யப்பட்டவுடன் எரிவாயு விநியோகம் மீண்டும் வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், வாடிக்கையாளர்கள் தங்களது பகுதியில் தற்போதைய எரிவாயு விநியோகம் குறித்த தகவல்களை அறிய 1311 என்ற எண்ணிற்கு அழைக்குமாறு லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.



# நாட்டில் ஏற்பட்டுள்ள பேரனர்த்தம் – கொழும்பில் உல்லாச விருந்தில் இளைஞர், யுவதிகள்

நாடு பேரிடரில் சிக்கித் தவித்து வரும் நிலையில் உல்லாச விருந்து வைத்து இளைஞர் குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளது.



கொழும்பு, வெலிக்கடை பகுதியில் பேஸ்புக் விருந்தொன்றை முற்றுகையிட்டு இரண்டு பெண்களையும் 32 ஆண்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அனைத்து சந்தேக நபர்களும் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

களியாட்ட விருது

நியூ ஜெயவீர மாவத்தையில் நடந்த விருந்தில் சோதனை நடத்திய பின்னர் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட நேரத்தில் ஹெராயின், ஐஸ் மற்றும் போதை மாத்திரைகள் உள்ளிட்ட ஏராளமான போதைப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பு உட்பட நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தும், பலர் காணாமலும் போயுள்ளனர்.

இவ்வாறான நிலையில் இப்படியான களியாட்ட விருது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பலர் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளது.

# யாழ்.திருநெல்வேலியில் வாள்வெட்டு – ஒருவர் பலி

யாழ்ப்பாணத்தில் கொட்டும் மழைக்குள் இளைஞன் ஒருவன் வன்முறை கும்பலால் மிக கொடூரமான முறையில் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி சந்திக்கு அண்மித்த பகுதியில் குறித்த வாள் வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கொக்குவில் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் கையெழுத்து இட வேண்டும் என்ற நிபந்தனையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன் பிரகாரம் இன்றையதினம் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்ட பின்னர், தனது நண்பனுடன் மோட்டார் சைக்கிளில் ஆடியபாதம் வீதி ஊடாக தனது வீடு நோக்கி பயணித்த வேளை பொலிஸ் நிலையத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில், திருநெல்வேலி சந்தியை அண்மித்த பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் அடங்கிய வன்முறை கும்பல் அவர்களின் மோட்டார் சைக்கிளை வழிமறித்துள்ளனர்.

www.kathiroli-media.ca

# இலங்கை செய்திகள்

## ரம்பொடையில் சிக்கிய வெளிநாட்டவர்கள் கொழும்புக்கு

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா - ரம்பொடை பகுதியில் சிக்கித் தவித்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று மீட்கப்பட்டு கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். சிறப்பு விமானம் மூலம் இவர்கள் கொழும்புக்கு இன்று மாலை அழைத்து வரப்பட்டனர்.



வெளியுறவுத் துறை அமைச்சின் ஏற்பாடு

மீட்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளில் இந்தியா, தென்னாப்பிரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அடங்குகின்றனர்.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், சுற்றுலாப் பயணிகளின் நலன் குறித்து விசாரித்தார். சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகளுக்கான ஏற்பாடுகளை அமைச்சு முன்னெடுக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.


This invitation publicity it's the God's True Call and Choice Make Sure. Come soon and Learn the Truth. Go fast Preach the True Gospel and make Disciples and Teach

Reg 108/9-10

TRUE WISDOM BIBLE COLLEGE

Accredited by IATA

Yelahanka New Town, Bangalore-64. Mob: 97 41 66 22 22



Applications are invited from Born again Christians who are the 'People Chosen by God, a Royal Priesthood, a Holy Nation, a People Belonging to God, that you may declare the praises of Him who called you out of darkness into His wonderful light. Young men and women who want to undergo Biblical Training to prepare themselves for our Masters Service may apply.

2Tim 2:15 - Study to shew thyself approved unto God, a workman that needeth not to be ashamed, rightly dividing the word of truth.
Eph 4:12 - For the perfecting of the saints, for the work of the ministry, for the edifying of the body of Christ.
2Tim 3:17 - that the man of God may be complete, thoroughly equipped for every good work

- The College is Accredited by IATA
- Admission are in Progress. Classes begin in the 1st Week June 2025.
- Well qualified professors.
- Seats are limited. Application will be selected on a 'first come, first served' basis.
- We are offering the following Bible-based courses through True Wisdom Bible College.



COURESE OFFERED

| SN | Courses | Duration | Qualification Required | Medium |
|---|---|---|---|---|
| 1 | Diploma in Theology | 1 Year | SSLC | English & Kannada |
| 2 | Bachelor of Theology | 3 Year | D.Th / PUC 2 nd year pass & Pastors those who are in ministry | English & Kannada |
| 3 | Master of Divinity | 2 Year | B.A. / B.Com / B.Th / B.D / 1 Yr Exp. | English & Kannada |
| 4 | Master of Theology | 2 Year | M.Div. / 5 Years Exp | English & Kannada |

Note: Daily Classes Monday to Friday 9am to 1pm

We also Offer D.TH, B.Th, M.Div & M.Th Classes Every Saturday Morning 10am to 5pm Compulsory

PLEASE CONTACT. ADMISSIONS OPEN FOR THE ACADEMIC YEAR 2025-26. WANTED COMMITTED STUDENTS & PLEASE PRAY & SHARE THIS BROCHURE IN CHRISTIAN GROUPS

Yelahanka New Town, Bangalore-560064

Call & WhatsApp Mob: 9741662222 E-mail: royalkingsgowda@gmail.com

# கேரளாவில் 90 வயதில் முதல் முறையாக தேர்தலில் போட்டியிடும் நாராயணன்



கேரளாவில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் 90 வயதான ஓய்வுபெற்ற அரசு ஊழியர் நாராயணன் நாயர் போட்டியிடுவது அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகிறது.

எர்ணாகுளம் மாவட்டத்திலுள்ள ஆஷமன்னூர் கிராமப் பஞ்சாயத்தின் இரண்டாவது வார்டில் சுயேச்சை வேட்பாளராக நாராயணன் போட்டியிடுகிறார். இதுவே இவருக்கு முதல் தேர்தல் களம் ஆகும்.

அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் ஆதரவாளர்களுடன் கூட்டமாகச் செல்ல, வேட்பாளர் நாராயணன் நாயர் தனியொரு மனிதனாக வெள்ளைச் சட்டை, வேட்டியுடன் கையில் ஒரு கருப்பு கைப்பையுடன் வீடு வீடாக சென்று பிரசாரம் செய்கிறார்.

தனது முதுமை குறித்துக் கேட்கப்பட்டபோது, எந்தக் காரியத்துக்கும் வயது ஒரு தடையில்லை என்று நாராயணன் நம்பிக்கையுடன் கூறுகிறார். தனது வார்டு வளர்ச்சிக்காக நிறைய செய்ய வேண்டும் என்பதே தனது இலக்கு என்று அவர் குறிப்பிடுகிறார்.

போஸ்டர்கள், பேனர்கள் ஆகியவற்றை விட மக்களை நேரடியாகச் சந்தித்தால் தான் பலன் கிடைக்கும். திருமண அழைப்பிதழ்கள் கூட நேரில் சென்று கொடுத்தால் தான் திருமணத்துக்கு வருவார்கள் என நாராயணன் தெரிவிக்கிறார்.

இவரது நேர்மையான அணுகுமுறைக்கு வாக்காளர்கள் மத்தியிலும் வரவேற்பு நிலவுகிறது.

கேரளாவில் டிசம்பர் 9 மற்றும் 11 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக உள்ளாட்சித் தேர்தல் நடதப்பட்டு டிசம்பர் 13ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளது.

உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!




மதுரை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் உடன் சந்திப்பு.




நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையை சேர்ந்த உயர்நீதிமன்றம் (மதுரை கிளை) மூத்த வழக்கறிஞர் மரியாதைக்குரிய ஐயா ராஜ்குமார் அவர்களை சிறுபான்மை நலத்துறை கருத்தாளர் ஜெபசிங் சந்தித்தார்.திருச்சபைகளுக்கு பாத்தியப்பட்ட இடங்களை பாதுகாப்பது குறித்த சட்ட ஆலோசனைகளை வழங்கினார்.

www.kathiroli-media.ca

அனைத்து கனடிய மக்களே, தயவுசெய்து தினமும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை ஈஸ்ட் FM 102.7 தமிழ் வானொலியைக் கேளுங்கள்.

நமது CSI கன்னியாகுமரிப் பேராய CSI மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம். ஆலங்கோடு Polio Home,

பழுதடைந்த இல்லம் சீரமைப்பதற்காக ஒரு முயற்சி :- பரிசு குலுக்கல் நன்கொடை ரசீது.



C.S.I. மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம்
ஆலங்கோடு (போலியோ ஹோம்)
பழுதடைந்த இல்லம் சீரமைப்பதற்கான
நன்கொடை இரசீது
ரசீது எண் : 11128
₹ 200/-
பெயர் :
விலாசம் :
குலுக்கல் நாள் :
இடம் : இல்ல வளாகம், ஆலங்கோடு

குலுக்கல் நாள் 10.10.25 என்பது மாற்றப்பட்டு: 10.11.2025, மதியம் 2:00 மணி அன்று நடைபெறும்.

ஒரு புத்தகமாக ரூ.5000/-

ரசீது ஒன்றுக்கு ரூ.200/- மட்டுமே...

உதவிக்கரம் நீட்டுவோம். நன்றி...

தொடர்புக்கு: 9443694274(Also Gpay.)

ரசீது அனுப்பி வைக்கப்படும்

House for Sale
At Chennai on main road and one in Palakad, Kerala





# மிருணாள் தாகூரை காதலிக்கும் ஷ்ரேயாஸ் – இணையத்தில் தீயாய் பரவும் தகவல்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான தனுசும், பாலிவுட் நடிகை மிருணாள் தாகூரும் காதலிப்பதாக கிசுகிசுக்கப்பட்டது.

அஜய் தேவ்கானுடன், மிருணாள் தாகூர் நடித்துள்ள 'சன் ஆப் சர்தார்-2' பட விழாவில் தனுஷ் கலந்து கொண்டதும், மிருணாள் தாகூருடன் கைகோர்த்துக்கொண்டு சுற்றியதும் இதற்கு தூபம் போடுவதுபோல அமைந்தது.

இதுகுறித்து பேசிய மிருணாள் தாகூர், 'நடிகர் தனுஷ் எனக்கு நல்ல நண்பர் மட்டுமே. எங்கள் இருவரை பற்றியும் வதந்திகள் பரவி வருவதை அறிகிறோம். இதுபோன்ற வதந்திகளை பார்க்கும்போது, எனக்கு சிரிப்புதான் வந்தது' என்று விளக்கம் கொடுத்து இந்த சர்ச்சைக்கு முடிவுரை எழுதினார்.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் வீரர் ஷ்ரேயாஸ் அய்யரும் நடிகை மிருணாள் தாகூரும் ரகசியமாக காதலித்து வருவதாக இணையத்தில் தகவல் கசித்துள்ளது.

ஷ்ரேயாஸ் மற்றும் மிருணாள் தாகூர் ஆகியோர் தங்களின் கேரியரின் உச்சத்தில் இருப்பதால் இந்த காதலை பொதுவெளியில் அறிவிக்க தயக்கம் காட்டுவதாகவும் தங்ஙளின் நண்பர்களின் பார்ட்டி மற்றும் விழாக்களில் மட்டும் சந்தித்து காதலை வளர்த்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் காயமடைந்த ஷ்ரேயாஸ் தற்போது குணமடைந்து ஓய்வில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




Paul Healthy Life Clinic
HOMEOPATHY & ACUPUNCTURE

Paul Joseph, B.H.M.S.(India), R.Ac., R.Hom(Canada)
(Bachelor of Homeopathic Medicine and Surgery)

1193 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5
Tel: 416 438 3939 Cell: 416 986 4903
e-mail:jp123canada@gmail.com

- Qualified from Tamil Nadu Dr. M.G.R. Medical University, Madras, India.
- Registered Acupuncturist (Canada)
- Former Professor - Homeopathy Medical Colleges, Dr. M. G. R. Medical University, India
- Head of Department - Homeopathy & Acupuncture, Shanmuga Medical Research Foundation, India
- Twenty five years of experience in the field of medicine
- Specialist in Homeopathy Medicine, Acupuncture, Pulse Diagnosis, Acupressure, Scientific Meditation, Yoga and Counselling

Treatment for all chronic diseases

1193 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5
Tel: 416 438 3939 Cell: 416 986 4903
e-mail:jp123canada@gmail.com


# 'பராசக்தி' படத்தின் டப்பிங் பணிகளை தொடங்கினார் சிவகார்த்திகேயன்

பொங்கல் தினத்தன்று வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' படத்தின் டப்பிங் பணிகள் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான வீடியோவை தயாரிப்பு நிறுவனமான ஆகாஷ் பாஸ்கரனின் டான் பிக்சர்ஸ்



வெளியிட்டுள்ளது.

வீடியோவில், சிவகார்த்திகேயன் டப்பிங் பணியில் ஈடுபட்டுள்ளதையும், படத்தின் சில காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

சுதா கொங்கரா இயக்கியுள்ள இந்தப் படம் 1960-ம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. 'பராசக்தி' படத்தில் ரவி மோகன், அதர்வா மற்றும் ஸ்ரீலீலா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

சிவகார்த்திகேயன் மற்றும் சுதா கொங்கரா இணைந்து பணியாற்றும் முதல் திரைப்படம் இதுவாகும். இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 14-ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

# பிரித்விராஜை சினிமா துறையிலிருந்து அழிக்க முயற்சி – தாயார் பகீர் குற்றச்சாட்டு

மலையாள திரையுலகில் குறிப்பிடத்தக்க ஆளுமையாக திகழ்பவர் பிருத்விராஜ். மலையாளம், தமிழ் படங்களில் கதாநாயக வளம் வரும் பிருத்விராஜ் கடந்த 2019 இல் மோகன்லாலை வைத்து லூசிபர் என்ற படத்தை இயக்கியதன் மூலம் இயக்குனர் அவதாரம் எடுத்தார்.


உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!


முதல் படத்திலேயே தேர்ந்த இயக்குனரான பரிமளித்தார் பிருத்விராஜ். இப்படம் சூப்பர் ஹிட் ஆன நிலையில் கடந்த மார்ச் மாதம் இப்படத்தின் 2 ஆம் பாகமான எம்புரான் வெளியாகி கலவையான விமர்சனத்தை பெற்றது.

இருப்பினும் வசூல் ரீதியாக வெற்றிபெற்றது.இந்தபடத்தில்2002 குஜராத் கலவரத்தில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையை காட்சிப்படுத்தியதால் இந்து அமைப்புகள் உள்ளிட்ட வலதுசாரி அமைப்புகளின் எதிர்ப்பை சம்பாதித்தார் பிருத்விராஜ்.

இந்நிலையில் ஒரு நடிகராக தனது மகனை திரைப்படத் துறையிலிருந்து அழிக்க சிலர் பெரிய சதித்திட்டம் தீட்டி வருவதாக பிருத்விராஜின் தாயார் மல்லிகா சுகுமாரன்கவலை தெரிவித்துள்ளார்.

மலையாள ஊடகங்களுக்கு மல்லிகா சுகுமாரன் அளித்த பேட்டியில் 'பிருத்விராஜை குறிவைத்து சமூக ஊடகங்களில் தொடர்ந்து தவறான பிரச்சாரம் பரப்பப்படுகிறது. இது அவரை சினிமா தொழிலில் இருந்து நீக்க திட்டமிட்ட முயற்சி' என்று கூறினார்.

ஜெயன் நம்பியார் இயக்கிய பிருத்விராஜின் சமீபத்திய திரைப்படமான 'விலாயத் புத்தா' நவம்பர் 21 அன்று வெளியிடப்பட்டது.

இந்தப் படம் வெளியானதிலிருந்து ஒரு குழு தனது மகனை வேண்டுமென்றே குறிவைத்து வருவதாகவும் அவர்கள் பிருத்விராஜை தொழில் ரீதியாக



மட்டுமல்ல, தனிப்பட்ட முறையிலும் அவமானப்படுத்த முயற்சிக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டினார்.

பிரபல மலையாள நாவலை தழுவி சந்தன மரகடத்தல் பற்றிய கதைக்களத்துடன் எடுக்கப்பட்ட 'விலாயத் புத்தா' எதிர்பார்த்த வரவேற்பை பெறவில்லை.

விலாயத் புத்தா படத்தின் காட்சிகளை தவறாக சித்தரித்ததாகவும், வகுப்புவாத பதட்டங்களைத் தூண்டும் நோக்கில் அவற்றை திரித்து கூறியதாகவும் கூறி படத்தின் தயாரிப்பாளர் அளித்த புகாரின் பேரில் ஒரு யூடியூப் சேனலுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.


www.kathiroli-media.ca

# லதாவுடன் திருமணம் - ரஜினி

‘லதாவுக்கும் எனக்கும் திருப்பதியில் திருமணம் நடைபெற இருக்கிறது‘ என்று ரஜினிகாந்த் அறிவித்தார்.

1981 பிப்ரவரி 25-ந்தேதி மாலை 4 மணிக்கு, நிருபர்களை திடீரென்று ரஜினி அழைத்தார். சில நிமிடங்களுக்கெல்லாம் நிருபர்கள் பெருந்திரளாகக் கூடி விட்டனர்.

நிருபர்களிடம் அவர் கூறியதாவது:-

7 மாதங்களுக்கு முன்பே, ரஜினிகாந்த் - லதா திருமணம் என்ற செய்தியை வெளியிட்ட ஒரே பத்திரிகை ‘தினத்தந்தி‘ தான். ரகசியமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்திருந்த இந்தச் செய்தியை, ‘தினத்தந்தி‘ வெளியிட்டது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அந்தச் செய்தி ‘தினத்தந்தி‘யில் வெளி வந்ததும், லட்சக்கணக்கான எனது ரசிகர்களிடம் இருந்து பல கடிதங்கள் வந்தன. பட அதிபர்களும், நடிகர்களும் ’போன்’ செய்து. ’இது உண்மையா என்று கேட்டார்கள். சற்று பொறுத்திருக்கும்படி கூறினேன்.

அந்தச் செய்தி இன்று உண்மையாகி, எல்லோரும் பாராட்டும் விதமாக அமைந்தது பற்றி பெருமைப்படுகிறேன்.‘ இவ்வாறு கூறிய ரஜினிகாந்த், அங்கிருந்த தினத்தந்தி நிருபருடன் கை குலுக்கினார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:-

‘லதாவுடன் எனது காதல் கனிந்து, கடவுள் அருளால் திருமணம் நடைபெறுகிறது. இது எப்படி என்பது பற்றி, என் அன்பு ரசிகர்களுக்கு சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

வாழ்க்கையின் இன்ப - துன்பங்களை உணர்ந்தவன் மட்டுமல்ல; அனுபவித்து அறிந்தவன் நான். முதுகில் தழும்பேற மூட்டை சுமந்து,



’மில்லி’ அடித்து வாழ்க்கையின் மேடு- பள்ளங்கள் அனைத்தையும் உணர்ந்து இந்த நிலைக்கு வந்திருக்கிறேன். என் வாழ்க்கையில் பெரும் திருப்பம் நிகழ்ந்தது. பிரபல நடிகை சவுகார் ஜானகியின் வீட்டில் தான். 7 மாதங்களுக்கு முன் அங்கு, டைரக்டர் பாலசந்தர் சாரின் ‘தில்லு முல்லு‘ படத்தின் படப்பிடிப்பு நடந்தது. அதில் நான் நடித்துக் கொண்டிருந்தேன்.

பகல் ஒரு மணி இருக்கும். எத்திராஜ் கல்லூரி மாணவிகள் சிலர் வந்தனர். அவர்களில், என் முன்னால் வந்து, தன்னை அறிமுகம் செய்து கொண்டவர் லதா. ‘மிஸ்டர் ரஜினி! நான் கல்லூரி மாணவி. எங்கள் கல்லூரியின் சிறப்பு இதழுக்கு, உங்களை பேட்டி காண வந்திருக்கிறேன். சம்மதமா?‘ என்று கேட்டார். நான் சம்மதித்தேன். பேட்டி தொடர்ந்தது. சுவையான, அறிவுபூர்வமான கேள்விகள் பலவற்றை லதா கேட்க கேட்க, நானும் என் பாணியில் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன்.

லதா திடீரென்று ‘மிஸ்டர் ரஜினி காந்த்! உங்கள் திருமணம் எப்போது?‘ என்று கேட்டார். ‘குடும்பப் பாங்கான பெண் எப்போது கிடைக்கிறாளோ, அப்போதுதான் திருமணம்‘ என்று பதிலளித்தேன். லதா மீது கண்களைப் பதித்தபடி. இப்படிச் சொன்னால் எப்படி! விளக்கமாகச் சொல்லுங்கள்!‘ என்றார் லதா. ‘உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். உங்களை மாதிரி ஒரு பெண் கிடைத்தால் நான் கல்யாணம் செய்து கொள்வேன்‘ என்றேன்.

நாணத்தால் லதாவின் முகம் சிவந்து விட்டது. என் வாழ்க்கையில் ஒளிவு - மறைவு இல்லை. உண்மை பேசி வாழ விரும்புகிறேன். என் மனமார, எவருக்கும் துரோகம் செய்ய மாட்டேன். அதனால்தான் மனம் திறந்து, ‘என்னைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமா?‘ என்று லதாவிடம் கேட்டேன். தொடர்ந்து, இதுபற்றி ஒய்.ஜி.மகேந்திரனிடம் பேசினேன். லதாவிடமும், லதாவின் பெற்றோரிடமும் மகேந்திரன் பேசினார். அவர்களின் சம்மதம் கிடைத்தது.

அதன் பிறகு நானும் லதா வீட்டுக்கு சென்று அவர் பெற்றோர்களிடம் பேசினேன். ’திருமணத்துக்கான ஏற்பாடுகளை எல்லாம் நானே செய்கிறேன். அதுவரை வெளியே யாருக்கும் தெரிய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன்.

நான் பெங்களூர் சென்று என் அண்ணனிடம் லதாபற்றி கூறினேன். முதலில் அவர் அதிர்ச்சி அடைந்தார். ’அந்தப் பெண் நம்ம சாதி இல்லேன்னு சொல்றே. மராத்தியில் கிடைக்காத பெண்ணா உனக்கு மதராசில் கிடைக்கப்போகுது?‘ என்று கேட்டார். ’நான் நல்லா இருக்கணும்னு நீங்க விரும்பினா, லதாவை மணந்து கொள்ள எனக்கு அனுமதி கொடுங்க’ என்று சொல்லி விட்டு வந்தேன். பிறகு என் அண்ணன், சென்னைக்கு வந்தார். லதாவைப் பார்த்து விட்டு, சம்மதம் தெரிவித்தார்.



# வேதாகம மொழிபெயர்ப்புகள் : ஒரு அறிமுகம்

கிறிஸ்தவர்களின் வேத புத்தகம் (The Holy Bible) இரண்டு பிரிவுகளை உடையது. முதல் பகுதி பழைய ஏற்பாடு அல்லது பழைய உடன்படிக்கை எனவும் இரண்டாம் பகுதி புதிய ஏற்பாடு அல்லது புதிய உடன்படிக்கை எனவும் அழைக்கப்படுகிறது. பழைய உடன்படிக்கை சீனாய் மலையில் மோசேயின் மூலமாக கர்த்தர் இஸ்ரவேல் மக்களுடன் செய்த உடன்படிக்கையை குறிக்கிறது (யாத்திராகமம் 19: 5-6). பத்துக்கட்டளைகள் அங்கே கொடுக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது (மத்தேயு 26:26-28).

பழைய ஏற்பாட்டின் பெரும் பகுதிகள் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. சில பகுதிகள் மட்டும் அரமேயு மொழியில் எழுதப்பட்டது. எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு இயேசு பிறப்பதற்கு முன்பு மகா அலெக்சாண்டரின் மறைவுக்கு பிறகு எகிப்தில் வாழ்ந்த யூதர்களின் பயன்பாட்டுக்காக எபிரேய மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. அந்த மொழிபெயர்ப்பை எழுபதிரண்டு பேர் செய்தனர். அதினால் அதற்கு எழுபதின்மரின் மொழிபெயர்ப்பு (Septuagint - LXX - செப்துவஜிந்து ) என்றழைக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டை எபிரேய மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழி பெயர்த்தவர்கள் அப்போது எகிப்தில் யூதர்களின் நடுவில் புழக்கத்தில் இருந்த சில கிரேக்க மொழி நூல்களையும் பழைய ஏற்பாடு ஆகமங்களுடன் இணைத்து விட்டனர். இதனால் இரண்டு வகையான பழைய ஏற்பாடு உருவாகியது. ஒன்று எபிரேய மொழியிலிருந்த பழைய ஏற்பாடு. மற்றொன்று கிரேக்க மொழியில் இருந்த பழைய ஏற்பாடு. எகிப்தில் பயன்படுத்திய கிரேக்க மொழி பழைய ஏற்பாட்டை (செப்துவஜிந்து) பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள் நிராகரித்தனர்.

பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள் பழைய ஏற்பாட்டின் ஆகமங்கள் மொத்தம் 39 மட்டுமே என்று உறுதியாக நம்பியதே இதற்குக் காரணம் ஆகும்.

இந்நிலையில் யூதர்கள் மத்திய தரைக்கடலை சுற்றிலும் இருந்த அனைத்து நாடுகளிலும் குடியிருந்த போதுதாங்கள்ஏற்படுத்தியிருந்தயூத ஜெப ஆலயங்களில் இந்த கிரேக்க பழைய ஏற்பாட்டையே தங்களது ஆராதனைகளில் பயன்படுத்தி வந்தனர். பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள் தங்களது பூர்வீகமான ஜெப ஆலயங்களில் எபிரேய மொழியிலிருந்த பழைய ஏற்பாட்டை பயன்படுத்தி வந்தனர். பாபிலோனிய சிறை யிருப்பிலிருந்து வந்த யூதர்கள் அவர்களின் பிள்ளைகள் அரமேயு மொழியை பேசினார்கள். இதனால் பாலஸ்தீனத்திலும் சிரியாவிலும் வாழ்ந்த யூதர்கள் சனிக்கிழமைகளில் ஓய்வு நாள் ஆராதனையில் எபிரேய மொழியில் பழைய ஏற்பாட்டை வாசித்து அதை அரமேயு மொழியில் மொழிபெயர்த்து மக்களுக்கு கூறினார்கள். அவ்வாறு எபிரேய மொழியிலிருந்து அரமேய மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட மொழிபெயர்ப்புவார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்க்காமல் (word for word) வாசிக்கப்பட்ட வசனங்களுக்கு விளக்கமும்கூறி (translation with interpretation or paraphrase) மொழிபெயர்த்தனர். இந்த அரமேயு மொழி பழைய ஏற்பாடு' டார்கம் '(Targum) என்றழைக்கப்படுகிறது. சிரியா மொழியிலும் பழைய ஏற்பாடு மொழி பெயர்க்கப்பட்டது. அது 'பெஷித்தா '(Peshita) என்று அழைக்கப்படுகிறது.

கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பிறகு திருச்சபை உருவான போது கிறிஸ்தவ நற்செய்திகள், கிறிஸ்தவ சபைகளுக்கு எழுப்பட்ட கடிதங்கள் (நிருபங்கள்) அன்று பேச்சுவழக்கில் இருந்த கிரேக்க மொழியில் (Koine Greek)எழுதப்பட்டன. கிரேக்க மொழியில் கிறிஸ்தவர்கள் கடிதங்கள் (Epistles) நற்செய்திகளை (Gospels)எழுதும் போது பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்ட மேசியா அல்லது கிறிஸ்து தான் கன்னி மரியாளின் வயிற்றில் பிறந்த இயேசு என்று உறுதிபட எழுதினர். இயேசுவே கிறிஸ்து அல்லது மேசியா- அவர் கன்னியின் வயிற்றில் பிறந்தவர் ( ஏசாயா 7:14 ; மத்தேயு 1:22) என்று கிறிஸ்தவர்கள் யூதர்கள் பயன்படுத்திய செப்துவஜிந்து மொழிபெயர்ப்பை பயன்படுத்தியே இயேசுவை கிறிஸ்து அல்லது மேசியா என்று நிரூபித்ததினால் யூதர்கள் தங்களது ஜெப ஆலயங்களில் செப்துவஜிந்து மொழிபெயர்ப்பை பயன்படுத்துவதை நிறுத்தி விட்டனர். அதற்கு மாறாக ஆக்கில்லா, தியோடோஷன், சிம்மாகஸ் ஆகியோர்மொழி பெயர்த்த பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்புகளை தங்களது யூத ஜெப ஆலயங்களில் வாசிக்கவும் போதிக்கவும் பயன்படுத்தினர். இதனால் யூதர்களின் பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலிருந்து கிரேக்க மொழியில் செப்துவஜிந்து (LXX) மொழி பெயர்ப்பாகவும், ஆக்கில்லா, தியோடோஷன், சிம்மாகஸ் ஆகியோர் மொழி பெயர்த்த கிரேக்க ப.ஏ. மொழிபெயர்ப்புகளும் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கிடைத்தது.

பழைய ஏற்பாடு பழைய லத்தீன் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டது. டேமசஸ் என்ற போப்புவின் கட்டளையின்படி ஜெரோம் லத்தீன் மொழியில் பழைய ஏற்பாட்டை எபிரேய கிரேக்க மொழிகளிலிருந்து மொழிபெயர்த்தார். ஆனால் ஜெரோம் செப்துவஜிந்து பழைய ஏற்பாட்டிலிருந்த இணைத்திருமறை நூல்களையும் / தள்ளுபடி ஆகமங்களையும் (Deutero & Canonical Books or Apocryphal Books) தன்னுடைய லத்தீன் மொழிபெயர்ப்பில் சேர்த்து விட்டார். இந்த மொழிபெயர்ப்பு லத்தீன் 'வல்கேட்' (Vulgate)/ 'உல்காத்தா' மொழிபெயர்ப்பு




என்று அழைக்கப்படுகிறது. இது திருச்சபையினுடைய பைபிளாக மாறியது. ஏறத்தாழ 1500 ஆண்டுகள் இந்த லத்தீன் வல்கேட் மொழிபெயர்ப்பின் ஆதிக்கம் திருச்சபையிலிருந்தது. சபை மட்டும் அல்லாது இலக்கியங்களிலும் இதன் ஆதிக்கம் தொடர்ந்தது.

திருச்சபையில் சீர்திருத்தம் ஏற்பட்டபோது மார்டின் லூத்தர் தான் மொழிபெயர்த்த ஜெர்மன் மொழி வேதாகமத்தில் பழைய ஏற்பாடு நூல்கள் 39 என்றும் புதிய ஏற்பாடு நூல்கள் 27 என்றும் பிறநூல்கள் தள்ளப்பட்ட நூல்கள் (Apocryphal Books) என்றும் கூறி தான் வெளியிட்ட பைபிளில் அவைகளை தனியாக பிரித்து வைத்து அச்சிட்டு வெளியிட்டார். ஆனால் கத்தோலிக்க திருச்சபை டிரெண்ட் பொதுச்சங்கத்தில் (1545-1563) தள்ளுபடி ஆகமங்களை வேத நூல்களாக அங்கிகரித்து அவைகளை கத்தோலிக்க வேதபுத்தகங்களில் இணைத்திருமறை நூல்களாக அங்கிகரித்தது. புரோட்டஸ்டன்டு திருச்சபையினர் தங்கள் வேத புத்தகங்களில் 66 நூல்களை மட்டுமே அச்சிட்டு வெளியிட்டு வருகின்றனர். ஆனால் தற்போது ரோமன் கத்தோலிக்க திருச்சபையும் சீர்திருத்த சபைகளும் இணைந்து பொதுவான வேதாகமத்தையும் (Common Bible) வெளியிட்டு வருகின்றனர். ஆங்கிலத்தில் வெளிவந்த NRSV யும் தமிழில் வெளிவந்த திருவிவிலியம் பொது மொழிபெயர்ப்பும் (CL) இதற்கு சான்றுகளாகும்.

- Pr.S.John Madhiyazhagan,
Ct.No: +91 9952004047.

www.kathiroli-media.ca

**Dear Brothers n Sisters**
Daily Verses
(FREE - FREE - FREE)
Daily Verses (PAID)
old b/w photo to colour restoration
Digital Invitation, logo design, logo animation, title animation, video editing, youtube - thumbnails, meeting posters, web design
magazine (tamil)
english tamil translation
proof reading
Pls introduce any of ur well known pastors and churches.
**9944796286**




உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# பெயர் மாற்றத்தைவிடச் சிந்தனை மாற்றமே தேவை..! - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

மாநிலங்களில் உள்ள ராஜ் பவன்கள் இனி லோக் பவன் என்று அழைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

கடந்த 2024 ஆளுநர்கள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இந்த அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார்.



அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:-

பெயர் மாற்றத்தைவிடச் சிந்தனை மாற்றமே தேவை!

சட்டமன்றம் = மக்கள் மன்றம்! சட்டமன்றத்தை மதிக்காதவர்கள், 'மக்கள் மாளிகை' எனப் பெயர் மாற்றுவது கண் துடைப்பா? மக்களாட்சித் தத்துவத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளையும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற இறையாண்மையுள்ள சட்ட மன்றத்தையும் மதிப்பதுதான் இப்போதைய தேவை!

சிந்தனையிலும் செயலிலும் மாற்றம் இல்லையெனில், இதுவும் தேவையற்றதே!

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழக செய்திகள்

# எஸ்.ஐ.ஆர். விவகாரம்: தி.மு.க.-விற்கு கிடைத்த வெற்றி- என்.ஆர். இளங்கோ எம்.பி

எஸ்ஐஆர் படிவங்களுக்கான காலக்கெடு நீட்டிப்பு திமுகவிற்கு கிடைத்த வெற்றி என திமுக எம்.பி. என்.ஆர்.இளங்கோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:-



எஸ்ஐஆர் பணிகள் இன்னும் சிக்கல்கள் நிறைந்ததாகவே இருக்கிறது, அவை தீர்க்கப்படவில்லை.

இந்தியாவில் வாக்காளர்களை பாதுகாக்க பணியாற்றும் ஒரே கட்சி திமுக தான்.

எந்த ஒரு விஷயத்தையும் தேர்தல் ஆணையம் வெளிப்படையாக தெரிவிப்பதில்லை.

எஸ்ஐஆர் விவகாரத்தில் அரசியல் காரணங்களுக்காக திமுக மீது அதிமுக குற்றம்சாட்டுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# டிட்வா புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு துணை நிற்க தமிழ்நாடு தயாராக உள்ளது - முதலமைச்சர்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

டிட்வா புயல் காரணமாக நமது அண்டை நாடான இலங்கை பேரழிவைச் சந்தித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும் பல இடங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியும் இலங்கை மக்கள் அவதியுறுகின்றனர். இந்த இயற்கைச் சீற்றத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கை மக்களின் இப்பெருந்துயரில் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் பங்கெடுக்கிறோம்.

இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளை மீட்க அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு, இன்று காலை 11:05 மணியளவில் முதற்கட்டமாக 177 பேர் (ஆண்கள் 113, பெண்கள் 60, குழந்தைகள் 4) தமிழ்நாட்டிற்குத் திரும்ப அழைத்து வரப்பட்டுள்ளனர்.

டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு ஒன்றிய அரசின் மூலம் உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றைத் தந்து, அவர்கள் மீண்டெழுந்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது.

இதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழுவை அமைத்திடத் தலைமைச் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எனது உரிமையை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது- ராமதாஸ் திட்டவட்டம்

கடந்த சில மாதங்களாக பா.ம.க. தலைவர் யார் என்பதில் குழப்பங்கள் நீடித்து வந்த நிலையில், பா.ம.க. தலைவர் அன்புமணி தான் என இந்திய தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்தது.

இதனை தொடர்ந்து, 'அன்புமணி தலைவர் இல்லை' என ராமதாஸ் அளித்த மனுவை, ஆணையம் நிராகரித்துவிட்டது. தேர்தல் ஆணையம் செய்தது ஜனநாயக படுகொலை. தேர்தல் ஆணையத்தை கண்டித்து டெல்லியில் பா.ம.க. சார்பில் போராட்டம் நடத்த உள்ளதாக பா.ம.க. கௌரவ தலைவர் ஜி.கே.மணி தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், எனது உரிமையை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது என ராமதாஸ் திட்டவட்டமாக கூறியுள்ளார்.



இதுதொடர்பாக நிர்வாகிகள் மத்தியில் பேசிய ராமதாஸ்,

★ அன்புமணியின் பா.ம.க. தலைவர் பதவிக்காலம் முடிந்துவிட்டது.

★ தேர்தல் ஆணையத்தை பணம் கொடுத்து அன்புமணி விலைக்கு வாங்கிவிட்டார்.

★ எனது உரிமையை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது.

★ எனது உரிமையை யாராலும் திருட முடியாது.

★ இனி வெல்லப்போவது ராமதாஸ் தான்.

★ சட்டமன்றத்தில் பா.ம.க. பிரதிநித்துவம் குறைந்ததற்கு காரணம் அன்புமணியின் செயல்பாடுகளால் தான்.

★ அன்புமணியால் பணம் கொடுத்து தான் கூட்டம் கூட்ட முடியும்.

★ தான் உருவாக்கிய கட்சியை அன்புமணி அபகரிக்க முயற்சி.

★ கட்சி விவகாரத்தில் அன்புமணி கூறுவது அனைத்தும் பொய்தான் என்றார்.

# SIR வாக்காளர் படிவத்தை ஒப்படைக்க டிச.11 வரை கால அவகாசம் நீட்டிப்பு



தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகள் (SIR) நடைபெற்று வருகின்றன. கடந்த 4-ந்தேதி தொடங்கிய கணக்கெடுப்பு பணி டிசம்பர் 4-ந்தேதியுடன் முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர் வீடுதோறும் சென்று தற்போதைய வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவத்தினை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவத்தை ஒப்படைப்பதற்கான கால அவகாசம் டிச.11-ந்தேதி வரை நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

பொதுமக்களின் படிவத்தை BLO-க்கள் டிச.15-ந்தேதிக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

வரைவு வாக்காளர் பட்டியல் டிச.16-ந்தேதியும் இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.14-ந்தேதியும் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

www.kathiroli-media.ca




# ஆபரேசன் சாகர்பந்து... இந்தியாவில் இருந்து இலங்கைக்கு பறந்த 12 டன் நிவாரண பொருட்கள்

இந்தியாவின் அண்டை நாடான இலங்கையில் டிட்வா சூறாவளி புயலால் அந்நாட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். இலங்கையில் கடந்த 17-ந்தேதி முதல் மழை தொடர்ச்சியாக பெய்து வரும் நிலையில் நிலச்சரிவும், வெள்ளப்பெருக்கும் சேர்ந்து மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த கனமழை எதிரொலியாக, பல்வேறு பகுதிகளிலும் வெள்ளநீர் சூழ்ந்து கொண்டது. கனமழை தொடர்பான பாதிப்புகளில் சிக்கி இதுவரை 69 பேர் பலியாகி உள்ளனர். 34 பேரை காணவில்லை. பலர் காயமடைந்து உள்ளனர் என இலங்கை பேரிடர் மேலாண் மையம் வெளியிட்ட தகவல் தெரிவிக்கின்றது.

இதேபோன்று, கனமழை தொடர்ச்சியாக 63 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 2.19 லட்சம் பேர் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். 4 வீடுகள் முற்றிலும் இடிந்து விழுந்து விட்டன. 666 வீடுகள் பகுதியளவாக சேத மடைந்து உள்ளன. பொதுமக்கள் அவசர உதவிக்கு 117 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.



மீட்பு பணிகளை முடுக்கி விடும் படியும் மற்றும் தடையில்லா நிவாரண உதவி கிடைக்கவும் வழி செய்திடும்படி அனைத்து மாவட்ட அதிகாரிகளுக்கும் இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசநாயகே உத்தரவிட்டு உள்ளார். மீட்பு பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புயல் பாதிப்பு மற்றும் மழை, நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு உள்ள இலங்கைவாசிகளுக்கு உதவிடும் வகையில், முன்வந்துள்ளது. டிட்வா புயலுக்கு பலியானவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொண்டார்.

இலங்கையில், பேரிடரை முன்னிட்டு, இந்தியா சார்பில் ஆபரேசன் சாகர்பந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன்படி, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர்நிவாரணஉதவியைஇந்தியா வழங்குகிறது. இதுபற்றி மத்திய வெளிவிவகார மந்திரி எஸ். ஜெய் சங்கர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ஆபரேசன் சாகர்பந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஐ.என். எஸ். விக்ராந்த் மற்றும் ஐ.என்.எஸ். உதயகிரி ஆகிய கப்பல்கள் மூலம் கொழும்பு நகரில் நிவாரண உதவி பொருட்களை வழங்கி வருகின்றன. தொடர்ந்து நிவாரண உதவிக்கான பணிகள் நடந்து வருகின்றன என பதிவிட்டு உள்ளார்.

இதனை தொடர்ந்து, இந்திய விமான படையின் சி-130 ஜே விமானத்தில் இன்று காலை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நிவாரண பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. அதில், கூடாரங்கள், தார்ப்பாய்கள், போர்வைகள், சுகாதார நலன் சார்ந்த பொருட்கள் மற்றும் உடனடியாக சாப்பிட கூடிய உணவு பொருட்கள் உள்ளிட்ட 12 டன் நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. இதனை மத்திய மந்திரி ஜெய்சங்கர் எக்ஸ் பதிவில் பகிர்ந்து உள்ளார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!



# இந்தோனேசியாவில் கனமழை, நிலச்சரிவு; பலி எண்ணிக்கை 248 ஆக உயர்வு

ஆசிய பகுதியில் அமைந்த தீவு நாடான இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ரா, மேற்கு சுமத்ரா உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு நகரங்களில் வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவும் ஏற்பட்டு, 2 லட்சத்திற்கும் கூடுதலான மக்கள்



பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகளை வெள்ளம் சூழ்ந்து, சாலை போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. மின்சார விநியோகமும் தடைபட்டு உள்ளது.

இந்த நிலையில், இந்தோனேசியாவில் கனமழை, வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 248 ஆக உயர்ந்து உள்ளது. இந்தோனேசியாவில் நிலநடுக்கம், சுனாமி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு தவித்து வரும் பொதுமக்கள் உள்ள பகுதிகளுக்கு மீட்பு குழுவினரால் சென்று சேர முடியவில்லை. இதனால் பலியானோர் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

இதில், வடக்கு சுமத்ரா மாகாணத்தில் மத்திய தபனுலி மாவட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. மற்ற பகுதிகளிலும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. 100-க்கும் மேற்பட்டோரை காணவில்லை. 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அரசு நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு உள்ளனர். பாலங்கள் மற்றும் சாலைகள் பாதிக்கப்பட்டு உள்ளன. இதனால், மீட்பு பணிகளும் தடைபட்டு உள்ளன. மீட்பு பணியில் ராணுவ வீரர்கள், பேரிடர் மீட்பு குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய பெருங்கடல் பகுதியில் அமைந்த இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் கடந்த வியாழனன்று காலை 10.26 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. 16 மைல்கள் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகி இருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. நிலநடுக்க பாதிப்பு அபாயம் உள்ள பகுதியில் அமைந்த இந்தோனேசியாவில் கனமழை, வெள்ளம் ஆகியவற்றால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.




உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

## உலக செய்திகள்

# இலங்கையில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களுக்கு அவசர உதவி எண் அறிவிப்பு



தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோரப் பகுதிகளில் நிலவி வரும் டிட்வா புயல் இலங்கையில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை முழுவதும் பெய்து வரும் தொடர் கனமழையால் பல்வேறு மாகாணங்களில் வெள்ளம், நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

டிட்வா புயலால் இலங்கையில் பலியானவர்களின் எண்ணிக்கை 123 ஆக அதிகரித்துள்ளதாக இலங்கையின் பேரிடர் மேலாண்மை மையம் அறிவித்துள்ளது. மேலும் காணாமல் போன 100-க்கும் அதிகமானவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை நாட்டுக்கு மத்திய அரசு நிவாரணப் பொருள்களுடன் 80 வீரர்களைக் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப் படையும் அனுப்பி வைத்துள்ளது.. இதனைத் தொடர்ந்து இலங்கையில் உள்ள இந்தியர்களை மீட்கும் முயற்சியில் மத்திய அரசு தூதரகத்தின் மூலமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் உள்ள இந்தியர்களுக்கு உதவ, கொழும்பு பண்டாரநாயக்கே சர்வ தேச விமான நிலையத்தில் இந்திய தூதரகம், அவசர உதவி மையத்தை அமைத்துள்ளது. அவசர உதவி எண் அறிவிப்புவிமான நிலையத்திலோ அல்லது இலங்கையில் எப்பகுதியிலும் சிக்கலை எதிர்கொள்ளும் இந்தியர்கள் +94773727832 என்ற அவசர உதவி எண்ணைத் தொடர்புகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணை வாட்ஸ்ஆப் மூலமாகவும் தொடர்புகொள்ளலாம். உதவி மையத்தை நேரடியாகவும் அணுகலாம். கொழும்பு விமான நிலையத்தில் உள்ள இந்திய உதவி மையத்தில் பயணிகளுக்குத் தேவையான உணவு, குடிநீர் வசதிகளும் அளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.kathiroli-media.ca

# தந்தை உயிருடன் உள்ளாரா? ஆதாரத்தை கொடுங்கள் - பாகிஸ்தான் அரசுக்கு இம்ரான்கான் மகன் கோரிக்கை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் (வயது 73). பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சப் கட்சி தலைவரான இவர், 2018 முதல் 2022 வரை பிரதமராக இருந்தார். பின்னர், எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தால் பிரதமர் பதவியை இம்ரான்கான் இழந்தார். மேலும், பாகிஸ்தான் புதிய பிரதமராக ஷபாஸ் ஷெரீப் பொறுப்பேற்றார்.

இதனை தொடர்ந்து இம்ரான்கான் மீது ஊழல் முதல் பயங்கரவாதம் வரை பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இந்த வழக்குகளில் 2023 ஆகஸ்ட் 5ம் தேதி கைது செய்யப்பட்ட இம்ரான்கான் ராவல்பிண்டியில் உள்ள அடிலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து இம்ரான்கான் தனிமைச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த 2 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, சிறையில் உள்ள இம்ரான்கானை சந்திக்க அவரது குடும்பத்தினர் முயற்சித்தனர். ஆனால், இம்ரான்கானை குடும்பத்தினர் சந்திக்க சிறைத் துறையினர் அனுமதி மறுத்தனர்.



இதையடுத்து, அடியாலா சிறை முன் இம்ரான்கான் குடும்பத்தினர், தெக்ரிக்-இ-இன்சப் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், இம்ரான்கான் உடல்நிலை மோசமாகி இருக்கலாம் என்றும் அவர் சிறையிலேயே கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் குடும்பத்தினர் சந்தேகம் எழுப்பி வருகின்றனர். இதனால் பாகிஸ்தானில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், தனது தந்தை உயிருடன் உள்ளாரா? என்பதற்கான ஆதாரத்தை வெளியிடுமாறு பாகிஸ்தான் அரசுக்கு இம்ரான் கானின்மகன்காசிம்கான்கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக காசிம் கான் வெளியிட்ட எக்ஸ் பதிவில், எனது தந்தை இம்ரான் கான் உயிருடன் இருப்பதற்கான ஆதாரம் வேண்டும். இவர் கடந்த 845 நாட்களாக சிறையில் உள்ளார்' என தெரிவித்துள்ளார்.

Kathiroli Marriage Matches!

We are here to help your children's for finding out the correct matches. So far thousands of couples joined through our Kathiroli Marriage Match bureau. For more information and the Application, please contact our coordinator @

Managing Director.

Kathiroli Media Inc.

Call: 647-473-9698, 437-833-4304



**BIO-DATA**

D.PRAYWIN GEORGE
MR. DURAIPANDI GEORGE
Mrs.DARLING DURAIPANDI
19.05.1986
M A,. B.Lit,. D.TEd,.
Doing God's Ministry
BC - Christian (CSI Church)
Tamil and English
5.4 ft
70kg
Fair
+919786477381
Bethel House,
Theriurveli Post,
Mudukulathur taluk-623701
Ramanathapuram Dist.



| | | |
|---|---|---|
| Name | : | Er.G.Ephraim Bleson Noble BE., MS., |
| Mobile | : | 9843053644 |
| Qualification | : | BE. Aeronautical Engineering (Aircraft Design & Engineering) Nanging University of Aeronautics & Astronautics, China<br>ME. (Mech) University of Michigen, Shanghai Jiaotong, China<br>Top 10 University All over world |
| Occupation | : | Product Project Manager within the Research and Technology Department in SUZHOU WEST DEANE EV ELECTRONICS CO., Ltd., Suzhou, Jiangsu, China.<br>Director of JSM Broad casting Channel (P) Ltd<br>Trusty of Jesus Saves Ministries (NGO)<br>Trusty of JSM Noble Theresa Trust (NGO) |
| Salary | : | 15000 RMB from April 2025 |
| Permanent Address | : | Bishop Bungalow, JSM Cathedral Road, Itteri, Tirunelveli-627007 |
| Birth of Place | : | Nazareth, Tuticorin District |
| Date of Birth | : | 04.04.1996, Age 29 |
| Colour | : | Fair |
| Character | : | God fearing and Good Character |
| Height& Weight | : | 173cm. 75kg |
| Father | : | Rt.Rev.Dr.Godfrey Noble DD.,<br>CSITA TDTA TND Spiritual wing Chairman.<br>Founder of Jesus Saves Ministries & JSM Noble Theresa Trust |
| Mother | : | Mrs.Arulmathi Godfrey M.Sc., B.Ed. (Maths) PG Asst |
| Brother | : | Dr.G.David Gladson Noble MBBS., Practice as a Physian at Hosur (Unmarried) |
| Grand Father | : | Late. Mr.P.Noble Theogaraj (Rtd Tr) Schatter Hr.Sec.School |
| Grand Mother | : | Mrs.Hepzie Rubavathi Noble M.A., B.Ed., (Rtd Tr) Mary Sargent Er.Sec.School |
| Periyamma | : | Mrs.Joice Lazarus, Nalumavadi, Tuticorin |
| Contact : | : | Mob : 9843053644, 9362911773 |

# கதிர் ஒளி திருமண சேவை!



D.DAVIDRAJ

| | | |
|---|---|---|
| NAME | : | D.DAVIDRAJ |
| DATEOFBIRTH | : | 20-MAR-1993 |
| TIME | : | 4.40AM |
| CASTE | : | CHRISTIAN PADAYACHI (BC) |
| EDUCATION QUALIFICATION | : | M.COM |
| OCCUPATION | : | WORKING AS MANAGER in (Blue Whale Logistics Services) |
| SALARY | : | 6,00,000/-(Per Annum) |

ADDRESSFORCOMMUNICATION

PresentAddress : D.DAVIDRAJS/OC.DEVADOSS
PERIYAR NAGAR, THIRUVOTTIYUR, CHENNAI - 19
Phone: 9884240922



S.JENISH

| | | |
|---|---|---|
| Name | : | S.Jenish |
| Date of Birth | : | 4.2.1998 |
| Age | : | 25 |
| Qualification | : | M.Sc(maths).,B.Ed., |
| Religion & Caste | : | CSI Christian, Nadar |
| Address | : | 5/3 West Street, Vellalanvilai. |
| Mobile No | : | 9489193161, 8667523526 |



A.JOSHUA

| | | |
|---|---|---|
| Name | : | A.Joshua |
| DOB | : | 15th October 1993 |
| Height | : | 5.7 feet |
| Religion | : | Christian |
| Address | : | 60/2, 1st Cross, Manjunath nagar, Oorgaumpet, K.G.F |
| Contact number | : | 9686584983 |



LYDIA J

| | | |
|---|---|---|
| Name | : | LYDIA.J |
| Date of Birth | : | 19.10.1978 |
| Height | : | 154 cms |
| Weight | : | 55kg |
| Mother Tongue | : | Tamil |
| Expectation | : | A Good job & good spiritual groom wanted Any B.C wanted |
| Contact No | : | +91 9952598399 |



FRANKLINE P

| | | |
|---|---|---|
| NAME | : | Frankline .P |
| DOB | : | 12/07/1998 |
| HEIGHT | : | 176 CM |
| RELIGION | : | Christian |
| MOTHERS NAME | : | Caroline.L |
| OCCUPATION | : | Teacher (Private school) |
| CELL NO | : | 9600079689, 9445439689. |



RAJESH KUTTI BABU

| | |
|---|---|
| Name | :- Rajesh Kutti Babu |
| Caste | :- Christian. Castle No Bar |
| DOB | :- 03-03-1988 |
| Blood Group | :- A + |
| Height | :- 5.0 |
| Weight | :- 60 |
| Education | :- M Com .D.min |
| Email | :- earrowrajesh2017@gmail.com |
| Contact | :- +919944058063 |



BRAVIN JASS R

| | |
|---|---|
| Name | : Bravin Jass R |
| Date Of Birth | : 7 September,1995 |
| Height | : 176 cm |
| Occupation | : Motion graphic designer |
| Contact Details | : Pr.S.Robert +91 9942680464 |



DR.P.A.CHARISHMA MARILIN

| | |
|---|---|
| NAME | Dr. P. A. CHARISHMA MARILIN |
| AGE | 27 |
| DATE OF BIRTH | 12.08.1995 |
| HEIGHT | 5′ 2″ |
| COMPLEXION | Dusky |
| EDUCATION | B.D.S |
| PROFESSION | Dentist |

Contact

PHONE 9840812266 9840708382

Church Information

PASTOR'S NAME Pastor Jay
CHURCH NAME The Ark Victory Church, Chennai



SMAILAN J

SMAILAN J

Personal Details

Blood Group
A+
DOB
20/April/1988
Height
5.4'
Weight
75Kg
Education
DECE, BBA, DIS, IOSH.,

Father Name
L JAMES
Occupation
Electrician
Mother Name
J VICTORIA

Native Place
Ramanathapuram
Contact
+91 9788416308
+91 9003522214
Address
L.James,
10/864, Mandapam Main Road,
Ramanathapuram District, Uchippuli
Post - 623534.



ROHINI SELVARAJ

| | |
|---|---|
| NAME | :ROHINI SELVARAJ |
| DATE OF BIRTH | :14.12.1998 |
| AGE | :25 |
| HEIGHT | :153CM |
| QUALIFICATION | :B.E ( PRODUCTION ENGINEERING)) |
| GENDER | :FEMALE |
| MARITAL-STATUS | :UNMARRIED |
| ACTIVITIES. | |
| ADDRESS | : POLLACHI, COIMBATORE |
| EXPECTATION | : SPIRITUAL EDUCATED CARING PERSON WITH GOOD JOB |



V M IKKESH PRAVEEN

Name : V M Ikkesh Praveen

Age : 29

Date of Birth : 15/09/1995

Qualification : B.com, MBA, ACA

Profession : Practising Chartered Accountant (Office in own building), Guest Lecturer in Bishop Heber College Trichy, Trainer in ICAI Bhawan Trichy

Annual Income : 12,00,000 to 14,00,000

Address : No 11 Convent Road, Cantonment, Trichy 620001

Church Name : Trichy City AG Church

Contact No : 7010177160



PRESCILLA RAJ

| | | |
|---|---|---|
| Name | : | Prescilla Raj S |
| Date of Birth | : | 6 November 1995 |
| Height | : | 5 feet |
| Mother tongue | : | Tamil |
| Education | : | Bachelor of Engineering, Bachelor of Theology |
| Job | : | Working as Cybersecurity Engineer |
| Contact Number | : | 9742398907 8147609688 |
| Address | : | Seegehall, Bangalore 560049 |



EBEN MOSES

| | |
|---|---|
| Name | : C. Eben Moses |
| DOB | : 22-08-2000 |
| Age | : 24 Years |
| Church Denomination | : CSI |
| Spiritual Status | : Saved by God's Grace, Born Again. |
| Qualification | : B.E. (Mechanical), pursuing M.B.A |
| Occupation | : Engineer, Renault Nissan Technology & Business Centre, Chennai |
| Annual Salary | : ₹ 6.5 Lakhs |
| Address | : No. 8, Anna Street, Chelli Nagar, Selaiyur, Chennai - 600 073. |



S.GLASTON

| | |
|---|---|
| Name | :S.Glaston |
| DateOfBirth | :28.12.1992 |
| EducationalQualification | : M.com |
| Height | 160 |
| Religion | : CSI ChristianNadar |
| Profession | : Branch Credit Manager HDB Financial services Thisayanvilai |
| Salary | : 35000/- |
| CellNo | :9500282871, 9500007978 |

# கதிர் ஒளி திருமண சேவை!



## ஆதிதான் பிள்ளை என்ற மைக்கள்

பிறந்த தேதி : 30-05-1984, வயது : 40, படிப்பு : 12, வேலை : கார் இன்ஜினியர், மாதம் சம்பளம் : RM.1800-00, அவரது கூட பிறந்தவர்கள் : 2 பேர், வீடு இருக்கிறது. கார் இருக்கிறது. தந்தை பெயர்: டாக்டர் பி.எஸ். கிருஷ்ணன் பிள்ளை என்ற கிறிஸ்து பிள்ளை, வயது 66 பாஸ்டர், தாய் பெயர்: வனிதா வயது 60

**தொடர்புக்கு : 016 5242451**



Nandhini's Profile

**PERSONAL DETAILS**

D.O.B. : 06 Feb 1988
Placed in : Chennai
Native Place : Neyveli Township
Languages known : Tamil, English & Hindi.
Height & Weight : 150 cm, 54 kg
Interests : Listening to music, reading books, teaching
Blood Group : O+
Physical Status : Normal

**FAMILY DETAILS**

Family Type : Nuclear
Father : Rajamanickam K, Neyveli Lignite Corporation
Mother : Amutha R
Sibling : Two elder sisters.
Elder Sister Srimathi (house wife) settled in Villupuram
Younger Sister Uma (lecturer) settled in Tindivanam.
Younger Brother Mahesh.(married) Working in Royal Enfield, Chennai.
Unmarried

**ACADEMIC DETAILS**

Education : BE - CSE
Job Description : Lead Engineer. Olam Information Service, Ascend as IT Park, Chennai.

**FAITH AND LIFE**

Spiritual Walk : I come from a non-Christian background. I'm the only one to have accepted Christ as my personal Saviour. I have experienced Christ's love in several instances of my life. I believe in growing in fellowship with Christ by meditating on His Word, praying and maturing within God's family.

Church Affiliation : PENTECOSTAL , NEYVELI

Commitment : God's will to be fulfilled in life.

**EXPECTATIONS**

- Must be born again
- Should have given his life over to God to live it God's way



JEBA CHRISTOBEL

NAME : A.JEBA CHRISTOBEL
DATE OF BIRTH : 21.12.1998
AGE : 25 YEARS
HEIGHT : 5.3'
RELIGION : CHRISTIAN NADAR
QUALIFICATION : M.A.ENGLISH., B.Th., M.Div.,(studying)
CONTACT NUMBER : 9442638822,9443512406
EXPECTATION : GOD FEARING ,LOVABLE AND CARING, WORKING AND DOING MINISTRY



PREM KUMAR

Name: V. Prem Kumar
DOB: 03/02/1994
Religion: Christian
Qualification: B.Th.,
Profession: Asst. Pastor, Carmel Church (Satchiyapuram)
Father Name: V. Veerasamy (Late)
Address: 1/174, Keelatheru, Vallampatti,
Expectation: God Fearing Girl
Pastor Name: Pr. Juda Eleazar, (90036 38921)



SHANKAR W

Name : Shankar.W
D.O.B : 14.12.1988.
Occupation : Business (Event Management, Way360 Holidays & Activities)
Father's Name : M.William James. (Rtd. Forest officer)
Mother's Name : Shyamala Devi(Late)
Siblings : Two Elder sister (Married)
Spritual Status : Born again Christian
Denomination : Assembly Of God
Church Name : AG Church, Masinagudi.
Contact : 73396 71694, 96267 79447 (Pastor)



PAUL CHARLES

**Name : I. Paul Charles**
**Date of Birth : 28.10.1983**
**Place of Birth : Chennai**
**Education : B.com., MBA**
**Contact Number : 9342340054**
**Address : 195, 3rd Main Road, KKR Gardan, Madhavaram, Chennai - 60**



DR INDU SELVARAJ

**Name: Dr Indu Selvaraj,**

**Educational Qualification & Experience: M.B.B.S. from Christian Medical College, Vellore.**

**Recipient of Certificates of Honour: In Pathology, Microbiology,**

**Contact Details Mobile: 7358689427, 9899985589.**

**E-mail : dr.indu.sraj@gmail.com**



Dr.M.Gnanaraj

Qualification. M.Sc., M.Phil.,MBA.,Ph.D.,
Profession. Assistant Professor St.Joseph's University, Bangaluru.Karnataka.
Salary. 9 Lakh/annum

+919080233196 (Father), 9597766161 (Brother)



Sudhakaran K

Name : Sudhakaran k (BE-ECE)
Father : Karunakaran
Mother : Vasantha kumarai(Late)
D.O.B : 9-1-1991
Height : 173
Community : Nadar
Occupation : Southern Railway
Salary. : 32000



Mr.V.P Singh

**Name.Mr.V.P Singh .**
**Father name. MR.MEYYER**
**MOTHER NAME.MR.RAKKU( late)**
**Caste .B.C. Agamudyar .**
**Date of birth. 11.07.92.**
**Education. +2.**
**Private Driver and Own land Agricultural.**
**CONTACT.9790204182 9668251485.**



Raymond Santhosh

Name - Raymond Santhosh
DOB - 01/06/1989
Height - 5.8"
Weight - 68kg
Caste - Soliya Vellalar
Qualifi - MBA - Hr
Job - SM at Aditya Birla Capital
Salary - 4lakh per Annum
Father - Gnanaraj
Occup - Landlord ( Agri)
Mother - Home Maker
Brother - 1 - Married
Native - Trichy
Contact no 8122294098


**உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்**






## Bio data

Name : Ps. P. Issac mathew
DOB : 25.07.1996
Height : 5.3
Education : Bsc.Optometry, B.Theology
Occupation : Pastor
Church : Arunodhayam Deva sabai

**Family details**

Father name : A. Sam prem kumar
Occupation : Pastor
Mother name : P. Mythili Priscilla
Younger brother : P. Shalom (Married)
Occupation : Staff nurse - CMC
Younger sister : P. Blessy karmel (PA)
Address : No 42G, Road shop, Ammoor post, Walajah taluk

Expectation : God fearing girl with ministry involvement. Without jewels.

Contact Us : 9047801793

" Praise The Lord "
விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது .... (எபி 13:4)

**புதுவாழ்வு - திருமண திட்டம் படிவம்**



1. பெயர் : [illegible]
2. வயது : 23.
3. பிறந்த தேதி : 17.03.2001.
4. கல்வி தகுதி : B.Com.
5. வேலை விபரங்கள் :
6. மாத வருமானம் :
7. தந்தை பெயர் : [illegible]
8. தாய் பெயர் : [illegible]
9. உடன் பிறந்தோர் : [illegible]
10. வீட்டு முகவரி : [illegible]
11. சொந்த ஊர் : [illegible]
12. இனம் (விருப்பப்பட்டால்) : SC.
13. சபை பெயர் : [illegible]
14. சபை போதகரின் பெயர் : PR. [illegible]
15. ஞானஸ்தானம் பெற்றவரா : ஆம் / இல்லை
16. ஞானஸ்தானம் பெற்ற தேதி :
17. கைபேசி எண்கள் : 9750529355

2024.07.22 10:58

# மாவீரத்தின் மகத்துவத்துவத்தை தமிழர் தேசம் உணர்த்தி நிற்கிறது

நவம்பர் 27 தமிழ் தேசிய மாவீரர்களை கூட்டாக நினைவு கூரும் நாள். ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காக தம்முயிர்களை ஈந்த மானமா மறவர்களை எங்கள் தேசமே பூசிக்கின்ற அதியற்புத நாள். இந்த நாள் என்பது ஈழத்திலிருந்து உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் மனங்களில் ஈரத்தையும் வீரத்தையும் பிறப்பிக்கின்ற நாள். எனவே மாவீரர்களின் நினைவுகளுடன் ஈழத் தமிழ் மக்களாகிய நாம் எமது கடமைகளை வினைத்திறனுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற வலிமைமிகுந்த நாளாகவும் அமைகின்றது.

இம்முறை மாவீரர் நாளில் தமிழர் தேசம் என்றுமில்லாத வகையில் பேரெழுச்சியுடன் காணப்படுகின்றமை மாவீரர் பெற்றோர்களையும் உருத்துடையோரையும் பெருமிதம் கொள்ளவைக்கும். தமிழர் தேசம் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளதுடன் எங்கும் மாவீரர்களை நினைவுகூறுகின்ற பாடல்களின் ஒலி நம் வாழ்வுமீதும் மீண்டேழுதல்மீதும் கொண்டுள்ள மிகப்பெரிய நம்பிக்கையை உணர்த்துகின்றது.

அனைத்துலகத் தமிழர் பேரவை
FEDERATION OF GLOBAL TAMILS

நினைவுகூர்தல் என்பது உலகம் எங்கும் உள்ள மக்களின் அடிப்படை உரிமை. அது மக்களின் உணர்வு வெளிப்பாட்டின் ஆற்றுப்படுத்தல். ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நினைவேந்தல் என்பது பண்பாட்டு உரிமை. அதனை உலகம் முழுவதுமுள்ள எமது மக்கள் அனைத்துச் சமூகங்களுக்கும் உணர்த்தும் வகையில் நினைவேந்தலில் ஈடுபட்டுள்ளனர்.

உன்னத இலட்சியத்திற்காக தமது இளமையை, தமது வாழ்வை, தமது இன்பங்களைத் துறந்து களமாடி மாண்டவர்கள் மாவீரர்கள். தேசவிடுதலை ஒன்றே தங்கள் பெருஇலட்சியம் என்று மண்ணில் விதையான மாவீரர்களை பல இடர்பாடுகளின் மத்தியிலும் மக்கள் நினைவேந்தல் செய்வதுதான் மாவீரத்தின் மகத்துவமாகும்.

எங்கள் தேசத்தை, மக்களின் வாழ்வை வலுவூட்டும் பணிகளை இன்னமும் பேரேடுப்பில் செய்ய வேண்டும் என்ற உந்துதலை விதைக்கும் இப்புனித நாளில் ஆகுதியான எங்கள் உயிரிலும் மேலான மாவீரர்களுக்கு அகவணக்கத்தை செலுத்துகின்றேன்.

நிமால் விநாயகமூர்த்தி,

தலைவர்,

அனைத்துலகத் தமிழர் பேரவை.

அன்புடன்

அனைத்துலகத் தமிழர் பேரவை

communication@tamilfederation.org

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

🙏BLESSING VOICE🙏

In a moment, in the twinkling of an eye, we will all be changed.

1Corinthians 15:51

ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே,
நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்

1கொரிந்தியர் 15:51

BLESSING NEHEMIAH +919843631823
HOUSE OF JESUS CHURCH, BATLAGUNTU.

# நசிய சிகிச்சையின் நன்மைகள்

ஐம்புலன்கள் என்று அழைக்கப்படும் வாய், மெய், கண், காது, மூக்கு என்ற 5 உறுப்புகளும் அமைந்திருக்கும்இடம்தலை.இதில் மெய் எனப்படும் தோல் மட்டும் உடலெங்கும் பரவியிருக்கும், மீதமுள்ள 4 புலன்களும் தலையில் மட்டும் அமைந்திருக்கும். இதுவே நம் உடலின் அமைப்பு. அதன் காரணமாகவே தலை ஒரு மனிதனுக்கு மிக முக்கியமான உறுப்பு. அதை பேணிக் காக்கவேண்டும். எண் சாண் உடலுக்கு சிரசே பிரதானம் என்ற சொல்லாடல் மூலம் இதனை அறியலாம்.

தலையில் உள்ள 5 புலன்களில் மிக முக்கியமானது கண். இரண்டாவதாக மூக்கு. ஏன் என்றால் ஒரு மனிதன் உணவில்லாமல் சில நாட்கள் வாழலாம், ஆனால் பிராணவாயு இல்லாமல் சில நிமிடங்கள் கூட வாழமுடியாது. அந்த அளவுக்கு முக்கியமான பிராணவாயு மூக்கு வழியாகத்தான் செல்ல முடியும். ஏன் வாய்வழியாக சுவாசித்தால் உடலுக்கு போகாதா என்று கேட்கலாம், ஆனால் மூக்கு வழியாக சுவாசிப்பதே சாலச் சிறந்தது. ஏன் எனில் மூக்கில் வாயுவை சுத்திகரிப்பதற்கான செயல் பாடுகள் நடைபெறுகிறது. மூக்கு துவாரத்தில் உள்ள முடிகள் மற்றும் கோழைப்படலம் காற்றிலுள்ள தூசிகளை சுத்தம் செய்கின்றன. இதனால் மூக்குவழியாக சுவாசிப்பதே சாலச்சிறந்தது. அதோடு மட்டுமல்லாமல் மூக்குதான் தலையின் துவாரம் என்கிறது ஆயுர்வேதம். அதாவது வாய் என்பது உடலின் துவாரம். தலையை ஒரு மருந்து சென்றடைய வேண்டுமெனில் அதற்கு மூக்குதான் துவாரம். மூக்கு சுவாசிப்பதற்கு மட்டுமா, மணத்தை அறிய முக்கிய பங்கு ஆற்றுகிறது அல்லவா... நுகர்தல் என்ற செயல்பாட்டிற்கு காரணமாக அமைகிறது.

ஒரு மனிதனின் இயல்பான மூக்கின் அமைப்பை மாற்றினால் முழுவதுமாக முக அமைப்பே மாறி விடும். ஆக இவ்வளவு சிறப்பு வாய்ந்த, மூக்கை எவ்வாறு பராமரிப்பது என்பது பற்றி பார்ப்போம்.

நலமாய் வாழ ஆரோக்கியத் திட்டத்தில் தினமும் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளில் மூக்கும் இடம்பெறுகிறது. ஆம் மூக்கில் எண்ணையிடும்படி ஆயுர்வேதம் அறிந்திருக்கிறது. அதற்கு நஸ்யம் சிகிச்சை என்று பெயர். ஒரு விஷயத்தை சற்று கவனித்தால் ஆரோக்கியமாக வாழ தினசரி கடைபிடிக்கவேண்டியவை என்பது முகத்திலுள்ள 5 புலன்களை கவனிப்பாகவே இருக்கின்றது. ஆம்



வாயிலுள்ள பல் பராமரிப்பு, வாய் கொப்பளித்தல், மூக்கை பராமரிக்க நஸ்ய சிகிச்சை, கண்ணை பராமரிக்க கண் மை, காதுகளை பராமரிக்க காதில் எண்ணெய் தேய்த்தல், காதில் மருந்து செலுத்துதல், முகத்தில் உள்ள தோலை பராமரிக்க எண்ணெய் தேய்த்தல் என்று நீள்கிறது.

ஏனெனில் இதன் மூலம் கிருமித்தொற்று தாக்க வழிவுள்ளது. எனவே இவற்றை ஆரோக்கியமாக பராமரிக்க அதிக அறிவுரைகளை ஆயுர்வேதம் வழங்கியுள்ளது. அவ்வாறு கூறப்பட்ட சிகிச்சை தான் நஸ்யம் என்பது.

பொதுவாக சிகிச்சை என்பது இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது. ஒன்று அதிகரித்துயிருக்கின்ற வாத, பித்த, கப தோஷங்களை சமப்படுத்துதல், மற்றொன்று அதிகரித்துயிருக்கின்ற தோஷங்களை உடலிலிருந்து வெளியேற்றி உடலை சுத்தப்படுத்துதல். ஆயுர்வேத மருத்துவ சிகிச்சையானது உடலை சுத்தப்படுத்தவே அதிக கவனம் செலுத்துகிறது. அவ்வாறு உடலை சுத்தப்படுத்த 5 வகை சிகிச்சைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் நஸ்யம் என்ற சிகிச்சையும் ஒன்று, இந்த சிகிச்சை தான் மிக எளிதானது. அதிக செலவில்லாதது. வீட்டிலேயே அனைவரும் செய்து கொள்ளலாம்.

இந்த சிகிச்சை உடலை சுத்தம் செய்வதோடு மட்டும் இல்லை. நோய் வராமல் தடுக்க தினமும் அனைவரும் செய்துகொள்ளலாம். அதுவே இந்த சிகிச்சையின் விசேஷம்.

சரி இந்த சிகிச்சையை தினமும் எடுத்துக்கொண்டால் அப்படி என்ன விசேஷம் நிகழப்போகிறது என்றுக் கேட்டால், அதற்கு மிக நீண்ட பதிலுரையை ஆயுர்வேதம் வழங்குகிறது. அது யாதெனில் கண், காது, மூக்கு போன்ற புலன்களில் கேடு வருவதில்லை. முடி தாடி மீசைகளில் எந்த தொந்தரவும் ஏற்படுவதில்லை. முடி உதிராது. நன்றாக வளரும். கழுத்து, தோள் பட்டை வலி ஏற்படாது. முக வாதம் ஏற்படாது. சைனஸ், ஜலதோஷம், தலைவலி, ஒன்றை தலை வலி ஏற்படாது. தலையிலுள்ள நரம்புகள், தமனிகள், சிரைகள் சந்திகள் நன்றாக இயங்கும். பல், தாடை தொண்டை போன்ற இடங்களில் அவ்வளவு எளிதாக நோய் உண்டாகாது, முக வசீகரம் ஏற்படும், நல்ல தூக்கம் ஏற்படும், கழுத்துக்கு மேலே உள்ள உறுப்புகளில் வயது முதிர்வு தென்படாது. சில வியாதிகளில் கழுத்து கீழே உள்ள உறுப்புகளில் கூட நஸ்யம் சிகிச்சை பயனுள்ளதாக இருக்கும்.

சரி இதனை எவ்வாறு மேற்கொள்ளுவது. இவற்றிக்கென ஒரு வரையறை ஆயுர்வேதம் மிக தெளிவாக வழங்குகிறது. அதாவது நஸ்யம் செய்வதற்கு முன் என்ன செய்ய வேண்டும் என்பதை குறித்து எல்லாம் ஓர் ஆயுர்வேத மருத்துவர் நன்கு அறிவுறுத்துவார். எனவே அருகிலுள்ள ஆயுர்வேத மருத்துவரை அணுகினாலே போதும். நஸ்ய சிகிச்சை குறித்து விவரிப்பார்.

இந்த சிகிச்சைக்கு அனு தைலம் என்ற மருந்து பயன்படுத்தப்படுகிறது. இதனை மருத்துவரின் ஆலோசனையுடன் உபயோகப்படுத்தி மூக்கையும், உடலையும் ஆரோக்கியமாக பேணி பாதுகாப்போம்.

**Dr. ரா.பாலமுருகன்**

**அரசு ஆயுர்வேத மருத்துவர்**

**90257 44149**

# உதயநிதியுடன் செல்பி - மோசமான கமெண்டுகளுக்கு நடிகை பதிலடி



உதயநிதி பிறந்தநாளையொட்டி அவருடன் நடித்த ரெத்திகா ஸ்ரீனிவாஸ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் உதயநிதியுடன் எடுத்த புகைப்படத்தை வெளியிட்டு வாழ்த்து தெரிவித்திருந்தார். அந்தப் பதிவின் கீழ் ஏராளமான கமண்ட்ஸ்கள் இருந்தன. அதில் பெரும்பாலும் மோசமான கமெண்ட்டுகளாகவே இருந்தது.

இந்த நிலையில் அந்த மோசமான கமெண்ட்டுகள் குறித்து ரெத்திகா ஸ்ரீனிவாஸ் பேசியுள்ளார். அந்த பதிவு தேவையற்ற கருத்துகளையும் கவனத்தையும் பெற்றது எனவும் இவ்வளவு சாதா ரணமான பதிவிற்கும் கூட மக்கள் வெறுப்பைப் பரப்புவதற்கு கமெண்ட் செக்‌ஷனை எப்படி பயன்படுத்துகிறார்கள் என யோசி த்தேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட வீடியோவில், “இந்த ஒரு போட்டோவுக்கு இவ்ளோ லைக்ஸ் ஷேர் கமெண்ட்ஸ்... உதயநிதியுடன் சரவணன் இருக்க பயமேன் என்ற படத்தில் நடித்தேன். அப்போ எடுத்த செல்பி தான் இந்த போட்டோ. அதனால் தான் அவருடைய பர்த்டேக்கு விஷ் பன்னேன். கோட் படத்திலும் ஒரு சான்ஸ் வந்துச்சு. ஆனால் அது குட்டி ரோல் என மிஸ் செய்து விட்டேன். இப்ப தோணுது விஜய் சாரோடும் ஒரு போட்டோ எடுத்திருக்கலாமேன்னு.

ஒன்னு தெரிஞ்சுக்கோங்க இவங்க எல்லாம் என்னுடைய சக நடிகர்கள். அவங்களோட போட்டோ எடுத்தேன்னா நிச்சயமா அவங்க பர்த்டேக்கு அதை போஸ்ட் பண்ணுவேன். அவ்ளோ கமெண்ட்ஸ் பண்ணி இருக்கீங்க. அதுல அரசியல் பார்வையும் வேற. அது மகிழ்ச்சி தான். ஆனால் அதை என்னுடைய கமெண்டில் போட்டு எந்தப் பயனும் இல்லை. உங்களுடைய ஆதரவை வாக்கு செலுத்தும் போது யாருக்கு பிடிக்குதோ அவங்களுக்கு காமிங்க” என்றார். இந்த வீடியோ சோசியல் மீடியாவில் வைரலாகி வருகிறது.

உதயநிதி ஸ்டாலினுடன் நடிகை ரெத்திகா ‘சரவணன் இருக்க பயமேன்’ என்ற படத்தில் நடித்திருந்தார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்




# ஷர்வானந்த் படத்தில் இணையும் இளம் நடிகை?

இயக்குனர் ஸ்ரீனு வைட்லா - நடிகர் ஷர்வானந்த கூட்டணியில் ஒரு படம் உருவாக உள்ளதாக ஏற்கனவே தகவல் வெளியாகி இருந்தது. இதற்கிடையில், ’லால் சலாம்’ , ’மேட்’ மற்றும் ’8 வசந்தலு’ ஆகிய படங்களில் நடித்த அனந்திகா இந்தப் படத்திற்கு கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக மற்றொரு தகவல் வெளியாகி இருக்கிறது.

8 வசந்தலு’ படத்தின் மூலம் ஏற்கனவே இளைஞர்களின் இதயங்களை வென்ற அனந்திகா, இந்த படத்தில் ஷர்வானந்துக்கு ஜோடியாக நடிப்பதை பார்க்க ரசி கர்கள் அவலுடன் உள்ளனர்.



இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்தாண்டு தொடங்கும் என்று கூறப்படுகிறது. மேலும், மற்றொரு மூத்த நடிகரும் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளதாக தெரிகிறது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் இந்த படத்தை தயாரிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

# வாசகர்கள் வட்டம்!

Dear Sir very informative and interesting news updates, all reader's will be admired to go-through.

Highlights of Kathir Oli from my perception

* Updated political news
* Mouth watering Food Recipes
* International news updates
* Fascinating Cinema news
* Necessary Health Tips especially for women
* Special coverage of Tamilnadu News
* News both from Tamil and English Language

My best wishes to Kathir Oli Media and Team who are creating wow experience in reading newspaper.

Keep up the same spirit Sir!

**Dr. Dennis Amirtharaj P.hd.,**

---

Today Morning 1 hour i have spent time to gothrough our Kathir Oli News paper Had a nice experience of knowing Global news updates.

**Dennis, Chennai**

---

Many thanks Bishop for your really nice and very useful Magazine " Kathiroli " ,
God Bless you , amen

---

கதிரொளி பத்திரிகை படித் தேன் ரசித்தேன் வெளி தேச த்தில் தமிழ் உணர்வுடன் தாங் கள் மிகவும் சிறப்பாக வெளி யிட்டு வருகிறதை ஒரு பத்திரிகை யாளராக மனதார வாழ்த்துகி றேன். சமூக நீதி குரல் பத்திரிகை சார்பாக எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**பரலோக தொழிலாளி போதகர் விபிஜியார்**

---

கதிர் ஒளியின் ஆங்கில செய்திகளை நான் தொடர்ச்சி யாக படிக்க முடிகிறது. செய்தி களை வெளியிட்டால் என் போன்ற ஆங்கிலம் தெரிந்த வாசகர்கள் ஆங்கில பத்திரிக்கை மட்டுமல்லாமல் நம் கதிர்ஒளியினையும் படித்து பயன் பெறுவார்கள்.

**- டேவிட் ஜான்சன், பாரிஸ்**

---

Thank God for your journal ministry.by monthly.we will get all information about political,general God bless you

**Pastor.victor.india**

---

Super Bishop, your magazine very nice one.

**Bishop. W. S. Vetha. Pollachi, Kovai**

---

அதிக காலத்திற்கு பின் தற்போது பத்திரிகை வாசிக்கிறேன். இது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. மிக்க நன்றி Sir.!

-K.R.A

---

நாகப்பாம்பிடமிருந்து நச்சுப் பற்கள் அகற்றப்பட்டால் அது ஆபத்தை விளைவிக்காது.

தேளிடமிருந்து நச்சு வால் அகற்றப்பட்டால் அது ஆபத்தை விளைவிக்காது. நீ எதை அகற்றினால் மனிதன் தீங்கற்றவனாவான்?

**பேராயர் ஞானாபரணம் ஜான்சன்.**

---

Bishop Your Kathiroli Tamil magazine is somthing special in the Tamil Literacy World , God Bless you ayya.

---

What a wonderful magazine "Kathiroli", Many Thanks Bishop, May God bless and your team, amen

**Bishop W.S. Vetha from Pollachi, Tamil Nadu, India.**

---

**Wonderful. News paper.pastor.**

கதிர் ஒளி பத்திரிக்கை, அருமையான நல்ல செய்திகள். செய்தி துணுக்குகள் மற்றும் இந்தியாவில் கிடைத்திறாத சில தகவல்களும் கொண்ட நல்ல கதிர் ஒளி. எனக்கும் எனது நண்பர்களுக்கும், மிகவும் பயனுள்ளது. பத்திரிகை என்பதை இதன் தெரிவிக்கிறேன். தொடர்ந்து இந்த கதிர் ஒளி பத்திரிக்கை தமிழ்நாட்டிலும் மற்றும் அல்ல. உலகம் முழுவதும் தமிழ் பேசும் மக்களுக்கும் இந்த. பத்திரிகை சென்றடைய எனது விருப்பம். நன்றி. **God bless you Pastor. By.pastor. S DavidRajan, Tamil NADU**.

# Why Dharmendra cannot die: An icon who is central to the way we view content today

In the age of a million bytes of information relayed over tiny screens, Dharmendra belongs to a time when archetypes created cinematic cult. The desire to become cult is what drives today's content economy.

In his 1955 essay, The Face of Garbo, French literary critic Roland Barthes wrote of the American actor, Greta Garbo, "[she] belongs to that moment in cinema when capturing the human face still plunged audiences into the deepest ecstasy, when one literally lost oneself in a human image… when the face represented a kind of absolute state of the flesh, which could neither be reached nor renounced."

Barthes certainly did not write with Dharmendra Kewal Krishna Deol in mind. Garbo preceded Dharmendra by at least thirty years. She retired from Hollywood three years before the son of a school teacher and a homemaker left his village, Dangon, in Ludhiana, for Mumbai (then called Bombay) to participate in a talent hunt organised by an entertainment magazine. And yet, his face too, was singular in its impact on his audience: not flesh, but platonic beauty; his was the visage of the ideal romantic figure; the "human image" in which women —and perhaps many men, too — could "lose" themselves.

Garbo's tendency to remain private about her life — she retired in the mid 50s, spent the rest of her life in her New York apartment, rarely attended events, and died in 1990— only aided Barthes's analysis. Hers was a face that belonged to a time when the audience drew awe and existential meaning from cinema. That changed as time, and cinema, progressed, Barthes contended. Audrey Hepburn, another great on-screen beauty, did not further the archetype of the existential beauty, but rather, of the "substantive individual", recognised for its own traits, its own lyricism.

Dharmendra, one might say, straddled both archetypes. His visage may have indeed seemed sublime when he first made his debut in the 1960 film, Dil Bhi Tera Hum Bhi Tere (opposite Kum Kum), and in the subsequent heroic roles he essayed in Anpadh (opposite Mala Sinha), Bandini (opposite Nutan), and Anupama (opposite Sharmila Tagore), but he had no pretensions for mystique. Over time, Dharmendra's visage, too, lent itself easily to newer archetypes — He-Man, Son of the Soil, Witty Comical Hero, Heartthrob.

And then came Ramesh Sippy's Sholay in 1975, where he portrayed all these archetypes in one role, the blue safari suit donning Veeru.




What makes a film or a book or a pop icon cult, Italian semiotician and novelist Umberto Eco famously pondered. In 1984, analysing the Humphrey Bogart-Ingrid Bergman wartime cult film, Casablanca, Eco wrote that in order for a work to transform into a cult object, the film or book "must be loved, certainly" but it must also "provide a completely furnished world so that its fans can quote characters and episodes as if they were aspects of the fan's private sectarian world, a world about which one can make up quizzes, and play trivia games, so that the adepts of the sect recognise through each other a shared expertise". The viewer or reader must be able to "break, dislocate, unhinge [the work] so that one can remember only parts of it, irrespective of their original relationship with the whole," Eco wrote.

Sholay inspired all this and more. The fact that Amitabh Bachchan, another (living) iconic figure, and Dharmendra played the characters of Jai and Veeru, only lent weight to its cult status. Their faces came to symbolise newer archetypes: the hopeless romantic was the perfect foil to the angry young(er) man. And paired together, their brand of friendship cut short only by death, continues to inspire the modern myth of brotherhood between men, whose version we are most familiar with as the bro-code.

New technology and an emerging film magazine culture certainly played a part in generating the cult of Dharmendra. By the late '60s, Dharmendra, whose face routinely caused a thousand sighs, was accessible in full technicolour on the big screen. Stardust, which was started in 1971, printed stories about him with headlines like 'Love Is …. Being Aas Paas' [on his relationship with his co-star Hema Malini, whom he later married] and 'Dharmendra's Wife Defends her Husband!' [on his first wife, Prakash Kaur].

In the obituary she wrote for the Hindustan Times, former Stardust editor Shobhaa De, describes how "at one time, during the early '80s, housewives from Delhi would jump on an early morning flight, rush to whichever studio Dharmendra was shooting in, and demand a private audience in his dressing room. He always obliged. "How can I disappoint any woman?" he would simply shrug." De, who coined the term "Garam Dharam" to describe the actor's sensual appeal, wrote that Dharmendra "famously admitted it was his "duty" to make every woman feel desirable and special." "But," she added, "there was nothing slimy or lecherous about him. Far from it. Old fashioned and chivalrous, Dharmendra was incapable of offending the ladies who flocked to meet him."

In other words, as long as Dharmendra, the person, acted in service of Dharmendra, the icon, it didn't quite matter what else he did when not in the public glare, as we judge archetypes differently from the rest of us. The cult around Sholay, and perhaps even Chupke Chupke, took care of the rest — free-floating signifiers like Jai and Veeru's dialogues and songs exchanged between the "adepts of its sect" ensured that Dharmendra, the icon, always remained in circulation. In more recent times, as social media became the stage of popular culture, Dharmendra's popularity won him millions of followers. Once again, he was on brand,



reciting Urdu couplets in his posted videos. His singular foray into politics — he contested as a candidate for the Bharatiya Janata Party from Bikaner, Rajasthan in 2004, and won — ended after a single term. That was perhaps one of the few times when Dharmendra's actions did not align with at least a section of his following. After being elected to the Parliament, Dharmendra's record as MP was less than desirable — in his first year, his constituents reportedly put up missing posters as a sign of protest over his absence. Though Dharmendra rectified this and visited his constituency regularly, he left active politics after his term ended. In a 2008 interview with Press Trust of India, he said, "(...) An actor should not come into politics as it divides the audience and general acceptance among fans. An actor should always remain an actor."

The much-loved actor realised that upholding the archetypes took a specific kind of work: his engagement with the public was vital, and social media offered up ample opportunity for repetitive engagement, a sort-of-close encounters of the same kind, done over and over again. Perhaps Garbo realised the same thing, but, in her case, the only archetype she had to uphold was one where she didn't really exist as anything but myth.

Written by Dhamini Ratnam. Produced by Shad Hasnain

*Advertise your business on Katiroli to reach the world!*



# முழுக்க முழுக்க காதலை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள படம் 'தேரே இஷ்க் மே'




இந்திய விமானப்படை வீரராக இருக்கும் தனுஷ் கோபக்காரராக இருக்கிறார். தனது கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல், தனக்கு மேல் உள்ள அதிகாரிகள் பேச்சையும் கேட்காமல் தன் மனதிற்கு சரி என பட்டதை செய்கிறார்.

ஆனால், இந்திய விமானப்படை சார்பில் தனுஷின் கோபத்தை கட்டுப்படுத்தி, ஒழுக்கமாக பணியாற்ற வேண்டும் என சைக்காலஜி மருத்துவரிடம் கவுசிலிங் எடுக்க உத்தரவிடப்படுகிறது.

தனுஷுக்கு கவுன்சிலிங் கொடுக்க வருகிறார் கதாநாயகி க்ரித்தி சனோன். இருவரும் சந்திக்கின்றனர். ஒரு பக்கம் க்ரித்தி தனது ஆய்வறிக்கை மூலம் வன்முறையான மனிதனை சராசரி மனிதனாக மாற்ற முடியும் என நம்புகிறார். இதற்காக, தனுஷிடம் பழகுகிறார்.

தனுஷை மாற்றிவிட்டால் ஆய்வறிக்கை நிறைவு பெறும் என நினைக்கிறார். ஆனால், தனுஷ்க்கு க்ரித்தி மீது காதல் மலர, க்ரித்தியோ நீ வேண்டுமானால் காதலித்துக் கொள், நான் அப்படி பார்க்கவில்லை என்கிறார். ஆனால், காலங்கள் கடக்க இருவருக்கும் இடையே காதல் மலர்கிறது.

இருந்தாலும், வன்முறையோடு இருக்கும் இப்படி ஒரு மனிதனை கீர்த்தியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும், தனது தந்தையை வந்து பார்க்கும்படி தனுஷிடம் கூறுகிறார்.

அப்போது, தனுஷை யுபிஎஸ்சி தேர்வில் தேர்ச்சி பெற்றுவிட்டு வரும்படி சவால் விடுகிறார். அதன்பிறகு, தனுஷ் சவாலில் ஜெயிக்கிறாரா? க்ரித்தியை கரம் பிடிக்கிறாரா? என்பது படத்தின் மீதிக்கதை..

சர்கர்கதாபாத்திரத்தில்நடித்துள்ள தனுஷ் மிரட்டியிருக்கிறார். எமோஷனல் காட்சிகளில் ராஞ்சனாவை நினைவுப்படுத்துகிறார். க்ரித்தி சனோன் அசத்தலான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். க்ரித்தியின் தந்தையாக நடித்துள்ள பிரகாஷ் ராஜ் கண் கலங்கவைத்துவிட்டார்.

ராஞ்சனா படத்தை போல் இப்படத்திலும் இயக்குநர் ஆனந்த் எல்.ராய் தனது வழக்கமான காதல் கதையில் பட்டையை கிளப்பியுள்ளார். எமோஷனல் காட்சிகளில் நம்மை கலங்க வைத்திருக்கிறார். அதுவே படத்தின் வெற்றி.

படத்தின் இரண்டாவது ஹீரோ ஏ.ஆர்.ரகுமான் என்று சொல்லலாம். பாடல்கள் மற்றும் பின்னணி இசை படத்திற்கு உயிர்.

ஒளிப்பதிவு படத்தின் பலம்.

www.kathirolimedia.ca

# கர்மா இஸ் பூமராங் என்பதை மையமாக வைத்து உருவாகியிருக்கும் படம் 'ரிவால்வர் ரீட்டா'




நாயகி கீர்த்தி சுரேஷ் பாண்டிச்சேரியில் தாய் ராதிகா, அக்கா மற்றும் தங்கையுடன் வாழ்ந்து வருகிறார். ஒரு நாள் அக்கா குழந்தையின் முதல் பிறந்தநாள் கொண்டாட இருக்கும் நிலையில், பிரபல ரவுடி சூப்பர் சுப்பராயன் போதையில் வீட்டுக்கு வருகிறார். அப்போது எதிர்பாராத விதமாக ரவுடியை கீர்த்தி சுரேஷும், ராதிகாவும் அடிக்கிறார்கள். மயங்கி கீழே விழுந்த ரவுடி இறந்து விடுகிறார்.

சூப்பர் சூப்பராயன் பிணத்தை எப்படி அப்புறப்படுத்துவது என்று குடும்பத்தினருடன் கீர்த்தி சுரேஷ் திட்டம் போடுகிறார். இதற்கிடையில் ரவுடியின் எதிர் கும்பல் பிணத்தை அடைய முயற்சி செய்கிறார்கள். சூப்பர் சுப்பராயனின் மகன் சுனில் தந்தையைத் தேடி அலைகிறார்.

இறுதியில் கீர்த்தி சுரேஷ் சூப்பர் சூப்பராயனின் பிணத்தை எப்படி அப்புறப்படுத்தினார்? பிணத்தை அடைய நினைத்த கும்பலின் நிலை என்ன ஆனது? தந்தை தேடி அலைந்த சுனில் என்ன செய்தார் என்பதே படத்தின் மீதி கதை?

படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கும் கீர்த்தி சுரேஷ் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். படம் ஆரம்பித்திலேயே டெலிவரிக்கு பிளான் சொல்லும் காட்சி, போலீஸ் ஸ்டேஷனில் இருந்து தப்பிக்கும் காட்சி, சுனிலுடன் நீண்ட வசனம் பேசும் காட்சி, ஆகிய இடங்களில் சிறப்பான பங்களிப்பை கொடுத்திருக்கிறார் கீர்த்தி சுரேஷ். இவருக்கு அடுத்தபடியாக தாயாக நடித்திருக்கும் ராதிகா தனது வெகுளித்தனமான நடிப்பால் ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார்.

வில்லனாக நடித்திருக்கும் சுனில் படம் முழுக்க தந்தையை இறுக்கமான முகத்துடன் தேடி வருகிறார். அதிக வசனமும் அதிக முக பாவனைகள் இல்லாதது வருத்தம். போலீஸ் அதிகாரியாக வரும் ஜான் விஜய், ஓவர் ஆக்டிங் போல் இருக்கிறது. ரெடிங் கிங்ஸ்லி, கல்யாண் மாஸ்டர், சுரேஷ் சக்கரவர்த்தி. சென்ராயன் ஆகியோரின் நடிப்பு திரைக்கதை ஓட்டத்திற்கு உதவி இருக்கிறது.

கர்மா இஸ் பூமராங் என்பதை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் ஜே கே சந்துரு. கதாபாத்திரங்களிடையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார். படம் ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக திரைக்கதை நகர்த்திருக்கிறார். ஆனால் டார்க் காமெடி பெரியதாக ஒர்க் அவுட் ஆகவில்லை.

சான் ரோல்டனின் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசையில் கூடுதல் கவனம் செலுத்தி இருக்கலாம்.

தினேஷ் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம்.

# சொந்த ஊரிலிருந்து சென்னை வந்து, மாத சம்பளத்தை மட்டுமே வைத்து ஒரு குடும்பத்தை நடத்தும் ஒரு சராசரி தம்பதி படும்பாடு 'மிடில் கிளாஸ்'

சென்னையில் தனது மனைவி விஜயலட்சுமி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறார் முனிஷ்காந்த். மிடில் கிளாஸ் வாழ்க்கையை வாழ்ந்து வரும் இவர்களுக்கு வெவ்வேறு கனவுகளும் இருக்கிறது. ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் முனிஷ்காந்த் குறைந்த சம்பளத்தில் குடும்பத்தை நடத்தி வருகிறார். ஆனால், முனிஷ்காந்திற்கு சொந்த ஊரில் நிலம் வாங்கி செட்டிலாக வேண்டும் என்பது கனவு.

ஆனால், விஜயலட்சுமிக்கு சென்னையிலேயே சொந்தமாக வீடு வாங்கி இங்கேயே செட்டில் ஆக வேண்டும் என்பது கனவு. இதற்கிடையே, ஊரில் பெரிய ஆளாக இருந்த முனிஷ்காந்தின் தந்தையின் சொத்து மூலம் ஒரு கோடி ரூபாய்க்கான காசோலை கிடைக்கிறது. அதற்குள், நமக்கு வரப்போகிறது என்று இருவரும் தாம் தூம் என்று கடன் வாங்கி செலவு செய்கிறார்கள்.

இந்தநிலையில், காசோலை தொலைந்துவிடுகிறது. இறுதியில் காசோலை கிடைத்ததா? தங்களது வாழ்க்கையே மாறப்போகிறது என்ற கனவில் மிதந்த இவர்களின் மிடில் கிளாஸ் வாழ்க்கை மாறியதா என்பது படத்தின் மீதிக்கதை...

மிடில் கிளாஸ் நாயகனாக வரும் முனிஷ்காந்த் கதாபாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தி இருக்கிறார். ஒரு குடும்பத் தலைவனாக, மிடில் கிளாஸ் அப்பாவாக தனது நடிப்பை தத்ரூபமாக வெளிப்படுத்தி இருக்கிறார். மிடில் கிளாஸ் குடும்ப தலைவி கதாப்பாத்திரத்தில் விஜயலட்சுமி அசத்தி இருக்கிறார்.




இவர்களை தாண்டி கோடாங்கி வடிவேல், குரேஷி, காளி வெங்கட், ராதா ரவி, வேல ராமமூர்த்தி ஆகியோரும் கதாப்பாத்திற்கு ஏற்ப சிறந்த நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

ஒரு மிடில் கிளாஸ் வாழ்க்கையை தத்ரூபமாக படமாக எடுத்துள்ளார் இயக்குநர் கிஷோர் முத்துராமலிங்கம். சொந்த ஊரிலிருந்து சென்னை வந்து, மாத சம்பளத்தை மட்டுமே வைத்து ஒரு குடும்பத்தை நடத்தும் ஒரு சராசரி தம்பதி படும்பாடை அழகான காட்சிகள் மூலம் எடுத்துரைத்துள்ளார். படத்தில் சில ஏற்றம் இறக்கங்கள் இருந்தாலும் எந்த ஒரு தொய்வும் இல்லாமல் படம் நகர்கிறது.

பிரணவ் முனிராஜ் இசையில் பாடல்கள் கேட்பதற்கு நன்றாக இருந்தது. ஒளிப்பதிவாளர் சுதர்சன் சீனிவாசனின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம். முழு உழைப்பையும் கொடுத்திருக்கிறார்.

# அணையா விடுதலைத்தீ சங்கரின் சாவு எப்படி வீரசரித்திரமானது

T.Thibaharan in கட்டுரை

ஈழத்தமிழர்களின் விடுதலைக் கனவை நெஞ்சில் சுமந்து மனித நாகரிகத்தின் அடிப்படை உரிமைகளை மீட்பதற்காகவும், மானிடத்தின் ஜனநாயக விழுமியங்களை காப்பதற்காகவும், தமிழினத்தின் சுபீட்சமான வாழ்விற்காகவும், தமிழர்தாயக நிலத்தில் நீண்ட நெடுங்கால வாழ்விற்காகவும், தமிழினத்தின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக உடல்- பொருள் -ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து போராடவீரப்பரம்பரை ஒன்று புறப்பட்டது.

இவ்வாறு அர்ப்பணிப்பு இன்றி விடுதலை இல்லை, தியாகங்களின்றி சரித்திரங்கள் இல்லை என ஈழத்தமிழர் விடுதலைக்காக புயலாக புறப்பட்ட தேசத்தின் மைந்தன் சங்கரின் சாவுக்கான திகதி குறிக்கப்பட்டு இருந்ததையோ, அது புதிய சரித்திரம் ஒன்றை படைக்கப்போவதையோ அறியாமல் 1982ம் ஆண்டு நவம்பர் 20ம்நாள்யாழ்பாணத்தின் அன்றைய காலைப்பொழுது விடிந்தது.

1982 ல் சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குலில் காயமடைந்த போராளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவப் பொருட்களை வணக்கத்துக்குரிய பிதா சிங்கராயர் அவர்கள்தான் கொழும்பில் கொள்வனவு செய்திருந்தார். அவரது ஆச்சிரமத்தை எதிர்பாராதவிதமாக சோதனையிட்ட இரகசியப் பொலிஸாரிடம் அம்மருந்துப் பொருற்களுக்கான பற்றுச்சிட்டைக்கள் அகப்பட்டுவிட்டன.

கொடுமையான சித்திரவதை

அதனால் கைதாகிய பிதா சிங்கராயர் கொடுமையான சித்திரவதை விசாரணையின் போது உண்மைகளைச் சொல்லிவிட்டார்.

அதன் விளைவாக, போராளிகளுக்கு சிகிச்சையளித்த அருட்சகோதரர்களும் வைத்தியர்களுமான இரட்டையகள் சின்னராசா, குருகுலராசா ஆகிய இருவரும் கைதாகினர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட கடுமையான விசாரணையின் போது யாழ் பல்கலைக்கழக பொருளியல் விரிவுரையாளர் மு.நித்தியானந்தன் வீட்டில் சிகிச்சையளிப்பட்மை தெரியவந்தது. உடனே அவரது வீட்டை நோக்கி படையினர் பாய்ந்தனர்.

நாவலர் வீதியும் நல்லூர் குறுக்கு வீதியும் சந்திக்கும் சந்திக்கு எதிரேயுள்ள பொருளியல் விரிவுரையாளர் மு. நித்தியானந்தனின் வீட்டில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதலில் காயமடைந்த சீலன் (பின்னாளில் சாள்ஸ் அன்ரனி) உள்ளிட்ட நான்கு போராளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்து வெளியேறிய நிலையில் 20/11/1982 அன்று மகிழ்ச்சியின் நிமித்தம் அங்கு அந்தப் புலிவீரர்களுக்கு விருந்துபசாரம் நிகழ்ந்தது.

போராளிகள் ஒருவர், இருவராக சென்று உணவருந்திவிட்டு திரும்பிவிட்டனர். மாலை 3:00 மணியளவில் இறுதியாக அங்கு சென்ற லெப் சங்கர் வீட்டினுள்ளே விரிவுரையாளருடன் உணவருந்திக்கொண்டிருந்தார்.

அவ்வேளை வீட்டினுள் சிங்களப்படை திடீரென தேடுதல் வேட்டைக்காக புகுந்து கொள்ள. உடனே சங்கர் தன்னுடைய இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை தொட்டவாறு நிலைமையைச் சுதாகரித்துக் கொள்கிறார்.

சிங்களப்படைக்கு எதிராக அந்த கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு நாற்புறமும் வீதிகளைக் கொண்ட அந்த வீட்டில் இருந்து அவரால் இலகுவாகப் பின்வாங்கி தப்பித்தச் செல்வது சாத்தியம்.



ஆனால் தனது கைத்துப்பாக்கியால் சுட்டால் அவ்வீட்டில் உள்ளவர்களுக்கு ஏற்படப்போகும் விபரீதத்தை உணர்ந்தார்.

இராணுவத்தால் கைது

மறுகணமே தன் முடிவை மாற்றிக்கொண்டு வீட்டின் பின்புறமாக ஓடிச்சென்று கிலுவைக்கதியால் வேலியை வேகமாக பாய்ந்து தாண்டும் போது இராணுவத்தினரின் சரமாரியான துப்பாக்கி வேட்டில் துப்பாக்கிரவை ஒன்று சங்கரின் அடிவயிற்றுப் பகுதியை காயப்படுத்தியது.

ஆயினும் இலட்சி வேங்கை சங்கர் உறுதியுடன் மனம் தளராது வேகமாக தப்பிச் சென்றார்.

ஆத்திரமடைந்த சிங்ளப்படை நடாத்திய துப்பாக்கிச் வேட்டில் சிறி என்றழைக்கப்படும் பாடசாலை மாணவி காயமடைந்தார். மு.நித்தியானந்தனும் கூடவே அவரது துணைவியாரும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டனர்.

சமநேரத்தில் காயமடைந்து இரத்தம் பீரிட்டவாறு டக்கா வீதியில் தப்பி ஓடிக்கொண்டிருந்த சங்கரை அவ்வீதியால் மிதிவண்டியில் வந்து கொண்டிருந்த ஈரோஸ்இயக்கத்தைச் சார்ந்தவரும், பல்கலைக்கழக மாணவரும், பின்னாட்களில் ஒரு சமூக முக்கியஸ்தரும், அரசில், சிவில் சமூக பிரமுகவருமான செல்வின் கண்டுவிட்டார்.

உடனே தனது கரங்களால் தாங்கிப்பிடித்து சங்கரை மிதிவண்டியில் ஏற்றிக்கொண்டு வேகமாக திருநெல்வேலியில் உள்ள போராளிகளின் மறைமுக முகாம் நோக்கி விரைந்தார். மாலை 4 மணிக்குள் குமாரசாமி வீதி 41ம் இலக்க புலிகளின் மறைமுக முகாம் வீட்டில் பாதுகாப்பாக சங்கரை சேர்ப்பித்தார்.

மாலைநேரம் போராளிகளும் ஆதரவாளர்களும் விரைவாக தொழிற்பட தொடங்கினர். மருத்துவர் கெங்காதனிடம் அவசர உதவி கோரப்பட்டது.

அன்றைய பதட்ட நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முடியாது. ஆகையால் தனியிடத்தில் சிகிச்சையளிக்க மருத்துவர் இசைந்ததற்கிணங்க தீவிர ஆதரவாளரான பல்கலைக்கழக மாணவருமான ஜெயரெட்டி தனது காரில் ஏற்றிக்கொண்டு சென்று தனியிடத்தில் சிகிச்சையளிக்கப்பட்டது.

தமிழக படகுப் பயணம்

ஆனால் உள்ளக இரத்தக்கசிவுக்கு யாழ்பாணத்தில் வைத்து சிகிச்சையளிப்பது பாதுகாப்பற்றது என்ற நிலையில் தமிழகம் கொண்டுசெல்லும்படி மருத்துவர் ஆலோசனை வழங்கினார்.

அன்றிரவு சங்கர் கொக்குவில் அம்பட்டப்பலத்தடியில் உள்ள ஒரு வீட்டில் (ரவிசேகரின் அறையில்) பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டார். ஐந்து நாட்களாக தமிழக படகுப் பயணம் பல்வேறு தடைகளால் தாமதப்பட்டு நவம்பர் 26 இரவு தமிழகம் நோக்கி பயணப்பட்டார்.

சங்கரை மேலதிக சிகிச்சைக்காக தமிழகம் கொண்டு செல்ல அன்று இயக்கத்திலிருந்து விலகியிருந்த அன்டன் சிவா (சிவகுமார் தற்போது கனடாவில்) நியமிக்கப்பட்டார். 27ம் நாள் அதிகாலை தமிழக கரையை அடைந்த சங்கரை இயக்க ஆதரவாளாரான மூதாட்டி ஒருவரின் வீட்டில் தங்கவைத்துவிட்டு, அன்ரன் சிவா தலைவரை சந்திக்க மதுரைக்கு சென்று தகவல் சொல்லி தலைவரை சங்கரிடம் அழைத்து வந்தார்.

எனினும் ஏற்கனவே மூதாட்டி வீட்டில்படுகாயத்தின்வேதனையில் முனகிக்கொண்டிருந்த சங்கர் தாகம் மேலிட தண்ணீர் கேட்க மூதாட்டி கோப்பி தயாரித்து வழங்கினார்.

கோப்பி அருந்தியதும் ஒவ்வாமையால் விரைவான உள்ளக இரத்தப் பெருக்கு ஏற்பட்டு சுயநினைவை இழந்த சங்கர் தம்பி தம்பி என தலைவரை நெடுநேரம் அழைத்துக்கொண்டே மாலை 6:05க்கு தமிழகத்தின் மதுரை மண்ணுல் தலைவரின் அணைப்பில் அவரது மூச்சு நின்றுபோனது. அன்றைய காலச் சூழலில் சங்கரின் வித்துடலை பூரண மரியாதை களுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று தகனம் செய்யமுடியாது.

எனவே சங்கரை தமிழ்நாட்டின் திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர் எனவும், நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார் எனவும், அவரது உடலை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்கு நிதிவசதி இல்லையெனவும் கூறி, மரணச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்று இரவு நேரம் எடுத்துச் சென்று மதுரையிலுள்ள ஒரு சுடுகாட்டில் மூத்த போராளிகளான பேபி சுப்பிரமணியம், பொன்னம்மான், தேவர் உட்பட மற்றும் நெடுமாறன் ஐயாவும் அவரின் கட்சித் தொண்டர்கள் சிலரோடு சென்று அப்பையா அண்ணர் சங்கரது உடலுக்குத் தீ மூட்டினார்.

சங்கரது மரணச் செய்தி

பின் அஸ்தியை சேகரித்து பாதுகாப்பாக வைக்கப்பட்டு, மறு வருடம்தான் சங்கரது மரணச் செய்தி பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டு அஸ்தியும் கையளிக்கப்பட்டது.

அன்று சங்கரின் குடும்பத்தினரின் துயரமும் காலதாமதமாக மரணச் செய்தி அறிவிக்கப்பட்டமையால் வெளிப்படுத்தப்பட்ட மன ஆதங்கங்களையும் கருத்தில் கொண்டுதான் போராளிகள் வீரச்சாவடைந்தால் உடனேயே குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற முடிவை தலைவர் எடுத்து முள்ளிவாய்க்கால்வரை நடைமுறைப்படுத்தினார். அன்றிலிருந்து மாவீரர் விதைப்பு உதயமாகியது.

இன்று அந்த நவம்பர் 27 தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் குறியீட்டு நாளாய் பரிணமித் திருக்கிறது. சங்கரின் அடிச்சுவட்டை பின்பற்றி நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட தேசத்தின் புதல்வர்கள் தாயகவிடிவிற்காக தம்மை ஆகுதியாக்கி விடுதலைப் போருக்கு உரமாயினர்.

இம்மாவீரர்கள் தம் இளமைக் காலத்தை துறந்தவர்கள், பணம் பதவி பட்டம் புகழ் ஆசைகளை புறந்தள்ளியவர்கள், இலட்சிய வேட்கையேடு நெருப்பாற்றில் நீந்தியவர்கள், சொல்லொணாத் துன்பங்களை தோளில் சுமந்து தமிழ் மக்களுக்கு ஒளியூட்டியவர்கள், எதற்கும் விலைபோகதவர்கள், அவர்கள் விலைமதிப்பற்றவர்கள், தமிழீழ மக்களின் விடுதலைக் கனவையும் நெஞ்சில் சுமந்து களமாடியவர்கள். இத்தகைய மாவீரர்களின் கனவு சுமந்து நாம் தொடர்ந்து போராடுவோம் என இந்நாளில் தமிழீழ மக்கள் உறுதிகொள்கின்றனர்.

**பொறுப்பு துறப்பு! இக்கட்டுரையானது T.Thibaharan அவரால் எழுதப்பட்டு, இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. இக்கட்டுரைக்கும் கதிரொளிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.**

# கனடாவில் 200 கிலோ கிராம் எடையுடைய கொக்கெயின் மீட்பு

கனடாவின் வான்கூவர் துறைமுகத்தில் நுழைந்த ஒரு கப்பலில் 200 கிலோகிராமுக்கு மேற்பட்ட கொக்கெயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்பட்ட போதைப் பொருள் பறிமுதல் செய்யப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த சட்டவிரோத சரக்குகள் பனாமாவில் இருந்து வந்த கப்பலில் கண்டறியப்பட்டதாக கனடிய எல்லைப் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

மொத்தம் 204.5 கிலோகிராம் எடையுள்ள 78 கொக்கெயின் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மோப்ப நாய்களின் உதவியுடன், இந்த கட்டிகள் சிவப்பு திரவம் நிரப்பப்பட்டிருந்த—பேன்ட் நிறப்பொருள் என நம்பப்படும்—கண்டெய்னர்களுக்குள் மறைக்கப்பட்டிருந்தன.

இந்த பறிமுதல், அமைப்புசார்ந்த குற்றங்களை தடுப்பதில் எங்கள் எல்லை அதிகாரிகள் வகிக்கும் முக்கிய பங்கைக் காட்டுகிறது என கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் பசிபிக் பிராந்திய இயக்குநர் நீனா படேல் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருடனான உடனான எங்கள் வலுவான ஒத்துழைப்பின் காரணமாக, சட்டவிரோத போதைப்பொருட்கள் எங்கள் சமூகங்களுக்கு செல்லாமல் தடுக்க முடிகிறது,'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பறிமுதல் செய்யப்பட்ட கொக்கெயின் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், கடத்தல் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதேவேளை, பொது பாதுகாப்பு அமைச்சர் கேரி ஆனந்தசங்கரீ தனது அறிக்கையில், ''இது, குற்றவாளிகள் எவ்வளவு முயற்சிப்பார்கள் என்பதற்கான ஒரு தெளிவான உதாரணம்'' என்று குறிப்பிட்டார்.

## கனடிய செய்திகள்




பிரித்தானியாவுக்கு பயணிக்கும் கனேடியர்கள், பயண அனுமதி இல்லாமல் இனி பிரித்தானியாவுக்குள் சட்டப்படி நுழையமுடியாது.

இந்த பயண அனுமதியை, U.K. eTA app என்னும் ஆப் அல்லது ஒன்லைன் மூலம் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

இன்னொரு விடயம் என்னவென்றால், இந்த விதி

# பிரித்தானியாவுக்கு பயணிக்கும் கனேடியர்களுக்கு பயனுள்ள ஒரு செய்தி

பிரித்தானியாவுக்குப்பயணிக்கும் கனேடியர்கள், 2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ஆம் திகதி முதல், Electronic Travel Authorization (ETA) என்னும் அனுமதியை முன்கூட்டியே பெற்றிருக்க வேண்டும் என பிரித்தானிய அரசாங் கம் தெரிவித்துள்ளது.

இந்த ETA என்னும் பயண அனுமதி பெறுவதற்கான கட்டணம் 30 கனேடிய டொலர்கள் ஆகும்.

இரட்டைக் குடியுரிமை கொண்ட கனேடியர்களுக்கு பொருந்தாது. அதாவது, கனேடிய, பிரித்தானிய இரட்டைக் குடியுரிமை கொண்ட வர்களுக்கு வேறு விதி.

அவர்கள் பிரித்தானியாவுக்குள் நுழைய, பிரித்தானிய பாஸ்போர்ட் அல்லது certificate of entitlement என்னும் ஆவணத்தை வைத்திருக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச மாணவர்கள் தொடர்பில் கனடா அரசு எடுக்க இருக்கும் முடிவு

கனடா அரசு, அடுத்த ஆண்டில் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி அனுமதிகள் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

கனடா அரசு, சர்வதேச மாணவர்கள் அல்லது சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்பட இருக்கும் கல்வி அனுமதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பு ஒன்றில், 2026ஆம் ஆண்டில், 408,000 வெளிநாட்டு மாணவர்களுக்கு மட்டுமே கல்வி அனுமதிகள் மட்டுமே வழங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடயம் என்னவென்றால், இந்த 408,000 அனுமதிகளில், 155,000 மட்டுமே புதிதாக கனடாவுக்கு வரும் சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்படும்.

மீதமுள்ள 253,000 அனுமதிகள், ஏற்கனவே கனடாவிலிருக்கும் மாணவர்களுடைய கல்வி அனுமதிகளை நீட்டிப்பது மற்றும் மீண்டும் கனடாவுக்குத் திரும்பும் மாணவர்களுக்கானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2025இல் 437,000 சர்வதேச மாணவர்களுக்கு கல்வி அனுமதி வழங்க இலக்கு நியமிக்கப்பட்டது.

2024இல் 485,000 சர்வதேச மாணவர்களுக்கு கல்வி அனுமதி வழங்க இலக்கு நியமிக்கப்பட்டது.

ஆக, 2026இல், 2025ஐவிட 7 சத விகிதம் குறைவாகவே சர்வதேச மாணவர்களுக்கு கல்வி அனுமதிகள் வழங்கப்பட உள்ளன.

# கனடாவில் 15 வாகனங்கள் தீக்கிரை: நாச வேலையா என விசாரணை

கனடாவின் மொண்ட்ரியல் நகரில் செயின்ட்-லாரன்ட் பகுதியில் உள்ள ஒரு வாகனத் தரிப்பிடத்தில் சுமார் 15 வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன. அதிகாலை வெடிப்புசார்ந்த தீவைத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக மொண்ட்ரியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த same இடம் கடந்த நான்கு ஆண்டுகளில் பலமுறை இதே மாதிரியான தீவைத்தல் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளது. லெபோ தெருவிலும் ஜின்ஸ் தெருவின் அருகிலும் ஏற்பட்ட தீ விபத்து குறித்து 911 அழைப்பு களைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றனர். தீயணைப்பு துறையினர் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு இருந்தனர் என பொலிஸ் பேச்சாளர் கரோலின் செவ்ரெபில்ஸ் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டிலும் இதே தொழில் நிலையம் இதேபோன்ற தீவைத்தல் தாக்குதலுக்கு உள்ளானது. அதற்குமுன்பு மூன்று முறை இதே இடம் குற்றவாளிகளால் இலக்காகியிருந்ததாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த முறை சுமார் 15 மறுவிற்பனைக்காக இருந்த வாகனங்கள் சேதமடைந்துள்ளன. எனினும் தொழில் நிறுவனம் சேத மடையவில்லை, யாரும் காய மடையவில்லை என்று போலீசார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் தீவைத்தலில் பயன்படுத்தப்பட்ட எரிவைப்புப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர் அல்லது சந்தேகநபர்களைத் தேடும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. விசாரணையாளர்கள் சம்பவ இடத்துக்கு சென்று மேலதிக ஆய்வு மேற்கொள்வார்கள் என பொலிஸார்தெரிவித்தனர். இதுவரை எந்த கைது நடவடிக்கையும் மேற்கொள்வப்படவில்லை.

# கனடிய ஆய்வாளர்களின் சாதனை

மான நிலாவின் சுற்றுப்பாதைக்கு செல்கின்ற ஒரு புதிய செயற்கைக் கோளை உருவாக்கி வருகின்றனர்.

மனிட்டோபா பல்கலைக் கழகத் தின் ஸ்டார்லெப் STARLab குழுவும், மெகாலேன் ஏரோஸ்பேஸ் Magellan Aerospace நிறுவனமும் இணைந்து, பால்பெட்டி அளவிலான கியுப் செட் CubeSat எனப்படும் சிறு செயற்கைக்கோளை உருவாக்கி வருகின்றன.

இது நிலாவைச் சுற்றிவரும் முதல் கனேடிய செயற்கைக்கோளாக வரவிருக்கிறது.

இந்த திட்டத்திற்காக மெகாலேன் ஏரோஸ்பேஸ் நிறுவனத்திற்கு கனடிய விண்வெளி முகாமை நிறுவனம் 6.9 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

நிலாவில் கனேடிய தொழில் நுட்பங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

அபோல்லோ 11 லேண்டர் கால்கள் அதற்குச் சான்றாக குறிப்பிட முடியும் எனினும், நிலா சுற்றுப்பாதையில் கனடா தனது சொந்த செயற்கைக்கோளை அனுப்புவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த செயற்கைக்கோள் 2027 ஆம் ஆண்டு இறுதி காலத்தில் ஏவப்பட உள்ளதாகத்



தெரிவிக்கப்படுகின்றது.

இது நிலாவின் கனிமங்களை வரைபடமாக்கி, எரிபொருள் உற்பத்திக்கோ அல்லது எதிர்கால குடியேற்றத்துக்கோ பயனுள்ள வளங்களைக் கண்டறிய தக வல்களைச் சேகரிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

# இந்திய தூதகரத்திடம் உதவி கோர வேண்டிய இலங்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலையை புரிந்து கொண்டு இலங்கை அரசாங்கம் நேரடியாக இந்திய தூதரகத்தை அணுகி பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்ற இந்திய கடற்படை மற்றும் விமானப்படை ஒத்துழைப்பை கோர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அனர்த்த நிலைமைகள் தொடர்பாக யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற அவசர ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த பேருந்து கல்லோயா பகுதியில் நீரில் மூழ்கியுள்ளது. அங்கு மக்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல புதுக்குடியிருப்பு வைத்தியசாலை முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் இருந்து இன்னொரு வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு கூட வசதி இல்லை. அவசர நோயாளர்களை வெளியில் கொண்டு செல்லக்கூடிய சூழ்நிலை இருந்தும் கூட அதனை செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

அதே போன்று செட்டிகுளம் பகுதியிலும் அதே பிரச்சினை உள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு சில இடங்களில் உயிருக்கு போராடும் சூழலில் அந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாமல் இருப்பதற்கான பிரதான காரணம் இலங்கையினுடைய விமானப்படைக்கும் கடற்படைக்கும் இராணுவத்திற்கும் உதவி கேட்டும் கூட அவர்களால் அந்த உதவியை செய்ய முடியாத ஒரு வளப்பற்றாக்குறை காணப்படுகிறது.

செட்டிகுளம் பகுதியை எடுத்துக் கொண்டால் தண்ணீர் வேகத்திற்கு கடற்படை படகுகளை கொண்டு அந்த இடங்களை அடைய முடியாத நிலை உள்ளது என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அந்த படகுகளும் அடிபட்டு செல்வதற்கானவாய்ப்புகள் இருப்பததாக கூறப்படுகிறது. விமானம் ஊடாக தனிமைப்படுத்தப்பட்ட இடங்களுக்கு உதவி செய்வதென்றால் கூட விமானங்களை தற்போதைய காலநிலையில் பறக்க முடியாத நிலை காணப்படுகிறது. காலநிலை சீரான பின்னரே இதனை செய்ய முடியும் என கூறுகிறார்கள்.

நிலமைகள் முன்னேறும் வரைக்கும் இருந்தால் அந்த உதவிகள் தேவைப்படாது. அதற்கு முதல் அந்த மக்களை ஏதோவொரு வகையில் நாங்கள் காப்பாற்ற வேண்டும். இலங்கை கடற்படையினுடைய 75வது ஆண்டு நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்திய கடற்படைக்கு சொந்தமான மிகப்பெரிய போர்க்கப்பல் இங்கு வந்திருக்கிறது.

தங்களுடைய வளங்களை இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கு முழுமையாக ஈடுபடுத்துவதற்கு தயார் என இந்திய தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருக்கிறது.

இந்தியாவில் உள்ள கடற்படை விமானப்படையின் பலத்தை இலங்கையின் கடற்படைக்கும் விமானப்படைக்கும் உள்ள பலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. தீர்க்க முடியாத விடயங்களை கூட சுகமாக தீர்க்கக்கூடிய வல்லமை இந்திய கடற்படைக்கும் விமானப்படைக்கும் இருக்கும். இந்த கோரிக்கை அவசரமாக இந்திய தூதரகம் ஊடாக வலியுறுத்துகிறோம்.

வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிரச்சனைகளை தீர்க்காமல் இருப்பதற்கான பிரதான காரணம் முப்படைகளினுடைய வளப் பற்றாக்குறை என்பதே உண்மை என இன்றைய கூட்டத்தில் தெளிவாக நிரூபிக்கப்பட்டது. அரச தரப்பு இந்த விடயத்தில் அக்கறை

**இலங்கை செய்திகள்**

காட்டும் நிலையில் இல்லை.

இந்தியா உதவ வேண்டும் என்பது எங்களுடைய வலியுறுத்தல். இந்திய தூதரகம் வடக்கில் இருக்கக்கூடிய நிலைமைகளை ஏதோவொரு வகையில் தீர்த்து வைப்பதற்கு வடக்கு கிழக்கில் உள்ள பிரச்சனைகளை தீர்த்து வைக்க இயன்றளவு பங்களிப்பை செய்வதற்கு அவசரமாக முன்வர வேண்டும். எங்கள் பார்வையில் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் நாளைக்கு காலையில் காப்பாற்றபடாவிட்டால் மறுநாள் காப்பாற்றலாமோ என்ற கேள்விகளும் எழும்.

# புயல் கடந்தாலும் இலங்கைக்கு காத்திருக்கும் ஆபத்து - அதிர்ச்சியை ஏற்படுத்தவுள்ள உயிரிழப்புக்கள்

கடந்த சில நாட்களாக கோரத்தாண்டவமாடி, இலங்கையின் காலநிலை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிக அதிகமான பாதிப்புக்களை ஏற்படுத்திய டிட்வா புயல்தற்போது இலங்கையைவிட்டு முழுமையாக வெளியேறி தற்போது தமிழ்நாட்டின் காரைக்காலுக்கு மேற்கே நிலைகொண்டுள்ளது.

இன்னும் ஒரு நாள் டிட்வா இலங்கையில் நிலைத்திருந்தால் மாபெரும் பேரழிவுகள் இலங்கையில் நிகழ்ந்திருக்கும். குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் மிகப்பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கும் என யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இந்த டிட்வா புயலின் நகர்வில் பல தடவைகள் எனக்கு அதிக அச்சம் இருந்தது. ஏனெனில் அதன் நகர்வு அத்தகையது.

மத்திய மலை நாட்டின் செல்வாக்கு

கடந்த 24.11.2025 அன்று தீவிர தாழமுக்கமாக அதன் நகர்வு வேகம் மணிக்கு 9 கி.மீ. ஆக இருந்தது. பின்னர் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறிய பின் மணிக்கு 11 கி.மீ. ஆக இருந்தது.

பின்னர் புயலாக மாறியபோது சிறிது நேரம் மணிக்கு 14 ஆக இருந்தது. பின்னர் மத்திய மலை நாட்டின் செல்வாக்கு காரணமாக மணிக்கு 9 கிலோமீற்றர். ஆக குறைந்தது. பின்னர் மணிக்கு 4 ஆகக் குறைந்தது.

உண்மையில் இந்த நேரத்தில் மிகப்பெரும் அச்சநிலை இருந்தது. ஏனெனில் ஒரு புயலின் நகர்வு வேகம் குறைந்தால் அது நிலைத்து நின்று பெரும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் அது மத்திய மலை நாட்டின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு பொலன்னறுவைக்கு வந்த பின் மீண்டும் வேகமெடுத்து மணிக்கு 14 கிலோமீற்றர் நகர்ந்தது.

பின்னர் மீண்டும் திருகோணமலைக்கு வந்த மீளவும் வேகம் குறைவடைந்து மணிக்கு 8 கிலோமீற்றர் ஆகக் குறைந்தது. இந்த நிலையில் மீண்டும் ஒரு அச்சநிலை ஏனெனில் ஏற்கனவே வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு கனமழை கிடைத்துக் கொண்டிருந்தது.

ஆனால் மீளவும் வேகமெடுத்து மணிக்கு 12 கி.மீ என்ற வேகத்தில் கடலுக்குள் சென்றது. இந்த டிட்வா புயலின் இரண்டு விடயங்களுக்கு இலங்கையின் மத்திய மலைநாடு காரணமாயிருந்தது.

1. புயலின் நகர்வு வேகத்தையும் மையச் சுழற்சியின் வேகத்தையும் கட்டுப்படுத்தியது. 2. மிகக் கனமழை பொழியவும் காரணமாக இருந்தது.

எவ்வாறாயினும் இந்த டிட்வா புயல் இன்னும் ஒரு நாள் இலங்கையில் நிலைத்திருந்தாலும் இலங்கையின் நிலைமை மிக மிக கவலைக்கிடமாக இருந்திருக்கும்.

இலங்கையில் அதிக உயிரிழப்பு



இலங்கையின் நவீன வரலாற்றில் நிகழ்ந்த ஆகப்பெரிய காலநிலை சார் இயற்கை அனர்த்தம் இதுவே. இது இலங்கையில் அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்திய இரண்டாவது இயற்கை அனர்த்தமாக மாறியுள்ளது.

முதலாவது 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி. ஆனால் பொருளாதாரப் பாதிப்பினை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தங்களில் இதுவே முதலாவது. ஏனெனில் சுனாமியினுடைய பொருளாதாரப் பாதிப்புக்கள் கரையோரம் சார்ந்து மட்டுமே இருந்தது. ஆனால் டிட்வா புயல் நாடு முழுவதும் பாதித்துள்ளது. இன்னும் சில நாட்களில் தாக்க மதிப்பீட்டு அறிக்கை வரும்போது அதனை உணரலாம். உயிரிழப்புக்கள் கூட நாம் நினைப்பதை விட மிக அதிகமாக இருக்கவே வாயப்புண்டு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இதனால் 13 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. ஆனால் பில்லியன் கணக்கான பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இலட்சக்கணக்கான வயல் நிலங்கள், தோட்ங்கள் அழிந்துள்ளன. ஆயிரக்கணக்கான வீடுகள் அழிந்துள்ளன. இலட்சக்கணக்கான கால்நடைகளின் நிலை என்னவென்று தெரியவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 200க்கு மேற்பட்ட குளங்கள் முழுமையாக புனரமைக்க வேண்டும். வீதிகள், பாலங்கள், புகையிரதப்பாதைகள், பொது நிறுவனங்கள் சேதமடைந்துள்ளன.

அனர்த்தத்துக்கு பின்னான நிலைமையிலும் நாம் மிக அவதானமாகவும் பொறுப்போடும் நடந்து கொள்ளவேண்டும். திட்டமிட்ட வினைத்திறனான அனர்த்த மீட்பு செயற்பாடுகள் அவசியம்.

குறுங்கால அனர்த்த மீட்பு செயற்பாடுகளும் நீண்ட கால அனர்த்த மீட்பு செயற்பாடுகளும் ஒன்றுடனொன்று இணைந்த வகையில் அமைய வேண்டும். இந்த மிகப்பெரிய அனர்த்தத்திலிருந்து இலங்கையர்கள் அனைவரும் மீண்டெழ வேண்டும் என பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

**குழந்தைகள் வாழ்க்கைமுறை**

# இந்த 5 காரணங்களுக்காக குழந்தை பெறுவதை பெண்கள் தவிர்க்க வேண்டும்!

புதிதாக திருமணமான தம்பதிகள் குழந்தை பெற திட்டமிட்டுள்ளீர்கள் எனில், எதற்காக நீங்கள் குழந்தை பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் என்பதில் தெளிவாக இருங்கள். ஏனெனில் குழந்தை வளர்ப்பு என்பது எளிதானது அல்ல. ஒரு குழந்தையை வளர்ப்பதற்கு நாம் முழுமனதோடு தயாராக வேண்டும். நீங்கள் கர்ப்பம் தரிப்பதற்கு முன் மற்றவர்களின் அழுத்தத்தின் காரணமாக குழந்தை பெறக்கூடாது என்பதை தெளிவாக மனதில் நிறுத்திக்கொள்ளுங்கள். உண்மையில் ஒரு பெண் ஆசைப்பட்டு அல்லது கணவன், மனைவி இருவரும் விருப்பப்பட்டு ஒரு குழந்தைக்கு தயாராகிறீர்கள் என்றால் பிரச்சனை இல்லை. மாறாக, வேறுசில காரணங்களால் நீங்கள் குழந்தை பெற முயற்சிக்கிறீர்கள் என்றால் அதனை தவிர்த்து விடுங்கள். ஏனெனில் அதனால் பாதிக்கப்படப்போவது நீங்கள் இல்லை. எந்தப் பாவமும் செய்யாமல் இந்த உலகுக்கு வரும் குழந்தைதான். காரணம், மற்றவர்களின் அழுத்தத்தால் ஒரு குழந்தை பெறும்போது நீங்கள் முழு அன்பையும் குழந்தையிடம் வெளிப்படுத்தமாட்டீர்கள். பெற்றோம், வளர்த்தோம் என கடமைக்காக ஒரு செயலை செய்வீர்கள். அதனால் கீழ்க்காணும் காரணங்களுக்காக பெண்கள் குழந்தை பெறுவதை கைவிடுங்கள்.

‘பெற்றோர் பேரக்குழந்தையை பார்க்க விரும்புகிறார்கள்‘

திருமணமானாலேவீட்டில்உள்ள பெரியவர்கள், பேரக்குழந்தையை பார்த்துவிட்டால் நிம்மதியாக சென்றுவிடுவேன். பேரக் குழந்தையை பெற்றுக்கொடுங்கள் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என தொடர்ந்து பேச தொடங்கிவிடுவர். பெற்றோர் விருப்பம், மாமியார் கேட்டார் என ஒரு குழந்தையை பெற்றுக்கொள்ளாதீர்கள். உங்களுக்கு எப்போது விருப்பமோ, அப்போது குழந்தை பற்றி



யோசியுங்கள்.

‘எங்களை நெருக்கமாக்கும் என்று நினைத்தோம்‘

பெரும்பாலான தம்பதிகள் குழந்தை பிறந்தால் தங்களுக்குள் கூடுதல் நெருக்கம் வந்துவிடும் என நினைப்பார்கள். அது தவறு. உங்களுக்கு நெருக்கம் வேண்டும் என்று நினைத்தால் நேரம் ஒதுக்கி அதிகம் வெளியே செல்லுங்கள். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முயலுங்கள். அதைவிடுத்து குழந்தை பெற்றுக்கொண்டு, நெருக்கம் இல்லாமல் உங்கள் நிலையை இன்னும் மோசமாக்கி கொள்ளாதீர்கள்.

புதிய தம்பதிகள் கூடுதல் பிணைப்பு வேண்டும் என்று எண்ணினால் ஒன்றாக அதிக நேரம் செலவிடுங்கள்

ஆண், பெண் என்பதை நிரூபிக்க...

திருமணமான ஒரு ஆண்டிற்குபின் குழந்தை பெறுவது என்பது கட்டாயம் என்ற விதிமுறை நம் சமூகத்தில் நடைமுறையில் உள்ளது. இதற்கு மாறாக நமது திட்டங்கள் ஏதேனும் இருந்தால், உன்னால் குழந்தை பெத்துக்க முடியாது என பெண்களையும், நீயெல்லாம் ஒரு ஆணா என கணவன்மார்களையும் விமர்சிக்க தொடங்குவர். இந்த பேச்சுகளை நினைத்து பயம்கொண்டே உங்களுக்கு வேறு ஏதேனும் திட்டங்கள் இருந்தாலும் குழந்தை பெற்றுக்கொள்வீர்கள். ஆனால் அப்படி செய்யாதீர்கள். நீங்கள் என்ன செய்தாலும் சமூகம் பேசும். அதனால் உங்கள் கடமைகளை நிறைவேற்றிவிட்டு குழந்தைக்கு நீங்கள் தயார் எனும்போது பெற்றுக்கொள்ளுங்கள்.

‘மற்ற குடும்பங்களிலிருந்து வித்தியாசமாக இருக்க விரும்பவில்லை‘

சமூக அழுத்தம் காரணமாக நிறைய திருமணமான தம்பதிகள் உடனே குழந்தைகளைப் பெறுகிறார்கள். திருமணமான சில மாதங்களிலேயே உங்களைச் சுற்றியுள்ள பெரும்பாலானோர் ‘நல்ல செய்தி‘ இருக்கா என கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டுமே என குழந்தைப் பெற்றுக்கொள்ளக்கூடாது. மேலும் எங்களோடு திருமணம் செய்துகொண்டவர்கள் எல்லாம் பெற்றுக்கொண்டார்கள். நாங்கள் இன்னும் பெறவில்லை எனக்கூறி, குழந்தை பெற முயற்சிக்காதீர். குழந்தை பெற வேண்டுமானால் நீங்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் தயாராக இருப்பது முக்கியம்.

‘நான் பெறாத விஷயங்கள் என் குழந்தைக்கு கிடைக்கவேண்டும்‘

என்னுடைய சிறுவயதில் நான் நிறைய விஷயங்களை தவறவிட்டேன். ஆனால் என் குழந்தைக்கு எல்லாவற்றையும் நான் கொடுக்கவேண்டும். என் குழந்தைக்கு செய்ய தேவையான அனைத்தும் இப்போது என்னிடம் உள்ளது என நீங்கள் தவறவிட்ட விஷயங்களை அடைவதற்கான வழி அல்ல குழந்தைப் பெற்றுக் கொள்வது. அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட அடையாளம் இருக்கும். ஆகையால் இதுபோன்ற செயல்களை மனதில் வைத்துக்கொண்டு ஒரு குழந்தையை பெறாதீர்கள். நீங்களாக விருப்பப்பட்டு ஒரு குழந்தை பெறும்போது அதற்கு உங்களின் அனைத்துவிதமான அன்பும் கிடைக்கும். நாம் திட்டமிட்டு நடத்துவதைவிட, எதிர்பாராமல் கிடைப்பதில்தான் ஆனந்தம் அதிகம் இருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

# குழந்தைகள் காலைப் பொழுதை எப்படித் தொடங்கலாம்?



குழந்தைகள் காலைப்பொழுதை எப்படி தொடங்கினால், அன்றைய நாள் சிறப்பானதாக இருக்கும் என்பதை இந்த தொகுப்பு விளக்குகிறது. காலையில் புன்னகையோடு, நம்பிக்கை எண்ணத்துடன் எழுந்திருங்கள். காலைச் சூரியனுக்கு, ’குட் மார்னிங்’ வைக்கலாம். கண்களுக்கு நல்லது. வைட்டமின்-டி சத்தும் கிடைக்கும்.

மிதமான இளஞ்சூடான நீரை அருந்துங்கள். காலையில் வீசும் இளங்காற்றை ஐந்து நிமிடங்களாவது மொட்டை மாடியிலோ அல்லது வெளி இடங்களுக்குச் சென்றோ சுவாசிக்கலாம். நடைப் பயிற்சி செய்வது நல்லது.

வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடிய பழ ரசம், சத்துமாவுக் கஞ்சி, கூழ், காய்கறி சூப், உளுந்தங் கஞ்சி ஆகியவற்றைச் சாப்பிடலாம். அந்த நாளை நல்ல உணவோடு தொடங்கும் வாய்ப்பு இது.

பத்து நிமிடங்களாவது தியானம், யோகா போன்ற பயிற்சிகளைச் செய்யலாம். அல்லது கண்களை மூடி வெறும் சுவாசத்தை மட்டும் கூட கவனிக்கலாம். கோடை காலத்தில் குளிர்ந்த நீரிலும், மழை மற்றும் பனிக்காலத்தில் வெந்நீரிலும் குளிப்பது நல்லது. இதனால் உடல் புத்துணர்வாக, சுறுசுறுப்பாக இருக்கும்.

ஒரு காகிதத்தில், இன்று நாம் செய்யவேண்டியவை என்னென்ன என்று குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

தவறாமல் காலை உணவைச் சாப்பிட வேண்டும்.

அன்றைய வேலையைத் தொடங்கும்போது ’இன்று நான் சிறப்பாகச் செயல்படுவேன்’ என்ற உத்வேகத்தோடு தொடங்குங்கள். அந்த நாள் சிறப்பானதாக, உங்களுக்கானதாக அமையும்.

# குழந்தை குற்றங்களுக்கு என்ன காரணம்? பெற்றோர்கள் செய்ய வேண்டியது என்ன?

கடந்த சில நாட்களாக குழந்தைகளுக்கு எதிரான வன்முறை குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை அதிகரித்து வருவதை சமூக ஆர்வலர்கள் கவலையுடன் பார்த்து வருகின்றனர். ஒரு குற்றம் நடந்தபின்னர் காவல்துறை அதற்குரிய விசாரணை செய்து தண்டனையும் குற்றவாளிகளுக்கு வாங்கி கொடுக்கின்றது. ஆனால் அந்த குற்றம் நடைபெறாமல் தடுப்பது ஒரு சமூகத்திடம்தான் உள்ளது. குறிப்பாக ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் அந்த கடமை உள்ளது.

முன்பெல்லாம் வீட்டில் உள்ள பெரியோர்கள், தாத்தா பாட்டிகள் குழந்தைகளுக்கு நீதிக்கதைகளை சொல்லும் வழக்கம் இருந்தது. ஆனால் இப்போது அப்பா ஒரு பக்கம் மொபைலில் ஏதாவது பார்த்து கொண்டிருப்பார், அம்மா சீரியல் பார்த்து கொண்டிருப்பார், குழந்தைகள் இன்னொரு புறம் மொபைல் அல்லது கம்ப்யூட்டரில் எதையாவது பார்த்து கொண்டிருப்பார்கள். ஒரே வீட்டில் இருந்தாலும் குழந்தைகளுடன் பெற்றோர்கள் செலவிடும் நேரம் மிக குறைவாக உள்ளது. அப்படியே குழந்தைகளிடம் பேசினாலும் அவர்களுக்கு நீதிபோதனை, அறிவுரைக்கதைகள் சொல்லி கொடுக்கும் வழக்கம் இப்போது சுத்தமாக இல்லை

இதைப்பற்றிசிந்திக்கயாருக்குமே நேரம் இல்லாததால் தான் குற்றங்கள் அதிகரித்து கொண்டே வருகிறது. நல்ல சமூகமாக நாம் இருக்க வேண்டுமென்றால், குழந்தைகளுக்கு ஆடம்பரப் பொருளை வாங்கித் தருவதில் கவனம் செலுத்தாமல், நல்ல கல்வி, நல்ல இயற்கை சூழல், நல்ல பழக்கவழக்கங்கள், சமூக அக்கறை, குடும்பச் சூழல், ஆண் பெண் புரிதல் இவற்றைப் போதிக்க வேண்டும். அவர்கள் வளர்ந்த பின்பு கிடைக்கும் நல்ல சூழ்நிலைகள் மூலமே குற்றங்களைக் குறைக்க முடியும். வெறும் சட்டங்களை இயற்றினால் குற்றங்கள் ஒழியாது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

# டிட்வா புயலால் இதுவரை 3 பேர் உயிரிழப்பு – அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன்



வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள டிட்வா புயல் சென்னைக்கு தென்கிழக்கே 220 கி.மீ. தூரத்தில் மையம் கொண்டுள்ளது. டிட்வா புயல் காரணமாக டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் சென்னை எழிலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

★ கடலூர், விழுப்புரம், சென்னையில் அதிக மழை இருக்கும் என எதிர்பார்த்தோம்.

★ புயல் காரணமாக எதிர்பார்த்த அளவிற்கு மழை இதுவரை பெய்யவில்லை.

★ இலங்கையில் சிக்கி தவித்து வருபவர்களை அழைத்து வருவதற்கான பணிகள் நடக்கிறது.

★ இலங்கையில் சிக்கி தவிப்பவர்கள் இன்று தமிழ் நாட்டிற்கு திரும்ப வாய்ப்பு உள்ளது.

★ தற்போது பெய்த மழையால் இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

★ தூத்துக்குடி, தஞ்சையில் 2 பேர் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்துள்ளனர்.

★ மயிலாடுதுறையில் 20 வயது இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

★ தமிழகத்தில் பெய்த மழையால் 56 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

★ புயலின் தாக்கம் குறித்து மதியம் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறும்.

★38நிவாரணமையங்களில்2,393 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு – கொடைக்கானலில் 2-வது நாளாக சுற்றுலா இடங்கள் மூடல்

திண்டுக்கல், தேனி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு ள்ளது.

கொடைக்கானலில் கடும் குளிருடன் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் நேற்று வனப்பகுதியில் உள்ள சுற்றுலா தலங்களான தூண்பாறை, மோயர்பாய்ண்ட், குணாகுகை, பைன்பாரஸ்ட், பேரிஜம் ஏரி உள்ளிட்ட இடங்கள் மூடப்பட்டன. இன்று ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை என்ற போதும் சுற்றுலாப் பயணிகள் வருகை குறைவாகவே இருந்தது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் பாதுகாப்பு கருதி இன்று 2-வது நாளாக சுற்றுலா தலங்கள் மூடப்படுவதாக வனத்துறையினர் அறிவித்தனர்.

மேலும் காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் நட்சத்திர ஏரியில் படகு சவாரி நிறுத்தப் பட்டது.

மற்ற சுற்றுலா தலங்களான பிரையண்ட் பூங்கா, ரோஜா பூங்கா, கோக்கர்ஸ் வாக் உள்ளிட்ட பகுதிகளிலும் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் குறைவாகவே இருந்தது.

பொதுமக்களும் வெளியே நடமாடுவதை தவிர்த்ததால் சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டது. இதேபோல் தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணை, கும்பக்கரை அருவி, சுருளி அருவி ஆகியவற்றிலும் சுற்றுலாப் பயணிகள் செல்லாததால் வெறிச் சோடி காணப்பட்டது.

ஆண்டிபட்டி பகுதியில் பெய்த கனமழையால் சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதில் சக்கம்பட்டியை சேர்ந்த மணி (வயது60) என்பவர் நடந்து சென்றபோது தவறி கால்வாயில் விழுந்து பலியானார். இன்று காலை அவ்வழியாக சென்றவர்கள் அதை பார்த்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் விரைந்து சென்று முதியவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.



பெரியகுளம் அருகே உள்ள கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் இன்று காலை சுற்றுலாப் பயணிகள் செல்ல வனத்துறையினர் தடை விதித்தனர். இதே போல் வருசநாடு மலைப்பகுதியில் அமைந்துள்ள மேகமலை அருவியிலும் வெள்ளப்பெருக்கு மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக தடை விதிக்கப்பட்டுள்ளது. கம்பம் அருகே உள்ள சுருளி அருவியில் நீர்வரத்து சீராக உள்ளதால் அனுமதிக்கப்பட்ட போதும் குறைந்த அளவே சுற்றுலாப் பயணிகள் வந்தனர்.

## தமிழக செய்திகள்

# டிட்வா புயலால் எதிர்பார்த்த மழை பெய்யாதது ஏன்? – தனியார் வானிலை ஆய்வாளர் விளக்கம்



வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள டிட்வா புயல் சென்னைக்கு தென்கிழக்கே 180 கி.மீ. தூரத்தில் மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தற்போது புயலின் வேகம் அதிகரித்து 12 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருகிறது. டிட்வா புயல் வேதாரண்யத்தில் இருந்து 140 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் வட தமிழ்நாடு - புதுச்சேரி கடற்கரைகளுக்கு இணையாக நகர வாய்ப்பு உள்ளது. பிற்பகல் மற்றும் மாலை நேரங்களில் முறையே 60 கி.மீ. மற்றும் 30 கி.மீ. தூரத்தில் மையம் கொள்ளும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயல் காரணமாக தமிழகத்தின் டெல்டா மாவட்டங்கள், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் கனமழை கொட்டித்தீர்த்தது.

இந்நிலையில் டிட்வா புயல் காரணமாக எதிர்பார்த்த மழை பெய்யாதது ஏன்? என்று தனியார் வானிலை ஆய்வாளர் ஹேமசந்தர் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ டிட்வா புயல் இலங்கை நிலப்பரப்பின் ஊடுருவலில் இருக்கும்போது அதன் தாக்கத்தால் நமக்கு மழை கொடுக்கக்கூடிய வகையில் அமையவில்லை.

★ இலங்கையில் இருந்து வெளியே கடல் பகுதிக்கு வந்த பிறகு வானிலை காரணிகள் மாறியதால் டிட்வா புயலால் கரைப்பகுதியில் மழை மேகங்களை உருவாக்க முடியவில்லை.

★ வறண்ட காற்றின் ஊடுருவல் மற்றும் காற்று முறிவே மழை குறைந்ததற்கு காரணம்.

★ தற்போதைய நிலையில் காவிரி டெல்டா மாவட்டங்களில் மழை படிப்படியாக குறையும். இருந்த போதிலும் அடுத்த 3 நாட்களுக்கு மழை நீடிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தோவாளை மலர்சந்தையில் பூக்கள் விலை கடும் உயர்வு– மல்லிகை பூ கிலோ ரூ.5 ஆயிரத்திற்கு விற்பனை

குமரி மாவட்டம் தோவாளையில் புகழ்பெற்ற மலர்சந்தை செயல்பட்டு வருகிறது. இந்த சந்தைக்கு ஆரல்வாய்மொழி, குமாரபுரம், பழவூர், மாடநாடார் குடியிருப்பு, ஆவரைகுளம் பகுதிகளில் இருந்து பிச்சிப் பூவும், மதுரை, மானாமதுரை, கொடைரோடு, திண்டுக்கல், சங்கரன் கோவில், கோவில்பட்டி, ராஜபாளையம் பகுதிகளில் இருந்து மல்லிகை பூவும் வருகின்றன.

பெங்களூரு, ஒசூர், ராயக்கோட்டை பகுதிகளில் இருந்து மஞ்சள் கிரேந்தி, பட்டர் ரோஸ், சேலத்து அரளி போன்ற பூக்களும், நெல்லை மாவட்டம் திருக்குறுங்குடி, அம்பை, தென்காசி, ஆலங்குளம், புளியங்குடி பகுதிகளில் இருந்து பச்சை, துளசி, மரிக்கொழுந்து போன்ற பூக்களும் விற்பனைக்கு வருகின்றன.

மேலும் ஆரல்வாய் மொழி, செண்பகராமன் புதூர், தோவாளை, ராமநாயக்கன் புதூர், தோப்பூர், குமாரபுரம் பகுதிகளில் இருந்து சம்பங்கி, அரளி, கோழிக்கொண்டை பூக்கள் விற்பனைக்கு வருகின்றன. இந்த பூக்களை தினமும் குமரி மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும், அண்டை மாநிலமான கேரளாவில் இருந்தும் ஏராளமானோர் வந்து வாங்கிச் செல்கின்றனர்.

இந்த சந்தையில் பண்டிகை மற்றும் முகூர்த்த நேரங்களில் பூக்களின் விலை அதிகரித்து காணப்படும். அதன்படி நாளை (30-ந் தேதி) முகூர்த்த நாள் என்பதால், தோவாளை சந்தையில் பூக்கள் வாங்க இன்று ஏராளமானோர் குவிந்தனர். இதன் காரணமாகவும், வரத்து குறைவு காரணமாகவும் பூக்களின் விலை இன்று அதிகரித்து காணப்பட்டது.

ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.5 ஆயிரத்துக்கும், பிச்சிப்பூ ரூ.2 ஆயிரத்துக்கும் விற்பனையானது. அரளி பூ ரூ.200, சம்பங்கி ரூ.400, மஞ்சள் கிரேந்தி ரூ.80, சிகப்பு கிரேந்தி ரூ.90, பட்டர் ரோஸ் ரூ.240, ரோஜா ஒரு பாக்கெட் ரூ.40-க்கு விற்கப்பட்டது.

கனகாம்பரம் கிலோ ரூ.400, முல்லைப்பூ ரூ.1500, தாமரை ரூ.20, கோழிக்கொண்டை ரூ.80, துளசி ரூ.40, பச்சை ரூ.10, மரிக்கொழுந்து ரூ.140.



# கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை அருகில் உள்ள மலை பகுதிகளை உள்ளடக்கிய தாவரவியல் பூங்கா அமைக்க கோரிக்கை

பல்வகைத் தாவரங்களை வளர்க்கும் இடம் தாவரவியல் பூங்கா ஆகும். தாவரங்களை வளர்த்து, பாதுகாத்து, வகைப்படுத்தி அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்வதே தாவரவியல் பூங்காக்கள் முக்கிய நோக்கம். கன்னியாகுமரி மாவட்டத்தில் தட்பவெப்ப நிலை தாவரவியல் பூங்கா அமைக்க ஏதுவாக உள்ளது குறிப்பிடதக்கது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு வழி சாலை பணிகளுக்காக வேண்டி லட்சகணக்கில் மரங்கள், செடிகள் கொடிகள் வெட்டி அகற்றப்பட்டுள்ளது. இதனால் தற்போது மாவட்டத்தில் கடும் வெப்பநிலை நிலவுகிறது. 2017-ம் ஆண்டில் ஒகி புயலின் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அதிக அளவில் மரங்கள் சேதம் அடைந்து ஒரு சில மரங்கள் அழிந்துவிட்டன குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு நீதிமன்றம் ஒரு மரத்தை அகற்றினால் அதற்கு பதிலாக பத்து மரங்கள் நட்டு பராமரிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் தேசிய நெடுஞ்சாலை துறை ஆணையம் சார்பாக சாலை ஓரத்தில் மரங்களை நட்டு பராமரித்து வருகிறது. இவ்வாறு செய்தாலும் மாவட்டத்தில் அகற்றப்பட்ட மரங்களுக்கு நிகராக ஈடாகாது.

தற்போது தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் தாவரவியல் பூங்கா எதுவும் அமைக்கப்படவில்லை. ஆகவே அதிக மரங்களை நட்டு பராமரிக்கும் பொருட்டு தேசிய நெடுஞ்சாலை துறை ஆணையம் மற்றும் தமிழ்நாடு அரசு தோட்டக்கலை துறையும் இணைந்து அருகே நான்கு வழி சாலைக்கு அருகில் உள்ள மலை பகுதிகளை உள்ளடக்கிய தாவரவியல் பூங்கா அமைத்து அங்கு அதிகப்படியான மரங்கள் நட்டு இந்த மலை பகுதி முழுவதும் பராமரிக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறோம்.

இது ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்கா போல் தமிழ்நாட்டில் மிகப்பெரிய பூங்காவாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்த தாவரவியல் பூங்காவில் உடற்பயிற்சி செய்வதற்கு நடைபாதை, சைக்கிள் பாதை, போன்றவைகள் மலையை சுற்றி நான்கு பக்கமும் வட்ட வடிவில் அமைக்க வேண்டும். மலையின் மேல் ஏறுவதற்கு படிக்கட்டுகள் அமைத்து மலையின் மேல் பகுதியில் நடுவில் ஒரு கண்ணாடியால் ஆன கட்சி டவர் கட்ட வேண்டும். மேலே செல்லும் நபர்களுக்கு கட்டணம் வசூலிக்கலாம்.

தாவரவியல் பூங்காக்களின் பங்கு

தாவரவியல் பூங்காக்கள் வரலாறு முழுவதும் மாறிவரும் பங்கை வகித்துள்ளன மற்றும் புதிய சவால்கள் எழுந்தவண்ணம் அவை சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ந்து தகவமைத்து வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 500 மில்லியன் பார்வையாளர்களை ஈர்க்கும் முக்கிய சுற்றுலாத் தலங்களாக விளங்குவதால், அவை உள்ளூர் மற்றும் தேசிய பொருளாதாரங்களுக்கு முக்கிய பங்களிப்பாளர்களாக உள்ளன. நகர்ப்புற அமைப்புகளில் பெரும்பாலான தாவரவியல் பூங்காக்கள் அமைந்துள்ளதால், அவை மன மற்றும் உடல் நலனில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவது உள்ளிட்ட பல நன்மைகளை சமூகத்திற்கு வழங்குகின்றன. மேலே விளக்கப்பட்டுள்ளபடி, அண்மைக் காலங்களில் தாவரவியல் பூங்காக்கள் தாவரங்களின் பாதுகாப்பிலும், அவற்றைப் பார்க்க வரும் மக்களுக்கான கல்வியிலும் முக்கிய பங்காற்றுபவையாக மாறியுள்ளன.

உலகெங்கிலும் உள்ள தாவரங்களின் பாதுகாப்பிற்கு பல தாவரவியல் பூங்கா நடவடிக்கைகள் முக்கியமானவை, அவை பின்வருமாறு:

தோட்டக்கலை மற்றும் சாகுபடி திறன்கள் மூலம் காடுகளில் இழந்து போகக்கூடிய தாவரங்களை தாவரவியல் பூங்காக்கள் வளர்க்க அனுமதிக்கின்றன. உயிருள்ள தொகுப்புகளும் விதை வங்கிகளும் இனங்களைப் பாதுகாக்கின்றன மற்றும் சிதைந்த வாழிடங்களை மீட்டெடுப்பதற்கும் புனரமைப்பதற்கும் உதவுகின்றன.

தாவர வகைப்பாடு மற்றும் மரபியல், தாவர வேதியியல், பயனுள்ள தாவர பண்புகள் மற்றும் சிதைந்த மற்றும் மாறிவரும் சூழல்களைத் தாங்கக்கூடிய தாவரங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு தகவல் வழங்குவதில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (குறிப்பாக காலநிலை மாற்ற அச்சுறுத்தலால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது).

தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைத் தெரிவிப்பதற்கும், பலதரப்பட்ட பார்வையாளர்களைச் சென்றடைவதற்கும், இதை எவ்வாறு அடைய முடியும் என்பதைத் தெரிவிப்பதற்கும் கல்வி என்பது தாவரவியல் பூங்காக்களின் வலிமையாகும்.

தாவரங்களை மக்களின் நல்வாழ்வுடன் இணைத்தல், பூர்வீக மற்றும் உள்ளூர் அறிவைப் பாதுகாக்க உதவுதல், நிலையான மேம்பாட்டின் ஒரு பகுதியாக அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் தாவர வளங்களின் நிலையான பயன்பாட்டை ஊக்குவித்தல்.

# குமரி மாவட்டத்தில் பழையாறு ஆற்றின் கரையோரமாக உலக தரத்தில் அலங்கார நடைபாதை அமைக்க கோரிக்கை

திருவனந்தபுரம் மாநகராட்சி நகரத்தின் எல்லைக்குள் ஓடுகின்ற கரமன ஆற்றின் கரையோரமாக நீர் வளத்துறை - திருவனந்தபுரம் மாநகராட்சி சார்பாக சுமார் இரண்டு கி.மீ தூரத்துக்கு அலங்கார நடைபாதை அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் மிகவும் சிறப்பாக அனைவராலும் வரவேற்கதக்க வகையில் உள்ளது.

வீடியோ இணைப்பு :https://youtu.be/hyMoulvQcE4

தற்போது மாறிவரும் மக்களின் வாழ்க்கை முறையின் காரணமாக அதிக நபர்களுக்கு சர்க்கரை நோய், அதிக இரத்த அழுத்தம், இதயம் அடைப்பு, என பல்வேறு நோய்கள் இளம் வயதினருக்கு வருகிறது. இந்த நோய்கள் குறித்து மருத்துவர்களிடம் சென்றால் அவர்கள் தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள், தினமும் இரண்டு முதல் ஐந்து கி.மீ நடைபயிற்சி செய்யுங்கள், ஓட்டம் பயிற்சி செய்யுங்கள் என்று பல்வேறு ஆலோசனை கூறுகிறார்கள். ஆனால் நாகர்கோவில் நகரத்தில் சாதாரண மக்கள் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி செய்வதற்கு ஒரு இடவசதியும் தற்போது இல்லை. பேருந்துகள் செல்லும் சாலையில் தான் உடற்பயிற்சி, அல்லது நடைபயிற்சி செய்ய வேண்டி உள்ளது. இவ்வாறு செய்வதால் விபத்துகள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. ஒரு சில தனியார் கல்வி நிலையங்களில் உள்ள விளையாட்டு திடலில் தான் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் உடற்பயிற்சி அல்லது நடைபயிற்சி செய்யும் நிலை தற்போது உள்ளது.

ஆகவே திருவனந்தபுரம் கரமனை ஆற்றின் கரையோரமாக அமைக்கப்பட்ட அலங்கார நடைபாதை திட்டத்தை போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சி சார்பாக பழையாறு ஆற்றின் கரையோரமாக சுமார் இரண்டு முதல் ஐந்து கி.மீ தூரத்துக்கு அலங்கார நடைபாதை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றோம். இந்த அலங்கார நடைபாதையில் சைக்கிள் செல்வதற்கு என்று தனி பாதை, வயதானவர்கள் அமர்வதற்கு என்று ஆங்காங்கே இருக்கைகள், விளையாட்டு உபகரணங்கள், நடைபயிற்சிக்கு என்று தனி பாதை, ஓட்ட பயிற்சிக்கு என்று தனி பாதை, குழந்தைகள் சைக்கிள் ஓட்டுவதற்கு தனி பாதை, வாகன நிறுத்தங்கள், போதிய டீ கடைகள், இயற்கை பானங்கள் விற்பனை நிலையம், பூபந்து மைதானம், முதல் நிலை உடற்பயிற்சி செய்வதற்கு தனி இடங்கள், என பல்வேறு வசதிகள் ஏற்படுத்த வேண்டும். நடைபாதையின் இரண்டு புறங்களிலும் நிழல் தரும் மரங்கள் நட்டு பராமரிக்க வேண்டும். இரவு நேரங்களில் அங்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு பாதுகாப்புக்காக நுழைவாயில் அமைக்க வேண்டும். இது மட்டுமல்லாமல் முழுவதும் கண்காணிப்பு கேமரா மற்றும் கட்டுப்பாட்டு அறையுடன் கூடிய புறகாவல் நிலையம் அமைக்கப்பட வேண்டும்.





உங்கள் வியா–பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

www.kathi-rolimedia.ca

# ஜி-20 மாநாடு: தென் ஆப்பிரிக்காவுக்காக டிரம்ப்புடன் பிரதமர் மோடி பேசுவாரா? - ஜெய்ராம் ரமேஷ் கேள்வி

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள மியாமி நகரில் 2026-ம் ஆண்டு ஜி-20 மாநாடு நடைபெற உள்ளது. இந்நிலையில், தென்ஆப்பிரிக்காவில் கிறிஸ்தவர்கள் மீது வன்முறை நிகழ்த்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்து வரும் சூழலில்,



ஜி-20 மாநாட்டில் பங்கேற்க தென்ஆப்பிரிக்காவுக்கு தடை விதிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

இந்நிலையில், இதுதொடர்பாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் 'எக்ஸ்' பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஜி-20 அமைப்பில், ஆரம்பத்தில் இருந்தே தென்ஆப்பிரிக்கா இருக்கிறது. பெரிய பொருளாதார நாடு என்ற அடிப்படையில் இருக்கிறதே தவிர, அமெரிக்காவின் கருணையால் அல்ல. வாஷிங்டனில் நடந்த முதலாவது ஜி-20 மாநாட்டிலேயே கலந்து கொண்டது. அடுத்தடுத்து நடந்த மாநாடுகளிலும் பங்கேற்றது.

தென்ஆப்பிரிக்காவும், இந்தியாவும் சிறப்பான உறவை பகிர்ந்து கொண்டுள்ளன. பிரதமர் மோடி, ஆப்பிரிக்கா கண்டத்துக்கும், தெற்குலக நாடுகளுக்கும் தன்னைத்தானே தலைவராக அறிவித்துக் கொண்டுள்ளார். எனவே, அடுத்த ஜி-20 மாநாட்டில் தென்ஆப்பிரிக்கா பங்கேற்பதை உறுதி செய்யும் வகையில், தனது நல்ல நண்பர் டிரம்ப்புடன் அவர் பேசுவாரா?"

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## ஜூலை - செப்டம்பர் காலாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.2 சதவீதமாக உயர்வு

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டுக்கான ஜூலை - செப்டம்பர் காலாண்டில் 8.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது தொடர்பாக தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட தகவலின் அடிப்படையில், நடப்பு நிதியாண்டில் ஜூலை - செப்டம்பர் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சி 8.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.




உற்பத்தி துறையில் உற்பத்தி அதிகரிப்பு, ஜிஎஸ்டி வரி குறைப்பு, நுகர்வு அதிகரிப்பு உள்பட பல்வேறு காரணிகளால் நாட்டின் ஜிடிபி வளர்ச்சி 8.2 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த 6 காலாண்டுகளில் அதிகபட்ச வளர்ச்சியாகும்.

அரசின் பொருளாதார சீரமைப்பு மற்றும் வளர்ச்சி கொள்கைகளுக்கான விளைவே ஜூலை-செப்டம்பர் காலாண்டு ஜிடிபி வளர்ச்சியின் முடிவு என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## சமைக்க தெரியவில்லை என்று கூறி தாய் வீட்டில் விட்டுச் சென்ற கணவர்... இளம்பெண் எடுத்த விபரீத முடிவு

தெலுங்கானா மாநிலம் விகாராபாத் மாவட்டத்தில் உள்ள கட்டமீதி கங்காரம் கிராமத்தை சேர்ந்த கஞ்சி மல்லம்மா - சாயப்பா தம்பதியின் இளைய மகள் சிரிஷா (21 வயது). இவருக்கும், நல்லமோனி கூடத்தை சேர்ந்த சிவ லிங்கம் என்பவருக்கும் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது.

சிரிஷாவுக்கு சரியாக சமைக்க தெரியவில்லை என்றும், தன்னைவிட குறைவாக படித்து உள்ளார் என்றும் கூறி சிவலிங்கம் அவரை கொடுமைப்படுத்தி வந்துள்ளார். கடந்த 25-ந்தேதி இதுதொடர்பாக இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்ட நிலையில், சிரிஷாவை அவருடைய பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு சென்று விட்டார். நடந்த விஷயங்களை கேட்ட சிரிஷாவின் பெற்றோர் அவரை சமாதானப்படுத்தினர்.

இந்த நிலையில், கணவரை சிரிஷா செல்போனில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது நீ எனக்கு அவசியமில்லை என்று சிவ லிங்கம் திட்டியுள்ளார். இதனால் மனமுடைந்த சிரிஷா வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கனிமங்கள் எடுக்கும் திறனை ஆண்டுக்கு 3 லட்சம் டன்னாக உயர்த்த மத்திய அரசு இலக்கு

கழிவுகளில் இருந்து முக்கிய கனிமங்களை பிரித்தெடுப்பதற்கு ஊக்கத்தொகை அளிக்கும் ரூ.1,500 கோடி திட்டத்துக்கு கடந்த செப்டம்பர் 3-ந் தேதி மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது. அக்டோபர் 2-ந் தேதி விரிவான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டன.

மின்னணு கழிவுகள், பயன்படுத்தப்பட்ட லித்தியம் அயன் பேட்டரிகள், தொழிற்சாலை கழிவுகள் ஆகியவற்றை மறுசுழற்சி செய்து முக்கியமான கனிமங்களை பிரித்தெடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இதில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்படுகிறது.

இந்நிலையில், இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய மத்திய சுரங்கத்துறை செயலாளர் பியூஸ் கோயல் தலைமையில் நேற்று ஆலோசனை கூட்டம் நடந்தது. சுரங்கத்துறை அமைச்சக உயர் அதிகாரிகள், ஜவகர்லால் நேரு அலுமினிய ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் வடிவமைப்பு மைய பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில்,



கழிவுகளில் இருந்து முக்கிய கனிமங்களை பிரித்தெடுக்கும் மறுசுழற்சி திறனை ஆண்டொன்றுக்கு 3 லட்சம் டன்னாக உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

## முதல்-மந்திரி பதவிக்காக நான் அவசரப்படவில்லை - டி.கே.சிவக்குமார் பேட்டி



துணை முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் பெங்களூருவில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி

**இந்திய செய்திகள்**

அளிக்கையில் கூறியதாவது:-

முதல்-மந்திரி மாற்றம் விவகாரத்தில் கட்சி தொண்டர்கள் வேண்டுமானால் ஆர்வமாக இருக்கலாம். நான் அவசரப்படவில்லை. கட்சி மேலிடம் உரிய முடிவு எடுக்கும். நான் டெல்லி செல்லலாம். அங்கு நிறைய பணிகள் உள்ளன. நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் தொடங்குகிறது. அதனால் கர்நாடக எம்.பி.க்களை சந்தித்து ஆலோசிக்க வேண்டும்.

கடவுளின் கருணையால் மேகதாது திட்டத்தில் கர்நாடகத்துக்கு நீதி கிடைத்துள்ளது. எம்.பி.க்களுடன் நீர்ப்பாசன திட்டங்கள் குறித்து விவாதிக்க வேண்டியுள்ளது. அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டுவது குறித்து முதல்-மந்திரி சித்தராமையாவுடன் ஆலோசிக்க உள்ளேன்." இவ்வாறு அவர் கூறினார்.

www.kathiroli-media.ca

## பெண் டாக்டர்கள் உடை மாற்றுவதை வீடியோ எடுத்தவர் கைது

ஆந்திர மாநிலம் குண்டூரில் செயல்பட்டு வரும் தனியார் மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரி ஒன்றில் வெங்கடசாயி என்பவர் கடந்த ஒரு மாதத்திற்கு முன் ஆண் நர்சாக பணிக்கு சேர்ந்தார். இந்தநிலையில், ஆபரேஷன் தியேட்டரில் பெண் டாக்டர்கள் உடை மாற்றுவதை அவர் செல்போனில் படம் பிடித்ததாக கூறப்படுகிறது. மேலும் மருத்துவ மாணவிகள் ஆடை மாற்றுவதையும் அவர் ரகசியமாக வீடியோ எடுத்ததாக சொல்லப்படுகிறது.

இதுபற்றி போலீசுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. போலீசார் வந்து வெங்கடசாயியை கைது செய்து அவருடைய செல்போனை பறிமுதல் செய்தனர். ஆனால் போலீசார் வருவதற்கு முன்பே வெங்கடசாயியின் செல்போனை பிடுங்கி அதில் இருந்த 200-க்கும் மேற்பட்ட வீடியோக்களை அழித்து விட்டதாக பெண் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# உடலுக்கு உகந்த உணவுகள்

மனித உடலானது பல்வேறு பணிகளை செய்து நமது அன்றாட வாழ்வை நடத்தி வருகிறது. இந்த உடலை இயக்குவதற்கு பல்வேறு உடல் பாகங்கள் பயன்பட்டு வருகின்றன. இந்த உடல் பழுதில் லாமல் சீராக செயல்பட சில உணவுமுறைகள் அவசியமாகும்...

இதெல்லாம் சாப்பிடுகிறீர்களா...? கீரை, தயிர், புரோக்கலி, பூண்டு, பாதாம், இஞ்சி, எலுமிச்சை, காலிபிளவர், குடைமிளகாய், கேரட், தக்காளி, பட்டை இவையெல்லாம் அன்றாட உணவில் சேர்த்தால் தொப்பை குறைய வழி வகுக்கும். சில பழக்கங்கள் உங்கள் குடல் ஆரோக்கியத்தினை அமைதியாகக் கொன்றுவிடும்.

கருப்பு காபி நல்லதுதான். அதற்காக காலை உணவினைத் தவிர்த்து வெறும் வயிற்றில் கருப்பு காபி குடிப்பது வயிற்றில் ஆசிட் உருவாக்கும். வயிற்றின் உள்ளே அரித்து விடும். கலோரி சத்து குறைந்த, புரதச்சத்து அதிகம் உள்ள உணவுகளை எடுத்துக் கொண்டு அதன் பின்னர் கருப்பு காபி குடிக்கலாம். எல்லா எண்ணைகளும் அநேகமாக விதைகளில் எடுக்கப்பட்டது தான். இவை குடலை பாதித்து உடலில் வீக்கத்தினை ஏற்படுத்தும்.

நெய், ஆலிவ் எண்ணை, தேங்காய் எண்ணையினை அளவாக சேர்த்து கொள்வது நல்லது. சர்க்கரை தவிர்க்கப்படலாம். பழங்கள் எடுத்துக் கொள்ளலாம். தூக்கம் போதுமான அளவு இல்லாவிட்டால் பாதிப்பிற்கு குறைவே இருக்காது. அதிக சுறுசுறுப்பற்ற வாழ்க்கை தற்கொலைக்கு சமம்.

பப்பாயா: சற்று நகர்புறத்தினைத் தாண்டினால்வீட்டுக்குவீடுபப்பாயா மரம் பார்க்க முடிகின்றது. பழங்கள் தரையில் கொட்டி கிடக்கின்றன. இதன் அருமையினை இன்னமும் உணராது இருக்கின்றனர். மலச்சிக்கல் நீக்கும். நோய் எதிர்ப்பு சக்திக் கூடும். முகம் பொலிவு பெறும். ஒரு சிறு கப் அளவு அன்றாடம் எடுத்துக் கொள்ளலாமே.

புரோகலி, கேரட், தக்காளி, வெள்ளரி, அன்னாச்சி நம் ஊரில் கிடைக்கும். இவைகளை அடிக்கடி உணவில் சேர்த்தாலே குடல் நன்கு இருக்கும். நம்ம ஊரு முருங்கைக் காய் உலக அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. முருங்கை கீரையினை வாங்காத நாடே இல்லை எனலாம். இந்தியாவிற்கு முருங்கை ஒரு பொக்கிஷம். உலக அளவில் 25 சதவீதம் நம் நாட்டில் இருந்துதான் ஏற்றுமதி ஆகிறது என குறிப்பிடப்படுகிறது. இதில் பாலை விட கூடுதலாக நான்கு மடங்கு கால்சியம், 3 மடங்கு அதிக பொட்டாசியம், 2 மடங்கு புரதம் என்று உள்ளது. தினம் இரண்டு கைப்பிடி கீரையினை ஏதாவது பதார்த்தத்தில் சேர்த்தால் போதும். அநேக குறைபாடுகள் நீங்கும்.

இயற்கை நமக்கு உதவிக் கொண்டேதான் இருக்கிறது

★ மூட்டுகள் பலம் பெற அடிக்கடி சிலதுண்டுகள் அன்னாச்சி பழம் எடுத்துக் கொள்ளலாம். ★ கண் என்றாலே கேரட் என்று குழந்தை கூட சொல்லிவிடும். ★ ரத்த சேகைக்கு மாதுளை பழம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

★ கணையம் பலம் பெற சில வேக வைத்த சர்க்கரை வள்ளி துண்டுகளை எடுத்து வரலாம். ★ இருதய பலம் பெற மருத்துவர் அறிவுரை பெற்று தக்காளியை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். வயிற்றில், அஜீரணமா? உப்பிசமா? நமக்குதான் இஞ்சி இருக்கே.

★ மூளை சிறப்பாய் இயங்க 3.4 வால்நட் அன்றாடம் எடுத்துக் கொள்ளலாம். ★ கல்லீரல் சீர்பட-100 மில்லி பீட்ரூட் ஜூஸ் அடிக்கடி எடுத்துக் கொள்ளலாம். ★ நுரையீரல் உறுதிக்கு கருப்பு



திராட்சை உதவும்.

சில உறுப்புகளுக்கு பிடிக்காத உணவுகள்

கல்லீரல்: மது, புகை கூடவே கூடாது. இருதயம்: உடல் பருமன், கெட்ட கொழுப்புகளை நீக்கிவிட வேண்டும். சிறுநீரகம்: உப்பு அதிகம் கூடாது. ஊறுகாய், அப்பளம், சிப்ஸ், நொறுக்குத் தீனி இவைகளை தவிர்த்து விடுங்கள்.

குடல்: பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்த்துவிடலாம். சர்க்கரை உணவுகள் வேண்டாம். கணையம்: சர்க்கரை உணவுகளுக்கு 'நோ' நுரையீரல்: வறுத்த, பொரித்த உணவுகள் வேண்டாம்.

எதை தவிர்ப்பது, எதை எடுத்துக் கொள்வது? விகிதா சார உணவு என்று சொல்லப்படுகின்றது. பல உணவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. ஆனால் அவை அனைத்தும் எல்லோருக்கும் ஒத்துக் கொள்கின்றது என்ற கூற முடியாது. குறிப்பாக சில உடல்நல, குடல் நல கோளாறுகள் இருக்கும்போது சில உணவுகள் வயிறு உப்பிசம், மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, காற்று, ஒவ்வாமை, பசியின்மை, வயிற்று வலி என பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். அதில் சில உணவுகளைப் பற்றி இங்கு பார்ப்போம்.

பால்-பால் சார்ந்த உணவுகள்

சிலருக்கு ஒவ்வாமையினை ஏற்படுத்தலாம். உணவை செரிக்க இயலாதபோது மேற்கூறிய அறிகுறிகள் ஏற்படலாம். ஆராக்கியமான உணவுப் பாதையில் சிறு குடல் லக்டேஸ் என்ற என்சைமை உருவாக்கி லக்டோஸ் சர்க்கரையினை உடைத்து செரிமானத்திற்கு உதவுகின்றது. சிலருக்கு இந்த லக்டோஸ் உடலில் உறிஞ்சப்படாமல் பெருங்குடலுக்கு செல்கின்றது. அங்குள்ள பாக்டீரியாவால் இது உடைபட்டு காற்று உருவாகின்றது. பிறகு காற்று, உப்பிசம், வலி, வயிற்றுப் போக்கு என வெளியேறுகின்றது.

பால்-பால் சார்ந்த உணவுகள் எலும்பின் பலத்திற்கு கால்சியம், வைட்டமின் டி என தந்து உதவுபவை. புரதச்சத்து கொண்டவை. எனவே டாக்டர் அவரவர் உடல்நிலைக்கேற்ப இதன் அளவை குறைத்து கொடுக்க முயற்சிப்பார். சிலருக்கு தயிர் ஒத்துக் கொள்ளும். இருப்பினும் மருத்துவர் ஆலோசனை பெற்று செயல்படுவது ஆரோக்கியம் அளிக்கும்.

பொரித்த உணவுகள், அதிக கொழுப்பு உள்ள உணவுகள்

★ கொழுப்பு உணவு அதிக நேரம் வயிற்றில் தங்கி ஆசிட்டை அதிகப்படுத்தி வலி, எரிச்சல், எதிர்ப்பு போன்ற பிரச்சினைகளை உருவாக்கும். வயிறு உப்பிசம், காற்று உருவாகும். கடும் வயிற்றுப்போக்கும் ஏற்படலாம்.

★ இவ்வகை உணவுகளுக்குப் பதிலாக குறைந்த கொழுப்புடைய அசைவ உணவுகள், கிரில், பேக்கிங் முறையில் சமைக்கலாம். கொட்டை வகை, விதை வகை, ஆலிவ் எண்ணை இவற்றினை அளவாக சேர்க்கலாம். மீன் உணவு எடுத்துக் கொள்ளலாம்.

★ சிலருக்கு முட்டைகோஸ், புரோகலி, முள்ளங்கி போன்றவை ஒத்துக்கொள்ளாது. இவை நல்ல நார்சத்து, வைட்டமின்கள் கொண்டவை. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவை. ★ பொதுவில் இதனை அடியோடு நீக்காமல் அளவு குறைத்து நன்கு வேகவைத்து எடுத்துக் கொள்ளலாம்.

★ சிலருக்கு உப்பு சேர்த்த ஸ்நாக்ஸ், சிப்ஸ் போன்றவையும் கேக், குக்கிஸ், துரித உணவுகள், குளிர் பானங்கள் இவை ஒத்துக் கொள்ளாது. பல பிரச்சினைகளை தரும். உண்மையில் இவைகளை அடியோடு நீக்கி விடுவது நல்லது.

★ பழங்கள், காய்கறிகள், முழு தானிய உணவுகள், நார்சத்து உணவுகளே நல்லது. தீர்வும் ஆகும்.

பருப்பு வகைகள்

சிலருக்கு பருப்பு கலந்த உணவு உடனடியாக வயிறு உப்பிசம் கொடுக்கும். செரிக்காது. அவைகளின் அதிக நார்சத்து, ஒலிகோ சாக்கரைட் என்ற ஒருவித கார்போஹைடிரேட் செரிமானத்தை கடினமாக்குகின்றது. அதிலும் ஏற்கனவே செரிமான பிரச்சினை உள்ளவர்களுக்கு கூடுதல் படுத்துகின்றது. ஆகவே தான் நம் முன்னோர்கள் சரியான அளவிலேயே பருப்பினை சேர்த்த உணவினைத் தயாரித்தார்கள்.

சோயா, கடலைப் பருப்பு வகைகளை குறைத்துக் கொள்ளலாம். அல்லது தவிர்க்கலாம். பயத்தம் பருப்பு பயன்படுத்தலாம். இட்லி அநேகருக்கு நன்கு ஒத்துக் கொள்கின்றது.

★ காபி, டீ போன்றவை பலருக்கு அசிடிடி பிரச்சினையை ஏற்படுத்தும். இவர்கள் மருத்துவ ஆலோசனை பெற்று புரதசத்து, திரவ உணவுகளை எடுத்துக் கொள்ளலாம்.

★ காரசாரமான மசாலா உணவு ஏற்படுத்தும் பிரச்சினைகளை அநேகர் அறிவர். புதினா, கொத்தமல்லி, சீரகம், சோம்பு, அன்னாசி பூ, பட்டை, ஏலக்காய், இஞ்சி இவை குடல் ஆரோக்கியத்திற்கு நன்கு உதவும்.

மது, புகை இவை ஒத்துக் கொள்ளவில்லை என்று கவலைப் பட வேண்டாம். அடியோடு ஒதுக்கி விடலாமே. எதனையும் மருத்துவர் அறிவுரை பெற்றே நடைமுறைப்படுத்த வேண்டும்.

வாழ்க்கை கற்று தரும் பாடங்கள்

வாழ்க்கையே பாடம்தான். இதனை மற்றவர் அனுபவங்கள் மூலமும் நம் அனுபவம் மூலமும் கற்றுக் கொண்டுதான் இருக்கின்றோம். நான் படித்த சிலரின் அனுபவ பாடங்களை உங்கள் முன் பகிர்ந்து கொள்கிறேன்.

★ வாழ்க்கை ஒன்றும் ஆஹா, ஒஹோ என்று இல்லை. இருப்பினும் அநேகர் சொல்வது பரவாயில்லை. ஓடுது என்பதுதான்.

★ சந்தேகமா இருக்கா! அடுத்த நகர்வை சற்று கம்மியா நிதானமா செய்யுங்க.

★ முதுமை வரும் பொழுதுதான் தெரியும். வாழ்க்கை எவ்வளவு சிறியது என்று. இதில் மற்றவரை வெறுப்பதிலேயே காலத்தினை வீணடிக்க வேண்டாம்.

★ உலகில் யாருக்கும் உங்களைப் பற்றி மட்டுமே பேசவும், நினைக்கவும் நேரம் கிடையாது. ஆகவே வாழ்வினை ரொம்ப சீரியசாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

★ எல்லா வாக்குவாதங்களிலும் நீங்களே ஜெயித்தவராக இருக்க முடியாது. உங்கள் ஒப்புதல் இன்மையைக் கூறினாலே போதும்.

★ அந்தந்த மாத செலவுகளை அந்த மாதமே முடித்து விட வேண்டும்.

★ ஓய்வு கால தேவைக்காக சம்பாதிக்க ஆரம்பித்த முதல் மாதத்தில் இருந்து ஆரம்பித்து விடுவீர்கள்.

★ கடந்த கால வலிகளோடு அமைதிப்படுத்திக் கொள்ளுங்கள். அதை வைத்து நிகழ் காலத்தினை குழப்பிக் கொள்ள வேண்டாமே.

★ பிறரோடு உங்களை ஒப்பிட வேண்டாம். அவர்கள் என்னவெல்லாம் கஷ்டப்படுகின்றார்கள் என்பது யாருக்குத் தெரியும்.

★ வாழுவதற்காக பிசியாகுங்கள்.

★ உங்கள் மகிழ்ச்சிக்கு நீங்கள் மட்டுமே பொறுப்பு.

★ அதிகம் மனதில், வாழ்க்கையில் வலி ஏற்படுத்தியவர்களைக் கூட மனதார மன்னிக்க முயற்சி செய்யுங்கள்.

★ அதிசயங்கள் நடக்கலாம். நம்புங்கள். மூழ்கி விடாதீர்கள்.

★ காலம் எல்லாவற்றினையும் ஆற்றும்.

★ முதுமை வரும் பொழுது நாமே நம் வேலைகளை செய்து கொள்ள ஆசைப்படுகின்றனர்.

★ கேட்டால் மட்டுமே கிடைக்கின்றன.

கமலி ஸ்ரீபால்

# திட்வா புயல் இலங்கையை விட்டு நீங்கினாலும் தீராத ஆபத்து - என்ன நடக்கிறது?

பிபிசி சிங்கள சேவை

புயல் இலங்கையை விட்டு நகர்ந்துள்ளது. இன்று மழை நின்றுவிடும் என்று எதிர்பார்க்கப் படுவதாக அனார்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இருந்தாலும் கெலனி ஆற்றின் நீர் மட்டம் கொழும்பு புறநகர்ப் பகுதிகளுக்கு இன்னும் பெரும் வெள்ள அபாய எச்சரிக்கை ஏற்படும் அளவுக்கே இருக்கிறது. இதுபோக, நேற்று மத்திய மாகாணத்தில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டிருக்கிறது.

மழை நின்றுவிட்டாலும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் அதிகமாக இருப்பதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. மலைச் சரிவுகளுக்கு அருகிலுள்ள பகுதிகளில் நிலம் நிலையற்றதாக இருக்கிறது. பதுளை மாவட்டத்துடன் கண்டியிலும் அதிகளவான இறப்புகள் பதிவாகியுள்ளன. மீட்புப் பணியில் இருப்பவர்களிடமிருந்து இன்று தகவல்கள் பெறப்படும் எண்பதால், பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று கருதப் படுகிறது.

முன்னதாக, இலங்கை முழுவதும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக, இலங்கை ஜனாதிபதி ஊடக இயக்குநர் ஜெனரல் பிரசன்னா பெரேரா தெரிவித்தார்.

பிபிசி சிங்கள சேவையிடம் அவர் இத்தகவலை உறுதிப் படுத்தியுள்ளார்.

இலங்கையில் பேரிடர் சூழல் நிலவுவதால் இக்காலகட்டத்தில் அத்தியாவசிய சேவைகளை பராமரிக்கும் பொருட்டு அவசர நிலையை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பிரகடனப் படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவசர நிலை என்பது என்ன?

அவசர நிலை என்பது ஒரு அரசுக்கு அதிகளவு அதிகாரங்களை அளிக்கிறது.

பெரிய ஆபத்து, அச்சுறுத்தல் அல்லது பேரிடர் நேரத்தில் நாட்டையும் மக்களையும் பாதுகாக்க சில அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களும் இதன்கீழ் அரசாங்கத்திற்கு இருக்கும்.

எனினும், இலங்கை அரசியலமைப்பு அவசர நிலை குறித்த அதிகாரபூர்வ விளக்கத்தை வழங்கவில்லை. ஆனாலும், அவசர நிலையை பிரகடனப்படுத்துவதற்கு இட்டுச் செல்லும் நிபந்தனைகள் குறித்து இலங்கை பொது பாதுகாப்பு சட்டம் (Public Security Ordinance) விளக்கியுள்ளது.

'பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான சேவைகள் மற்றும் விநியோகங்களை



பராமரிக்கவோ அல்லது அவசரகால சூழல்களில் பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டோ' ஜனாதிபதி அவசரநிலையை பிரகடனப்படுத்தலாம் என அதற்கான நிபந்தனையாக அதில் விளக்கப்பட்டுள்ளது.

''தேச பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பதை உறுதி செய்வதை'' அவசர நிலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அவசர நிலையை யார் பிரகடனப்படுத்தலாம்?

இலங்கை அரசியலமைப்பு சட்டம் பிரிவு 155-ன் கீழ், அவசர நிலையை பிரகடனப்படுத்தும் அதிகாரம் கொண்ட ஒரே நபராக ஜனாதிபதி உள்ளார்.

இந்த அறிவிப்பு குறித்து நாடாளுமன்றத்திற்கு தெரியப் படுத்துவதற்காக அவையை கூட்ட வேண்டும். அவசர நிலை அறிவிப்பு, நான்கு நாட்களுக்குள் நாடாளுமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

அவசர நிலை பிரகடனப் படுத்தப்படுவதை நீதிமன்றத்தில் எதிர்த்து வழக்கு தொடுக்க முடியாது.

பொது பாதுகாப்புச் சட்டத்தின் விதிகள் அவசர நிலையை அறிவிப்பதன்மூலம்நடைமுறைக்கு வருகின்றன. இந்த விதிமுறைகள் வேறு எந்த சட்டத்தையும் மீற முடியும் என்றாலும், அவை அரசியலமைப்பை மீற முடியாது.

எவ்வளவு காலம் அவசர நிலை நீடிக்க முடியும்?

ஒரு மாதத்திற்கு செல்லுபடியாகும் வகையிலான அவசர நிலையை ஜனாதிபதி பிரகடனப்படுத்தலாம். (என்றாலும், ஒருமாதம் கடப்பதற்கு முன்பாகவே ஜனாதிபதி அதை ரத்து செய்யலாம்.)

அவசர நிலை அறிவிப்பு வெளியான நான்கு நாட்களுக்குள் அதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

அப்படி செய்யப்படவில்லையெனில், அந்த அறிவிப்பு செல்லாததாகிவிடும். அவசர நிலை 30 நாட்களுக்கு மேல் நீட்டிக்க வேண்டுமென்றால் அது நாடாளுமன்றத்தின் ஒப்புதலின் பேரிலேயே செய்யப்பட வேண்டும்.

குடிமக்களின் உரிமைகள் மீதான தாக்கங்கள் என்ன?

அரசியலமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் மற்ற சட்டங்கள் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள உரிமைகள் மீது அவசர நிலை விதிமுறைகள் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தலாம்.

இந்த கட்டுப்பாடுகள், அவை தடுக்கப்பட வேண்டிய ஆபத்துகளின் நோக்கத்துக்கு ஏற்ப ஒத்த அளவில் இருக்க வேண்டிய அவசியமில்லை. தீர்மானிக்கும் நபரை பொறுத்தே கட்டுப்பாடுகளின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது.

அவசர நிலையால் கீழ்க்கண்ட அடிப்படை உரிமைகள் மீது கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படலாம்:

ஒரு நபர் மீது குற்றம் சாட்டப்படும் நிலையில் வழக்கில் தீர்ப்பளிக்கப்படுவதற்கு முன்பாக அவர் குற்றமற்றவர் என்ற அனுமானத்தின் மீது கட்டுப்பாடு ஏற்படுத்தப்படலாம். (Presumption of innocence)

சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் மற்றும் எந்தவித பாகுபாடும் இல்லை என்பதில் கட்டுப்பாடுகள் இருக்கலாம்.

கைது மற்றும் தடுப்புக்காவலில் எடுப்பதற்கான வழக்கமான சட்ட நடைமுறைகள்

கருத்து சுதந்திரம், கூடுகை, சங்கம், இயக்கம், வேலைவாய்ப்பு, மதம், கலாசாரம், மொழி சார்ந்த அடிப்படை உரிமைகள்

அவசர நிலையால் கட்டுப்படுத்தப்பட முடியாதவை:

சிந்திப்பதற்கான மற்றும் உளச்சான்றின்படி செயல்படுவதற்கான சுதந்திரம்

துன்புறுத்தப்படுவதிலிருந்து விடுபடுவதற்கான சுதந்திரம்

தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் நியாயமான விசாரணைக்கான உரிமை

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அவசரநிலை அதிகாரங்கள் மூலம் அரசு தன்னிச்சையாக பயன்படுத்தலாம். பயங்கரவாத தடுப்பு தொடர்பான அதிகாரங்கள் பரவலானவை (மேலும் அது விரிவுபடுத்தப்படலாம்), மேலும் அவசரகால அதிகாரங்களைப் போலன்றி, நாடாளுமன்றத்தின் முறையான ஒப்புதல் இதற்கு தேவையில்லை.

சாமானிய மக்களை எப்படி பாதிக்கிறது?

பயங்கரவாதம் அல்லது வன்முறையுடன் எந்தத் தொடர்பும் இல்லாத சாதாரண மக்களின் தினசரி வாழ்க்கையில் கூட அவசரநிலை பாதிப்புகளை ஏற்படுத்தும் என சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஊடகங்கள் மீதான தாக்கம் என்ன?

குடிமக்கள் பிரசுரிப்பதன் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், வெளியீடுகள் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவை ஊடகங்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

**– இது, பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு**

**நன்றி: பிபிசி**

உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்






# இன்காக்னிடோ மோட் உங்கள் ரகசியங்களை பாதுகாக்கும் கவசமா?

**சிராஜ், பதவி,பிபிசி தமிழ்**

'இன்காக்னிடோ மோட்' (Incognito mode) அல்லது 'பிரைவேட் பிரவுசிங்' (Private browsing), இணைய யுகத்தில் இந்தச் சொற்கள் ஒன்றும் புதிதானவை அல்ல. 'இணையத்தில் ஒரு தரவைத் தேடும்போது அல்லது ஒரு குறிப்பிட்ட வலைத்தளத்தை அணுகும்போது, பிரவுசரில் இந்த வசதியைப் பயன்படுத்தினால் நாம் எதைத் தேடுகிறோம் அல்லது எந்த வலைத்தளத்தைப் பார்க்கிறோம் என்பது ரகசியமாக இருக்கும்' - இதுவே பலரது புரிதலாக உள்ளது. ஆமாம், அது உண்மை தானே என நீங்கள் கூறினால், உங்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது.

கடந்த 2020ஆம் ஆண்டு கூகுள் நிறுவனம் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டது. பயனர்கள் தங்களது பிரவுசர்களில் 'இன்காக்னிடோ' (கூகுள் குரோம்) வசதியைப் பயன்படுத்தியபோதும் கூட, பயனர்களின் செயல்பாட்டை கூகுள் தொடர்ந்து கண்காணித்ததாக குற்றம்சாட்டப்பட்டது.

ஆனால், பல பயனர்கள் 'பிரைவேட் மோட்' (Private mode) குறித்து தவறாகப் புரிந்து கொண்டிருந்தாலும், அந்த முறையில் இணையத்தைப் பயன்படுத்தும்போது சேகரிக்கப்படும் தரவுகள் குறித்துத் தாங்கள் வெளிப்படையாகவே இருந்ததாக கூகுள் தெரிவித்தது.

பின்னர் 2024-ஆம் ஆண்டு, இந்த வழக்கை தீர்க்கும் விதமாக கோடிக்கணக்கான தரவுகளை அழிக்கவும், பயனர்களைக் கண்காணிப்பதில் சில கட்டுப்பாடுகளை ஏற்கவும் கூகுள் நிறுவனம் ஒப்புக்கொண்டது.

கூகுள் நிறுவனத்தின் இந்த நடவடிக்கை அப்போது இணையத்தில் வைரலானது. பலரும் 'இன்காக்னிடோ மோட்' குறித்த சந்தேகங்களை எழுப்பினர்.

இன்காக்னிடோ அல்லது பிரைவேட் மோட் என்றால் என்ன?

இன்காக்னிடோ அல்லது பிரைவேட் வசதி என்பது பெரும்பாலான நவீன பிரவுசர்களில் காணப்படும் ஒரு அம்சமாகும். இது, கூகுள் குரோம்- இன்காக்னிடோ மோட், மொஸில்லா ஃபயர்ஃபாக்ஸ் மற்றும் சஃபாரி- 'பிரைவேட் பிரவுசிங்', மைக்ரோசாஃப்ட் எட்ஜ்- 'இன்பிரைவேட்' என பல பிரவுசர்களில் வெவ்வேறு பெயர்களில் உள்ளது.

'உங்கள் சாதனத்தைப் பயன்படுத்தும் பிற பயனர்களிடமிருந்து உங்கள் பிரவுசிங் செயல்பாட்டை மறைக்க இன்காக்னிடோ மோட் உதவும்.'- இதுவே கூகுள் அளிக்கும் விளக்கம்.

அதாவது, உங்கள் அலுவலகத்தின் ஒரு கணினியில் இருந்து பிரவுஸ் செய்கிறீர்கள் என்றால், அந்தக் கணினிக்கான அணுகல் பிறரிடமும் உள்ளது என்றால், அதில் என்ன பிரவுஸ் செய்கிறீர்கள் என்பதை பிற பயனர்களிடம் இருந்து மறைக்க இன்காக்னிடோ மோட் அல்லது பிரைவேட் பிரவுசிங் உதவும். அவர்கள் பிரவுசரின் 'ஹிஸ்டரி' (History) பக்கத்தில் சென்று பார்த்தாலும், உங்கள் பிரவுசிங் செஷன் (Session) தரவுகள் அதில் இருக்காது.

இன்காக்னிடோ மோட் ஒரு தற்காலிக பிரவுசிங் செஷனை உருவாக்குகிறது. பிரவுசிங் விண்டோவை (Window) மூடியவுடன் ஹிஸ்டரி, குக்கீகள் அல்லது கேச் (Cache) தரவுகள், லாக்-இன் தரவுகள் சேமிக்கப்படாது. அதேபோல, உங்களது பிரதான பிரவுசிங் செஷனின் தகவல்களை இதில் அணுக முடியாது.

'சிலர், பிரைவேட் பிரவுசிங் மூலம் தங்களது வங்கி பரிவர்த்தனைகளை கூட மேற்கொள்வார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், அந்த சாதனத்தில் மட்டுமே தரவுகள் சேமிக்கப்படாது. மற்றபடி, உங்களது இணைய சேவை வழங்குநரிடம் (ISP), அந்தத் தரவுகள் இருக்கும்.'



என்கிறார் இணையக் குற்றத் தடுப்பு வல்லுநர் முரளிகிருஷ்ணன் சின்னதுரை.

காரணம், உங்களது ஐபி முகவரி (IP Address) பிரைவேட் பிரவுசிங் முறையில் மறைக்கப்படாது. நீங்கள் உங்கள் சாதனத்தில் பிரைவேட் பிரவுசிங் மூலம் ஒரு குறிப்பிட்ட வலைத்தளத்தை அணுகினாலும் கூட, அது நீங்கள் தான் என்பது அந்த சாதனத்திற்கும், உங்கள் இணைய சேவை வழங்குநருக்கும் தெரியும் என்று குறிப்பிடுகிறார் அவர்.

ஐபி முகவரி என்பது இணையத்துடன் இணைக்கப்பட்ட ஒவ்வொரு சாதனத்திற்கும் ஒதுக்கப்பட்ட தனித்துவமான ஒரு அடையாள எண்ணாகும்.

'ஒரு அலுவலக கணினியில் நீங்கள் இன்காக்னிடோ பயன்படுத்தும்போது, அந்த அலுவலகத்தின் இணையத்தை நிர்வகிக்கும் குழுவுக்கும் (Network admin) அனைத்து விவரங்களும் தெரியும். அதேபோல, சட்ட விரோதமான விஷயங்களை பிரைவேட் பிரவுசிங் முறையில் தேடுவதும் நிச்சயம் பதிவாகும். தேவைப்பட்டால் அதை அரசு முகமைகள் அணுகக்கூடும்' என்கிறார் முரளிகிருஷ்ணன்.

'உங்கள் கணினி அல்லது சாதனத்தை இணையத்துடன் இணைக்க, ரூட்டர் (Router) வழியாக தான் செய்ய வேண்டும். ரூட்டர் மூலம், நீங்கள் பார்வையிடும் அனைத்து இணைய முகவரிகளையும் கண்காணிக்க முடியும். பிரைவேட் பிரவுசிங் பயன்படுத்தினாலும், அதைத் தடுக்க முடியாது'

அதேபோல, பிரைவேட் பிரவுசிங் மூலம் நீங்கள் தரவிறக்கம் (Download) செய்யும் விஷயங்கள், அது காணொளியோ அல்லது ஆவணங்களோ, அவை தானாக அழியாது என்பதையும் முரளிகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.

'அது உங்கள் கணினி அல்லது சாதனத்தில் தான் சேமிக்கப்பட்டிருக்கும். அதை நீங்களாக தான் அழிக்க வேண்டும். மற்றபடி ஒரு பிரைவேட் பிரவுசிங் செஷனை நீங்கள் மூடினால், தரவிறக்கம் குறித்த விவரம் மட்டுமே தானாக அழியும்' என்கிறார்.

'இன்காக்னிடோ என்பது ஒரு கவசமல்ல'

'நிச்சயமாக இன்காக்னிடோ மோட் என்பது ஒரு இணையக் கவசமல்ல, ஆனால் பலர் அப்படி நினைக்கிறார்கள்' என ஓர் ஆய்வு குறிப்பிடுகிறது.

'பல இணைய பயனர்கள் 'பிரைவேட் பிரவுசிங்' என்ற வார்த்தையைப் பற்றிய தவறான புரிதலையே கொண்டிருந்தார்கள். என்கிரிப்டட் (Encrypted) மின்னஞ்சலை அனுப்ப, தனது அடையாளத்தை மறைக்க அல்லது ஃபிஷிங் (Phishing) வலைப்பக்கத்தை அணுக அதைப் பயன்படுத்தலாம் என்று பலர் தவறாக நம்பினர். ஏனெனில் 'இன்காக்னிடோ பாதுகாப்பானது' என்ற தன்னிச்சையான உணர்வு அவர்களுக்கு இருந்தது' என அமெரிக்காவின் கோர்னெல் பல்கலைக் கழகத்தின் ஆய்வு ஒன்று குறிப்பிடுகிறது.

அதேபோல மற்றொரு ஆய்வு, 'இணைய சேவை வழங்குநர் மற்றும் தாங்கள் வேலை பார்க்கும் நிறுவனம் அல்லது அரசாங்கத்தால், தங்களது இணைய செயல்பாட்டை 'இன்காக்னிடோ' முறையில் கூட கண்காணிக்க முடியும் என்பதை பல இணைய பயனர்கள் உணரவில்லை' என்று குறிப்பிடுகிறது.

மேலும் அந்த ஆய்வில் கலந்துகொண்ட 27 சதவீதம் பேர் பிரைவேட் பிரவுசிங், வைரஸ்கள் மற்றும் மால்வேர்களுக்கு எதிரான பாதுகாப்பை வழங்குவதாக நம்பினர்.

பிரைவேட் பிரவுசிங் உங்களை இணைய மோசடிகளில் இருந்து பாதுகாக்காது என்று முரளிகிருஷ்ணன் உறுதியாகச் சொல்கிறார்.

'நீங்கள் வழக்கமான பிரவுசிங்கில் ஒரு மோசடி இணைப்பைக்ளிக் செய்தால் என்ன பாதிப்பு ஏற்படுமோ அதேதான், பிரைவேட் பிரவுசிங் முறையிலும்' என்கிறார் அவர்.

'அதேபோல இணைய கண்காணிப்பிலிருந்தும் உங்களை அது பாதுகாக்காது. எளிதாகச் சொல்வதென்றால், நீங்கள் ஒரு புத்தம் புதிய 'பிரவுசிங் செஷனை' அணுகுகிறீர்கள். ஒருமுறை அதை மொத்தமாக மூடிய பிறகு, அந்த சாதனத்தில் மட்டும் நீங்கள் என்ன பார்த்தீர்கள் என்பது இருக்காது.'

'உதாரணமாக நீங்களும் உங்கள் மனைவியும் ஒரே சாதனத்தை பயன்படுத்துகிறீர்கள். நீங்கள் உங்கள் மனைவிக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று தேடியுள்ளீர்கள், ஆனால் அது உங்கள் மனைவிக்கு தெரியவேண்டாம், திடீரென பரிசைக் கொடுத்து அவரை ஆச்சரியப்படுத்தலாம் என்ற திட்டம் இருந்தால், இந்த பிரைவேட் பிரவுசிங் உங்களுக்கு உதவும்.' என்கிறார் அவர்.

இது தவிர,

(ஒரு செஷனில்) தேடலின் அடிப்படையில் காட்டப்படும் தனிப்பயனாக்கப்பட்ட விளம்பரங்களை நீங்கள் விரும்பவில்லை என்றால்,

குக்கீகள்/கேச் தரவுகளை நீங்கள் விரும்பவில்லை என்றால்,

ஒரே சமயத்தில் இரண்டு ஜிமெயில் கணக்குகளில் லாக்-இன் செய்ய வேண்டும் என்றால் (அல்லது லாக்-இன் தேவைப்படும் வேறு தளங்கள்),

அப்போது பிரைவேட் பிரவுசிங் உங்களுக்கு உதவும் என முரளிகிருஷ்ணன் கூறுகிறார்.

'இப்போது பலரும் பிரைவேட் பிரவுசிங் முறைக்கு மாற்றாக விபிஎன் (VPN) பயன்படுத்துகிறார்கள். பெரிய மென்பொருள் நிறுவனங்கள், தங்களது அன்றாட பணிகளுக்காக அதை முறையான பாதுகாப்புடன் பயன்படுத்துகின்றன. ஆனால், தனிநபர்கள் விபிஎன் பயன்படுத்தும்போது அதில் சில ஆபத்துகள் உள்ளன. எனவே கவனம் தேவை.' என்கிறார் அவர்.

'எனவே அடுத்த முறை இன்காக்னிடோ விண்டோவைத் திறக்கும்போது, இணையத்தில் முழு ரகசியம் என்பது இல்லை; விழிப்புணர்வுடன் இருப்பதே நம் கையில் உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.'

**– இது, பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு**

**நன்றி: பிபிசி**

உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# ஜூஸியான கலாகண்ட் செய்வது எப்படி?



முறுக்கு, அதிரசம், குலாப் ஜாமூன், லட்டு என எண்ணெய் பலகாரங்கள் நிறைய செய்திருப்போம், சாப்பிடிருப்போம். ஆனால் பலரும் இந்தியாவின் பிரபலமான இந்த இனிப்பை மறந்திருப்போம். சுவையான கலாகண்ட் செய்வது எப்படி என பார்ப்போம். கலாகண்ட் செய்வதற்கு பால், பன்னீர், நெய், சர்க்கரை, ஏலக்காய் உள்ளிட்டவை அவசியம். இதில் பன்னீரை கடையில் வாங்கமல், வீட்டில் இருக்கும் பாலை வைத்து நாமே செய்தால் கலாகண்ட் நன்றாக வரும்.

தேவையான பொருட்கள்...

பால் - 1 லிட்டர்

நெய் - 1/2 கப்

சர்க்கரை - 1 கப்

குங்குமப்பூ - (வேண்டுமென்றால்)

ஏலக்காய்த்தூள் - 1 டீஸ்பூன்

பிஸ்தா - (வேண்டுமென்றால்)

பாதாம் - (வேண்டுமென்றால்)

எலுமிச்சை பழச்சாறு - 1 பழம்

ருசிக்க தயாராக கலாகண்ட் இனிப்பு

செய்முறை

முதலில் பன்னீர் செய்வது எப்படி என பார்ப்போம். பன்னீர் செய்வதற்கு 500மிலி பால் எடுத்துக்கொள்வோம். பாலை நன்கு காய்ச்சவேண்டும். பால் நன்கு கொதித்தபின்பு, அதில் ஒரு எலுமிச்சைப்பழத்தை பிழிந்து விடவேண்டும். பால் முழுவதுமாக திரிந்து வரும்வரையில் அடுப்பை நிறுத்தவேண்டாம். பின்னர் தண்ணீர் தனியாக பிரிந்த உடன், அதனை எடுத்து வடிகட்டி கொள்ளலாம். பின்னர் பன்னீர் மீது தண்ணீர் ஊற்றவேண்டும். அப்போதுதான் பன்னீரில் எலுமிச்சைப் பழத்தின் புளிப்பு தெரியாது.

பின்னர் ஒரு லிட்டர் பால் எடுத்துக்கொண்டு, அதனை நன்கு கொதிக்கவிடவேண்டும். கொதிக்கும்போது கிண்டிவிட்டுக் கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் பாத்திரத்தில் அடிபிடிக்காது. பால் நன்கு வற்றி, க்ரீம் பதத்திற்கு வரும்வரை கிண்டவேண்டும். இந்தப்பதம் வரும்போதே பாலில், செய்து வைத்த பன்னீரை எடுத்துக் கொட்டி கிண்டுங்கள்.

தொடர்ந்து கிண்டியபிறகு பாலில் உள்ள ஈரம் வற்றியபிறகு, அதில் அரை கப் நெய் ஊற்றவேண்டும். நெய் ஊற்றி 5 நிமிடம் நன்றாக கிண்டியபின், 1 கப் வெள்ளை சர்க்கரையை சேர்க்க வேண்டும். இனிப்பு கூடுதலாக வேண்டுமென்றால், கூடுதல் சர்க்கரை சேர்த்துக்கொள்ளலாம்.

கடைசியில் ஏலக்காய்துாள் போட்டு கிண்டவேண்டும். பின்னர் கலாகண்ட் நன்கு கெட்டி பதத்திற்கு வந்தபின் இறக்கிக்கொள்ளலாம். நன்கு நிறம்வேண்டும் என்பவர்கள் கூடுதல் நேரம்வைத்து கிண்டலாம். பின்னர் ஒரு பாத்திரத்தில் நெய் தடவி, கலாகண்ட் கலவை சூடாக இருக்கும்போதே அதனை கொட்டி அழுத்திவிடவேண்டும். வேண்டுமானால் அதன்மேல் முந்திரி, பாதாம், என உங்களுக்கு பிடித்த பருப்பு வகைகளை சேர்த்துக்கொள்ளலாம். ஒரு இரண்டுமணிநேரம் கழித்து கலாகண்ட் கலவையை எடுத்துப் பார்த்தால் நன்கு ஆறி, கெட்டியாக இருக்கும். அருமையான கலாகண்ட் இனிப்பு தயார்.



உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்





www.kathiroli-
media.ca

# சைவத்தில் புதுச்சுவை ‘பனீர் பொளிச்சது’ – சாப்பிட மீன் மாதிரியே இருக்கும்!

இந்திய சைவ உணவுகளில், பனீரின் முக்கியத்துவத்தை யாராலும் மறுக்க முடியாது. புரதச்சத்தின் இருப்பிடமான இந்தப் பாலாடைக்கட்டி, பலவகை குழம்புகள் மற்றும் வறுவல்களில் சுவையைக் கூட்டுகிறது. அந்த வரிசையில் கேரளாவின் பிரபலமான 'மீன் பொளிச்சது' பாணியில், சைவப் பிரியர்களுக்காக பிரத்யேகமாக தயாரிக்கப்படுவதுதான் 'பனீர் பொளிச்சது' என்கிற வித்யாசமான சைவ உணவு. வாழை இலையின் தனித்துவமான நறுமணம், சின்ன வெங்காயம் மற்றும் பாரம்பரிய மசாலாப் பொருட்களின் கலவையில், பனீர் மென்மையாக வேகவைக்கப்பட்டுப் பரிமாறப்படும் இந்த உணவு, சுவை மற்றும் ஆரோக்கியத்தின் சரியான கலவையாகும். 'பனீர் பொளிச்சது' செய்முறையை, பிரபல செஃப் கதிர்வேல் நமக்காக செய்து காட்டியுள்ளார்.




மசாலா தயாரித்தல்

★ ஒரு தவாவில் தேங்காய் எண்ணெய் விட்டு சூடானதும், கடுகு, உடைத்த உளுந்து, வெந்தயம் சேர்த்து வெடிக்க விடவும். வெடித்ததும், நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய், பூண்டு சேர்த்து, பொன்னிறமாக மாறாமல் ஓரளவுக்கு வேக வைக்கவும். ★ நறுக்கிய சின்ன வெங்காயத்தைச் சேர்த்து, சீக்கிரம் வதங்க உப்பு சேர்த்து, மூடிபோட்டு 30-40 வினாடிகள் வேக வைக்கவும். சின்ன வெங்காயம் வதங்கியதும், 2 டீஸ்பூன் தண்ணீர் சேர்த்து, மசாலா பைண்டிங் கன்சிஸ்டன்சிக்கு வர நன்கு கிளறவும்.

★ இந்த நிலையில், நறுக்கிய கருவேப்பிலை சேர்த்து வதக்கவும். கருவேப்பிலையை முழுதாகப் போடாமல் நறுக்கிச் சேர்ப்பது நல்லது. ★ பிறகு தனியா தூள், மிளகாய் தூள், மஞ்சள் தூள் சேர்த்து, ஒரு எலுமிச்சம்பழம் பிழிந்து மசாலாவை மீண்டும் மூடிபோட்டு 30 வினாடிகள் வேக வைக்கவும்.

★ மசாலா ரெடி ஆனதும், அடுப்பை அணைத்து, சிறிது சூடு ஆறிய பிறகு, வாசனைக்காக ஒரு சிட்டிகை சீரகப்பொடி மற்றும் காரத்துக்காக ஒரு சிட்டிகை மிளகுப் பொடி சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

பனீர் பொளிச்சது செய்முறை

★ வாழை இலையைச் சுத்தம் செய்து, இலையின் மேல் சிறிதளவு ஏற்கனவே நாம் தயாரித்து வைத்துள்ள மசாலாவைத் தடவவும். ★ பிறகு வாழை இலையின் மேல், 2 மி.மீ தடிமனில் நறுக்கிய பனீர் துண்டை வைத்து, அதன் இருபுறமும் மசாலாவை மீண்டும் நன்றாகத் தடவவும். ★ மசாலா தடவிய பனீரை வாழை இலையில் வைத்துப் பொட்டலமாகச் சுற்றவும்.



★ பிறகு ஒரு தவா அல்லது தோசைக் கல்லைச் சூடாக்கி, அதில் சற்றே எண்ணெய் விட்டு, வாழை இலையால் சுற்றப்பட்ட பனீரை வேக வைக்கவும். ★ மடிப்புப் பகுதி முதலில் கீழே இருக்கும்படி வைத்து, இலை ஒட்டிப் பிடிப்பதற்காக, மூடி போட்டு ஒரு பக்கம் 2 நிமிடங்கள் வேக வைக்கவும். ★ பின்பு திருப்பிப் போட்டு, அடுத்த பக்கமும் 2 நிமிடங்கள் வேக வைக்கவும். இப்போது வாழை இலை கிரிஸ்பியாக மாறி பனீர் பொளிச்சது தயாராகிவிடும்.

★ பனீர் பொளிச்சதைச் சூடாகப் பரிமாறவும். வாழை இலையைத் திறந்து சாப்பிடும் போது வரும் வாசம் கூடுதல் சுவையைக் கொடுக்கும். கூடவே, ஆனியன் ரிங்ஸ் மற்றும் தேவைப்பட்டால் எலுமிச்சை சாறு சேர்த்துச் சாப்பிடலாம்.

ஆரோக்கிய நன்மைகள்

★ பனீர் உயர்தரப் புரதத்தின் சிறந்த சைவ மூலமாகும். தசை வளர்ச்சி, திசுக்கள் பழுது பார்த்தல் மற்றும் ஒட்டுமொத்த உடல் பராமரிப்புக்கு இது சிறந்தது. குறிப்பாக இதில் கால்சியம் நிறைந்துள்ளதால், எலும்புகள் மற்றும் பற்களுக்கு வலு சேர்க்கும். மேலும், இது பசியைக் குறைத்து, உடல் எடையைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. ஒமேகா-3 மற்றும் ஒமேகா-6 கொழுப்பு அமிலங்கள் இதில் உள்ளதாகவும் அறியப்படுகிறது.

★ சின்ன வெங்காயத்தில் உள்ள சத்துக்கள் இதயம் மற்றும் நோயெதிர்ப்புச் சக்திக்கு நன்மை பயக்கும். இது உடலுக்குத் தேவையான நல்ல கொழுப்பை வழங்குவதோடு, மூளையின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் நல்லது. குறிப்பாக தக்காளி சேர்க்காமல் சின்ன வெங்காயத்தை மட்டும் பயன்படுத்துவது இந்த உணவின் பாரம்பரிய முறையையும், ஆரோக்கியத்தையும் கூட்டுகிறது.

★ வாழை இலையில் சமைத்துச் சாப்பிடும்போது, அதில் உள்ள பாலிஃபீனால் என்னும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் உணவில் கலந்து, அதன் மூலம் ஆரோக்கியப் பலன்கள் கிடைப்பதாக நம்பப்படுகிறது.




உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# அமெரிக்காவில் எரிமலை வெடிப்பு - 400 அடி உயரத்திற்கு வெளியேறிய நெருப்பு குழம்பு



அமெரிக்காவின் ஹவாய் தீவில் உள்ள தேசிய பூங்காவில் கிலாவியா எரிமலை அமைந்துள்ளது. இந்த எரிமலை, உலகிலேயே மிகவும் சீற்றத்துடன் காணப்படும் எரிமலைகளில் ஒன்றாக அறியப்படுகிறது. இந்நிலையில், கிலாவியா எரிமலை 25-ந்தேதி(நேற்று) மதியம் 2.30 மணியளவில் வெடித்து சிதறியது.

எரிமலை வெடிப்பை தொடர்ந்து, அதில் இருந்து நெருப்பு குழம்பு வெளியேறி வருகிறது. இந்த நெருப்பு குழம்பானது சுமார் 400 அடி உயரம் வரை மேல்நோக்கி எழுந்தது. அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தொடர்ந்து இந்த எரிமலையின் செயல்பாடுகளை தீவிரமாக கண்காணித்து வருகிறது.

இதற்கு முன்பு கடந்த காலங்களில் கிலாவியா எரிமலையில் வெடித்தபோது சுமார் 20 ஆயிரம் அடி உயரம் வரை நெருப்பு குழம்பு வெளியேறி உள்ளதாக கூறப்படுகிறது. தற்போது காற்றின் வேகம் காரணமாக எரிமலையில் இருந்து வெளியேறும் சாம்பல் உள்ளிட்டவை தென்மேற்கு திசை நோக்கி செல்ல வாய்ப்புள்ளதாகவும், தற்போது வரை ஹவாய் விமான நிலையத்தில் விமான போக்குவரத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




## உலக செய்திகள்



# மேற்கு ஆப்பிரிக்காவின் கினியா-பிசாவு நாட்டில் ஆட்சியை ராணுவம் கைப்பற்றியது

மேற்கு ஆப்பிரிக்க நாடான கினியா-பிசாவு குடியரசில் அதிபராக உமரோ சிசோகோ எம்பலோ செயல்பட்டு வந்தார். அங்கு கடந்த 23-ந்தேதி அதிபர் தேர்தல் நடந்தது. இதில் ஆளுங்கட்சி சார்பில் உமரோ சிசோகோவும், எதிர்க்கட்சி வேட்பாளராக பெர்னாண்டோ டியாசும் போட்டியிட்டனர். தேர்தல் தேர்வு இன்று அறிவிக்கப்பட இருந்த நிலையில் எதிர்க்கட்சி வேட்பாளர் தகுதி நீக்கம் செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியானது.

இதையடுத்து அந்நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. இந்த நிலையில் கினியா-பிசாவுவில் ராணுவம் திடீரென்று புரட்சியில் ஈடுபட்டது. அதிபர் மாளிகை மற்றும் தேர்தல் ஆணைய அலுவலகத்துக்குள் ஆயுதங்களுடன் புகுந்த ராணுவத்தினர் அவற்றை தங்கள் கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்தனர். மேலும் அங்கு துப்பாக்கி சூடு நடந்ததாக தகவல் வெளியானது. நாட்டை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு ராணுவம் அறிவித்தது. நாடு முழுவதும் முழு ஊரடங்கு அமல்படுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. இதற்கிடையே அதிபர் உமரோ சிசோகோ எம்பலோவை ராணுவம் தடுப்பு காவலில் வைத்துள்ளது.

# நைஜீரியாவில் கிளர்ச்சியாளர்கள் பிரச்சினையால் வரலாறு காணாத உணவு பஞ்சம் - ஐ.நா. எச்சரிக்கை



ஆப்பிரிக்கநாடானநைஜீரியாவில் கிளர்ச்சியாளர்கள், ஆயுதம் ஏந்திய பயங்கரவாதிகள் உள்ளிட்ட பல்வேறு குழுவினர் பொதுமக்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர். குறிப்பாக வடக்கு நைஜீரியாவில் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் அதிகரிப்பால் அங்கு உணவு தட்டுப்பாடு உச்சத்தை எட்டியுள்ளது.

இந்த ஆண்டிற்குள் அங்கு 3 கோடியே 50 லட்சம் மக்களுக்கு உணவு தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும், இதனால் வரலாறு காணாத உணவு பஞ்சம் ஏற்படக்கூடும் என்றும் ஐ.நா. உலக உணவு திட்டத்திற்கான அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அங்குள்ள வளங்கள் டிசம்பருக்குள் தீர்ந்துவிடும் என்று கூறப்படும் நிலையில், தற்போது சுமார் 60 லட்சம் பேருக்கு குறைந்தபட்ச உணவு கூட கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நிதி நெருக்கடியால் பல ஊட்டச்சத்து திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால், குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீருக்குள் வைத்த பொறியில் சிக்கிய நண்டை லாவகத்துடன் இரையாக்கிய ஓநாய்

கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் அமைந்த கடற்கரை பகுதிகளில் ஐரோப்பிய பச்சை நண்டுகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்டது. அதனால், நண்டுகளை கட்டுப்படுத்த அந்த பகுதி மக்கள் சிலர் பொறிகளை அமைத்து, அவற்றை பிடித்து, அழிக்க முடிவு செய்தனர்.

ஆனால், அந்த பொறிகள் அடிக்கடி சேதமடைந்து காணப்பட்டன. எதனால் இப்படி ஆகிறது? என அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அது கரடி அல்லது ஓநாயின் வேலையாக இருக்கும் என முதலில் சந்தேகிக்கப்பட்டது. ஆனால், நீரின் உள்ளே அவற்றால் மூழ்கி செல்ல முடியாது.

அதனால், அந்த பொறிகளை சேதமடைய செய்தது என்னவாக இருக்கும்? என்பது தெரியாமல் இருந்தது. இதனை தொடர்ந்து அவற்றை கண்டறிய முடிவானது. இதற்காக, நியூயார்க் கல்லூரியின் உதவி பேராசிரியர் கைலே ஆர்டெல்லே தலைமையிலான ஆய்வாளர்கள் கேமராக்களை அமைத்து, கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அது சீல் அல்லது நீர் நாயாக இருக்க கூடும் என அவர்கள் நினைத்தனர். ஆனால், கேமராவில் ஓநாய் இருப்பது தெரிந்தது. முதன்முறையாக, மனிதர்கள் அமைத்த பொறியில் சிக்கிய நண்டை, ஓநாய் ஒன்று தன்னுடைய இரையாக மாற்றிய சம்பவம் நடந்துள்ளது.

அது, பொறியுடன் இணைந்திருந்த மிதவையை நீருக்குள் இருந்து வெளியே கொண்டு வந்து



மணலில் போட்டது. அதனுடன் இணைக்கப்பட்டு இருந்த கயிற்றையும் இழுத்தது. இதன் பின்னர், நீரில் இருந்த பொறியை வெளியே கொண்டு வந்து, அதில் சிக்கியிருந்த நண்டை கவ்வி சென்றது.

இதுபற்றிய வீடியோ ஒன்றும் வைரலாகி வருகிறது. எனினும், பொறி இருக்கிறது என்பதும், அதில் நண்டு உள்ளது என்றும் ஓநாய்களுக்கு எப்படி தெரிய வந்தது? என ஆய்வாளர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டு உள்ளது. அதனை நீருக்குள் இருந்து எப்படி வெளியே இழுத்து கொண்டு வர வேண்டும்? என ஓநாய்களுக்கு தெரிந்திருப்பதும் அவர்களுக்கு ஆச்சரியம் தந்துள்ளது. இதற்கான பதிலுக்காக ஆராய்ச்சி தொடர்ந்து நடத்தப்படுகிறது.

# மனித குலத்திற்கு தங்கத்திற்கு பின்னால் ஒளிந்திருக்கும் ஆபத்து; அதிர்ச்சி தகவல் வெளியீடு

பொதுவாக மஞ்சள் உலோகம் என வர்ணிக்கப்படும் தங்கம், அழகு நகைகளாக உருமாற்றம் செய்யப் படும்போது அதனை வேண்டாம் என யார் கூற போகிறார்கள்? நகை என்றால் பெண்களுக்கு அலாதி பிரியம் ஏற்படும். அவற்றை அணி ந்து பார்ப்பதுடன், மற்ற வர்களும் பார்த்து பொறாமை கொள்ளும் அளவுக்கு நடந்து கொள்ள ஆசைப்படுபவர்களும் உண்டு.

ஆண்களும் அதனை மோதிரம், சங்கிலி உள்பட பல வகைகளில் பயன்படுத்தி கொள்கின்றனர். ஆபரணங்களாக அணிந்து அழகு பார்க்க உதவும் இந்த தங்கம் எப்படி உருவாகிறது என்று தெரிந்தால் அது சற்றே அதிர்ச்சியான தகவலை தருகிறது. தங்க சுரங்கத்தில் இருந்து தங்கம் பிரித்தெடுக்கப்படுகிறது. அப்போது, தண்ணீர் மாசுபாடு, காடுகள் அழிப்பு, மண் அரிப்பு, காற்று மாசுபாடு ஏற்படுவதுடன், உலோக நச்சுகள் இந்த மண்ணில் கலந்து ஆபத்து காரணிகளை ஊக்கு விக்கின்றன.

தங்க சுரங்கங்கள், பாதரசம் மற்றும் சயனைடு போன்ற ரசாய னங்களை பயன்படுத்துகின்றன. அவை பின்னர் ஆறுகளிலும், நிலத்தடி நீரிலும் கசிந்து ஊடுருவும் வாய்ப்பு காணப்படுகிறது.

இந்த பாதரசம் நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் மனித சுகாதா ரத்திற்கு பெரும் தீங்கு விளைவிக்க கூடியது. சமீபத்திய ஆய்வுகளின்படி, ஆண்டுதோறும் 1,400 டன் பாதரசம் வெளிவிடப்படுகிறது. எனினும், தங்கம் பிரிப்புக்கான பாதுகாப்பான முறைகளின் வழியேயும், நச்சு களை தவிர்க்க முடியும். கழிவு நீரை வெளியிடுவதற்கு முன் முறையாக அவற்றை சுத்திகரித்து பின் வெளியிட்டு, மாசுபாட்டை குறைக்கலாம்.

தங்க சுரங்கங்களால் காடுகள் அழிக்கப்படுகின்றன. சுற்றுச் சூழலியலுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அமேசான் காடு களில் மட்டுமே சட்டவிரோத தங்க சுரங்கங்களால் சமீபத்தில் 4,200 ஹெக்டேர் மழைக்காடுகள் அழிக்கப்பட்டு விட்டன என அதிர்ச்சி தகவல் ஒன்று கூறுகிறது. மரங்கள் இழப்பால், மண் அரிப்பு அதிகரிப்பதுடன், கார்பன் வெளி யீடும் கூட அதிகரிக்கிறது.



எனினும், சீரான பாதுகாக்கப்பட்ட மண்டலங்களில், பொறுப்புடன் செயல்பட கூடிய தங்க சுரங்கங்களை ஊக்குவித்து இவற்றை கட்டுப்படுத்தலாம். அரசு களும், நிறுவனங்களும் அதற்காக நில நிர்வாக கொள்கைகளை அறிமுகப்படுத்தி வருகின்றன.

இந்த தங்க சுரங்கங்களுக்காக தோண்டப்படும் குழிகளும், வீணாக விடப்படும் பகுதிகளும், வளம் நிறைந்த மேல் மண்ணை அகற்றி விடும் ஆபத்து உள்ளது. நில உற்பத்தியை குறைக்கும் வகையிலான செயல்களும் நடக் கின்றன. ஆண்டுதோறும் 20 சதவீதத் திற்கும் கூடுதலான மண் அரிப்பு விகிதங்களும் காணப்படுகின்றன என சில சுரங்கம் சார்ந்த தளங்களின் அறிக்கை அதிர்ச்சி தெரிவிக்கின்றது.

ஆனால்கூட, மண்ணரிப்புதடுப்பு நடவடிக்கைகளான, காய்கறிகளை பயிரிடுதல் உள்ளிட்டவற்றால் இவற்றை தடுக்கலாம். குழிகளை மீண்டும் மண்ணால் நிரப்புதல் மற்றும் தங்க சுரங்க நிலங்களை மீட்டெடுப்பது, மண்ணின் தன்மை இழப்பை தாமதப்படுத்துகிறது.

சுரங்க நடவடிக்கைகளால், தூசு பரவல் மற்றும் காற்று சார்ந்த மாசுபாடு ஏற்பட்டு, அருகேயுள்ள சமூக மக்களின் சுகாதாரம் மற்றும் வனவாழ் உயிரினங்களும் பாதிப்பை எதிர்கொள்கின்றன. தங்க சுரங்கங்களில் வெடிப்பு நிகழ்த்தப் படும்போது, விலங்குகள் அச்சத்தில் ஓடி விடுகின்றன.

எனினும், நீர் தெளிப்பு மற்றும் செடி, கொடி மற்றும் மரங்களை வளர்ப்பது உள்ளிட் டவற்றால் தூசு கட்டுப்பாடுகளை மேற்கொள்ளலாம். வெடிப்புக் கான கால அளவை வரைமுறைப் படுத்தலாம். இடையூறுகளை குறைக்க ஒலி தடுப்பு சாதனங்களை பயன்படுத்தலாம்.

சுரங்கங்களில் இருந்து தங்கம் பிரித்தெடுக்கும்போது வெளியிடப்படும் பாதரசம், உணவு சங்கிலியில் சேர்கிறது. இது சுரங்க தொழிலாளர்கள் மற்றும் குடியிருப்புவாசிகளை வெகுவாக பாதிக்கிறது. பாதரச வாயுக்கள், நரம்பு மற்றும் நரம்பு செல்கள் மற்றும் சுவாச பாதிப்புகளை ஏற்படுத்தும் திறன் பெற்றது.

அதனால், பாதரசத்தின் தீங்குளை பற்றி சுரங்க தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். வேறு வழிகளை பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். உலகளவில் பாதரச பயன்பாட்டை குறைக்கும் நோக்கில், மினமதா மாநாடு உள்ளிட்ட சர்வதேச ஒப்பந்தங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதுபோன்று மனித குலத்திற்கும், பிற உயிரினங் களுக்கும் வாழ்வியல் சார்ந்த ஆபத்துகளை ஏற்படுத்த கூடிய தங்க சுரங்கங்களை பற்றிய அதிர்ச்சியான விசயங்கள், நமக்கு எடுத்துரைப்பது என்னவென்றால், அழகுக்கு பின்னால் பெரும் ஆபத்து உள்ளது என்ற தகவலையே சுட்டி காட்டுகிறது.

இந்தியாவில் நாள்தோறும் தங்கம் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்வதும், பின்னர் குறைவதும் என போக்கு காட்டி வரும் சூழலில், அதன் உற்பத்திக்கு பின்னால் இவ்வளவு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுத்த கூடிய காரணிகளும், விசயங்களும் ஒளிந்துள்ளன. அழகுக்கு பின்னால் ஆபத்து என இதனைதான் கூறுகிறார்கள் போலும். ஆனாலும், நம் மக்கள் தங்க நகைகளை பயன்படுத்துவதில் தனி கவனம் செலுத்தியே வருகின்றனர்.

அதற்கான விலை பணம் என்ற அளவில் மட்டும் இல்லாமல், மனிதன், விலங்கினங்களின் உயிரும் அதற்கான விலையாக மாறுகிறது என்ற உண்மையையும் மறைப்பதற்கோ அல்லது மறுப்பதற்கோ இடமில்லை.

# மற்றவர்கள் குறை கூறுவதால் விரக்தியா..? இந்த விஷயத்தை கவனத்தில் கொள்ளுங்கள்..!

நம்முடைய வாழ்க்கையில் பலர் நம்மிடமிருக்கும்குறைகளைசுட்டிக் காட்டுவதிலேயே ஆர்வமாக இருப்பார்கள். அதில் சிலரே அந்த குறைகளை திருத்துவதற்கு உதவுவார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் யாருடைய கருத்தை எடுத்துக்கொள்ள வேண்டும், யாருடைய கருத்தை நிராகரிக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம்.

ஒரு ஊரில் பிரபலமான ஓவியர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தான் வரையக்கூடிய ஓவியம் உண்மையிலேயே நன்றாக தான் இருக்கிறதா? என்பதை தெரிந்துகொள்ள விரும்பினார். இதற்காக ஒரு பிசியான சாலை யில் அவருடைய ஓவியத்தை வைத்துவிட்டு, ‘இதில் ஏதேனும் குறையிருந்தால் எனக்கு தெரியப் படுத்துங்கள்’ என்று துண்டு பேப்பரில் எழுதிவைத்து விட்டு வந்துவிட்டார்.

அன்று மாலை அந்த ஓவியர் சாலையில் வைத்த ஓவியத்தை பார்க்க வரும்போது, அதில் மக்கள் நிறைய குறைகளைக் கண்டுப் பிடித்து எழுதி வைத்திருந்தார்கள். இதைப் பார்த்த ஓவியரின் மனம் சுக்கு நூறாக உடைந்துப் போகிறது. அதிலிருந்து ஓவியமே வரையக்கூடாது என்ற முடிவுக்கு வந்து ஓவியம் வரைவதையே நிறுத்தி விடுகிறார்.

இதைப் பார்த்து வருத்தமடைந்த ஓவியரின் தாய், அவரிடம் சென்று, ’எனக்காக ஒரேயொரு ஓவி யம் வரைந்து அதை அதே இடத் தில் வைத்துவிட்டு வா! ஆனால் இந்தமுறை நான் சொல்வது போல துண்டுச்சீட்டில் எழுதிவைக்க வேண்டும்’ என்று சொல்கிறார். இதைக்கேட்ட ஓவியரும் அதைப் போலவே செய்கிறார். ‘இந்த ஓவியத்தில் குறை கண்டுபிடிப்போர் அதை திருத்திவிட்டு செல்லவும்’ என்று எழுதி வைத்தார்.

அன்று மாலை அந்த ஓவியத்தை வந்து பார்க்கும்போது அது வைத்துவிட்டு செல்லும்போது எப்ப டியிருந்ததோ அப்படியே இருந்தது. யாருமே அந்த ஓவியத்தில் எந்த குறையும் கண்டுபிடிக்கவில்லை.

இப்போது அந்த ஓவியரின் தாய் சொல்கிறார், ‘இந்த உலகத்தில் குறைகளைக் கண்டுப்பிடிக்க ஆயிரம் பேர் வருவார்கள்.



ஆனால், அதை திருத்த ஒரு சிலராலேயே முடியும். குறை சொல் பவர்கள் சொல்லிக் கொண்டே தான் இருப்பார்கள். அவர்களின் கருத்தையெல்லாம் நாம் எடுத்துக் கொண்டு மனம் நொந்துப் போகக்கூடாது’ என்று கூறினார்.

இந்த கதையில் வரும் தாய் சொல் வதும் சரிதானே..! நம் வாழ்வில் குறை சொல்பவர்களெல்லாம் அதை திருத்த நமக்கு உதவுவதில் லையே? பிறகு ஏன் அந்த எதிர்மறை கருத்துகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்? நமது முன்னேற்றத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையிலான கருத்துக் களுக்கு மட்டுமே மதிப்பு அளிக்கவேண்டும். இதேபோல் மற்றவர்களை குறை கூறுவதையும் நிறுத்த வேண்டும்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

# இந்திய செய்திகள்

## அசாமில் பலதார திருமண தடை மசோதா நிறைவேற்றம்



கவுகாத்தி: முதல் திருமணத்திலிருந்து சட்டப்பூர்வமாக விவாகரத்து பெறாமல், இரண்டாவது திருமணம் செய்து கொள்பவர்களுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கும் மசோதா அசாம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. பலதார திருமண தடை சட்டத்தில் இரண்டாவது திருமணம் செய்து கொள்வதற்காக முதல் திருமணத்தை மறைப்பவர்களுக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், கடுமையான அபராதமும் விதிக்கப்படும்.

தொடர்ந்து குற்றத்தில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு இரு மடங்கு தண்டனை விதிக்கப்படும். அத்தகைய திருமணங்களைச் செய்துவைப்பவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், ரூ.1.5 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும். மேலும் பலதார மணம் செய்பவர்கள் அரசு வேலைக்கு தகுதியற்றவர்கள். அரசு நிதிஉதவி, மானியம் அவர்களுக்கு வழங்கப்படாது. பஞ்சாயத்து உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் போன்ற எந்தவொரு தேர்தலிலும் அவர்கள் போட்டியிட முடியாது.

அதேசமயம் இந்தச் சட்டம் அசாமின் ஆறாவது அட்டவணைப் பகுதிகளான பழங்குடியின மக்கள் வசிக்கும் போடோலாந்து, கர்பி அங்லாங் மற்றும் வடக்கு கச்சார் ஹில்ஸ் ஆகிய பகுதிகளுக்கு செல்லாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பேசிய முதல்-மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா, 'இந்தச் சட்டம் அனைத்து மதத்தினருக்குமானது. சிலர் நினைப்பது போல முஸ்லிம்களுக்கு எதிரானதல்ல. வரும் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று நான் மீண்டும் முதல்-மந்திரியானால், பொது சிவில் சட்டத்தை கொண்டு வருவேன். இது இந்த அவைக்கு நான் அளிக்கும் உறுதிமொழி' என்றார்.

## ரஷிய அதிபர் புதின் 4-ந்தேதி இந்தியா வருகை

ரஷ்ய அதிபர் புதின் 2 நாட்கள் அரசு முறை சுற்றுப்பயணமாக வரும் டிசம்பர் 4-ந்தேதி இந்தியாவிற்கு வருகை தர உள்ளார் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தனது வருகையின்போது டெல்லியில் நடைபெறும் 23-வது இந்தியா-ரஷியா வருடாந்திர உச்சிமாநாட்டில் பிரதமர் மோடியுடன், ரஷிய அதிபர் புதின் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ''ரஷிய அதிபர் புதினின் வரவிருக்கும் அரசு முறை சுற்றுப்பயணம், இந்தியா மற்றும் ரஷியாவின் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யவும், 'சிறப்பு மற்றும் சலுகை பெற்ற மூலோபாய கூட்டாண்மை' குறித்த தொலைநோக்கு பார்வையை வலுப்படுத்தவும், பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்த கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவும் ஒரு வாய்ப்பை வழங்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடக அரசியலில் புயலை கிளப்பியுள்ள முதல்-மந்திரி பதவி விவகாரம்



முதல்-மந்திரி பதவி விவகாரம் கர்நாடக அரசியலில் புயலை கிளப்பியுள்ளது. இது தொடர்பாக துணை முதல்-மந்திரி டி.கே. சிவக்குமார் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது:-

'வேர்டு பவர் இஸ் வேர்ல்டு பவர்' (வார்த்தை பலம் உலக பலம்) ஆகும். ஒருவர் தனது வாக்கை காப்பாற்றுவது தான் உலகில் மிகப்பெரிய பலம் வாய்ந்தது. நீதிபதியாக இருந்தாலும் சரி, தலைவராக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி இந்த கருத்து பொருந்தும். யாராக இருந்தாலும் வாக்குப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. முதல்-மந்திரி சித்தராமையா காங்கிரஸ் அரசு அமைந்தபோது, 2½ ஆண்டுகளுக்கு பிறகு அதிகாரத்தை டி.கே.சிவக்குமாருக்கு விட்டுக் கொடுப்பதாக வாக்கு கொடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது. அவருக்கு இதை நினைவூட்டும் வகையில் டி.கே.சிவக்குமார் அந்த பதிவை வெளியிட்டுள்ளார். இந்த பதிவு போடுவதற்கு முன்பே நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியல் சாசன தின விழாவில் இதே கருத்தை கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது. பீகார் சட்டசபை தேர்தல் தோல்வி மற்றும் கர்நாடக முதல்-மந்திரி மாற்றம் தொடர்பாக டெல்லியில் நேற்று காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட குழு கூட்டம் நடைபெற்றது. இதையொட்டியும், தனக்கு முதல்-மந்திரி பதவியை மேலிட தலைவர்கள் வழங்க வலியுறுத்தியும் டி.கே. சிவக்குமாரின் இந்த கருத்தை பதிவிட்டதாக கூறப்படுகிறது. காங்கிரஸ் கட்சி வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

www.kathiroli-media.ca

## டெல்லி காற்று மாசு தொடர்பான வழக்கு: சுப்ரீம் கோர்ட்டில் வரும் 1-ந்தேதி விசாரணை



தலைநகர் டெல்லியில் குளிர்காலத்தில் காற்று மாசு அதிகரிப்பது வழக்கம். இந்த ஆண்டும் காற்று மாசு மிக அதிகமாகவே இருந்து வருகிறது. இதனை கட்டுப்படுத்த செயற்கை மழையை வர வைக்கலாம் என்ற யோசனையின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்ட திட்டம் தோல்வியில் முடிந்தது. அது பற்றிய மறு ஆய்வுகள் நடந்து வருகின்றன.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்தே டெல்லியில் காற்று மாசு மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகிறது. காற்றின் தரம் மிகவும் மோசமாகியுள்ளதால் மக்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். காற்றுமாசை கட்டுப்படுத்த ஆளும் பா.ஜ.க. அரசு போதிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என எதிர்க்கட்சியினர் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் டெல்லி காற்று மாசு தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் வரும் டிசம்பர் 1-ந்தேதி மீண்டும் விசாரிக்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான முறையீட்டை ஏற்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், காற்று மாசு பிரச்சினைகளை கண்டறிந்த நாம், அதற்கான தீர்வுகளையும் கண்டறிய வேண்டும் என்றும், இந்த விவகாரத்தில் மத்திய அரசு தீர்வுடன் வரும் என்று நம்பிக்கை உள்ளதாகவும் தெரிவித்தார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்

## பினராயி விஜயனுக்கு கொலை மிரட்டல்; கன்னியாஸ்திரி மீது வழக்குப்பதிவு

கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன் உள்ளாட்சி தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்பது குறித்த ஒரு சமூக வலைதள பதிவை செல்டன் எல் டி சோசா என்ற நபர் வெளியிட்டார். அந்த பதிவு குறித்த கமெண்ட் பகுதியில் பினராயி விஜயன் மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்த அழைப்பு விடுத்து ஒரு கருத்து பதிவிடப்பட்டது. இது குறித்து டெல்லியை சேர்ந்த வக்கீல் ஒருவர் திருவனந்தபுரம் சைபர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.



அதன் பேரில் விசாரணை நடத்தி கொச்சியை சேர்ந்த டீனா ஜோஸ் என்ற கன்னியாஸ்திரி மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். விரைவில் டீனா ஜோஸ் விசாரிக்கப்படுவார் என போலீசார் தெரிவித்தனர்.

கன்னியாஸ்திரி டீனா ஜோசின் மத சபை, 2009-ம் ஆண்டில் அவரது உறுப்பினர் பதவியை ரத்து செய்ததாகவும், மத உடை அணிவதை தடை செய்ததாகவும் கூறி உள்ளது. மேலும் அவரது செயல்கள் முற்றிலும் அவரது தனிப்பட்ட முடிவு என கூறி உள்ளது.

# பாபா வாங்கா கணிப்பு படி 2026-ல் உலகம் சந்திக்கப் போகும் ஆபத்தான 10 சம்பவங்கள்

உலகப்புகழ்பெற்றதீர்க்கதரிசிகள் என்று வரும் போது அனைவருக்கும் முதலில் நினைவிற்கு வருவது பாபா வாங்காதான். பாபா வாங்காவின் தீர்க்கதரிசனங்கள் இதுவரை உலகில் நடந்த பல முக்கிய சம்பவங்களை முன்கூட்டியே கணித்ததாக கூறப்படுகிறது. அதனால் தான் ஒவ்வொரு வருடம் பிறக்கும் போதும் உலகில் பெரும்பாலான மக்கள் அந்த ஆண்டிற்கான பாபா வாங்காவின் கணிப்புகள் என்னவாக இருக்கும் என்பது தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள்.

2026 ஆம் ஆண்டு பிறக்க இன்னும் ஒரு மாதமே இருப்பதால் அனைவரும் வரப்போகிற ஆண்டுக்கான பாபா வாங்காவின் கணிப்புகள் என்னவாக இருக்கும் என்பதை இணையத்தில் தேடிவருகின்றனர். 'பால்கன்ஸின் நோஸ்ட்ராடாமஸ்' என்று அழைக்கப்படும் பாபா வாங்காவின் 2026 ஆம் ஆண்டுக்கான திகைப்பூட்டும் கணிப்புகள் என்னென்ன என்று இந்த பதிவில் தெரிந்து கொள்ளலாம்.

உலகளாவிய மோதல்

இணையத்தில் பரவி வரும் சில கணிப்புகள் பாபா வாங்கா 2026 இல் தொடங்கப்போகும் ஒரு பெரிய அளவிலான போரை முன்னறிவித்ததாகக் கூறுகின்றன, இது பெரிய நாடுகளை உள்ளடக்கியதாகவும், உலகம் முழுவதும் பரவக்கூடும் என்றும் கூறுகின்றன. ஒருவேளை இது உண்மையாக இருந்தால், உலகளாவிய அரசியல் மற்றும் மக்கள் பாதுகாப்பில் அதன் தாக்கங்கள் மிகப்பெரியதாக இருக்கும். இருப்பினும், எந்த நாடுகள் இதில் பங்கேற்கும், எப்போது தொடங்கும் மற்றும் அது எவ்வாறு வெளிப்படுகிறது என்பது பற்றிய கணிப்பு தெளிவற்றதாக உள்ளது.

இயற்கை பேரழிவுகள் பூமியின் 7-8% சதவீத நிலப்பரப்பை அழிக்கும்

பாபா வாங்காவின் பிரபல கணிப்பின் படி, 2026 ஆம் ஆண்டில் பூகம்பங்கள், எரிமலை வெடிப்புகள் மற்றும் தீவிர காலநிலை மாற்றங்கள் ஏற்படக்கூடும், அவை பூமியின் நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்க பகுதியை (சுமார் 7-8 சதவீதம்) பாதிக்கலாம். பூமியில் இது போன்ற பெரிய பேரழிவுகள் தொடர்ந்து நடந்தாலும், பாபா வாங்காவின் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டுள்ள அளவு மற்றும் குறிப்பிட்ட எண்ணிக்கை சரிபார்க்கப்படவில்லை.



செயற்கை நுண்ணறிவின் ஆதிக்கம்

பாபா வாங்காவின் மற்றொரு கணிப்பு, 2026 ஆம் ஆண்டுக்குள் AI முக்கிய முடிவுகள், தொழில்கள் மற்றும் மனித வாழ்க்கையில் கூட ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும் நிலையை எட்டும் என்று கூறுகிறது. இது உலகம்முழுக்க உள்ள சமகால கவலைகளை பிரதிபலிக்கிறது. பாபா வாங்காவின் இந்த கணிப்பு நிஜமாவதற்கு அதிக வாய்ப்புள்ளதாகவே நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஏலியன்களுடனான முதல் தொடர்பு

2026 ஆம் ஆண்டில் மனிதர்கள் பூமியின் வளிமண்டலத்திற்குள் நுழையும் ஒரு பெரிய விண்கலம் மூலம் வேற்றுகிரகவாசிகளுடன் தொடர்பு கொள்வார்கள் என்று வாங்கா கணித்ததாக பரவலாகப் பரப்பப்பட்ட சில ஊடக அறிக்கைகள் கூறுகின்றன, குறிப்பாக அது 2026 நவம்பரில் நடக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த கணிப்பு முழுக்க முழுக்க ஊகத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டது மற்றும் இந்த கணிப்பை ஆதரிக்கும் அறிவியல் சான்றுகள் எதுவுமில்லை.

ரஷ்யாவிலிருந்து உலகளாவிய சக்தியாக உயரும் ஒரு புதிய தலைவர் உருவாகுவார்

பாபா வாங்காவின் கணிப்புகளின் சில விளக்கங்கள், 2026 ஆம் ஆண்டில் 'உலகின் இறைவன்' அல்லது உலக விவகாரங்களின் மாஸ்டர் என்று விவரிக்கப்படக்கூடிய ரஷ்யாவிலிருந்து ஒரு சக்திவாய்ந்த தலைவர் வெளிப்படுவார் என்று கூறுகின்றன. ஆனால் இது எப்போது நிகழும் என்று துல்லியமாக கூறப்படவில்லை.

உலகளாவிய பொருளாதார நெருக்கடி

ஊடகங்கள் உலகளாவிய ஒரு கடுமையான நிதி நெருக்கடியைப் பற்றி கணித்துள்ளது. உலக நாணய அமைப்புகளில் சரிவு அல்லது கூர்மையான திருத்தம், வங்கி தோல்விகள் மற்றும் 2026 இல் அதிக பணவீக்கம். இந்த கணிப்பு பொருளாதார கவலைகளுடன் எதிரொலிக்கிறது. பாபா வாங்காவின் கணிப்புகளும் இதை உறுதி செய்கிறது.

தங்கத்தின் விலையில் மிகப் பெரிய மாற்றம்

சில அறிக்கைகள் 2026 ஆம் ஆண்டில் தங்கத்தின் விலைகள் எதிர்பாராத விதமாக மாறக்கூடும் என்று பாபா வாங்கா கணித்ததாகக் கூறுகின்றன, சிலர் தங்கம் அதன் விலையில் பாதுகாப்பான நிலையை இழக்கக்கூடும் என்றும், கனவில் கூட நினைத்துக் கூட பார்க்க முடியாத விலையை எட்டும் என்றும் கூறுகின்றன. இதற்கான வாய்ப்புகள் இருந்தாலும் இதை உறுதிப்படுத்தும் தகவல்கள் எதுவுமில்லை.

பெரிய காலநிலை மாற்றம்

இயற்கை பேரழிவுகளுக்கு அப்பால், 2026 காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பேரழிவுகளில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் என்று பாபா வாங்கா கணித்ததாகக் கூறப்படுகிறது: வெள்ளம், வறட்சி, தீவிர வானிலை மாற்றம், சுற்றுச்சூழல் அமைப்புகளில் மூன்றில் இரண்டு பங்கு மாற்றம் போன்ற அழிவுகள் ஏற்படலாம். இந்த கணிப்பு சுற்றுசூழல் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிபுணர்களின் எச்சரிக்கைகளுடன் ஒத்துப்போகிறது.

ஆசியாவை நோக்கி புவிசார் அரசியலின் மாற்றம்

சில ஊடகக் கணிப்புகள், 2026 ஆம் ஆண்டை சீனா தைவான் மீதான கட்டுப்பாடு அல்லது தென் சீனக் கடலில் விரிவாக்கம் உள்ளிட்ட பெரிய ஆதிக்கத்தைப் பெறும் ஆண்டாக இருக்குமென்று பாபா வாங்கா முன்னறிவித்ததாகக் கூறுகின்றன, இது உலகளவில் அரசியல் மாற்றங்களைத் தூண்டலாம்.

சமூக எழுச்சிகள் மற்றும் தொழில்நுட்ப சீர்குலைவு

சில கணிப்புகள், தொழில்நுட்ப சீர்குலைவு, சுற்றுச்சூழல் மற்றும் அரசியல் நெருக்கடிகளுடன் இணைந்து, 2026 ஆம் ஆண்டில் மக்களின் இடம்பெயர்வு, பெரிய அளவிலான சமூக அமைதியின்மை அல்லது சமூகங்களின் மாற்றத்திற்கு வழிவகுக்கும் என்று கூறியுள்ளது.

# ஏமாற்றிய நடிகர்கள்.. விவகாரத்து.. எமனாக வந்த புற்றுநோய்.. ராஜவம்சத்து மனிஷா கொய்ராலாவின் கண்ணீர் கதை

நேபால் நாட்டு ராஜ குடும்பத்தில் பிறந்து இந்திய சினிமாவில் நடிக்க வந்தவர் தான் நடிகை மனிஷா கொய்ராலா. அரசியல் செல்வாக்கு, அதிகார செல்வாக்கு கொண்ட குடும்பத்தில் பிறந்த மனிஷா கொய்ராலா, பல நடிகர்களால் ஏமாற்றப்பட்டு, புற்று நோயால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் படாத கஷ்டங்களை பட்டுள்ளார். இந்த செய்தியில்மனிஷாகொய்லாரா வின் கண்ணீர்கதையை பார்க்கலாம்.

1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ந் தேதி நேபாள் தலைநகர் காட்மண்டுவில் தந்தை பிரகாஷ் கொய்ராலா, தாய் சுஷ்மா கொய்ராலாவிற்கு மகளாக பிறந்தார். நேபாளத்தை பல ஆண்டுகளாக ஆட்சி செய்து வரும் அரச குடும்பம் தான் மனிஷா கொய்ராலாவின் குடும்பம். தனது ஆரம்ப பள்ளிப்படிப்பை நேபாளத்தில் படித்த மனிஷா கொய்ராலா, மேல் படிப்பை டெல்லி பப்ளிக் ஸ்கூலில் படித்தார். மனிஷாவிற்கு சினிமா மீது ஆர்வம் இருந்ததால், நியூயார்க் சென்று பிலிம் மேக்கிங்கில் டிப்ளமோ பட்டம் பெற்றார். அதோடு மட்டுமில்லாமல் மாடலிங்கிலும் ஈடுபட்டு வந்தார்.

மனிஷா கொய்லாரா: அதைத் தொடர்ந்து, நேபாளத்தில் 'ஃபேரி பெட்டாலா' என்கிற படத்தில் 1989ம் ஆண்டு நடித்தார். அதன் பின் பாலிவுட் பக்கம் வந்த மனிஷா கொய்ராலா, ஹிந்தியில் 'சௌடாகர்' என்ற படத்தில் நடித்தார். ஆனால், அந்த படம் வரவேற்பை பெறவில்லை. அதன் பின் '1942 love story' என்ற படத்தில் நடித்தார். இந்த படம் மனிஷாவிற்கு பெயர் சொல்லும் திரைப்படமாக அமைந்ததை தொடர்ந்து, அடுத்தடுத்த படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது தான் இயக்குநர் மணிரத்னம், பாம்பே படத்தில் மனிஷாவை கமிட் செய்தார். இஸ்லாமியா பெண் கதாபாத்திரத்திற்கு மனிஷா கொய்ராலா மிகவும் பொருத்தமாக இருந்ததால், பாம்பே படம் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றது.

ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தார்: இந்த படத்தை தொடர்ந்து தமிழில், உயிரே, இந்தியன், முதல்வன், ஆளவந்தான், பாபா மற்றும் மும்பை எக்ஸ்பிரஸ் போன்ற பல திரைப்படங்களில் நடித்தார். தனது கட்டழகாலும் அசாத்தியமான நடிப்பாலும் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்த, மனிஷா கொய்ராலா 4 பிலிம்பேர் விருதுகளை வாங்கி உள்ளார். மனிஷா கொய்ராவால் ஈர்க்கப்பட்ட ஐநா சபை, அவரை க்கீஊகஅ Good-will Ambassador நியமித்தது. 1999 ஆண்டிலிருந்து 2015 ஆண்டு வரை உலகின் புகழ் மிக்க ஐநா சபையின் அம்பாசிடராக மனிஷா கொய்ராலா செயல்பட்டார்.

# நண்பிகளுடனோ வெளியே செல்லும்போது தர்ம சங்கடமாக இருக்கிறது. என்ன செய்யலாம்?

## அந்தரங்க சிந்தனைக்களம்

**எனக்கு வயது 46. ஆண். திருமணமாகி ஒரு மகள் இருக்கிறார். நான் எல்லோருடனும் நகைச்சுவையாகப் பழகுவேன். வயது வித்தியாசம் கூடப் பார்க்க மாட்டேன். ஆனால் நான் ஒரு ஓட்டைவாய் என்று என்று என் மனைவி முதல் நெருங்கிய நண்பர்களும் கூறுகிறார்கள். இப்போதெல்லாம் அப்படி அவர்கள் சொல்லும் போது எனக்கு வேதனையாக இருக்கிறது. என்னிடம் என்ன பிரச்சினை?**

தற்போதைய பரபரப்பு நிறைந்த உலகில் அனைத்தையுமே 'சீரியஸாக' எடுத்துக்கொண்டு வாழ்பவர்களுக்கு மத்தியில், 'இவன் எந்தக் கவலையும் இல்லாமல் ஜொலியாக இருக்கிறானே' என்ற ஆதங்கம்தான்!

நாளாக நாளாக வயது ஏறும். வாழ்க்கையின் போக்கும் மாறும். வயதுக்குத் தகுந்தபடி மனமாற்றங் களும்நிகழ்ந்துகொண்டே இருக்கும். நம்மில் பெரும்பாலானோர் இந்த மாற்றங்களைத் தூக்கிப் பிடித்து க்கொண்டு தமது போக்கிலும் மாற்றங்களை வலிந்து ஏற்படுத்திக் கொள்வார்கள்.

இவர்கள் ஒரு வகை என்றால், வாழ்க்கையில் பல தோல்விகளையும் ஏமாற்றங் களையும் துரோகங்களையும் அனுபவித்தவர்கள் இயல்பா கவே மாறிவிடுவார்கள். அவ்வாறானவர்களும் உங்களை வித்தியாசமாகத்தான் பார்ப்பார்கள்.

உங்கள் மனைவியைப் பொறுத்தவரை, மற்றவர்களைப் போல - அதாவது பெரும்பாலானவர் களைப் போல - தன் கணவர் முதிர்ச்சியடைந்தவர்களாக இல்லையே என்று நினைக்கிறார். மற்றவர்களைப் போல இருப்பதே முதிர்ச்சி என்று நினைக்கிறார். அது தான் அவரைக் கவலைகொள்ள வைக்கிறது.

சரி, ஓட்டைவாய்க்கு வருவோம்!

நகைச்சுவையாகப் பேசுவது, நீங்கள் நீங்களாகவே இருப்பது எல்லாம் சரிதான்! ஆனால் பேச்சு சுவாரசியத்தில் எதையும் மனதில் வைத்துக்கொள்ளாமல் போட்டு உடைத்துவிடுவது அவ்வளவு நல்ல தல்ல!

நகைச்சுவை உணர்வுடைய உங்களுக்கு எல்லோரும் ஒன்று போலவே தெரிவார்கள். ஆனால், கூட இருந்தே குழி பறிப்பவர்களும் அவர்களுக்குள் இருப்பார்கள் என்ற உண்மையை நீங்கள் உணர வேண்டும்.

உங்கள் பேச்சுக்களைக் கேட்டு வாய்விட்டுச் சிரிப்பவர்கள், மறுபக்கம் உங்களைப் பற்றிப் பேசியும் போட்டுக் கொடுத்தும் சிரித்துக்கொண்டிருப்பார்கள். இவற்றை நினைத்துத்தான் உங்கள் மனைவியும் உற்ற நண்பர்களும் உங்களை ஓட்டைவாய் என்கிறார் கள்.

நீங்கள் நீங்களாக இருப்பது எப்படித் தவறில்லையோ, அது போலவே அவர்களது கரிசனத்தி லும் தவறேதும் இல்லை.

எனவே, நீங்கள் கொஞ்சம் சுதாரித்துக்கொள்ளவேண்டும். யாருடன் பேசுகிறோம், என்ன பேசுகிறோம், ஏன் பேசுகிறோம் என்பதைப் புரிந்துகொண்டு, உணர்ந்துகொண்டு பேச வேண்டும். உங்கள் இயல்புக்கு இது சற்றுச் சிரமமான காரியம்தான். ஆனால், உங்களை மாற்றிக்கொள்ளாவிட் டால் ஒருவேளை உங்களைப் பார்த்து ஊரே சிரிக்கும் காலம் வரலாம்!

**நான் ஒரு பெண். வயது 27. இன்னும் திருமணமாகவில்லை. நான் ஐந்தடி 11 அங்குலம் இருக்கிறேன். இதனால் தனியா கவோ, நண்பிகளுடனோ வெளியே செல்லும்போது தர்மசங்கடமாக இருக்கிறது. என்ன செய்யலாம்?**

இவ்வளவு உயரம் வளர்ந்துவிட்ட நீங்கள் திரும்பவும் குள்ளமாக மாற முடியாது. எனவே, குறைந்தபட்சம் உங்களது தோற்றத்தை உயர மாகக் காட்டும்படியான ஆடை, அணி கலன்களைத் தவிர்த்துவிடுங்கள்.

உதாரணமாக, நீங்கள் சேலையோ, முழுக் காற்சட்டையோ அணிவதைத் தவிருங்கள். ஏனென் றால், இது உங்கள் தோற்றத்தை இன்னும் உயரமாகவே காட்டும்.

அதற்குப் பதிலாக பாவாடை, சட்டை அல்லது சற்றுக் கட்டையான சுடிதார் என்பனவற்றை அணிந்து கொள்ளுங்கள்.

அதேபோல், எந்தவித டிசை ன்களும் இல்லாத ஆடைகளையோ, நீள நீளமான கோடுகள் - அதாவது, உயரமான நேர்க்கோடுகள் கொண்ட ஆடைகளையோ அணியாதீர்கள். பதிலாக பக்கவாட்டில் கோடுகள் அமைந்த அல்லது டிசைன்கள் அமைந்த ஆடைகளை அணியுங் கள்.

மேலும், மேலாடைகள் அனைத் தும் கை வைத்ததாகவும் அரைக் கையை மறைக்கக் கூடியதாகவும் பார்த்துக்கொள்ளுங்கள்.

கழுத்தில் நீளமான மாலைகளை அணிவதைத் தவிர்த்து, கழுத்துடன் நெருக்கமாக இருக்கும் மாலைகளை அணிந்துகொள்ளுங்கள்.

உயரமான குதிகள் கொண்ட காலணிகளை அணியாதீர்கள். நண்பிகளுடன் சேர்ந்து நடக்கும் போது, உயரமான பகுதிகளில் நடப்பதைத் தவிருங்கள். உதாரணமாக, நடைமேடையில் (ப்ளெட்ஃபோர்ம்) நடக்கும்போது நீ ங்கள் கீழேயும் நண்பியர் மேலேயும் நடக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்.

நீண்ட கூந்தலைத் தவிர்த்து விட்டு, குட்டையாக வெட்டிக்கொள் ளுங்கள். காதணிகள் கூட 'ஸ்டட்' வகையானதாக இருக்கட்டும். 'ஜிமிக்கி' வகைகளைத் தவிர்த்து விடுங்கள்.

இப்படி ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து அணிந்துகொண்டீர்கள் என்றால், உண்மையில் நீங்கள் உயரமாக இருந்தால் கூட, தோற்றத்தில் உயரம் குறைவானவராகத் தெரிவீர்கள்.

**எனக்கு வயது 17. நான் ஒருவரை விரும்புகிறேன். இது எங்கள் வீட்டுக்குத் தெரியவந்து பெரும் பிரச்சினையாகிவிட்டது. எனக்கு என் அப்பா என்றால் உயிர். அதற்காக அவனை விட்டுக் கொடுக்கவும் விரும்பவில்லை. ஓடிப் போய் திருமணம் செய்துகொண்டால் பிரித்து விடுவார்களோ என்று பயமாகவும் இருக்கிறது. நான் என்ன செய்ய?**

முதலில், உங்கள் வயது காதல் முளைவிடும் வயதாக இருந்தாலும் மண வாழ்க்கையைத் தீர்மானிக்கும் வயதல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். இந்த சொற்ப காலக் காதலுக்காக, மீதமிருக்கும் வாழ்நாள் அத்தனையையும் தொலைத்துவிட முயற்சிக்காதீர்கள்.

உங்கள் அப்பா உங்களுக்கு உயிர் என்கிறீர்கள். அதேயளவு அன்பை அப்பாவும் உங்கள் மேல் வைத்திருக்கிறார் என்கிறீர்கள். அப்படியானால், அப்பா செய்வதனைத்தும் உங்கள் நலனுக்காகவே என்பதை மட்டும் ஏன் ஏற்க மறுக்கிறது உங்கள் மனம்?

உங்கள் காதல் நூற்றுக்கு நூறு சதவீதம் தவறானது என்பதை நம்புங்கள்.

நீங்கள் தொலைக்காட்சி நாடகங் களைப் பார்த்திருப்பீர்கள். அதில், நல்லவர்கள் போல் நடிப்பவர்களை மற்றவர்கள் நம்புவது போன்ற காட்சிகள் வரும். அதன்போது, 'சே... அவனைப் போய் நல்லவன் என்று நினைக்கிறார்களே' என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். காரணம், கதைப்படி அவர்கள் கெட்டவர்கள் என்பது அந்தக் கதாபாத்திரங்களுக்குத் தெரிந்திரா விட்டாலும் பார்வையாளரான உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

அதுபோன்றதுதான் உங்கள் பிரச்சினையும்! இந்த வயதில் நீங் கள் காதலிப்பது தவறு என்பதும் காதலிக்கும் நபர் தவறானவர் என்பதும் வாழ்க்கையில் பல அனுப வங்களைப் பெற்றிருக்கும் உங்கள் பெற்றோருக்குத் தெரிந்திருக்கும்.

எனவே, பெற்றோரை நம்புங்கள். அவர்கள் நிச்சயமாக உங்கள் நலனை மட்டுமே நினைவில் நிறுத்தித்தான் எந்த முடிவையும் எடுப்பார்கள்.

உங்களுக்கு உதவும் நண்பர்கள் மூலம் அவருக்கு வாய்வழியாக ஒரு தகவலை அனுப்புங்கள்.

'நான் உன்னைக் காதலித்ததும் நீ என்னைக் காதலித்ததும் உண்மை. ஆனால் என் பெற்றோருக்கு இதில் விருப்பமில்லை. அவர் களது விருப்பத்திற்கு மாறாக நடந்துகொண்டு அவர்களைக் காயப்படுத்த விரும்பவில்லை. அதேநேரம், நம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டாலும் கூட, என் பெற்றோரின் வேதனை என் மனதை விட்டு நீங்காது. இதனால், உன்னுடனான வாழ்க்கையை நான் சந்தோஷமாக வாழ முடியாது. இது நிச்சயமாக உன்னையும் பாதிக்கும். எனவே, நாம் எமது காதலைத் துறந்துவிடுவோம். அதற்காக உன் மீது இருக்கும் அன்பு எனக்குக் குறையாது. நீயும் நன்றாக வாழ வேண்டும். எனது நம்பிக்கையைக் காப்பாற்றுவாய் என்று நம்புகிறேன். காலம் நிச்சயம் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தும்' என்று கூறியனுப்புங்கள்.

பிறகு, கூடிய விரைவில் வெளிநாடு சென்றுவிடுங்கள். புதிய இடம், புதிய மனிதர்கள் என்று விரைவாகவே நீங்கள் சகஜ நிலைக்கு வந்துவிடுவீர்கள். அதன்பின், பெற்றோர் உங்களுக்காகப் பார்க்கும் வரன்களில், உங்களுக்குப் பிடித்த ஒருவரைத் திருமணம் செய்துகொள்ளுங்கள்.

நிச்சயமாக உங்கள் வாழ்க்கை இனிமையாக அமையும். அவச ரப்பட்டு வாழ்க்கையைத் தொலைத்துவிடாதீர்கள்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

www.kathirolimedia.ca

# இயேசு கேட்ட கேள்விகள்

கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது, ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே! உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்? யோவான் 5 :44

பெதஸ்தா குளக்கரையில் முப்பத்தெட்டு ஆண்டுகளாய் நோய் வாய்ப்பட்டிருக்கிறார் ஒருவர். குளத்தைத் தூதர்கள் கலக்கும்போது முதலில் நீரில் இறங்குபவர் நலம் பெறுவர். இவரோ குளத்தின் அருகே காவல் இருக்கிறார், ஆனால் தனியாய் குளத்தில் இறங்க முடியாது. இவரை யாரும் இறக்கி விடுவதும் இல்லை, இவருக்காக இரக்கம் கொண்டு யாரும் காத்திருப்பதும் இல்லை.

எல்லோரும் சுயநலப் படிக்கட்டுகளில் தான் குடியிருக்கின்றனர். குளம் கலங்கியதும் சட்டென வேறொருவர் இறங்கி விடுகிறார். நலம் பெறுகிறார். இவரோ அடுத்த முறை குளம் கலங்கட்டுமென காத்திருக்கிறார்.

இப்படியே ஓடிவிட்டன முப்பத்தெட்டு ஆண்டுகள். வாழ்க்கையின் பெரும்பாலான பகுதியை படுக்கையிலேயே செலவிட்ட அவரை இயேசு சந்திக்கிறார். அவர் தூதர்களுக்காய் காத்திருக்கவில்லை. நலம் பெற விரும்புகிறீரா ? என நேரடியாய்க் கேட்கிறார். நலமளிக்கிறார். நலம் பெற்றவர் உற்சாகத்தின் உச்சாணியில் ஏறி பரவசத்தில் பறந்திருப்பார். இயேசுவோ, 'படுக்கையையும் எடுத்துக் கொண்டு நட' என்றார்.

இதுவரை அவனைச் சுமந்த படுக்கையை, இப்போது அவன் சுமக்கிறான். அது ஒரு ஓய்வு நாள் ! அங்கே தான் மதவாதிகளுக்குப் பிரச்சினை எழுகிறது. ஓய்வு நாளில் நீ எப்படி படுக்கையைத் தூக்கிக் கொண்டு நடக்கலாம் ? இது சட்ட விரோதம் என அவன் மீது பாய்கிறார்கள்.

நீண்ட நெடிய முப்பத்தெட்டு ஆண்டுகள் அவனுக்காய் வராத கரிசனை ! அவனுக்காய் எழாத இரக்கம் ! சட்டத்துக்காய் வருகிறது. மனிதனின் ஊனம் ஒரு பொருட்டல்ல, ஆனால் சட்டம் கொஞ்சம் மீறப்படுவது தான் அவர்களுக்குப் பிரச்சினையாய் இருக்கிறது !

அவனை நலமாக்கியவர் இயேசு என்பதை அறிந்த யூதர்கள் இயேசுவின் மீது கோபத்தைத் திருப்பினார்கள். இயேசு அவர்களுடைய போலித்தனத்தைப் பார்த்தார். சட்டங்களைப் பிடித்துக் கொண்டு மனிதத்தைப் புறக்கணிக்கும் அவர்களது மாய வாழ்க்கையைப் பார்த்தார்.

தந்தை என்னை அனுப்பியிருக்கிறார். தந்தைக்குரிய அதிகாரங்களைக் கொடுத்து தான் அனுப்பியிருக்கிறார். ஏன், தீர்ப்பு அளிக்கும் அதிகாரத்தையும் அவர் எனக்கு அளித்திருக்கிறார். என இயேசு அவர்களிடம் அழுத்தமாய்ப் பேசுகிறார்.

தன்னைக் கடவுளுக்கு இணையாக்கிப் பேசுகிறாரே, என அவர்களின் கோபம் இன்னும் கரை கடக்கிறது. அவர்களின் கோபத்தைப் பொருட்படுத்தாத இயேசு அவர்களைக் கடிந்து கொள்கிறார். 'யாருடைய சான்றும் எனக்குத் தேவையில்லை. நான் செய்து முடிக்குமாறு தந்தை எனக்கு அளித்த செயல்களே எனக்கான சான்று' என்கிறார்.

மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என துருவித் துருவிப் பார்க்காதீர்கள். மறைநூலே என்னைத் தான் சான்று பகர்கிறது. வாழ்வு பெற வேண்டுமெனில் என்னிடம் வரவேண்டும் என்றார்.

இயேசுவின் பேச்சு யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. காரணம், அவர்கள் இயேசுவை நம்பவில்லை. மறைநூலை அறிந்தவர்கள், மறைநூல் அறிவித்தவரை அறிய மறுத்தார்கள்.

அவர்களுக்கு சட்டத்தின் வரிகளின் படி வாழ்வது பிரியமாய் இருந்தது. காரணம் அதை அவர்கள் தேவைக்கேற்ப வளைத்தார்கள். இயேசுவின் வழிகளில் வாழ்வது பிடிக்காததாய் இருந்தது. காரணம் அது குறுகலான நேர் வழியாய் இருந்தது.

இயேசு அவர்களிடம் முத்தாய்ப்பாக் கேட்டது தான் இந்த கேள்வி.

''கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது, ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக்கொள்கிறீர்களே! உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்? ''

அவர்கள் உலகப் பெருமைக்காக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். சாப்பாட்டு இடமா முதன்மையான இடத்தைப் பிடி. தொழுகைக் கூடங்களா முக்கியமான இடங்களை எடு. ரபி என அழைக்கப்படு ! ஆடைகளை அகலமாக்கு ! குஞ்சங்களைப் பெரிதாக்கு ! பொதுவில் பிரார்த்தனை நடத்தி பெருமை கொள் ! உலகம் பெருமையாய்ப் பார்க்கவேண்டும். அதுவே இலக்கு ! மற்றதெல்லாம் விலக்கு !! என்பதே அவர்களுடைய வாழ்க்கையாய் இருந்தது.

மனிதரின் பெருமையல்ல, ''கடவுள் தருகின்ற பெருமையை'' நாடுபவர்கள்மட்டுமேதன்னைநம்ப முடியும் என்கிறார் இயேசு. கடவுள் தரும் பெருமை எது ? கடவுளுக்கு ஏற்புடைய செயல்களைச் செய்யும் போது தான் அது கிடைக்கிறது. கடவுள் ஒருவர் என நம்புவதும், அவருக்காய் கனி கொடுப்பதும் மட்டுமே தேவையானது. அது மட்டுமே கடவுளிடம் நமக்குப் பெருமையைப் பெற்றுத் தரும்.

முப்பத்தெட்டு ஆண்டுகள் படுக்கையோடு கிடக்கும் ஒருவனுக்காய் பரிதவிப்பதும், அவனுக்கு உதவுவதும் இறைவனுக்கு ஏற்புடைய செயல்கள். அவன் நலம் பெற்று எழும்போது அவனோடு சேர்ந்து மகிழ்வது கடவுளுக்கு ஏற்புடைய செயல். அவனை நலமாக்கிய இயேசுவை மகிமைப்படுத்துவது கடவுளுக்கு ஏற்புடைய செயல். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு மனிதரின் பெருமையில் மட்டும் தலைசாய்ப்பது, கடவுளுக்கு ஏற்புடையதல்ல.

காலம் வரும்போது கல்லறைகளில் இருப்பவர்கள் தீர்ப்புக்காய் வெளிவருவர். அவர்கள் வரும்போது, அவர்கள் செய்த செயல்களின் அடிப்படையிலேயே அவர்களுக்கு தீர்ப்பு வழங்கப்படும். என்றார் இயேசு. இதன் மூலம், நமது செயல்கள் இறைவனுக்கு ஏற்புடையதாய் இருப்பதே விண்ணக வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லும் என்பதை மீண்டும் ஒரு முறை தெளிவாய் நமக்கு உறைக்கும்படி, உரைக்கிறார். **சேவியர்**




**Vacancy for Physiotherapist & Receptionst (immediate recruitment)**

Bethany Spine Center
1/58, 1st Street, Sowmiya Nagar,
Perumbakkam, Medavakkam,
Chennai-600100.

**Female Therapist**
**Full time**
**Morning 9am till 1pm.**
**Evening 5pm till9pm**

**Interested candidates can cal@ 8608007764**




உங்கள்
வியாபாரம் உலகம்
முழுவதும் சென்று
அடைய கதிர்ஒளியில்
விளம்பரம் செய்யுங்கள்!

# இம்ரான்கானை சந்திக்க குடும்பத்தினருக்கு அனுமதி



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் ஊழல் புகாரில் கைது செய்யப்பட்டு கடந்த 2023-ம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். ராவல்பிண்டி நகரின் அடியாலா சிறையில் கடந்த 2 ஆண்டுகளாக இருந்து வருகிறார். இதற்கிடையே இம்ரான்கானை சந்திக்க அவரது 3 சகோதரிகள் நோரின் நியாசி, அலீமா கான், உஸ்மா கான் ஆகியோர் சென்ற போது போலீசார் அனுமதி மறுத்தனர். இதனால் அவர்களும், இம்ரான்கானின் தெக்ரீக்-இ-இன்சாப் கட்சியினரும் சிறை முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கிடையே சிறைக்குள் இம்ரான்கானை பாகிஸ்தான் ராணுவம் கொலை செய்துவிட்டதாக தகவல் பரவியது.

இதையடுத்து அடியாலா சிறை வளாகத்தில் தெக்ரீக்-இ-இன்சாப் ஏராளமானோர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அவர்களை கலைக்க போலீசார் தடியடி நடத்தினர். ஆனாலும் இம்ரான்கானின் சகோதரி அலீமா கான் மற்றும் கட்சி தொண்டர்கள் சிறைக்கு வெளியே தொடர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் அலீமா கான் மற்றும் தெக்ரீக்-இ-இன்சாப் கட்சி தலைவர்களுடன் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர். இதில் இம்ரான்கானை சந்திக்க ஏற்பாடு செய்யப்படும் என்று போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இன்றும், வருகிற 2-ந்தேதியும் இம்ரான் கானை சந்திக்க குடும்பத்தினருக்கு அனுமதி அளிக்கப்படும் என்று போலீசார் உறுதி அளித்தனர். இதையடுத்து போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். கடந்த ஒரு மாதமாக இம்ரான்கானை சந்திக்க யாருக்கும் அனுமதி வழங்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சிறையில் இமரான்கான் கொலை செய்யப்பட்டதாக வெளியான தகவலை சிறைத் துறை நிர்வாகம் மறுத்துள்ளது. அவர் நல்ல உடல் நலத்துடன் இருப்பதாக தெரிவித்துள்ளது.

# உலக செய்திகள்

## ஹாங்காங்: அடுக்குமாடி கட்டிடத்தில் தீ விபத்து – பலி 65 ஆக உயர்வு; 300 பேர் மாயம்

சீனாவின் ஆட்சிக்கு உட்பட்ட ஹாங்காங்கில் தாய் போ மாவட்டத்தில் வாங் புக் கோர்ட் என்ற அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. 8 தொகுதிகள் கொண்ட இந்த குடியிருப்பில் பல அடுக்குமாடி கட்டிடங்கள் உள்ளன. இவற்றில், 2 ஆயிரம் வீடுகள் உள்ளன. இந்நிலையில், கடந்த சில மாதங்களாக கட்டிடங்களை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வந்தது.



இதற்காக தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது, நேற்று மதியம் ஒரு அடுக்குமாடி கட்டிடத்தில் திடீரென தீப்பிடித்தது. தீ அடுத்தடுத்த அடுக்குமாடி கட்டிடங்களுக்கும் பரவியது. இதில் 5 உயர்ந்த கட்டிடங்கள் முழுவதும் தீ பரவியது. எனவே தாய் போ நகர சாலை உடனடியாக மூடப்பட்டு வாகனங்கள் வேறு வழியாக திருப்பி விடப்பட்டன. இதனையடுத்து தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். குடியிருப்பில் வசித்து வந்த ஏறக்குறைய 700 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த தீ விபத்தில் சிக்கி இதுவரை 65 பேர் பலியாகி உள்ளனர். 300 பேரை காணவில்லை. இந்த தீ விபத்துக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. 2 இயக்குநர்கள் மற்றும் பொறியியல் ஆலோசகர் ஒருவர் உள்பட 3 பேரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஊழல் புகாரில் ஷேக் ஹசீனாவுக்கு 21 ஆண்டுகள் சிறை

வங்க தேசத்தின் முன்னாள் பிரதமர்ஷேக்ஹசீனா, அந்தநாட்டில் நடந்த மாணவர் போராட்டத்தால் பதவியிழந்து, இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். அப்போது மாணவர் போராட்டத்தை ஒடுக்க மிருகத்தனமாக செயல்பட்டதாகவும், சொந்த நாட்டு மக்களை கொன்று குவித்த, மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்காக அவருக்கு மரணதண்டனைவிதிக்கப்படுவதாக சிறப்பு தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது. இதையடுத்து அவரை நாடு கடத்தவும் இந்தியாவிடம் வங்கதேசம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் வங்க தேசத்தின் கோரிக்கையை இந்தியா ஆராய்ந்து வருவதாக வெளியுறவுத் துறை தெரிவித்து உள்ளது. 'நடந்து வரும் நீதித் துறை மற்றும் உள்சட்ட செயல்முறையின் ஒரு பகுதியாக வங்க தேசத்தின் கோரிக்கை



ஆராயப் பட்டு வருவதாக' வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார். இந்தநிலையில், வங்காள தேசத்தில் புர்பச்சல் புதிய நகர் திட்டத்தில், அவருக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் விதிமுறைகளை மீறி நிலம் ஒதுக்கப்பட்டதாகவும், அதில் ஊழல் நடந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த டாக்கா சிறப்பு நீதிமன்ற நீதிபதி முகமது அப்துல்லா அல் மமும், 3 வழக்குகளிலும் ஷேக் ஹசீனா குற்றவாளி என அறிவித்தார். மேலும் அவருக்கு ஒவ்வொரு வழக்கிலும் தலா 7 ஆண்டுகள் என மொத்தம் 21 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார். அவரின் மகன் சஜீப் வாசீத்துக்கும், மகள் சயிமா வாஜீத்துக்கும் தலா 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார்.



# வானிலை அவசரநிலை: இலங்கைக்கு வரும் விமானங்களை இந்தியாவுக்கு திருப்பி விட உத்தரவு; ரெயில் சேவையும் பாதிப்பு

இலங்கையில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக தொடர் கனமழை பெய்து வருகிறது. கடந்த 17-ந்தேதி முதல் பெய்து வரும் மழையால் நிலச்சரிவும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு உள்ளது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த கன மழை எதிரொலியாக, பல்வேறு பகுதிகளிலும் வெள்ளநீர் சூழ்ந்து கொண்டது. இதனால், மீட்பு பணிகளை முடுக்கி விடும் படியும் மற்றும் தடையில்லா நிவாரண உதவி கிடைக்கவும் வழி செய்திடும்படி அனைத்து மாவட்ட அதிகாரிகளுக்கும் இலங்கை ஜனாதிபதி அனுர குமார திசநாயகே உத்தரவிட்டு உள்ளார். மீட்பு பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் விமான போக்குவரத்து துறை மந்திரி அனுர கருணாதிலகே வெளி யிட்ட அறிவிப்பில், இலங்கைக்கு வரக்கூடிய அனைத்து விமானங்களும், வானிலை அவசரநிலையால் பண்டாரநாயகே சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க முடியாமல் போனால், இந்தியாவில் உள்ள திருவனந்தபுரம் அல்லது கொச்சி விமான நிலையங்களுக்கு அவை திருப்பி விடப்படும் என தெரிவித்து உள்ளார்.

ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் வெள்ளப்பெருக்கால் பல்வேறு பகுதிகளில் ரெயில்வே தண்டவாளங்கள் நீரில் மூழ்கி உள்ளன. இதனை முன்னிட்டு, பட்டிகலோவா மற்றும் திரிகோணமலை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கொழும்பு மற்றும் கொழும்பு துறைமுகத்திற்கு இயக்கப்படும் இன்டர்சிட்டி மற்றும் இரவு ரெயில்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன. அடுத்த உத்தரவு வரும் வரை இந்த ரத்து அறிவிப்பு தொடரும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால், ரெயில் சேவையும் பாதிக்கப்பட்டு உள்ளது. பொது மக்களும் பெரிதும் அவதியடைந்து உள்ளனர்.

இதற்கேற்றார் போன்று, தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளில் இன்று புயல் உருவாகி உள்ளது. அதற்கு டிட்வா என பெயரிடப்பட்டு உள்ளது. சென்னைக்கு தெற்கு தென்கிழக்கே தற்போது 700 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ள இந்த புயல், அடுத்த 48 மணிநேரத்தில் வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் வட தமிழகம், புதுச்சேரி மற்றும் தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளில், வருகிற 30-ந்தேதி கரையை கடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

www.kathirolimedia.ca

# வங்கி சேமிப்புத் திட்டங்கள் என்னென்ன?

செல்வம் என்னும் சிம்மாசனத்தில் அமர யாருக்குத்தான் ஆசை இல்லை? பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள். முக்தி என்னும் கோட்டைக்குள் நுழையப்போகும் பிணத்துக்கே அந்த கதி என்றால், தினந்தோறும் வாழ்வுடன் போராடிக் கொண்டிருக்கும் நம் போன்ற சாதாரண மனிதர்களுக்கு பணத்தை சம்பாதிக்கவேண்டும், சேமிக்கவேண்டும், வசதியாக வாழ வேண்டும் என்ற உத்வேகம் வரக் கேட்பானேன்? ஆகவேதான் தொடர்ந்து பணம் வரும் வழிகளையும், அதனை சேமித்துப் பெருக்கும் பர்சனல் பைனான்ஸ் முறைகளையும் பார்த்து வருகிறோம்.

பர்சனல் பைனான்சில் முதலீடு என்பது கடன் (Debt) சார்ந்தவை, பங்கு (Equity) சார்ந்தவை என்று இரண்டாகப் பிரிக்கப்படுகிறது என்று பார்த்தோம். கடன் சார்ந்த முதலீடுகளில் இன்று வரை ராஜாவாக இருப்பவை வங்கிகள். பர்சனல் பைனான்சின் அடித்தளம் சேமிப்பு என்றால், சேமிப்பின் அடித்தளம் வங்கிகள். ஐயாயிரம் வருடங்களாக மனிதர்களுடன் உறவாடுபவை வங்கிச் சேவைகள். சுமேரியக் கோவில்களில் ஆரம்பித்து, இன்று நம் ஸ்மார்ட் போன்களில் உறையும் வரை வங்கியின் பயணம் நீண்ட நெடிய ஒன்று.

முதலில் மக்கள் தங்களிடம் மீதி இருக்கும் பணத்தை வங்கிகளில் போட்டு, தங்கள் பணத்துக்குப் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் தேவையானபோது, தேவையான அளவு தொகையை மட்டும் எடுத்துக் கொள்ளும் வசதி ஆகியவற்றைப் பெற்றனர். பணத்தைப் பெற்ற வங்கிகள் அதைத் தேவைப்பட்டோருக்குக் கடனாகத் தந்து, வட்டியுடன் வசூலிக்கும் பொறுப்பை ஏற்றன.

நம் அனைவருக்கும் கண்டிப்பாக ஒரு வங்கிக் கணக்காவது இருக்கும். இந்தியாவின் கடைக்கோடி மனிதனுக்கும் வங்கிச் சேவை கிட்ட வேண்டுமென்பதற்காக ஜன்தன் அக்கவுன்ட்டுகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. நாம் இருக்கும் ஊரில் உள்ள ஒரு வங்கியில் அக்கவுன்ட்டை ஆரம்பித்ததுமே பாஸ் புக், செக் புக், ஏ.டி.எம். கார்ட், இமெயில் அலர்ட், எஸ்.எம்.எஸ். அலர்ட் என்று அத்தனையும் நமக்கு வந்து விடுகின்றன.

வங்கி என்பது வெறும் சேவிங்ஸ் அக்கவுன்ட் மட்டுமல்ல; ரெக்கரிங் டெபாசிட், பிக்சட் டெபாசிட், 5 வருட வரி சேமிப்புத் திட்டம், சீனியர் சிட்டிசன் சேவிங்ஸ் திட்டம், சுகன்யா சம்ரித்தி திட்டம் போன்ற டெபாசிட் திட்டங்களையும், வாகனக் கடன், வீட்டுக் கடன், கல்விக் கடன், நகைக் கடன், தனி நபர் கடன், வேளாண்மைக் கடன், வியாபாரக் கடன், கரன்ட் அக்கவுன்ட் போன்ற கடன் திட்டங்களையும், டெபிட் கார்ட், கிரெடிட் கார்ட், லாக்கர் போன்ற வசதிகளையும், உலகளாவிய பணப்பரிமாற்ற வசதிகளையும் உள்ளடக்கிய அட்சய பாத்திரம்.

இங்கு உள்ள ஒவ்வொருவிதமான அக்கவுன்ட்டும் ஒவ்வொருவிதமான பயன் தரக்கூடியவை. சேவிங்ஸ் அக்கவுன்ட்: சேவிங்ஸ் அக்கவுன்ட் எனப்படும் எஸ்.பி. அக்கவுன்ட்டை எடுத்துக் கொண்டால், நம்மிடம் உபரியாக இருக்கும் பணத்தை பத்திரமாக வைத்து, அதற்கு வட்டியும் வழங்கும் ஓரிடம் என்று கூறலாம். மேலும் மாதாந்திர பில்கள், கடனுக்கான இ.எம்.ஐ., சேமிப்புக்கான எஸ்.ஐ.பி., இன்சூரன்சுக்கான ப்ரீமியம் –இவை எல்லாவற்றுக்கும் நம் எஸ்.பி. அக்கவுன்ட்டில் ஸ்டாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கலாம். அரசு தரும் மானியங்கள் இடைத்தரகர்கள் இன்றி, நம் எஸ்.பி.அக்கவுன்ட்டை வந்தடைகின்றன.

வெளிநாடுகளுக்குச் செல்வோர் இன்டர்நேஷனல் டெபிட் கார்ட் வாங்கிக் கொண்டால் அந்நியச் செலாவணி பற்றிய கவலை இன்றி எஸ்.பி. அக்கவுன்ட்டில் உள்ள பணத்தை செலவழிக்கலாம். மேலும் நம் எஸ்.பி.அக்கவுன்ட்டுகளில் இருந்து உலகின் எந்த மூலைக்கும் பணத்தை அனுப்ப இயலும். இன்று பல வங்கிகளிலும் 18 முதல் 65 வயது வரை உள்ளவர்களுக்கு எஸ்.பி.அக்கவுன்டுடன் ஆக்சிடென்டல் டெத் இன்சூரன்சும் தருகிறார்கள். வருடத்திற்கு ரூ.100 செலுத்தினால் 2 லட்சம், ரூ. 200 செலுத்தினால் ரூ.4 லட்சம் இன்சூரன்ஸ் கிடைக்கிறது. வருடத்திற்கு 100 அல்லது 200 ரூபாய் செலுத்தி வங்கியில் ஒரு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன்மூலம் எளிதாக இதனைப் பெறலாம். நீங்கள் அக்கவுன்ட் வைத்திருக்கும் வங்கியில் இது குறித்த மேலதிகத் தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

ரெக்கரிங் டெபாசிட்: இன்றைய எஸ்.ஐ.பி.யின் (SIP) பழைய வடிவம்தான் ரெக்கரிங் டெபாசிட். இதிலும் மாதாமாதம் பணம் சேர்த்து, குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு வட்டியுடன் திரும்பப் பெறலாம். ஸ்கூல் பீஸ், தீபாவளி, பொங்கல் செலவுகள், சுற்றுலா, துணி மணி செலவுகள் போன்ற வருடாந்திரச் செலவுகளுக்கு தனித்தனியாக ஆர்.டி. ஆரம்பித்து சேர்த்து வந்தால், செலவு வரும் நேரம் திகைக்க வேண்டியிருக்காது.

பிக்சட் டெபாசிட்: பிக்சட் டெபாசிட் என்பது, பெரிய தொகையை டெபாசிட் செய்து மாதாந்திர வட்டி பெறுதல் அல்லது வட்டியை டெபாசிடிலிருந்து எடுக்காமல், அதனையும் குட்டி போட வைத்து பெரிய தொகையை இன்னும் பெரிய தொகையாக்குதல் என்ற இரு விதமான வழிகள் கொண்டது.

7 நாட்கள் முதல் 10 வருடங்கள் வரை பிக்சட் டெபாசிட்டுகளை ஆரம்பிக்கலாம். 5 வருட வரி சேமிப்புத் திட்டமும் உள்ளது. வங்கிகளில் வைக்கப்படும் டெபாசிட்டுகளுக்கு ரூ.5 லட்சம் வரை அரசின் உத்திரவாதம் உள்ளது. பிக் டிக்கட் ஐட்டம்ஸ் என்று அழைக்கப்படுகிற மேற்படிப்பு, திருமணம், வாகனம் வாங்குதல், வீடு வாங்குதல் போன்ற பெரிய செலவுகளுக்கு சேமித்துவர பிக்சட் டெபாசிட் உதவும். இவை போன்ற பெரிய செலவுகளுக்கு கண்டிப்பாகக் கடன் தேவைப்படும். அந்தக் கடனுக்கு பத்து பர்சன்டாவது டவுன் பேமென்ட் தர வேண்டியிருக்கும். அதைச் சேர்ப்பதற்கும் வங்கிதான் வழி.

கடன்கள் என்றதுமே நமக்கு உடனே நினைவுக்கு வருவதும் வங்கிகள்தான். கந்து வட்டிக்காரர்கள் கையில் சிக்கி சின்னாபின்னமடைந்த சாதாரண மக்களுக்கு ஆபத்பாந்தவனாக வந்தவை பொதுத் துறை வங்கிகள். இன்று தனியார் வங்கிகள், ஸ்மால் பைனான்ஸ் வங்கிகள், என்.பி.எஃப்.சி. என்று எத்தனை வந்தாலும், கடன்களுக்கு பொதுத்துறை வங்கிகள் விதிக்கும் கட்டணங்களும், வட்டி விகிதமுமே குறைவாக உள்ளன. வங்கிகள் தரும் கடன்கள், நகைக் கடன், வாகனக் கடன், வீட்டுக் கடன் என்று ஆரம்பித்து பிசினஸ்




லோன், கார்பரேட் லோன் என்று படிப்படியாக வளர்ந்தன.

டெலிகாம் மற்றும் டிஜிடலைசேஷன் வருகைக்குப் பின் வங்கிகளின் சேவை, இன்டர்நெட் பேங்கிங், போன் பேங்கிங், ஆர்.டி.ஜி.எஸ்., என்.இ.எஃப்.டி., ஐ.எம்.பி.எஸ். என்று மேலும் இறக்கை கட்டிப் பறக்கின்றன. பேங்க்கின் இன்டர்நெட் பக்கத்தில் எந்த நிதியாண்டில் நம்மிடமிருந்து எந்தெந்த நிறுவனங்கள் எவ்வளவு வரிப்பிடித்தம் செய்துள்ளன என்பதைக் காட்டும் 26ஏஎஸ் படிவம் காணக் கிடைக்கிறது.

எஸ்.பி. அக்கவுன்ட்டில் அதிகப் பணம் சேர்ந்துவிட்டால் வங்கிக்கு சென்று எப்.டி ஆரம்பித்ததெல்லாம் அந்தக் காலம். இன்று அதற்கென இருக்கும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தால் எப்பொழுதெல்லாம் நம் அக்கவுன்ட்டில் நாம் குறிப்பிட்ட அளவுக்கு மேல் பணம் சேர்கிறதோ, அப்பொழுதெல்லாம் ஒரு புதிய எப்.டி. ஒரு வருட காலத்திற்கு அன்றைய வட்டி விகிதத்தில் ஆரம்பிக்கப்படுகிறது. இதனால் உபரிப் பணம் குறைந்த வட்டியில் சேவிங்ஸ் அக்கவுன்ட்டில் இருப்பது தடுக்கப்படுகிறது. ஒருவேளை நம் சேவிங்ஸ் அக்கவுன்ட்டில் இருக்கும் பணத்தை விட அதிகப் பணத்திற்கு செக் கொடுத்தாலோ, அல்லது ஏ.டி.எம்.மில் எடுக்க முற்பட்டாலோ தேவையான அளவுப் பணம் இந்த எப்.டி.யில் இருந்து எஸ்.பி.அக்கவுன்ட்டுக்கு திரும்புகிறது.

முன்பெல்லாம் பிசினஸ் செய்பவர்களுக்கு மட்டுமே கரன்ட் அக்கவுன்ட் வசதி தரப்படும். இன்று உங்களிடம் ரூ.50000-க்கு பிக்சட் டெபாசிட் இருந்தால் போதும்; அதன் மீது ரூ.37500 வரை லிமிட் கொண்ட கரன்ட் அக்கவுன்ட்டை வங்கியில் கேட்டுப் பெறலாம். அவசரமாக ரூ.1000 தேவை என்றால் கூட இந்தக் கரன்ட் அக்கவுன்ட்டிலிருந்து செக் அல்லது ஏ.டி.எம். மூலம் எடுக்கலாம்; மறுநாளே கூட திரும்பக்கட்டலாம்; மறுபடி எடுக்கலாம். இதற்கான வட்டி, பிக்சட் டிபாசிட்டின் வட்டியைப் பொறுத்தது என்பதால் 8 சதவீதம் அல்லது 9 சதவீதம் வட்டியில் கடன் கிடைக்கிறது. பர்சனல் லோன், கிரெடிட் கார்டு போன்றவற்றில் 18 சதவீதம், 36 சதவீதம் என்று வட்டி கட்டுபவர்களுக்கு வெறும் 8 சதவீதத்தில் கடன் என்பது வரப்பிரசாதம் அல்லவா?

மியூச்சுவல் பண்டும், பங்குச் சந்தையும் மக்களின் மனதை ஆக்கிரமிக்கும் வரையில் தனிக் காட்டு ராஜாவாக விளங்கிய வங்கித் துறை இன்று பலம் குன்றுவதற்கு 3 காரணங்கள் உள்ளன:

முதலாவதாக, வங்கி பிக்சட் டெபாசிட்டுகளில் 1990கள் வரை 13 சதவீதமும், அதற்கு அதிகமாகவும் கிடைத்து வந்த வட்டி, தற்போது 3.50 சதவீதம் முதல் 7 சதவீதம் வரையே தரப்படுகிறது. (ஸ்மால் பைனான்ஸ் வங்கிகளில் அதிகம் கிடைக்கும்).

இரண்டாவதாக டெபாசிட்டுகளிலிருந்து கிடைக்கும் வட்டி ரூ. 40000-த்தை தாண்டினால் (சீனியர் சிட்டிசன்களுக்கு ரூ.50000) 10 சதவீதம் மூலவரிப்பிடித்தம் செய்யப்படுகிறது. இது முதலீட்டின் வளர்ச்சியை பாதிப்பதாக உள்ளது. (வரி கட்டவேண்டிய அவசியம் இல்லாதவர்கள் படிவம் 15 ஜி/எச் சமர்ப்பித்து வரிப் பிடித்தத்தை தவிர்க்கலாம்).

மூன்றாவதாக, வங்கி டிபாசிட்டுகளுக்கு ரூ.5 லட்சம் வரையே அரசின் உத்தரவாதம் உள்ளது. 'இந்த உத்தரவாதத்துக்கு அவசியம் வரப்போவதில்லை; ஏனெனில் நம் வங்கிகள் பலம் வாய்ந்தவை' என்று நாம் உணர்ந்தாலும், நெருடல் தொடர்கிறது.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் பொருளாதார உலகில் வங்கிகள் இன்றி நாம் செயல்படமுடியாது. வள்ளுவர் இன்றிருந்தால் 'பர்சனல் பைனான்ஸ் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் வங்கி வழி சேராதார்' என்று புதுக் குறளே எழுதி இருப்பார்.

ஆனால் போகும் இடங்களிலெல்லாம் புதிது, புதிதாக வங்கிக் கணக்குகள் ஆரம்பித்து ஒவ்வொன்றிலும் ரூ.500, ரூ.1000 என்று போட்டுவைப்பது தவறு. பொதுத் துறை வங்கிகளில் ஒன்று, தனியார் வங்கிகளில் ஒன்று என இரண்டு அக்கவுன்ட்டுகளை வைத்துக் கொண்டு மற்றவற்றை க்ளோஸ் செய்வது நல்லது.

நீங்கள் எத்தனை வங்கிகளில் அக்கவுன்ட் வைத்திருக்கிறீர்கள்?

**சுந்தரி ஜகதீசன்**

பெண்கள் வாழ்க்கைமுறை

# நீண்ட நேரம் சமையல் செய்யாதீர்கள்... பெண்களுக்கு பக்கவாதம், புற்றுநோய் அபாயம்- WHO எச்சரிக்கை

அம்மா... காலை உணவு ரெடியா:

ஐயோ... சாப்பாடு வைக்க இவ்வளவு நேரமா?, அம்மா... எனக்கு கொஞ்சம் காபி கொடுங்க: ...

இது தான் ஒவ்வொரு வீட்டிலும் காலை நேரத்தில் கேட்கப்படும் கேள்வியாக உள்ளது. கணவன் பிள்ளைகளுக்காக சமையல் அறையில் தினமும் பெண்கள் ஓடி ஓடி வேலை செய்கிறார்கள்.

சமையலின் ருசியை மட்டும் பார்க்கும் பலர் சமையலறை எப்படி இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். அங்குள்ள காற்று மாசுபட்டால் அது நம் வீட்டு பெண்களை பாதிக்கும்.

இந்தியப் பெண்கள் ஒரு நாளைக்கு மூன்றரை மணி நேரம் சமையலறையில் செலவிடுவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. பல வீடுகளில் சமையலறைக்குள் போதுமான வெளிச்சம் மற்றும் காற்று செல்லவும். அங்கு வெளியாகும் புகை மற்றும் வாயுக்களை காற்றோட்டம் செய்யவும் போதுமான காற்றோட்டம் இல்லை..

இது பல நாள்பட்ட நோய்களுக்கு வழிவகுக்கிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன. சமைக்கும் போது வெளிப்படும் புகை மற்றும் புகை உலகளவில் மில்லியன் கணக்கான மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது.

2020-ம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பு பாதுகாப்பற்ற சமையல் நடைமுறைகள் காரணமாக வீடுகளில் ஏற்படும் மாசுபாட்டால் ஆண்டுதோறும் 3.2 மில்லியன் பெண்கள் இறப்பதாக மதிப்பிட்டுள்ளது. இவற்றில், 32 சதவீதம் இதய நோய், 23 சதவீதம் பக்கவாதம், 21 சதவீதம் சுவாச நோய்கள்,



19 சதவீதம் மற்றும் 6 சதவீதம் நுரையீரல் புற்றுநோய் ஆகியவை பாதிக்க வாய்ப்பு உள்ளது.

சமையலறை வாயுவிலிருந்து வெளியாகும் நைட்ரஜன் டை ஆக்சைடை நீண்ட காலமாக உள்ளிழுப்பது ஆயிரக்கணக்கான ஆஸ்துமா தாக்குதல்களுக்கு காரணமாக இருக்கலாம்.

சமையலறையில் இருந்து வாயுக்கள் வெளியேறவில்லை என்றால் பல பிரச்சனைகள் ஏற்படலாம்.

சுவாச நோய்கள் தலைவலி, சோர்வு, கண்களில் எரிதல் கண்களில் நீர் வடிதல் மற்றும் அதிகரித்த ஒவ்வாமைகளை ஏற்படுத்தும்.

ஆஸ்துமா உள்ளவர்களுக்கு எரிச்சல் மற்றும் வீக்கம் ஏற்படும் அபாயம் அதிகம் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

கியாஸ் எரிவதால் அறைக்குள் நைட்ரஜன் டை ஆக்சைடு கார்பன் டை ஆக்சைடு மற்றும் கார்பன் மோனாக்சைடு வெளியாகின்றன. அதிக வெப்பநிலை எண்ணெயில் உணவை வறுக்கும்போது அதிக மாசுக்கள் வெளியிடப்படுகின்றன.

சிலர் இன்னும் மரம் மற்றும் கரியைப் பயன்படுத்தி சமைக்கிறார்கள். இது கார்பன் டை ஆக்சைடு நைட்ரஜன் ஆக்சைடுகள் மற்றும் புகையை அறைக்குள் வெளியிடுகிறது.

சமையல் அறையில் வெப்பமான வானிலை நீரிழப்பு மற்றும் ஹார்மோன் சமநிலையின்மை போன்ற பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும்.

நீண்ட நேரம் நின்று சமைப்பது கீழ் முதுகு மற்றும் குதிகால் மீது அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. பயோமாஸ் எரிபொருளை அதிகமாக உள்ளிழுப்பது பெண்களுக்கு நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் ஏற்படும் அபாயத்துடன் தொடர்புடையது. இது நுரையீரல் திசுக்களுக்கு நிரந்தர சேதத்தை ஏற்படுத்தும்.

சமைக்கும் போது வெளியாகும் புகை மற்றும் வாயுக்கள் வெளியேற அனுமதிக்க கதவுகள் மற்றும் ஜன்னல்கள் திறந்து வைக்கப்பட வேண்டும்.

முடிந்தவரை குறுகிய நேரத்தில் சமையலை முடிக்க முயற்சி செய்யுங்கள்.

அடிக்கடி சமையலறையை விட்டு வெளியே வந்து கொஞ்சம் தண்ணீர் குடித்து சிறிது நேரம் நடப்பது நல்லது.

புகை மற்றும் வாயுக்களை வெளியேற்றுவதற்கு வெளியேற்றும் விசிறிகள் மற்றும் புகைபோக்கிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

மின்சார அடுப்பு மூலம் இழப்பை ஓரளவு குறைக்கலாம்.

ஏற்கனவே சுவாசப் பிரச்சனைகள் உள்ளவர்கள் தூண்டல் அடுப்புகளைப் பயன்படுத்துவது நல்லது.

சமையலறைகள் சிறியதாகவும், காற்று மற்றும் வெளிச்சம் குறைவாகவும் இருக்கும்போது பெண்கள் நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

கியாஸ் மற்றும் சமையல் எண்ணெய்களை சூடாக்குவதால் வெளியாகும் வாயுக்களால் பெண்கள் ஆஸ்துமாவை உருவாக்கும் அபாயத்தில் உள்ளனர். வீட்டில் இருக்கும் பெண்களும் வெளியில் இருந்து வரும் தூசியால் நோய் வாய்ப்படுகிறார்கள் என சுவாச நோய் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# பட்டுப்புடவையில் கறையா? இனி கவலை வேண்டாம்

பெண்களின் மனதுக்கு நெருக்கமான பட்டுப்புடவையில் கறை ஏற்படும்போது, அவர்கள் கலங்கிவிடுவார்கள். ஆனால், அதிகம் அலட்டிக்கொள்ளாமல், பட்டுப் புடவை கறைகளை நீக்க முடியும். அதுகுறித்து...

பூஜை போன்றவற்றின்போது பட்டுப் புடவையில் எண்ணெய் பட்டு விடலாம். அப்படி எண்ணெய்க் கறை பட்டால், நேரத்தை வீணடிக்காமல் உடனடியாகஈரம்இல்லாதசுத்தமான காட்டன் துணியை கொண்டு அந்த இடத்தில் ஒற்றி எடுக்க வேண்டும். துணி கிடைக்காவிட்டால், 'டிஷ்யூ' பேப்பர் கொண்டும் குறிப்பிட்ட இடத்தில் ஒற்றி எடுக்கலாம்.

மிகவும் கவனமாக இதை செய்ய வேண்டும். கறைபட்ட இடத்தை அழுத்தி தேய்க்கக் கூடாது. அழுத்தி தேய்த்தால் மற்ற இடங்களுக்கும் கறை பரவும் வாய்ப்புள்ளது. அதனால் முடிந்தவரை எண்ணெய் பட்ட இடத்தை மட்டும் மென்மையாக ஒற்றி எடுக்க வேண்டும்.

இந்த மாதிரி துணி அல்லது டிஷ்யூ பேப்பரால் ஒற்றி எடுத்த பின்னர், அந்த இடத்தில் டால்கம் பவுடர் தூவி சுத்தம் செய்ய வேண்டும். பவுடர் தூவியதும், கறைபட்ட இடத்தை குழாயில் ஓடும் நீரில் அலசினால் போதும். படிந்துள்ள எண்ணெய், அழுக்குகள் எல்லாமே நீங்கிவிடும். மறந்தும் கூட வெந்நீரில் கறையை நீக்க முயற்சி செய்ய வேண்டாம். வெந்நீர் பட்டால் கறை நீங்கவே நீங்காது.



சோப்பு கரைசலை வைத்தும் பட்டுப்புடவையில் உள்ள கறைகளை நீக்க முடியும். இதற்கு கடின சோப்பை பயன்படுத்தாமல் மென்மைதன்மைகொண்ட லிக்விட் சோப்பை உபயோகிக்கலாம்.

லிக்விட் சோப்பை குளிர்ந்த தண்ணீரில் கரைத்து, அதை ஒரு சுத்தமான காட்டன் துணியில் நனைத்துக்கொள்ள வேண்டும். இதை, விடாப்பிடி யான கறையின் மீது மெதுவாக வைத்து தேய்க்க வேண்டும். வேகமாகவோ அல்லது அழுத்தி துடைத்தாலோ பட்டுப்புடவையில் உள்ள நூலிழைகள் அறுந்துவிடும் வாய்ப்புள்ளது.

எனவே, மெதுவாக தேய்க்க வேண்டும். அடுத்தகட்டமாக, இந்த நுரைகளை நீக்குவதற்கு கறை உள்ள இடத்தை குளிர்ந்த நீரால் அலச வேண்டும். அப்போது கறை நீங்கி, பட்டுப் புடவை பழைய நிலைக்கு வந்துவிடும்.







உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!



# சத்தீஷ்கார்: 26 மாவோயிஸ்டுகள் போலீசில் சரண்



சத்தீஷ்கார், மராட்டியம், ஜார்க்கண்ட், ஒடிசா, மத்திய பிரதேசம், தெலுங்கானா, ஆந்திரா உள்பட பல்வேறு மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் உள்ளது.

நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு போலீஸ் படையுடன், மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் நாட்டில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை முழுவதும் ஒழிக்க மத்திய அரசு காலக்கெடு நிர்ணயித்துள்ளது. இதையடுத்து, மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டோ, சரண் அடைந்தோ வருகின்றனர்.

இந்நிலையில், சத்தீஷ்கார் மாநிலத்தை சேர்ந்த 26 மாவோயிஸ்டுகள் இன்று ஆயுதங்களை கைவிட்டு போலீசில் சரணடைந்துள்ளனர். அம்மாநிலத்தின் நாராயணபூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களை சேர்ந்த 8 பெண்கள் உள்பட 26 மாவோயிஸ்டுகள் சரணடைந்துள்ளனர். மாநில அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'உங்கள் நல்ல கிராமம்' என்ற திட்டத்தால் ஈர்க்கப்பட்டு மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை கைவிட்டுள்ளனர். சரணடைந்த மாவோயிஸ்டுகளின் தலைக்கு மொத்தம் 89 லட்ச ரூபாய் சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது என போலீசார் தெரிவித்துள்ளனர்.

# எஸ்.ஐ.ஆர்க்கு எதிராக மம்தா பானர்ஜி பிரமாண்ட பேரணி

பீகார் மாநிலத்தைத் தொடர்ந்து சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள தமிழகம், கேரளம், மேற்கு வங்காளம் உள்ளிட்ட மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். எனும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நடைபெற்று வருகிறது. அடுத்த மாதம் (டிசம்பர்) 4-ந் தேதியுடன் இந்தப்பணியை நிறைவு செய்ய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டு உள்ளது. இன்னும் 9 நாட்களே உள்ள நிலையில் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. எஸ்.ஐ.ஆர் பணிகளுக்கு இந்தியா கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதனிடையே எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபட்டு வரும் அரசு ஊழியர்கள் கடும் மன அழுத்தத்திற்கு ஆளாகி வருவதாகக் கூறப்படுகிறது. மேற்கு வங்காளத்தில் எஸ்ஐஆர் பணிகளில் ஈடுபட்ட பலரும் இறக்க நேரிட்டதாக திரிணமூல் காங்கிரஸ் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

இந்நிலையில் எஸ்ஐஆர் பணிகளை நிறுத்தக்கோரி மேற்குவங்கத்தில் முதல்வர் மமதா பானர்ஜி தலைமையில் இன்று(நவ.25) வடக்கு 24 பர்கானா மாவட்டத்தில் பிரமாண்ட பேரணி நடைபெற்றது. பங்கான் சந்த்பாரா பகுதியில் இருந்து தாகூர் நகரில் உள்ள மத்வா வரை 3 கிமீ தூரத்திற்கு மமதா பேரணியில் நடந்தே சென்றார். இந்த பேரணியில் மேற்கு வங்க மந்திரிகள், திரிணமூல் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் இந்த பேரணியில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து தாகூர் நகரில் உள்ள பள்ளியில் மம்தா பானர்ஜி பேசியதாவது:-

ரெயில்கள், விமானங்கள், எல்லைகள் ஆகிய மத்திய அரசின் அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. பாஸ்போர்ட், சுங்கம், கலால் வரி அனைத்தையும் மத்திய அரசு கவனித்துக்கொள்கிறது. பின்னர் எப்படி மேற்கு வங்காளத்தில் வங்காள தேசக்காரர்களை நாங்கள் ஊடுருவ வைத்தோம்?

எஸ்ஐஆர் பணிகளை அவசரம் அவசரமாகச் செய்கிறார்கள். மக்களாகிய உங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டால் மத்திய அரசும் நீக்கப்பட வேண்டும். இவ்வளவு அவசரமாக ஏன் எஸ்ஐஆர் பணிகள் நடக்கின்றன? ஆளும் கட்சியைப் பற்றி எனக்கு எந்த பயமும் இல்லை. பாஜக அரசியல் ரீதியாக என்னை எதிர்த்துப் போராடி தோற்கடிக்க முடியாது. 2026ல் பாஜக ஆட்சி இருக்காது.

இவ்வாறு அவர் கூறினார்.




பாஜகவின் அஸ்திவாரத்தையே அசைக்கும் வகையில் போராட்டம் நடத்தப்படும் என மம்தா பானர்ஜி அறிவித்து இருந்தார்.

உங்கள் வியாபாரம்
உலகம் முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்!

# இந்திய செய்திகள்

# தேர்தல் கமிஷன் பா.ஜனதா கமிஷனாக மாறிவிட்டது - மம்தா பானர்ஜி தாக்கு



மேற்கு வங்கத்தில் நடந்து வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கு எதிராக போராட்டம் நடந்தது. இதில் அம்மாநில முதல்-மந்திரி மம்தா பானர்ஜி பங்கேற்று பேசியதாவது:-

தேர்தல் கமிஷன் ஒரு பாரபட்சமற்ற அமைப்பாக இல்லை. அது பா.ஜனதா கமிஷனாக மாறிவிட்டது. அரசியல் ரீதியாக என்னை எதிர்த்துப் போராடி தோற்கடிக்க முடியாது என்று பா.ஜனதாவிடம் பலமுறை கூறிவிட்டேன். மேற்கு வங்கத்தில் எனக்கு அவர்கள் சவால் விடுத்தால், நாடு முழுவதும் பா.ஜனதாவின் அடித்தளத்தை ஆட்டம் காண செய்வேன்.

சட்டவிரோதமாக ஊடுருவிய வங்கதேசத்தினரை அகற்றுவதே சிறப்பு தீவிர திருத்தப்பணியின் நோக்கம் என்றால், ஏன் பா.ஜனதா ஆளும் மாநிலங்களில் இந்த பணி நடத்தப்படுகிறது? இரட்டை எஞ்சின் ஆட்சியில் உள்ள மாநிலங்களில் ஊடுருவல்காரர்கள் உள்ளனர் என்பதை அந்த கட்சி ஒப்புக் கொள்கிறதா? தேர்தல் கமிஷனும், பா.ஜனதாவும் இணைந்து உருவாக்கியுள்ள பேரழிவு சூழ்நிலையை வரைவு வாக்காளர் பட்டியல் வெளிப்படுத்தும். பீகார் தேர்தல் முடிவு இந்த சிறப்பு திருத்தப்பணியின் விளைவுதான். அங்குள்ள எதிர்க்கட்சிகளால் பா.ஜனதாவின் விளையாட்டை புரிந்து கொள்ள முடியாததால் இந்த முடிவு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

# தோழியின் அறைக்கு வாலிபருடன் சென்ற கல்லூரி மாணவி....அடுத்து ஏற்பட்ட சோகம்

ஆந்திரா மாநிலம் அன்னமய்யா மாவட்டத்தில் உள்ள பிக்கிம்வாரிபள்ளி கிராமத்தை சேர்ந்தவர் தேவிஸ்ரீ (வயது 21). இவர் கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள ஒரு புகழ்பெற்ற கல்லூரியில் பி.பி.எம். படித்து வந்தார். இதற்காக கல்லூரி விடுதியிலேயே தேவிஸ்ரீ தங்கியிருந்தார்.

தேவிஸ்ரீ தனக்கு பழக்கமான பிரேம் வர்தன் என்ற வாலிபருடன் பெங்களூரு வடக்கு தாலுகாவின் தம்மேனஹள்ளியில் தனது தோழியின் அறைக்கு சென்றார். அறையில் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அப்போது தேவிஸ்ரீயின் தோழி வெளியே சென்றிருந்தார். மாணவி அறையில் பிரேம் வர்தன் திடீரென தேவிஸ்ரீயை கொடூரமாக கொலை செய்துவிட்டு தப்பி சென்றார்.

இது குறித்து தகவல் கிடைத்ததும் மத நாயக்கனஹள்ளி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து அறையில் ரத்த வெள்ளத்தில் கிடந்த தேவிஸ்ரீ உடலை மீட்டு விசாரணை நடத்தினர். மாணவியை, பிரேம் வர்தன் கூர்மையான ஆயுதத்தால் தாக்கி கொலை செய்திருப்பது தெரிய வந்தது.



இதையடுத்து போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து தலைமறைவாக உள்ள பிரேம் வர்தனை தேடி வருகின்றனர். தேவிஸ்ரீயை அவர், காரணத்திற்காக கொலை செய்தார்? அவர்கள் என்ன இடையே என்ன பிரச்சினை ஏற்பட்டது?' என்பது தெரியவில்லை.

பிரேம் வர்தனை கைது செய்தால் தான் கொலைக்கான முழு காரணங்களும் தெரியவரும். தேவிஸ்ரீயின் பெற்றோர் நேற்று பெங்களூரு வந்தனர். அவர்கள் தேவிஸ்ரீயின் உடலை பார்த்து கதறி அழுதனர். பிரேத பரிசோ தனைக்கு பிறகு குடும்பத்தினரிடம் அவரது உடல் ஒப்படைக்கப்பட்டது.



# உடல்நலத்துக்கான வழிமுறைகள்!

உடல்நலம்

இன்றைய கால கட்டத்தில் அன்றாடம் எல்லோரும் உடலில் ஏதோ ஒரு சிறிய பாதிப்போ அல்லது பெரிய பாதிப்புடனோ உள்ளனர். தலைவலி, சைனஸ், மூட்டுவலி, முதுகு வலி, சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம் போன்ற வியாதிகளை தன் குடும்ப உறுப்பினர்போல் அதனுடன் கைகோர்த்து வாழ்ந்து வருபவர்கள் ஏராளம். ஆனால் அநேகர்

★ உடல் ரீதியான பல பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். ★ காய்ச்சல் வந்து விட்டாலே உடல் சோர்ந்து விடும். ★ உடல் வலி, மூட்டு வலி என்று சொல்லாதவர்கள் மிகக்குறைவே. ★ எளிதில் பலவீனப்பட்டு இருப்பார்கள். ★ உணவு சாப்பிட பிடிக்காத உணர்வு இருக்கும். ★ இதுவே மன அழுத்தத்தினையும், கவலையையும் கொடுத்து விடும்.

★ தூக்கத்தில் தொந்தரவு இருக்கும் ★ செய்ய வேண்டிய வேலைகள் மறந்து போகும். ★ சிகிச்சைக்கு பின் உடல்தேறுவதற்கு காலம் பிடிக்கும், ★ சிலருக்கு மருத்துவமனை, இடைவிடாத கவனிப்பு அவசியம் தேவை என்ற சூழ்நிலை ஏற்படலாம். ★ சிலருக்கு நோய் முழுமையாக குணமடையாது இருக்கலாம்.

★ மருந்துகள் முறையாய் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியம். ★ குடும்ப ஆதரவு அவசியம். ★ நோயின் தீவிரத் தன்மைக்கேற்ப அவசர சிகிச்சை தேவைப்படலாம். ★ உடல் இயக்க குறைவு, உறுப்புகள் செயலிழப்பு ஏற்படலாம். ★ ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படலாம். ★ சுகாதார பராமரிப்பு அவசியம். ★ நோயின் வகையையும், நிலைமையையும் பார்க்க வேண்டும்.

★ பரம்பரை வகை பாதிப்புகள் இருக்கலாம். ★ உடல்நிலை பற்றிய விழிப்புணர்வு அவசியம். ★ மருத்துவ பரிசோதனைகள் அவசியம். ★ வல்லுநர்கள் ஆலோசனை தேவைப்படலாம். ★ அத்தியாவசிய உதவிகள் அவசியம். ★ ஆரம்ப நிலையிலேயே கவனிப்பது நல்லது.

★ மருத்துவமனை அருகிலேயே இருப்பது நல்லது. ★ நிரந்தர கண்காணிப்பு தேவைப்படலாம். ★ தடுப்பூசிகள் அவசியம். ★ அறுவை சிகிச்சை அவசியப்படலாம். ★ பேச்சு குறையலாம். ★ பயிற்சிகள் தேவை. ★ நோய் எதிர்ப்பு சக்தி வேண்டும். ஆக ஒரு நோய் பாதிப்பு என்பது சாதாரண விஷயமல்ல. இந்த உடலோடு விடாமல் போராடினால்தான் ஆரோக்கியம் பெற முடியும். அதற்கான விழிப்புணர்வுடன், வழிமுறைகளை பின்பற்றுவது அவசியம் ஆகும்.

உடல் நலம் பற்றி மேலும் சில செய்திகளை பார்ப்போம்

★ மிகவும் மனச்சோர்வு இருக்கும்போது ஒரு கப் காபி உதவும். ஒரு கப் மட்டும் போதும். அடிக்கடி பருகுவதையும் அதையே பழக்கமாக்கிக் கொள்வதும் வேண்டாம். ★ அமெரிக்காவின் இருதய ஆராய்ச்சி நிறுவனம் ஒரு செல்லப் பிராணி வைத்துக் கொள்பவர்களுக்கு உயர் ரத்த அழுத்தம் குறைகின்றது. இருதய பாதிப்பு குறைகின்றது என்று கூறியுள்ளது. ★ ஸ்ட்ரெஸ் அதிகமானால் இருதய பாதிப்பு கூடுகின்றது. சர்க்கரை நோய் பிரிவு, 2 பாதிப்பு வரவும் வாய்ப்புகள் அதிகம். காரணம் உடலில் கார்டினால் அளவு அதிகமாவது தான். ★ மனித மூக்கு 50 ஆயிரம் வகை வாசனைகளை உணர முடியும். ★ நல்ல உடற்பயிற்சி நல்ல தூக்கத்தினை தரும்.

★ முறையான தூக்கமின்மை நோய் எதிர்ப்பு சக்தியினை கெடுக்கும். ரத்த அழுத்தம், இருதய ஆரோக்கியத்தினையும் பாதிக்கும். சில அறிகுறிகளை சற்றும் கால தாமதிக்காமல் உடனடியாக கவனிக்க வேண்டும்.

★ நெஞ்சில் வலி, நெஞ்சில் அழுத்தம். ★ மூச்சு வாங்குதல், ஆஸ்துமா, இருமல். ★ திடீரென



வேகமாக எடை குறைதல். ★ திடீரென பொறுக்க முடியாத தலைவலி. ★ திடீரென தடுமாறி குளறி பேசுதல்.

★ கை, கால்களில் குறும்பு, திடீரென மரத்து போகுதல். ★ பார்வை தெளிவின்மை. ★ சிறுநீர், கழிவுப் பொருள் வெளியேற்றத்தில் ரத்தம். ★ அடிக்கடி வயிற்று வலி. ★ தொடர்ந்து அதிக ஜுரம். ★ சக்தியின்மை, தொடர்ந்து சோர்வு.

இந்த அறிகுறிகளை அலட்சியமாக விட்டு விடாமல் உடனடியாக கவனிக்க வேண்டும். நமக்கு நன்மை பயப்பவர்களை எந்நாளும் நாம் காயப்படுத்தக் கூடாது. ★ யாரிடம் இருக்கும் பொழுது நீங்கள் பத்திரமாக, கவலை இன்றி உணருகின்றீர்களோ. அவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ நீங்கள் நீங்களாகவே இருக்கலாம். உங்கள் செயல்களை எடை போட்டு பாருங்கள். ★ யார் உங்களை புரிந்து கொண்டு உங்களுக்கு உதவியாய் இருக்க முயற்சி செய்கின்றார்களோ அவர்களை காயப்படுத்தாதீர்கள்.

★ யாரை உங்களால் முழுமையாக நம்ப முடியுமா அவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ உங்களுக்காக அன்பு, அக்கறையை யார் முழுமையாக கொடுக்கிறார்களோ அவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ உங்களுக்கு கொடுக்கும் வாக்குகளை யார் நிறைவேற்றுகின்றார்களோ அவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ உங்கள் கருத்துக்கு யார் முதல் முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ அவர்களை காயப்படுத்தாதீர்கள்.

★ வார்த்தை, செயல் மாறாது இருப்பவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ உங்கள் பேச்சை யார் முழு கவனத்துடன் கேட்கின்றார்களோ. அவர்களை காயப் படுத்தாதீர்கள். ★ உங்கள் நியாயமான கனவு, லட்சியங்களுக்கு ஆதரவு கொடுப்பவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ உங்களை ஊக்கப்படுத்துபவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ உங்களுடன் உபயோகமாக முன்னேற்றமான வழியில் நேரம் செலவழிப்பவர்களை காயப்படுத்தாதீர்கள்.

★ தவறு செய்து விட்டால் மன்னிப்பு கேட்பவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ உங்களுக்குரிய எல்லைகளில் தலையீடு செய்யாதவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ உங்களுடன் மனம் விட்டு உண்மையாய் பேசுபவர்களை காயப்படுத்தாதீர்கள்.

★உங்களுடன்இருக்கும்பொழுது மகிழ்ச்சியாய் இருப்பவர்களை காயப்படுத்தாதீர்கள். ★ நீங்கள் மகிழ்ச்சி அடைந்தால் அவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள்.

இப்படிப்பட்டவர்கள் 99 சத விதம் உங்கள் பெற்றோர்கள்தான். அவர்களை எந்நாளும் எந்த நேரத் திலும் கைவிடக்கூடாது. இப்படிப்பட்ட பல பெற்றோர்கள் இன்றுபிள்ளைகளால்ஒதுக்கப்பட்டு மனஉளைச்சலுக்கு ஆளாகி நோய் வாய்பட்டு காலம் தள்ளுகின்றனர். இவர்கள் இனியாவது அவர்கள் பிள்ளைகளால் நன்கு கவனிக்கப்பட வேண்டும்.

குடும்ப மருத்துவர்

சிலரின் ஒரு பொதுவான குறை என்ன வென்றால் ஒரு சின்ன உடல்நல கோளாறு என்றாலும் நிறைய பரிசோதனைகள் செய்து செலவு வைத்து விடுகின்றார்கள் என்பதுதான். சில சின்ன அறிகுறிகள் உடனடியாக கவனிக்கப் படாவிட்டால் ஆபத்தில் கூட கொண்டு விடலாம். இதுவும் நிகழ்ந்து கொண்டுதானே இருக்கின்றது. ஆகவேதான் 'குடும்ப மருத்துவர்' என்று இருந்தால் உங்களுக்கு அநேக நன்மைகள் நடக்கும். அவருக்கு உங்கள் உடல் ஆரோக்கியம், பாதிப்பு என்பது நன்கு தெரியும்.

அமைதியாய் சிறு அறிகுறிகளுடன் ஒருவரைத் தாக்கும் பெரிய பாதிப்புகளை பாருங்கள்.

'மாரடைப்பு' - இது முதியோர்கள், பெண்கள், சர்க்கரை நோய் பாதிப்பு உடையவர்களுக்கு ஏற்படும். இதன் அறிகுறிகள் சில நேரங்களில் ஜீரண கோளாறு, சோர்வு என்று சிறிதாக தெரியும். இதனால் பாதிப்பு ஏற்பட்டவர்களே கவனமின்றி இருந்து விடலாம். ஆனால் சிறுவேலை செய்தாலும் அதிக சோர்வு, ஓய்வில் கூட மூச்சு வாங்குதல், வயிற்றுவலி, வயிற்று பிரட்டல், ஜீரணமின்மை, தலைசுற்றல், தூக்கமின்மை, சர்க்கரை நோய் பாதிப்பு என இருந்தால் உடனடியாக உங்கள் குடும்ப மருத்துவரை அணுகுங்கள்.

★ அடிக்கடி கிருமி, பூஞ்சை பாதிப்பு. கை, கால்களில் குறுகுறுப்பு இவை இருந்தால் உங்கள் டாக்டர் சர்க்கரைநோய் பரிசோதனையை செய்வார்.

★ உடல் சதா அரிப்பு, வறண்ட சருமம், கால், கணுக்கால் வீக்கம், கண்ணை சுற்றிய உப்பிசம், நுரைத்த சிறுநீர், பசியின்மை போன்றவை இருந்தால் சிறுநீரக பரிசோதனை செய்யப்படும்.

மேலும் சில பாதிப்புகளை குறிப்பிடலாம். ஆனால் அது அச்சத்தினை தரக் கூடாது என்பதற்காக எந்த சிறு அறிகுறியினையும் அலட்சியம் செய்யாது குடும்ப மருத்துவரை அணுகுங்கள் என்று வலியுறுத்தப்படுகின்றது.

இவைகளை நாம் அன்றாட உணவில் அடிக்கடி பயன் படுத்துகின்றோமா?

முட்டை: இன்று அசைவ உணவு உண்பவர்கள் மற்றும் சைவ உணவு உண்ணும் பலரும் உணவில் இதனை சேர்த்துக் கொள்கின்றனர்.

சிறந்த புரத சத்து கொண்டது. இதன் மஞ்சள் கருவில் உள்ள சத்து கண் ஆரோக்கியத்திற்கு பெரிதும் உதவுகின்றது. எடை குறைக்க விரும்புபவர்களுக்குக் கூட இது பரிந்துரைக்கப்படுகின்றது.

பருப்பு வகைகள்: புரதம், நார்சத்து, போலேட், இரும்புசத்து கொண்டது. செரிமானம் எளிதானது. சுண்டல் வகைகள் எளிதாக சமைக்க முடியும். வைட்டமின்கள், தாதுக்கள் நிறைந்தது. குழந்தை முதல் பெரியவர் வரை அனைவருக்கும் அவசியமானது. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. இருதயம், ரத்த ஓட்டம் சீராக இயங்க உதவுவது.

புரோகலி: வைட்டமின் 'சி', 'கே' சத்து நிறைந்தது. நார் சத்து கொண்டது. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது.

பூண்டு: இது நம் நாட்டு சமையல் முறையில் அதிகம் சேர்க்கப்படுவது மிக நல்ல செயல். உயர் ரத்த அழுத்தம் கட்டுப்படும். கெட்ட கொழுப்பு கட்டுப்படும். இருதய ஆரோக்கியம் கூடும். கிருமிகள் அழியும்.

வால்நட்: தினமும் இதனை 2 அல்லது 3 உண்பது மிகச் சிறந்தது. சில சில மாறுதல்கள் உணவில் ஏற்படும் பொழுது சிறந்த நன்மைகள் கூடும்.

கமலி ஸ்ரீபால்

# உலக மீன்வள தின கொண்டாட்டம்: நலத்திட்ட உதவி-களை வழங்கிய அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன்




உலக மீன்வள தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ஆண்டுதோறும் நவம்பர் 21-ஆம் நாள் 'உலக மீன்வள தினமாக' உலகம் முழுவதிலும் கொண்டாடப்படுகிறது. 2025-ம் ஆண்டின் உலக மீன்வள தினம் 'கடல் உணவுப் பொருள் ஏற்றுமதியில் மதிப்புக்கூட்டுதலை வலுப்படுத்துதல்' ('Strengthening the value addition in Seafood exports)' என்ற கருப்பொருளின் அடிப்படையில் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் உலக மீன்வள தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இன்று சென்னை நந்தனத்தில் அனமந்துள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துனற இயக்குநர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு, மீன்வளம்- மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துனற அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தலைமையேற்று, மாநிலத்தின் சிறந்த உள்நாட்டு மீன்வளர்ப்போர், சிறந்த வண்ண மீன் வளர்ப்போர், கடலில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்போர், சிறந்த மேலாண்மை நடைமுறையினை பின்பற்றும் மீன்பிடி துனறமுகம், சிறந்த மீனவர் கூட்டுறவு சங்கம், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்கு முறை சட்டத்தினை திறம்பட செயல்படுத்திய பணியாளர்கள் குழு, சிறந்த விற்பனையாளர் (TNFDC) ஆகிய பிரிவுகளின் கீழ் விருதுகளை வழங்கினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு மீனவர் நலவாரிய பயனாளர்களுக்கும், நன்னீர் மீன் வளர்ப்புக்கான குளங்களின் கட்டுமானம் மற்றும் உள்ளீடுகள் / இடு பொருட்களுக்கான மானியம், சிறிய உயிர்கூழ்ம (பயோபிளாக்) குளங்கள் அமைத்து மீன் வளர்ப்பிற்கான மானியம், குளிர்காப்பிடபட்ட நான்குசக்கர வாகனம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில், மீனவர் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர். இறுதியில், அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன் மற்றும் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் மீனவர் நல வாரிய தலைவராக நியமிக்கப்பட்ட ஜோசப் ஸ்டாலினை அவரது இருக்கையில் அமர வைத்தனர்.

உங்கள் வியா-பாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

## தமிழக செய்திகள்

# அமைச்சர் அன்பில் மகேஷ்-க்கு 'வெள்ளி யானை' விருது வழங்கி கவுரவம்




பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் உயரிய விருதான வெள்ளி யானை விருது அமைச்சர் அன்பில் மகேஷ்-க்கு வழங்கப்பட்டது.

இதுகுறித்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:-

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற #19thNationalJamboree நிகழ்வில் @bsgnhq இயக்கத்தின் மிக உயரிய அங்கீகாரமான வெள்ளி யானை விருதினைப் பெற்றதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். சாரண இயக்கத்தின் இந்த உயரிய விருதினை, உ.பி. ஆளுநர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

மிக உயரிய வெள்ளி யானை விருதினை மாணவர்களின் நலன் காக்கும் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், எதிர்கால இந்தியாவின் நம்பிக்கைத் தூண்களான என் அன்பு மாணவச் செல்வங்கள் மற்றும் இளைஞர்களுக்கும் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

அன்பு, மனிதநேயம் மற்றும் ஒழுக்கத்துடன் கூடிய வலிமையான சமுதாயத்தைப் படைக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம். அன்பும் நன்றியும்!


இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

# வங்கக்கடலில் உருவாகும் டிட்வா புயல்: தமிழகத்தில் அதிகனமழைக்கு வாய்ப்பு - வெதர்மேன் ஹேமச்சந்திரன்

மலாக்கா ஜல சந்தி, தெற்கு அந்தமானை ஒட்டிய கடல் பகுதியில் சென்யார் புயல் உருவானது. சென்யார் புயலால் தமிழ்நாட்டிற்கு எந்த பாதிப்பும் இருக்காது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் நிலவும் தாழ்வுப் பகுதி நவம்பர் 29ம் தேதி புயலாக மாறக்கூடும் என வெதர்மேன் ஹேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது புயலாக உருவெடுக்கும் பட்சத்தில் 'டிட்வா' என பெயரிடப்படும் என்றும் டிட்வா புயலால் தமிழகத்திற்கு நவம்பர் 29,30ம் தேதிகளில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக ஹேமச்சந்திரன் கூறியுள்ளார்.



# அரசியலமைப்பில் சமூக நீதிக்கு முன்னுரிமை- ஜனாதிபதி திரவுபதி முர்மு

75-வது அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு தின நிகழ்ச்சி நடந்தது.

இதில் ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, மேல்-சபை எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜூன கார்கே மற்றும் மத்திய மந்திரிகள், எம்.பி.க்கள் கலந்து கொண்டனர்.

இதில் மலையாளம், மராத்தி, நேபாளி, பஞ்சாபி, போடோ, காஷ்மீரி, தெலுங்கு, ஒடியா, அசாமி ஆகிய 9 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்டார்.

பின்னர் நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பேசியதாவது:-

1949-ம் ஆண்டு நவம்பர் 26-ந்தேதி அன்று, அரசியலமைப்பு சபை உறுப்பினர்கள் இந்திய அரசியலமைப்பை உருவாக்கும் பணியை முடித்தனர். அதே நாளில், இந்திய மக்களாகிய நாம் நமது அரசியலமைப்பை



ஏற்றுக்கொண்டோம். வரைவுக் குழுவின் தலைவரான அம்பேத்கர் நமதுஅரசியலமைப்பின் முக்கிய சிற்பிகளில் ஒருவர் ஆவார்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் நமது தனிப்பட்ட, ஜனநாயக உரிமைகள் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்பினர்.

காலனித்துவ மனநிலையை விலக்கி தேசிய வாத சிந்தனையை ஏற்றுக் கொள்ள அரசியலமைப்பு வழிகாட்டும் ஆவணம் ஆகும்.

முத்தலாக் தொடர்பான சட்டம் மூலம், நமது சகோதரிகள் மற்றும் மகள்களின் அதிகாரமளித்தல் மற்றும் சமூக நீதியை நோக்கி பாராளுமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகளை எடுத்தது. சுதந்திரத்திற்குப் பிறகு மிகப்பெரிய வரி சீர்திருத்தமான ஜி.எஸ்.டி. வரி, நாட்டின் பொருளாதார ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டது.

370-வது பிரிவை ரத்து செய்ததன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் ஒருங்கிணைப்புக்குத் தடையாக இருந்த ஒரு தடை நீக்கப்பட்டது.

அரசியலமைப்பில் சமூக நீதிக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. சமூக நீதியை அடைய இந்தியா பாடுபடுகிறது.

பெண்கள், இளைஞர்கள், எஸ்.சி, எஸ்.டி, விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர், புதிய நடுத்தர வர்க்கத்தினர் நமது ஜனநாயக அமைப்பை வலுப்படுத்தி வருகின்றனர். 25 கோடி மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்தது நாட்டின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாகும். இந்தியா உலகிற்கு ஒரு புதிய வளர்ச்சி மாதிரியை வழங்கி வருகிறது. இந்திய பாராளுமன்றம் உலகுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது. இவ்வாறு திரவுபதி முர்மு பேசினார்.

www.kathiroli-media.ca

# 8000mAh பேட்டரியுடன் இந்தியா வரும் புது ஒன்பிளஸ் ஸ்மார்ட்போன்

இந்தியாவில் ஒன்பிளஸ் 15 சிரீசின் அடுத்த ஸ்மார்ட்போன் ஒன்பிளஸ் 15ஆ அடுத்த மாதம் 17ஆம் தேதி அறிமுகப்படுத்துவதை ஒன்பிளஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த ஸ்மார்ட்போன் ஆண்ட்ராய்டு 16 சார்ந்த ஆக்சிஜன் ஓஎஸ் 16 கொண்டிருக்கும். இத்துடன் டஸ்ட் மற்றும் வாட்டர் ரெசிஸ்டண்ட் வசதிக்காக ஐக66, IP68, IP69 மற்றும் ஐக69ஓ மதிப்பீடுகளுடன்வருகிறது. மேலும் இந்த ஸ்மார்ட்போனில் வாழ்நாள் முழுக்க உத்தரவாதத்துடன் கிரீன் லைன் (பச்சை கோடு) பிரச்சினை ஏற்படாது என ஒன்பிளஸ் உறுதியளிக்கிறது.

புதிய ஒன்பிளஸ் ஸ்மார்ட்போன்





சார்கோல் பிளாக் மற்றும் மிண்ட் பிரீஸ் வண்ணங்களில் வரும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது. இது இந்த வார இறுதியில் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட உள்ள ஒன்பிளஸ் ஏஸ் 6T-ஐ போலவே இருக்கும் என தெரிகிறது. இது ஸ்னாப்டிராகன் 8 ஜென் 5 மற்றும் 8000mAh பேட்டரி மூலம் இயக்கப்படுகிறது.

இதன் இந்திய மாடலில் 50MP + 50MP இரட்டை பின்புற கேமராக்கள் வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. இதன் சீன வெர்ஷனில் 50MP + 8MP கேமரா சென்சார்கள் இடம்பெறுகின்றன.

இந்த ஸ்மார்ட்போன் பற்றிய கூடுதல் விவரங்கள் அடுத்த வாரங்களில் வெளியிடப்படும் என்று ஒன்பிளஸ் கூறுகிறது. வழக்கம் போல், புதிய ஒன்பிளஸ் 15R ஸ்மார்ட்போனும் அமேசான் வலைதளத்தில் விற்பனை செய்யப்படும். அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு ஒன்பிளஸ் இந்தியா ஸ்டோர் மற்றும் ஆஃப்லைன் ஸ்டோர்களில் விற்பனைக்கு வரும்.

# புதிய அம்சங்களுடன் பயனர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த கூகுள் மேப்ஸ்




இன்றைய காலக்கட்டத்தில் ஸ்மார்ட்போனில் கூகுள் மேப்ஸ் இருந்தால் போதும் நாட்டின் எந்த பகுதிக்கும் யாரிடமும் வழி கேட்காமல் சென்று விடலாம். அந்த அளவிற்கு பிரபல வழிகாட்டி சேவை தளமாக கூகுள் மேப்ஸ் உள்ளது. தனது செயலில் புதிய அம்சங்களை கூகுள் மேப்ஸ் இணைத்துள்ளது. கூகுள் ஏ.ஐ.யான ஜெமினியுடன் கூகுள் மேப்ஸ் இணைக்கப்பட்டுள்ளது.

இதனால் பயனர்கள் தங்கள் செல்போனை தொடாமல் நிகழ்நேர உரையாடல்களில் ஈடுபட முடியும், மேலும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்துடன் கூகுள் மேப்ஸ் இணைக்கப்பட்டுள்ளது.

இதனால் சாலையில் உள்ள போக்குவரத்து தடைகள், மாற்றுப்பாதைகள் குறித்தான தகவல்கள் கிடைக்கும். விபத்து ஏற்படக்கூடிய பகுதிகளை நெருங்கும்போது பயனர்களை கூகுள் மேப்ஸ் இப்போது முன்கூட்டியே எச்சரிக்கும். இரு சக்கர வாகன ஓட்டுநர்களுக்காக, மேப்ஸ் புதிய அவதார் வசதியையும் வழங்குகிறது. பயண மேலாண்மையை எளிதாக்கும் வகையில், கூகுல் வாலட் இணைப்பும் வழங்கப்படுகிறது.

கூகுள் மேப்ஸ் மூலம் மெட்ரோ ரெயில் டிக்கெட் வாங்கும் வசதி உள்ளிட்டவையும் புதிய அம்சமாக இணைக்கப்பட்டுள்ளது.

# ஏஐ தொழில்நுட்பத்தை கண்மூடித்தனமாக நம்பாதீர்கள்: சுந்தர் பிச்சை எச்சரிக்கை

கூகுள் உடைய தாய் நிறுவனமான ஆல்பபெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை, செயற்கை நுண்ணறிவு (AI) குறித்து எச்சரித்துள்ளார். கூகுள் நிறுவனத்தின் ஜெமினி ஏஐ உடைய புழக்கம் அதிகரித்து வருகிறது.

அண்மையில் பிசிசிக்கு அவர் அளித்த பேட்டியில், செயற்கை நுண்ணறிவு பிழைகளை செய்ய வாய்ப்புள்ளது. எனவே அவை சொல்லும் அனைத்தையும் கண்ணை மூடித்தனமாகக் நம்பிவிடக் கூடாது. பயனர்கள் அவற்றை மேலும் ஒரு தகவல் ஆதாரமாகக் கருத வேண்டும்.

இந்தத் தொழில்நுட்பத்தின் முழு பலன்களையும் மக்கள் பெற வேண்டுமானால், ஏஐ தரும் தகவல்களுடன் மற்ற நம்பகமான தகவல் ஆதாரங்களையும் ஒப்பிட்டு பார்த்து உறுதி செய்துகொள்ள வேண்டும்' என்று தெரிவித்தார்.

மேலும் செயற்கை நுண்ணறிவுத் துறையில் முதலீடுகள் அதிகரித்து வருவது குறித்து பேசிய அவர், இந்த ஏஐ முதலீட்டு குமிழி வெடித்தால் எந்தவொரு நிறுவனமும் தப்ப முடியாது, எங்களுக்கும்



சேர்த்துதான். இணையதளம் அறிமுகமானபோது அதில் அதிக முதலீடுகள் செய்யப்பட்டன. அதன் தாக்கம் ஆழமானது. அது போல தான் ஏஐ துறையும்' என்று தெரிவித்தார்.

மேலும் ஏஐ அடிப்படையிலான சூப்பர் சிப்களை தாங்கள் உருவாக்கி வருவதாகவும், ஓபன் ஏஐ உடைய சாட்ஜிபிடி போட்டியை எதிர்கொள்ள ஆல்பாபெட் தனது முதலீடுகளை இரட்டிப்பாக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

www.kathirolimedia.ca

# எக்ஸ், ஓபன் ஏஐ தளங்கள் உலகமெங்கும் முடக்கம் - பயனர்கள் அவதி

எக்ஸ் சமூக வலைதளம்,சாட் ஜிடியின் ஓபன் ஏஐ உள்ளிட்டவை இன்று மாலை முதல் உலகமெங்கும் பல இடங்களில் முடங்கின.

இவை, இணைய உள்கட்டமைப்பு நிறுவனமான கிளவுட்பிளேர் சேவையின் மூலம் இயங்கி வருகின்றன. இந்நிலையில் கிளவுட்பிளேரில்



ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சனை காரணமாக இவை முடங்கியதாக தெரியவந்துள்ளது.

இணையதளங்களை கண்காணிக்கும் Down Detector அறிக்கையின்படி, இந்தியாவிலும் ஆயிரக்கணக்கானோர் எக்ஸ் முடக்கம் குறித்த புகார்களை தெரிவித்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

உள்நுழைவு சிக்கல்கள் மற்றும் சர்வர் இணைப்பு தோல்விகள் போன்ற சிக்கல்களை எதிர்கொண்டதாக பயனர்கள் தெரிவித்தனர்.

இந்த கோளாறை உறுதி செய்துள்ள கிளவுட்பிளேர் நிறுவனம் சிக்கலை தீர்க்க முயற்சித்து வருவதாக தெரிவித்துள்ளது.

## தொழில் நுட்பம்

# விற்பனை பிரிவில் ஊழியர்களை பணி நீக்கம் செய்த ஆப்பிள் நிறுவனம்

ஐபோன் உற்பத்தி செய்யும் ஆப்பிள் நிறுவனம், கடந்த ஆண்டு நூற்றுக்கணக்கான ஊழியர்களை பணிநீக்கம் செய்தது.

இந்நிலையில், தற்போது, தனது விற்பனை பிரிவில் பணியாற்றும் டஜன் கணக்கான ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளது. நேரடி விற்பனையில் ஈடுபடாமல், மூன்றாம் தரப்பு மூலம் விற்பனையில் ஈடுபட ஆப்பிள் நிறுவனம் திட்டமிட்டு இருப்பதாக ஊழியர்கள் சந்தேகிக்கிறார்கள்.



அதை உறுதி செய்த ஆப்பிள் நிறுவனம், அதிகமான வாடிக்கையாளர்களை எட்ட அதுவே சிறந்த வழி என்று தெரிவித்துள்ளது. நீக்கப்பட்ட ஊழியர்கள், ஆப்பிள் நிறுவனத்தில் வேறு பிரிவில் விண்ணப்பிக்கவோ அல்லது வெளியேறவோ ஜனவரி 20-ந் தேதி கடைசிநாள் என்று தெரிவித்துள்ளது.

மேலும் பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களில் பலர் நிறுவனத்தின் 20 முதல் 30 ஆண்டுகள் பணியாற்றிவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## டிரம்ப் முன்மொழிந்த ரஷியா-உக்ரைன் அமைதி திட்டத்தில் திருத்தம் - ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்தல்

ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்து 4 ஆண்டுகள் நிறைவடைய உள்ளன. இந்த போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார். ரஷியாவிடம் கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு அதிக வரி விதித்தார். ரஷிய அதிபர் புதினை அழைத்து பேசினார். ஆனால் போர் நிறுத்த முயற்சியில் எந்த முன்னேற்றமும் இல்லை. இதையடுத்து, போரை நிறுத்தும் அடுத்தகட்ட முயற்சியாக டிரம்ப் 28 அம்ச அமைதி திட்டத்தை முன்மொழிந்தார்.

ஆனால், ரஷியாநீண்ட நாட்களாக வலியுறுத்தி வரும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதுபோல் இந்த அமைதி திட்டம் இருப்பதாக



உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அதிருப்தி தெரிவித்துள்ளார். அதே சமயத்தில், ரஷிய அதிபர் புதின் இதை ஏற்றுக்கொண்டுள்ளார். இதற்கிடையே, அமெரிக்காவின் அமைதி திட்டம் குறித்து உக்ரைனுக்கும், சில ஐரோப்பிய நட்பு நாடுகளுக்கும் இடையே நேற்று சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் பேச்சு வார்த்தை நடந்தது.

அதில், உக்ரைன் பிரதிநிதிகள் குழுவுக்கு அந்நாட்டு அதிபர் அலுவலக உயர் அதிகாரி ஆன்ட்றி யெர்மாக் தலைமை தாங்கினார். ஐரோப்பிய நாடுகள் தரப்பில் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்றனர். அமைதி திட்டம் ரஷியாவுக்கு சாதகமாக இருப்பதால், அதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுத்தன.

அடுத்த கூட்டத்தில், அமெரிக்க வெளியுறவு மந்திரி மார்கோ ருபியோவுடன் இக்குழு பேச்சு வார்த்தை நடத்துகிறது. அதில், அமெரிக்க ராணுவ செயலாளர் டேன் டிரிஸ்கோல், டிரம்பின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்கோப் ஆகியோரும் பங்கேற்கிறார்கள். இதுகுறித்து உக்ரைன் அதிபர் அலுவலக உயர் அதிகாரி ஆன்ட்ரி யெர்மாக் தனது சமூக வலைத்தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

''இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களுடன் முதல்கட்ட பேச்சு வார்த்தை நடத்தினோம். அந்நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவாக இருப்பதுடன், அமைதி திட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளன. அடுத்தபடியாக அமெரிக்க குழுவுடன் பேசுவோம். உக்ரைனுக்கு நீடித்த அமைதியை அளிக்க இணைந்து செயல்படுவோம்.''

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## டைட்டானிக் கப்பலில் இருந்து எடுக்கப்பட்ட தங்க கெடிகாரம்: எவ்வளவு ஏலம் போனது தெரியுமா?

இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் நகரில் இருந்து அமெரிக்காவுக்கு 1912-ம் ஆண்டு டைட்டானிக் என்ற கப்பல் புறப்பட்டது. அட்லாண்டிக் பெருங்கடலில் சென்றபோது அந்த கப்பல் பனிப்பாறையில் மோதியது. உலகையே உலுக்கிய இந்த விபத்தில் 1,500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த விபத்து 1997-ம் ஆண்டு டைட்டானிக் என்ற பெயரில் திரைப்படமாக வந்து பலரது கவனத்தையும் ஈர்த்தது.



இதற்கிடையே அந்த கப்பலில் பயணித்தவர்களின் உடைமைகள் மீட்கப்பட்டு அவ்வப்போது ஏலத்துக்கு விடப்படுகின்றன. அந்தவகையில் அமெரிக்க தொழிலதிபரான இசிடோர் ஸ்ட்ராஸ் என்ற பயணியின் தங்க கெடிகாரம் ஒன்று இங்கிலாந்தின் வில்ட்ஷயர் நகரில் ஏலத்துக்கு விடப்பட்டது.

இந்த கெடிகாரம் சுமார் ரூ.20 கோடிக்கு விற்கப்பட்டு சாதனை படைத்துள்ளது. இது டைட்டானிக் கப்பல் தொடர்பான நினைவுப்பொருட்களின் அதிகபட்ச ஏலத்தொகை ஆகும். இதன்மூலம் டைட்டானிக் தொடர்பான மொத்த ஏலத்தொகை ரூ.35 கோடியை தாண்டியதாக ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

## 1.3 கோடி ஆண்டு பழமையான ஆமையின் புதைபடிவத்துக்கு ராப் பாடகி ஷகிராவின் பெயர் சூட்டல்

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் டாடகோவா பாலைவனம் அமைந்துள்ளது. இங்கு கடந்த சில மாதங்களாக அகழ் வாராய்ச்சி நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் அங்கு பழங் காலத்தில் வசித்த ஆமையின் புதைபடிவம் ஒன்று கண்டறியப் பட்டது. இது சுமார் 1.3 கோடி ஆண்டுகள் பழமையானது என ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டு உள்ளனர்.

இதன் மற்றொரு சிறப்பம்சமாக





இந்த ஆமையின் புதைபடிவத்துக்கு பிரபல ராப் பாடகி ஷகிராவின் பெயர் சூட்டப்பட்டு உள்ளது.




## பயங்கரவாத ஆதரவு குற்றச்சாட்டு: வெனிசுலா எதிர்க்கட்சி தலைவர் நோபல் பரிசு பெறுவதில் சிக்கல்

வெனிசுலாவின் எதிர்க்கட்சி தலைவரான மரியா கொரினா மச்சாடோ (வயது 58) இரும்பு பெண்மணி என அறியப்படுகிறார். இவர் அங்கு ஜனநாயக உரிமையை மீட்டெடுக்க 20 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருகிறார்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு அங்கு நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இதில் நிகோலஸ் மதுரோ வெற்றி பெற்று மீண்டும் அதிபராக தேர்வு செய்யப்பட்டார். ஆனால் தேர்தலில் மோசடி நடைபெற்றதாக கூறி அங்குள்ள எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அதேபோல் இந்த தேர்தல் முடிவை அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் ஏற்கவில்லை. அதற்கு பதிலாக மரியாவால் ஆதரிக்கப்படும் எட்முண்டோ கோன்சலசை வெற்றியாளராக அமெரிக்கா அங்கீகரித்தது. பின்னர் நடைபெற்ற போராட்டம் காரணமாக அவர் வெனிசுலாவை விட்டு வெளியேறினார். ஆனால் மரியா வெளிநாட்டுக்கு தப்பி ஓடாமல் வெனிசுலாவிலேயே தலைமறைவாகி உள்ளார்.

இதனையடுத்து போதைப் பொருள் கடத்தல் கும்பலுடன் இணைந்து செயல்படுவதாக மதுரோ மீது அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் குற்றம்சாட்டினார். இதனால் கரீபியன் கடற்பகுதியில் செல்லும் படகுகளை குறிவைத்து அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்துகிறது. அமெரிக்க ராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு மரியாவும் ஆதரவு தெரிவித்தார். இதனால் வெறுப்பை தூண்டுதல், பயங்கரவாத ஆதரவு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன.


இதற்கிடையே ஜனநாயகத்தை மீட்க போராடுவதற்காக மரியாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. அடுத்த மாதம் 10-ந் தேதி நார்வேயில் இந்த பரிசு வழங்கப்பட உள்ளது. இதன்மூலம் மதுரோ ஆட்சியில் இருந்து தனக்கு பாதுகாப்பு கிடைக்கும் என கருதும் அவர் அந்த பரிசை பெறுவதற்காக நார்வே செல்ல திட்டமிட்டு இருந்தார்.



ஆனால் பயங்கரவாத குற்றச்சாட்டு காரணமாக தலைமறைவாகி உள்ள அவர் நோபல் பரிசு பெற நார்வே சென்றால் நாட்டை விட்டு தப்பியோடியவராகவே கருதப்படுவார் என அட்டார்னி ஜெனரல் தாரெக் வில்லியம் சாப் அறிவித்துள்ளார். இதனால் அமைதிக்கான நோபல் பரிசு பெற நார்வே செல்வதில் மரியாவுக்கு புதிய சிக்கல் எழுந்துள்ளது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# டிஜிட்டல் வடிவம் பெறும் எலியின் மூளை



அமெரிக்காவிலுள்ள ஆலன் இன்ஸ்டிடியூட்டின் ஆய்வாளர்கள், உலகின் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்களில் ஒன்றைப் பயன் படுத்தி, எலியின் மூளையில் உள்ள ஒரு பகுதியை துல்லியமாக டிஜிட்டல் வடிவில் உருவகப்படுத்தியுள்ளனர். இது, உண்மையான உடற்கூறியல் தரவுகளின்படி இணைக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மெய்நிகர் நியூரான்களைக் கொண்ட ஒரு மாதிரி.

மூளைக்குள் நிகழும் நுண்மின்னோட்டத்தின் ஏற்ற இறக்கங்கள், அயனி ஓட்டங்கள் மற்றும் நியூரான்கள் தன்னிச்சையாக இயங்கும் விதங்களை அசல் தன்மையுடன் இந்த டிஜிட்டல் மூளை உருவாக்கிக் காட்டும். மிகச்சிறிய மூளை திசுக்களுக்குப் பதிலாக, விஞ்ஞானிகள் இப்போது ஏறக்குறைய உயிர்த்துடிப்புள்ள மூளை நியூரான்களின் நெட்வொர்க்கை கணினி திரையில் முப்பரிமாண உருவில் ஆராயலாம். விலங்கு வதைக்கு எதிர்ப்புள்ள இன்றைய காலத்தில், இதையெல்லாம் உயிருள்ள விலங்குகளில் செய்வது சாத்தியமற்றது.

இந்த கண்டுபிடிப்பு, மூளை ஆய்வை எளிதாக்கி, விரைவாக்கும் என நம்பலாம். மெய்நிகர் மூளைகளில் இணைப்புகளை மாற்றிப் பார்க்கலாம். டிஜிட்டல் மூளையை சேதப்படுத் தலாம். அதன் வேதியியல் கட்டமைப்பை குலைத்துப் பார்க்கலாம்.

இப்போதைக்கு, எலி மூளையின் ஒரு சிறு பகுதியை டிஜிட்டல் வடிவத்திற்கு கொண்டுவந்து இருக்கின்றனர். ஆனால், இது இதோடு நிற்காது. கணினித் திறனும், எலி மூளையின் தரவுத் தொகுப்புகளும் அதிகரிக்கும்போது, நரம்பியல் விஞ்ஞானிகள், முழு எலி மூளையையும் டிஜிட்டல் வடிவிற்குள் கொண்டு வந்துவிடுவர். அப்போது, நரம்பியலாளர்கள், சூப்பர்கம்ப்யூட்டர் வேகத்தில், மூளைப் பரிசோதனைகளைச் செய்ய முடியும்.

# சூரிய ஒளியில் இயங்கும் வேதியியல் ஆலை

சூரிய ஒளி, தட்டுப்பாடற்ற இலவச ஆற்றல் ஆதாரம். அதை, ஒரு வேதியியல் தொழிற்சாலையாக மாற்றியிருக்கின்றனர் கேம்பிரிட்ஜ் பல்கலை ஆய்வாளர்கள். அவர்கள் வடிவமைத்த, 'பாதி செயற்கை இலை' (semi-artificial leaf), கரியமில வாயுவையும் நீரையும், சூரிய ஒளியைக் கொண்டு, மதிப்புமிக்க மூலக்கூறுகளாக மாற்றுகிறது.

உதாரணமாக, பார்மேட் (formate) போன்ற மூலப் பொருட்களை பாதி செயற்கை இலை உருவாக்குகிறது. எரிபொருட்கள் மற்றும் மருந்துகளை உருவாக்கும் தூய மூலப்பொருளாக இருக்கக்கூடியது பார்மேட். இதை வெறும் சூரிய ஒளி மூலம் உருவாக்க முடியும் என்பது விஞ்ஞானி களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்தக் கருவி, வழக்கமான உலோக வினையூக்கிகள் மற்றும் கனிம குறைக் கடத்திகளுக்குப் பதிலாக, ஒளி- உறிஞ்சும் கரிமப் பொருட்களையும் பாக்டீரிய நொதிகளையும் நம்பியுள்ளது.

எனவே, கச்சிதமான, நச்சுத் தன்மையற்ற வேதியியல் உற்பத்தி ஆலையாக இருக்கிறது இந்த 'பாதி செயற்கை இலை.' இது சாதாரண பைகார்பனேட் கரைசலில் இயங்குகிறது. தவிர, இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செயற்கை ஒளிச்சேர்க்கை கருவிகள் ஒரு நாளுக்கு மேல்



வேலை செய்வதில்லை. ஆனால், கேம்பிரிட்ஜ் விஞ்ஞானிகளின் பாதி செயற்கை இலை கருவி, ஒரு நாளுக்கு மேல் தொடர்ந்து இயங்கிக் காட்டியுள்ளது.

முந்தைய செயற்கை- இலை கருவிகள், பெரும்பாலும் ஹைட்ரஜனை மட்டுமே உருவாக்கின. ஆனால், இது சிக்கலான வேதிப்பொருட்களை உருவாக்குகிறது. இதை அப்படியே வளர்த்தெடுத்து, தொழிற்சாலை மட்டத்திற்கு கொண்டுவர முடிந்தால், தொழிற் சாலைகள் முற்றிலும் சூரிய ஒளியின் மூலம், இயங்கி, காற்றிலிருந்து வேதிப் பொருட்களை உறிஞ்சி எடுக்க முடியும்.

உங்கள் வியாபாரம்
உலகம் முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில் விளம்பரம்
செய்யுங்கள்!

# அண்டம் விரிவடையும் வேகம் குறைகிறதா?

நம் பேரண்டம் அதிவேகமாக விரிவடைந்து கொண்டே போவதாக அண்டவியலாளர்களில் ஒரு தரப்பினர் வாதிடுகின்றனர். ஆனால், அண்டம் விரிவடையும் வேகம், ஏற்கனவே குறைந்து கொண்டிருக்கலாம் என்கின்றனர் தென்கொரியாவின் யோன்சே பல்கலை ஆராய்ச்சியாளர்கள். நீண்ட காலமாக, அண்டம் விரிவடையும் வேகத்தை கணக்கிடும் அளவுகோலாக, '1-ஏ வகை சூப்பர்நோவா' எனப்படும் மீயொளிர் விண்மீன் வெடிப்பிலிருந்து பெறப்பட்ட தரவுகளை விஞ்ஞானிகள் பயன்படுத்தினர். தென்கொரிய விஞ்ஞானிகள், அந்தத் தரவுகளை மீண்டும் பகுப்பாய்வு செய்து, அந்த அளவீடுகளில் பிழை உள்ளதாக வாதிடுகின்றனர் .

இந்த ஆய்வு முடிவு, தீராத, எப்போதும் விலக்கும் ஆற்றல் கொண்ட இருண்ட ஆற்றல் (Dark energy) பேரண்டத்தில் உள்ளது என்ற கருத்தை பலவீனப்படுத்துகிறது. மாறாக, இந்த புதிய ஆதாரம் இருண்ட ஆற்றலின் தாக்கம் காலப்போக்கில் பலவீனமடைந்து வருகிறது என்கிறது. இது உண்மையாக இருந்தால், அண்டத்தின் புரிதலுக்கு அடிப்படையாக இருக்கும் அண்டவியல் மாதிரி (cosmological model) திருத்தப்பட வேண்டியிருக்கும்.



இந்த முடிவுகள் இருபது ஆண்டுகளுக்கும் மேலான ஒருமித்த கருத்துக்கு சவால் விடுகின்றன. மேலும், சில ஆய்வாளர்கள் தற்காலிகமாக முன்வைத்த

## நவீன அறிவியல்

புள்ளியியல் திருத்தங்களின் அடிப்படையிலேயே இந்த ஆய்வு முடிவுகள் இருக்கின்றன. ஆயினும், இதன் தாக்கங்கள் ஆழமானவை.

பேரண்டம் விரிவடையும் வேகம் குறைகிறது என்றால், அது இறுதியில் சுருங்கவும் கூடும். இது 'பெருஞ்சுருக்கம்' (Big Crunch) போன்ற ஒரு நிகழ்வுக்கு வழி வகுக்கலாம். இது அண்டத்தின் கடந்த காலம் மற்றும் அதன் எதிர்காலம் பற்றிய நம் சொல்லாடல்களை தலைகீழாகத் திருப்பிப் போடும் ஒரு கண்டு பிடிப்பாகும்.

# ஒரு மணி நேரத்தில் உலகின் மறுபக்கம் போகலாம்!

ஒலியின் வேகத்தை மிஞ்சி விமானங்கள் பறப்பதற்குத் தடையாக, காற்றியக்கவியலில் ஒரு புதிர் இருக்கிறது. அந்தப் புதிரை அமெரிக்காவிலுள்ள ஸ்டீவன்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், விடுவித்துள்ளனர். மாதிரி ஹைப்பர்சோனிக் விமானங்களை 'காற்றுச் சுரங்க' சோதனைகளை அவர்கள் செய்து



பார்த்தனர். ஒலியின் வேகத்தை விட ஆறு மடங்கு வேகமான 'மாக் 6' வேகத்தில் நடத்திய சோதனைகளில், காற்றின் படபடப்பு (turbulence) தாறுமாறாக இல்லாமல், மிகவும் கணிக்கக்கூடிய விதத்தில் தான் இருக்கிறது என்று ஸ்டீவன்ஸ் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அதிவேகமாக எதிர்வரும் காற்றும், குறைவான வேகத்தில் பயணிக்கும் விமானங்கள் எதிர்கொள்ளும் காற்றும், காற்றியக்கவியலின் அடிப்படை விதிகளையே பின்பற்றுகின்றன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காற்றுப் படபடப்பின் பின்னால் உள்ள இயற்பியலை மறுபடியும் ஆராய வேண்டியதில்லை என்றால், விமான வடிவமைப்பாளர்கள், பிற சவால்களில் கவனம் செலுத்தலாம். உதாரணமாக, உந்தும் காற்றழுத்தம், எதிறும் வெப்பம், உடையும் பொருட்கள் போன்ற, சூப்பர் சோனிக் விமான வடிவமைப்பில் உள்ள பிற சவால்களில் கவனம் செலுத்தலாம். இந்தச் சவால்கள் தீர்க்கப்பட்டால், விமானங்கள் ஒரு நாள் 'மாக் 10' வேகத்தில் பயணிக்க முடியும். சிட்னியில் இருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் வரையிலான பயணம் 15 மணி நேரத்திற்குப் பதிலாக ஒரு மணி நேரமாகக் குறையலாம்.

ஆக, காற்றியக்கவியலில் இருந்த ஒரு புதிர் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, சூப்பர் சோனிக் விமானப் பயணம், பூமியின் தாழ் சுற்றுப் பாதையில் பயணம் போன்றவற்றுக்கு திறவுகோலை வழங்கியிருக்கிறது.

# விளையாட்டு செய்திகள்

## மாஸ்டர் பிளான்!.. தாமதமாக டிக்ளேர் செய்ததற்கான காரணத்தை போட்டுடைத்த தென் ஆபிரிக்க அணி பயிற்சியாளர்

இந்தியா - தென் ஆப்பிரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி அசாம் மாநிலம் கவுகாத்தியில் நடந்து வருகிறது. இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த தென் ஆப்பிரிக்க அணி முதல் இன்னிங்சில் 489 ரன்கள் குவித்தது. செனுரன் முத்துசாமி சதம் (109 ரன்) அடித்தார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 83.5 ஓவர்களில் 201 ரன்னில் ஆல்-அவுட் ஆகி பாலோ-ஆன் ஆனது. இதனையடுத்து இந்தியாவுக்கு பாலோ- ஆன் வழங்காமல் 288 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 3-வது நாள் ஆட்ட நேர முடிவில் 8 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 26 ரன்கள் அடித்திருந்தது. தென் ஆப்பிரிக்கா அணி மொத்தம் 314 ரன்கள்



முன்னிலை பெற்று வலுவான நிலையில் இருந்தது.

இந்த சூழலில் 4-வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்க அணி 2-வது இன்னிங்சில் 78.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 260 ரன்கள் அடித்த நிலையில் டிக்ளேர் செய்தது. இதன் மூலம் இந்திய அணிக்கு 549 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக ஸ்டப்ஸ் 94 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் ஜடேஜா 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 549 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற மெகா இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 15.5 ஓவர்களில் 27 ரன்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்து திணறி வருகிறது. சுதர்சன் 2 ரன்களுடனும், குல்தீப் 4 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

இந்திய அணி வெற்றி பெற இன்னும் 522 ரன்கள் அடிக்க வேண்டும். மறுபுறம் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற 8 விக்கெட்டுகள் வீழ்த்த வேண்டும். இத்தகைய சூழலில் இன்று 5-வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

இந்நிலையில் தாமதமாக டிக்ளேர் செய்தது எதனால் என தென் ஆபிரிக்க அணி பயிற்சியாளர் ஷுக்ரி கான்ராட் காரணத்தை கூறியுள்ளார்.

அவர் கூறியதாவது, இந்திய வீரர்கள் மைதானத்தில் அதிக நேரம் ஃபீல்டிங் செய்து விரக்தியில் தவிக்க வேண்டும் என்று நினைத்தோம்.

அவர்களை வெற்றி வாய்ப்பிலிருந்து முற்றிலும் வெளியேற்றும் வரை நாங்கள் பேட்டிங் செய்து, 'மீதமிருக்கும் நேரத்தில் முடிந்தால் பேட்டிங் செய்து தப்பித்துக் கொள்ளுங்கள்' என்ற நிலைக்கு அவர்களைத் தள்ளுவதே எங்கள் திட்டம்.

அதனால்தான் தாமதமாக டிக்ளேர் செய்தோம். இருந்தாலும், போராட்டமே இல்லாமல் அவர்கள் எளிதாகச் சரிந்துவிடுவார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. நாளை காலையும் நாங்கள் மிகச் சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

## சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் டி20 உலக கோப்பை போட்டிகள்: டிக்கெட் வாங்க ரெடியா?



10-வது 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பிப்ரவரி 7-ந் தேதி முதல் மார்ச் 8-ந் தேதி வரை இந்தியா, இலங்கையில் நடைபெறுகிறது.

இந்நிலையில், 20 ஓவர் உலக கோப்பைக்கான போட்டி அட்டவணை மும்பையில் இன்று அறிவிக்கப்பட்டது.

தரவரிசை அடிப்படையில் நடப்பு சாம்பியன் இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே பிரிவில் இடம் பெற்றுள்ளது. இந்த பிரிவில் நெதர்லாந்து, நமீபியா, அமெரிக்கா ஆகிய அணிகளும் இடம் பெற்றுள்ளது.

20 ஓவர் உலக கோப்பை போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் பிப்ரவரி 15-ந்தேதி கொழும்பில் மோதுகின்றன.

இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்கொள்கிறது. பிப்ரவரி 7-ந்தேதி மும்பையில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. அதை தொடர்ந்து நமீபியாவுடன் 12-ந்தேதி டெல்லியிலும், கடைசி லீக் ஆட்டத்தில் நெதர்லாந்துடன் 18-ந்தேதி அகமதாபாத்திலும் மோதுகிறது.

இந்நிலையில், 2026 டி20 உலக கோப்பை லீக் போட்டிகள் உட்பட மொத்தம் 7 போட்டிகள் சென்னை சேப்பாக்கம் மைதானத் தில் நடக்க உள்ளன. எனினும் இந்தியா விளையாடும் போட்டி சென்னையில் கிடையாது. அதனால் தமிழக ரசிகர்கள் சோகம் அடைந்துள்ளனர்.

சென்னையில் நடக்கும் போட்டிகள்:

பிப்ரவரி 8: நியூசிலாந்து Vs ஆப்கானிஸ்தான்

பிப்ரவரி 10: நியூசிலாந்து Vs ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE)

பிப்ரவரி 13: அமெரிக்கா (USA) Vs நெதர்லாந்து

பிப்ரவரி 15: அமெரிக்கா (USA) Vs நமீபியா

பிப்ரவரி 17: நியூசிலாந்து Vs கனடா

பிப்ரவரி 19: ஆப்கானிஸ்தான் Vs கனடா

பிப்ரவரி 26: X1 vs X2 (சூப்பர் 8)

www.kathiroli-media.ca

## முத்தரப்பு தொடர்: பதும் நிசங்கா அதிரடியில் ஜிம்பாப்வேவை வீழ்த்தியது இலங்கை

பாகிஸ்தான், இலங்கை மற்றும் ஜிம்பாப்வே கிரிக்கெட் அணிகள் இடையிலான முத்தரப்பு டி20 தொடர் பாகிஸ்தானில் நடந்து வருகிறது. இதில் நடந்த 5-வது லீக் ஆட்டத்தில் ஜிம்பாப்வே, இலங்கை அணிகள் மோதின.

டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஜிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 146 ரன்கள் எடுத்தது.கேப்டன் சிக்கந்தர் ராசா 37 ரன்னில் அவுட்டானார். பிரியன் பென்னட் 34 ரன்னில் வெளியேறினார். ரியான் பர்ல் 26 பந்தில் 37 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இலங்கை சார்பில் மகேஷ் தீக்சனா, வஹிந்து ஹசரங்கா தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து, 147 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இலங்கை களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பதும் நிசங்க அதிரடியாக ஆடி அரை சதமடித்தார்.

அவருக்கு குசால் மெண்டிஸ்



நன்கு ஒத்துழைப்பு அளித்தார். இறுதியில், இலங்கை அணி 16.2 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 148 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. பதும் நிசங்கா 98 ரன்னும், குசால் மெண்டிஸ் 25 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இலங்கை அணி தான் ஆடிய 3 லீக் போட்டிகளில் ஒன்றில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது.

அடுத்து நடைபெறவுள்ள பாகிஸ்தானுடனான போட்டியில் இலங்கைஅணி கண்டிப்பாக வெற்றி பெற வேண்டும். இல்லையேல் தனது ரன் ரேட்டை உயர்த்த வேண்டும். இல்லையெனில் ரன்ரேட் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு ஜிம்பாப்வே அணி நுழைந்துவிடும்.

## சையத் மோடி பேட்மிண்டன்: 2வது சுற்றுக்கு முன்னேறியது இந்திய ஜோடி

சையத் மோடி நினைவு சர்வதேச பேட்மிண்டன் போட்டி உத்தர பிரதேச தலைநகர் லக்னோவில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் இரட்டையர் பிரிவின் முதல் சுற்றில் நடப்பு சாம்பியன்களான இந்தியாவின் திரிஷா ஜாலி-காயத்ரி கோபிசந்த் ஜோடி- மலேசியாவின் செங் சூ ஹை- தன் ஜிங் யீ ஜோடி உடன் மோதியது.

இதில் இந்திய ஜோடி முதல்



செட்டை 19-21 என இழந்தது. இதில் சுதாரித்துக் கொண்ட இந்திய ஜோடி அடுத்த இரு செட்களை 22-20, 21-9 என வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

உங்கள் வியாபாரம் உலகம் முழுவதும் சென்று அடைய கதிர்ஒளியில் விளம்பரம் செய்யுங்கள்!

# எனக்கு கவர்ச்சி காட்டி நடிப்பதில் பிரச்சினை இல்லை- 'ஆரோமலே' பட நடிகை



இதுதாண்டா போலீஸ் படத்தின் மூலம் ரசிகர்களை ஈர்த்த டாக்டர் ராஜசேகர் - ஜீவிதாவின் இளைய மகள் சிவாத்மிகாவும் நடிகை ஆவார். தமிழில் பாம், ஆரோமலே படங்களில் நடித்துள்ள சிவாத்மிகா, தெலுங்கிலும் படங்கள் நடித்து வருகிறார்.

இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட சிவாத்மிகாவிடம், 'கதைகளை தேர்வு செய்யும் விதம்' பற்றி கேட்கப்பட்டது.

இதற்கு அவர் பதிலளிக்கும்போது, "இப்படித் தான் நடிக்க வேண்டும் என்று எந்த இலக்கணமும் நான் வகுத்துக் கொண்டதில்லை. கதை நன்றாக இருக்கும்பட்சத்தில் சிறிய கதாபாத்திரம் என்றாலும் அதை ஏற்று நடிக்கலாம். அதேவேளை படக்குழுவினர் பற்றிய புரிதலும் முக்கியம்.

எனக்கு கவர்ச்சி காட்டி நடிப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் அது ரசிப்புக்குரியதாக இருக்கவேண்டுமே தவிர, முகம் சுளிக்கும்படி இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன். கவர்ச்சிக்கும், ஆபாசத்துக்கும் வித்தியாசம் உண்டு. அந்த விஷயத்தில் நான் ரொம்பவே உஷார்'', என்றார்.

# 'ஸ்பைடர் படத்தில்தான் நான் அதை உணர்ந்தேன்' - ரகுல் பிரீத் சிங்

பிரபல பாலிவுட் நடிகை ரகுல் பிரீத் சிங். பல படங்களில் பிஸியாக நடித்து வரும் இவர் இந்த ஆண்டு ''மேரி ஹஸ்பண்ட் கி பிவி'' படத்தின் மூலம் தனது ரசிகர்களை கவர்ந்தார். சமீபத்தில் அஜய் தேவ்கனுடன் ''தேதே பியார் தே 2'' ல் நடித்திருந்தார். ஆர் மாதவன் மற்றும் தபு முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்த இந்த படம் நல்ல வசூலை பெற்றது.

இவர் தமிழில், தடையறத் தாக்க படத்தின் மூலம் அறிமுகமானார். தொடர்ந்து என்னமோ ஏதோ, தீரன், ஸ்பைடர், தேவ், என்ஜிகே அயலான் மற்றும் இந்தியன் 2 உள்ளிட்ட படங்களில் நடித்தார்.

இந்நிலையில், 'ஸ்பைடர்' தான் தன்னுடைய முதல் பெரிய தோல்வி என்று ரகுல் பிரீத் சிங் கூறியுள்ளார். அவர் பேசுகையில்,



'ஸ்பைடர்' தான் என்னுடைய முதல் பெரிய தோல்வி. ராம்சரண் மற்றும் ஜூனியர் என்டிஆருடன் நிறைய தெலுங்குப் படங்கள் நடித்திருந்தாலும், 8-10 மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றிருந்தாலும் அது என்னை மிகவும் பாதித்தது. உங்கள் எதிர்பார்ப்புகள் தகர்க்கப்படும்போது அது எப்படி இருக்கும் என்பதை நான் முதன்முதலில் உணர்ந்தது ஸ்பைடரில்தான்' என்றார்.

# சில்க் ஸ்மிதா மரணத்துக்கு காரணம் என்ன?.. நடிகர் ஆனந்தராஜ் சொன்ன அதிர்ச்சி தகவல்

வசீகரிக்கும் அழகாலும், கிறங்கடிக்கும் நடனத்தாலும் தென்னிந்திய சினிமாவையே கட்டிப்போட்டு வைத்தவர் சில்க் ஸ்மிதா. 'திராவிட பேரழகி' என்று புகழப்பட்ட சில்க் ஸ்மிதா, தமிழ் தாண்டி தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில் 450-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.



இவரது 'கால்ஷீட்'டுக்காகவே படப்பிடிப்புகளை தள்ளி வைத்து காத்துக் கொண்டிருந்த காலம் உண்டு. புகழின் உச்சத்தில் இருந்து சில்க் ஸ்மிதா 1996-ம் ஆண்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதற்கிடையில் சில்க் ஸ்மிதாவின் மரணம் குறித்து நடிகர் ஆனந்தராஜ் தெரிவித்துள்ள கருத்து வைரலாகி வருகிறது. அவர் கூறுகையில், "சில்க் ஸ்மிதா எனக்கு நல்ல தோழி. என்னுடன் பல படங்கள் நடித்துள்ளார். அவர் இறப்பதற்கு ஒரு நாள் முன்பு எனக்கும், அவருக்கும் ஒரு குத்துப்பாட்டு காட்சி கூட படமாக்கப்பட்டது.

ஆனால் மறுநாள் அவர் இறந்துவிட்டார் என்றதும் அதிர்ந்து போனேன். அவரின் இந்த முடிவுக்கு காரணம் மன அழுத்தம்தான். மனவலி அவருக்கு அதிகம் இருந்தது. அவர் உயிருடன் இருந்திருந்தால் இப்போது வரை நடித்துக்கொண்டிருப்பார்'', என்றார்.

# ''என்ன நடந்துச்சு எனக்கே தெரியல''... வைரல் வீடியோவுக்கு வெற்றிமாறன் ரியாக்ட்!

சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு பட விழாவில் இயக்குநர் வெற்றிமாறன் கலந்துகொண்டார். நிகழ்ச்சியில், மேடையில் இருப்பவர்களை பார்த்து கோபமாக பேசுவதும், அடுத்த வினாடி சாந்தமாகி சிரிப்பதுமாக அவர் நடந்து கொண்டார்.

ஒரே நேரத்தில் 'அந்நியன்' விக்ரம் மாதிரி, முக பாவனைகளை மாற்றும் அவரது வீடியோ இணையத்தில் 'டிரெண்ட்' ஆனது. இதையொட்டி கிண்டல் 'மீம்ஸ்'களும் வைரலானது. பெரியளவில் அவர் 'டிரோல்' செய்யப்பட்டார். இதுகுறித்து வெற்றிமாறனிடம் கேட்டபோது, ''உண்மையாகவே சொல்றேன், ஏன் அப்படி ரியாக்ட் பண்ணினேன் என்று எனக்கே தெரியல. ஆனால் அந்த வீடியோவுக்கு கண்டபடி 'மீம்ஸ்'கள் போட்டு என்னை ஒரு வழி செஞ்சுட்டாங்க.

உண்மையிலேயே என்ன நடந்தது? என்று தெரியவில்லை. நானும் யோசித்து யோசித்து பார்க்கிறேன், எதுவும் பிடிபட மாட்டேங்குது. என்ன செய்வது? என்றும் புரியவில்லை'', என்று கலகலப்பாக பதிலளித்தார்.

# கணவர் கொடுமைப்படுத்துவதாக இந்தி நடிகை செலினா ஜெட்லி கோர்ட்டில் வழக்கு

இந்தி நடிகை செலினா ஜெட்லி (வயது47), கடந்த 2010-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆஸ்திரியாவை சேர்ந்த பீட்டர் ஹாக்கை திருமணம் செய்து கொண்டார். அவருக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். இந்த நிலையில் அவர் கணவருக்கு எதிராக மும்பை மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் குடும்ப வன்முறை வழக்கை தொடர்ந்து உள்ளார்.


இது தொடர்பாக அவர் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:- கணவர் பீட்டர் ஹாக் என்னை உடல், மனதளவில் கொடுமைப்படுத்துகிறார். மேலும் பாலியல் ரீதியாகவும், தகாத வார்த்தைகளாலும் திட்டி துன்புறுத்தினார். எனவே நான் ஆஸ்திரியாவில் இருந்து மும்பைக்கு வரவேண்டிய சூழல் ஏற்பட்டது.



பீட்டர் ஹாக் சுயநலவாதி, தன்னை பற்றி மட்டுமே சிந்திப்பவர், முன்கோபக்காரர், மதுக்கு அடிமையானவர். இதன் காரணமாக தனக்கு தொடர்ந்து மனஅழுத்தம் ஏற்பட்டது. பீட்டர் ஹாக் என்னிடம் இருந்து விவாகரத்து கேட்டு ஆஸ்திரிய கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து உள்ளார். அவர் எனக்கு ரூ.50 கோடி ஜீவானம்சம், மாதந்தோறும் ரூ.10 லட்சம் பராமரிப்பு தொகை வழங்க உத்தரவிட வேண்டும். எனது பிள்ளைகளை பார்க்கவும் என்னை அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை அடுத்த மாதம் (டிசம்பர்) 12-ந் தேதி நடைபெற உள்ளது.




THE LAW OFFICES OF MELENI DAVID
Nice
Naughty
THE LAW OFFICES OF MELENI DAVID
Your Personal Injury Lawyer
THE LAW OFFICES OF MELENI DAVID BARRISTERS AND SOLICITORS
MDLAW.CA
416.430.0044
HOTLINE 416.271.5992
885 Progress Avenue, Suite 110
Scarborough, ON M1H 3G3
PHONE: 416.430.0044


INTERNATIONAL SHOTOKAN KARATE-DO ORGANIZATION
KARATE RAJAGURU ACADEMY
சர்வதேச ஷோடோகான் கராத்தே - டோ ஆர்கனைஸேஷன்
கராத்தே ராஜகுரு அகாடமி
55 Years Golden Jubilee 1965 - 2020
1965 ஆம் ஆண்டு முதல் சர்வதேச அளவில், விஞ்ஞான தற்காப்புக்கலையில் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் வேண்டி அனுபவம் நிறைந்த
கராத்தே
சிலம்பம்
ஆயுத பயிற்சி
யோகா
தியானம்
பெண்களுக்கான சிறப்பு தற்காப்புப் பயிற்சி
மனித நேயர், சேவ ரத்னா, வீர ரத்னா, மாமல்லன், போதிதர்மா, கிரேண்ட் மாஸ்டர், ஹான்ஷி, லயன்
ராஜகுரு த. ரவீந்திரன் M.A., M.S., M.I.B.R.
(9th Dan Black Belt - International Grand Champion - Gold Medalist)
அவர்களின் நேரடி தனிச்சிறப்பு பயிற்சி பெற்று, இன்று கனடாவின் முதன்மை ஆசிரியராக
கராத்தே, யோகா, தியானப் பயிற்சியில், தலை சிறந்து விளங்கும் ஒப்பற்ற
இலங்கை வீராங்கனை ரென்ஷி கயலினியின்
(5th Dan Black Belt - International Secretary - Examiner - Chief Instructor - Technical Director)
அவர்களின் திறமையான பயிற்சியை நேரடியாக பெறவும்,
அன்பு, அமைதி, பொறுமை, ஒழுக்கம் மற்றும் வீரம் போன்ற நற்குணங்களுடன் வாழவும்,
மாதா, பிதா, குரு, தெய்வம் மற்றும் குடும்பம் போன்ற நினைவுகளுடன் சிறப்புடன் வாழவும்,
தமக்கும், பிறர்க்கும் ஆபத்து ஏற்படும் காலங்களில் பாதுகாத்துக்கொள்ளவும்,
இளைஞர்களை நல்வாழ்க்கையில் அமைத்துக்கொள்ளவும், மற்றும் அனைத்து குழந்தைகளும்,
இளைஞர்களும் கல்வியறிவுடன் கூடி, தெளிவான சிந்தனையும், சுய கட்டுப்பாடும்,
நிறைவான தன்னம்பிக்கையும், பூர்த்தியான ஞானத்தையும் பெற்று,
மன அமைதியுடன் வாழவும்...
எமது தற்காப்புக்கலை பயிற்சி நிலையங்களை அணுகவும்
647-719-4756
E: info.isko@yahoo.com | Web: isko.co | Fb.com/karaterajaguru | Instagram @ KarateRajaguru | Twitter @ KarateRajaguru | karaterajaguruofficial.blogspot.com
SCARBOROUGH
* CONDITIONS APPLY - PROMOTIONS & DISCOUNTS IS A LIMITED TIME OFFER - PLEASE CONTACT OUR OFFICE FOR DETAILS
MISSISSAUGA

# அமெரிக்க நிறவெறியின் கோர முகத்தை காட்டிய துல்சா படுகொலைகளில் உயிர்தப்பிய கருப்பின பெண் 111 வயதில் மறைவு



மே 31, 1921 அன்று, அமெரிக்காவில் கறுப்பின மக்கள் அதிகம் வசிக்கும் துல்சாவில், வெள்ளையர்களின் ஒரு கும்பல் 300க்கும் மேற்பட்ட ஆப்பிரிக்க-அமெரிக்கர்களைக் கொன்றது. இதுவே துல்சா படுகொலை என அழைக்கப்படுகிறது.

17 வயதுடைய வெள்ளையின லிப்ட் ஆபரேட்டர் சிறுமியை ஷூ பாலிஷ் தொழில் செய்த 19 வயது கறுப்பின இளைஞன் பாலியல் வன்கொடுமை செய்ததாக பரவிய தகவலை அடுத்து கறுப்பினத்தவர்களின் வீடுகள் மட்டும் கதைகளுக்குள் புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தி வெள்ளியாயினத்தவர் இந்த படுகொலைகளை அரங்கேற்றினர்.

ஆனால் அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்றும் உள்ளூர் செய்தித்தாள் ஒன்று வெளியிட்ட பொய் செய்தியால் நிற வெறி தூண்டப்பட்டுஇந்தபடுகொலைகள் அரங்கேற்றப்பட்டதாக தெரிய வந்தது.

சுமார் 2 நாட்கள் நீடித்த இந்த படுகொலைகளில் 300 பேர் கொல்லப்பட்டனர். 800 பேர் படுகாயமடைந்தனர். அவர்களின் வீடுகள் மற்றும் கடைகள் முற்றிலு மாக தீவைக்கப்பட்டு நாச மாக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் வீடற்றவர்களாகினர்.

இந்நிலையில் துல்சா படுகொலையில்உயிர்த்தியவர்களில் தற்போது மூத்தரவாக அறியப்படும் 111 வயதுடைய வயோலா பிளெட்சர் கடந்த திங்கட்கிழமை காலமானார்.

அமெரிக்க வரலாற்றின் இருண்ட அத்தியாயங்களில் ஒன்றான துல்சா படுகொலையின் போது பிளெட்சர் ஒரு சிறுமியாக இருந்தார்.

படுகொலைக்குப் பிறகு வீடற்றவராக மாறிய பிளெட்சர் தொடக்கப் பள்ளியை விட்டு வெளியேறினார். பின்னர் அவர் வெள்ளையர் குடும்பங்களுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணியாற்றினார்.

சில வருடங்களுக்கு முன்பு அவர் அளித்த பேட்டியில், 'கறுப்பின மக்கள் சுட்டுக் கொல்லப்படுவதையும், அவர்களின் உடல்கள் தெருக்களில் கிடப்பதையும், அவர்களின் கடைகள் எரிக்கப்படுவதையும் இன்னும் என்னால் பார்க்க முடிகிறது,' என்று விவரித்தார்.

# காசாவின் இருப்பு ஆபத்தில் உள்ளது - ஐ.நா. எச்சரிக்கை



காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் பாலஸ்தீன பிரதேசத்தின் பொருளாதாரத்தை அழித்து அதன் இருப்பையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட காசா பகுதியை மீண்டும் கட்டியெழுப்ப 70 பில்லியன் டாலர்களுக்கு மேல் செலவாகும் என்றும், அதை முடிக்க பல தசாப்தங்கள் ஆகலாம் என்றும் ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (UNCTAD) வெளியிட்டுள்ள புதிய அறிக்கை தெரிவிக்கிறது.

அந்த அறிக்கையில், காசாவில் நடந்தபோரும்,அந்தப்பிரதேசத்தின் மீது விதிக்கப்பட்ட தடைகளும் பாலஸ்தீனப் பொருளாதாரத்தை பேரழிவிற்கு உட்படுத்தியுள்ளன.

காசாவில் தொடர்ந்து, திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அழிவு, அந்தப் பகுதி வாழத் தகுதியான இடமாகவும், சமூக ரீதியாக மீண்டும் கட்டியெழுப்பப்படவும் முடியுமா என்பதில் கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவின் ஒட்டுமொத்த மக்களும்கடுமையான,பலபரிமாண வறுமையை எதிர்கொள்கிறார்கள் என்று அறிக்கை கூறுகிறது.

மேலும், 2023-24 ஆம் ஆண்டில் காசாவின் பொருளாதாரம் 87% சுருங்கியது என்றும், காசாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வெறும் 161 டாலர் ஆக இருந்தது என்றும், இது உலகளவில் மிகக் குறைவு என்றும் அறிக்கை கூறியுள்ளது.

பாலஸ்தீன சுகாதார அமைச்சக புள்ளிவிவரங்களின்படி கடந்த 2 ஆண்டுகளில் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 69,000 க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டனர்.

இதற்கிடையே கடந்த மாதம் ஏற்பட்ட போர் நிறுத்தத்தை மீறி இஸ்ரேல் கடந்த 44 நாட்களில் 500 க்கும் அதிகமான முறை தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப் பட்டுள்ளனர்.

www.kathiroli-media.ca

# அருணாச்சலப் பிரதேசம் சீனாவிற்கு சொந்தமானது - சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் பேச்சு

இங்கிலாந்தில் வசிக்கும் அருணாச்சலப் பிரதேசத்தை சேர்ந்த பிரேமாவாங்ஜோம்தோங்டாக்என்ற பெண் கடந்த நவம்பர் 21 அன்று லண்டனில் இருந்து ஜப்பானுக்குப் பயணம் செய்து கொண்டிருந்தார். சீனாவின் ஷாங்காய் புடாங் விமான நிலையத்தில் தரையிறங்கிய அவர் அங்கிருந்து ஜப்பான் விமானத்தை பிடிப்பதற்காக காத்திருந்தார்.

ஆனால் அங்கு சீன அதிகாரிகள் பிரேமா, அருணாச்சலப் பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதால் அவரது இந்திய பாஸ்போர்ட் செல்லாது என கூறி சுமார் 18 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அருணாச்சல பிரதேசம் சீனாவின் ஒரு பகுதி என சீனா கூறி வருகிறது. இதுதொடர்பாக அவ்வப்போது சர்ச்சைக்குரிய வரைபடங்களை வெளியிட்டு வருகிறது.

இந்த சூழலில்தான் பிரேமாவை தடுத்து வைத்த சீன அதிகாரிகள் அவருக்கு அடிப் படை வசதிகளையும் மறுத்து அலைக்கழித்துள்ளனர்.

அவருக்கு சரியான உணவு அல்லது அடிப்படை வசதி கள் வழங்கப்படவில்லை. அவரது பாஸ்போர்ட் பறிமுதல் செய்யப் பட்டு ஜப்பானுக்கு விமானத்தில்



ஏற விடாமல் தடுக்கப்பட்டது. இங்கிலாந்தில் உள்ள அவரது தோழி ஷாங்காயில் உள்ள இந்திய தூதரகத்தை அணுகிய பிறகு, அதிகாரிகள்தலையிட்டு அவர் வேறு விமானத்தில் அனுப்பப்பட்டார்.

சீன அதிகாரிகளும் சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் ஊழியர்களும் தன்னைப் பார்த்து சிரித்ததாகவும், 'சீன பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கவும்' என கூறி கேலி செய்ததாகவும் பிரேமா குற்றம் சாட்டினார்.

இந்த சம்பவம் குறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதிய பிரேமா, இது இந்தியாவின் இறையாண்மைக்கு அவமானம் என்றும். தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், இழப்பீடு வழங்கவும், அருணாச்சலப் பிரதேச மக்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற சிரமங்களை எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்யவும் வலியுறுத்தி உள்ளார்.

இந்நிலையில், இந்த சம்பவத்திற்கு அருணாச்சல முதலமைச்சர் பெமா காண்டு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த சம்பவம் குறித்து பேசிய சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர், "சாங்னான் சீனாவிற்கு சொந்தமானது. இந்தியாவால் சட்டவிரோதமாக 'அருணாச்சலப் பிரதேசம்' என்று அழைக்கப்படுவதை சீனா ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. அப்பெண் துன்புறுத்தப்படவில்லை; விதிகள் மற்றும் சட்டங்களின்படியே சோதிக்கப்பட்டார். சம்பந்தப்பட்ட நபரின் சட்டப்பூர்வ உரிமைகள் மற்றும் நலன்கள் முழுமையாகப்பாதுகாக்கப்பட்டன. அவர் மீது எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. விமான நிறுவனம் அப்பெண்ணுக்கு ஓய்வு எடுக்க வசதி செய்து கொடுத்தது. உணவு வழங்கியது' என்று தெரிவித்தார்.

'அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட ஒன்று. அது சீனாவின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி' என சீன வெளியுறவு செய்தித் தொடர்பாளர் பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.




உங்கள் வியா-
பாரம் உலகம்
முழுவதும்
சென்று அடைய
கதிர்ஒளியில்
விளம்பரம்
செய்யுங்கள்!